# திரு இசைப்பா

## ஒளிநெறிக் கட்டுரை

தணிகைமணி, ராவ்பகதூர்
டாக்டர் வ சு செங்கல்வராய பிள்ளை

கழக
வெளியீடு

கழக வெளியீடு: ௧௪அ௨

409
146

உ

திருச்சிற்றம்பலம்

# திருஇசைப்பா ஒளிநெறிக் கட்டுரை

★

தணிகைமணி, ராவ்பகதூர்
டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.,
எழுதியது

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை - 1.
1973

வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை
செங்கல்வராய பிள்ளை (1883—1971)

© 1973 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

*Branches :*
Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam

Ed 1 August 1973

Q 23:417x5, 2:g
N73

THIRUISAIPPA OLINERIK KATTURAI

Appar Achakam, Madras-1. *(-/8)

# பதிப்புரை

தென்னாடுடைய சிவபெருமான்மீது ஆரா அன்பினால் உளங்கனிந்துருகிப் பாடிய பாடல்கள் தேவார முதலிய பன்னிருதிருமுறைகளாகும். அவற்றுள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பாவும், சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாகும்.

முதல் எட்டுத் திருமுறைகட்கும் ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை எழுதிய தணிகைமணி டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் ஒன்பதாம் திருமுறைக்கு ஒளிநெறியும் ஒளிநெறிக்கட்டுரையும் எழுதப்புகுங்கால் அவர்கட்கு அகவை 88 ஆகும். கூனிக் குறுகி ஓங்கார வடிவத்தில் இருந்த போதும் மேலே குறிப்பிட்ட இரு நூல்களையும் சொல்லி எழுதச் செய்து கண்பார்வை குறைந்தபோதும் உறுத்து உறுத்து இருமுறை மும்முறை சரிபார்த்துத் திருத்தி 1971 ஜூன் திங்களிலே கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களிடம் அச்சிடுமாறு ஒப்புவித்தனர். திருவாசக ஒளிநெறியைத் தணிகைமணியவர்கள் தமது கைப்படவே எழுதினர் என்பதும், திருக்கோவையார் ஒளிநெறியும், திருவிசைப்பா ஒளிநெறியும் சொல்லி எழுதப்பெற்றவை என்பதும் அறிதற்பாலன.

"எனக்கு 86க்கு மேல் வயதாகி நோய்வாய்ப்பட்ட நிலைக் கிடையில் திருக்கோவையார் ஒளிநெறியும் கட்டுரையும் எழுதப்பட்டன. எனையாளும் தணிகைப்பெருமான் திருவருள் இப்போது திருவிசைப்பா ஒளிநெறியும் கட்டுரையும் எழுதும் படி வைத்துள்ளது. அவர் திருவருளால் முடிவுபெறவேண்டும்"

என்று திருக்கோவையார் முகவுரையில் எழுதியபடி, தணிகை மணி ஐயா அவர்கள் விருப்பத்தை அவர்கள் வழிபடு தணிகைப்பெருமான் நிறைவேற்றியருளினுன் என்பது வியந்து மகிழ்தற்குரியது.

25—8—1971 இல் தணிகைமணி ஐயா அவர்கள் இறையடி சேரவே, திருவிசைப்பா ஒளிநெறி முதற்கண் அச்சிடப்பெற்று 1972 நவம்பர்த் திங்களில் கழகவழி வெளியிடப்பெற்றது. இப்போது ஒளிநெறிக் கட்டுரைகள் அச்சிடப்பெற்று முடிவு பெறுவது தணிகைப்பெருமான் தண்ணளியினுலேயேயாகும். ஒன்பது திருமுறைகட்கு எழுதப்பெற்ற ஒளிநெறிகளும், ஒளிநெறிக் கட்டுரைகளும் தமிழ் இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் ஆகியவற்றில் தணிகைமணியவர்கட்கிருந்த பெரும் புலமையினையும் எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிக்கும் மனத்திண்மையையும் ஒப்பில் பெரும் முயற்சியினையும் நன்கெடுத்து விளக்குவனவாம்.

1969இல் ஐயா அவர்களின் தமிழ்ப் பெருந்தொண்டினைப் பாராட்டி மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இத்தகைய தொண்டைச் செய்தவர்க்கு மேனுட்டினராயின் நோபல் பரிசு வழங்கியிருப்பர் என்பது திண்ணம்.

ஒன்பது திருமுறைகட்கும் எழுதப்பெற்றுள்ள ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை நூல்களையெல்லாம் வாங்கிப் போற்றிக் கழகப் பதிப்புத் தொண்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் படி சைவத் திருமடங்களையும், தமிழ்ப்புலவர் பெருமக்களையும், நூலகத் தலைவர்களையும் வேண்டிக்கொள்கிருேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

திருத்தணிகேசர் துணை

# திருவிசைப்பா ஒளிநெறிக் கட்டுரை

## முகவுரை

*மாளிகைத் தேவன் முதன் மதுர வாக்கினர் தந்*
*தாளிணையைப் பாமெந் தலை.*

—சைவசமயநெறி, பாயிரம் 13.

இக்கட்டுரையே என் வாழ்நாளில் நான் எழுதும் இறுதிக் கட்டுரையாகும். ஏனெனில் எழுத முடியாத நிலையில், பார்வையும் குறைந்து போயுள்ளது. இனி 10, 11, 12 திருமுறைகளுக்கு ஒளிநெறியும், கட்டுரையும் எழுதும் பேறு மறுபிறப்பிற் கிடைக்குமோ! கிடைக்காதோ? இறைவனுக்குத்தான் தெரியும்.

இந்நூலை அச்சில் ஏற்றிய கழக ஆட்சியாளருக்கு என் நன்றி உரியதாகும்.

வ. சு. செ.

10-6-71.

## திருவிசைப்பா திருப்பதிக வகை

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்றே டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து, வீறிற்
சிறந்தகா டவரிரண்டு, கண்டர் வேணுடர்
படிபுகழொவ் வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனு ரிரண்டுசே திராயர்
உடையதிருக் கடைக்காப்பொன் றுகவிரு பத்தொன்
பானேது செய்யுள் முந்நூற் றறுபதினே டைந்தே.

## திருவிசைப்பா பண்ணின் வகை

ஐந்துடன்நால் வருமுரைத்த திருக்கடைக்காப் பிறபண்
அறையின்மா ளிகைத்தேவர் நான்கிலொன்று
முந்துகரு வூர்ப்பத்தி னிரண்டுபுற நீர்மை [காந்தார
மொழிந்திடுகாந் தாரமொன்று காடவர்கோ
நந்தவில்சாபரபாணியொன்றுவேணுட்டடிகள்[னிரண்டின்
நவின்றதொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொன்னுன்கி னென்று நட்ட ராகம்
பகர்ந்திடினேன் றந்தளமற் றெவையும்பஞ் சமமே.

# உள்ளுறை

## க. சிவபிராற் பகுதி


| கட்டுரைத் தலைப்பின் எண் | பொருள் | ஒளிநெறியில் இத்தலைப்பிற்குரிய தலைப்பின் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| | கணபதி | | |
| 1. | சிவபிரான் அட்டமூர்த்தி | 1 | க |
| 2. | சிவபிரான் அட்டவீரச் செயல் | 2 | ,, |
| | (1) காமனை எரித்தது | 2 (1) | ,, |
| | (2) காலனை அட்டது | 2 (2) | ,, |
| | (3) சலந்தரனைத் தடிந்தது | 2 (3) | உ |
| | (4) தக்கன் வேள்வியை அழித்தது வேள்வியில் தண்டனை அடைந்தவர்கள் | 2 (4) | ,, |
| | (5) திரிபுரத்தை எரித்தது | 2 (5) | ௩ |
| | (6) பிரமன் சிரத்தைக் கொய்தது | 2 (6) | ,, |
| | (7) யானையை அட்டது | 2 (7) | ,, |
| | (8) அந்தகாசுரனை அட்டது | 2 (8) | ௪ |
| 3. | சிவபிரானைக் குறிக்கும் அடையாளங்கள் | 3 | ,, |
| 4. | சிவபிரான் அணிகலன் | 4 | எ |
| 5. | சிவபிரான் அணிவன | 5 | ,, |
| | (1) சிவபிரான் அரையில் அணிவன | 5 (1) | ,, |
| | (2) சிவபிரான் கரத்தில் அணிவன | 5 (2) | அ |
| | (3) சிவபிரான் கழுத்தில் அணிவது | 5 (3) | ,, |
| | (4) சிவபிரான் காதில் அணிவன | 5 (4) | ,, |
| | (5) சிவபிரான் காலில் அணிவன | 5 (5) | ,, |
| | (6) சிவபிரான் சடையிற், சென்னியிற் சூடுவன | 5 (6) | கூ |
| | (7) சிவபிரான் புயத்தில் அணிவன | 5 (7) | ,, |
| | (8) சிவபிரான் மார்பிலும், நெற்றியிலும் அணிவன | 5 (8) | ,, |
| | (9) திருநீறு | 5 (9) | க0 |

| | | | |
|---|---|---|---|
| 6. | சிவபிரான் அபிடேகப் பொருள் | 7 | கo |
| 7. | சிவபிரான் அர்த்த நாரீசுரர் | 8 | ,, |
| 8. | சிவபிரான் அறம் உரைத்தது | 9 | கக |
| 9. | சிவபிரான் ஆடை, உடை, போர்வை | 10 | ,, |
| 10. | சிவபிரான் இருவர்க்கு அரியர் | 11 | ,, |
| 11. | சிவபிரான் உலாவும் (பவனியும்) | 12 | கஉ |
| 12. | சிவபிரான் உறைவிடம் | 13 | ,, |
| 13. | சிவபிரான் குடை | 14 | கச |
| 14. | சிவபிரான் கொடி | 15 | ,, |
| 15. | சிவபிரான் சடை | 16 | ,, |
| 16. | சிவபிரான் தன்மை | 17 | கரு |
| (1) | அண்டம் - அணு | 17 (1) | ,, |
| (2) | அமுது | 17 (2) | ,, |
| (3) | அரசு (வேந்தன்) | 17 (3) | ,, |
| (4) | அருவும் உருவும் | 17 (4) | ,, |
| (5) | அழகு | 17 (5) | ,, |
| (6) | அழிவின்மை | 17 (6) | ,, |
| (7) | அறிவு | 17 (7) | ,, |
| (8) | ஆட்கொள்ளுதல் | 17 (8) | ,, |
| (9) | ஆண்பெண் | 17 (9) | ,, |
| (10) | ஆதி | 17 (10) | ,, |
| (11) | ஆனந்தம் | 17 (11) | ,, |
| (12) | இயல்பு | 17 (12) | ,, |
| (13) | இரவு பகல் | 17 (13) | ,, |
| (14) | இன்பம் | 17 (14) | கஎ |
| (15) | இனிமை | 17 (15) | ,, |
| (16) | உணர்வு | 17 (16) | ,, |
| (17) | உயிர் | 17 (17) | ,, |
| (18) | உலகு ஆவர் | 17 (18) | ,, |
| (19) | எங்கும் நிறைந்தவர் | 17 (19) | ,, |
| (20) | எல்லாம் ஆவர் | 17 (20) | கஅ |
| (21) | எல்லை கடந்தவர் | 17 (21) | ,, |
| (22) | என்றும் நிறைந்தவர் | 17 (22) | ,, |
| (23) | ஒப்பில்லாதவர் | 17 (23) | ,, |
| (24) | ஒளி (ஜோதி) சுடர் | 17 (24) | ,, |
| (25) | கனி | 17 (25) | ,, |

| | | |
|---|---|---|
| (26) கண்மணி | 17 (26) | ௧௮ |
| (27) கருணை | 17 (27) | ௧௯ |
| (28) கரும்பு | 17 (28) | ,, |
| (29) கருமை வெண்மை | 17 (29) | ,, |
| (30) கலை | 17 (30) | ,, |
| (31) கற்பகம் | 17 (31) | ,, |
| (32) கன்னல் | 17 (32) | ,, |
| (33) காலம் ஆயினவர் | 17 (33) | ,, |
| (34) கீர்த்தி | 17 (34) | ,, |
| (35, 36) குணம், குணங் குறிகடந்தமை | 17 (35, 36) | ௨௦ |
| (37) குரு | 17 (37) | ,, |
| (38) குற்றம் அற்றவர் | 17 (38) | ,, |
| (39) கொழுந்து | 17 (39) | ,, |
| (40) கோலம் | 17 (40) | ,, |
| (41) சக்தி; சிவம் | 17 (41) | ,, |
| (42) சிவம் | 17 (42) | ,, |
| (43) சீர் | 17 (43) | ௨௧ |
| (44) செய்கை | 17 (44) | ,, |
| (45) செல்வம் | 17 (45) | ,, |
| (46) தன்மை | 17 (46) | ,, |
| (47) தாயினும் நல்லவர் | 17 (47) | ௨௨ |
| (48) தாயும் தந்தையும் | 17 (48) | ,, |
| (49) தான் தோன்றி | 17 (49) | ,, |
| (50) துயர் களைவர் | 17 (50) | ,, |
| (51) தூண் | 17 (51) | ௨௨ |
| (52) தெய்வம் | 17 (52) | ௨௩ |
| (53) தேன் | 17 (53) | ,, |
| (54) நாயகன் | 17 (54) | ,, |
| (55) நினைத்தற்கு அரியர் | 17 (55) | ,, |
| (56) நுண்மை | 17 (56) | ,, |
| (57) பண்பு | 17 (57) | ,, |
| (58) பரஞ்சுடர் | 17 (58) | ,, |
| (59) பளிங்கு அனையர் | 17 (59) | ௨௪ |
| (60) பால் | 17 (60) | ,, |
| (61) பிழைத்தவை பொறுப்பர் | 17 (61) | ,, |
| (62) புகழ் | 17 (62) | ,, |
| (63) பெருமை; சிறுமை | 17 (63) | ,, |
| (64) பொதுத்தன்மை | 17 (64) | ௨௫ |
| (65) பொருள் | 17 (65) | ,, |
| (66) பொறுப்பர் | 17 (66) | ௨௬ |

| | | | |
|---|---|---|---|
| (67) | போகம் | 17 (67) | உசா |
| (68) | மருந்து | 17 (68) | ,, |
| (69) | முதல் | 17 (69) | ,, |
| (70) | மூலம்; முடிவு | 17 (70) | ,, |
| (71) | மூத்தன் | 17 (71) | ,, |
| (72) | யார்க்கு அரியர், யார்க்கு எளியர் யாராலும் அறியப்படாதவர் | 17 (72) | ,, |
| (73) | யார்க்குக் கண் ஆவார்; கண் ஆகார் | 17 (73) | உஎ |
| (74) | யோகம் | 17 (74) | ,, |
| (75) | வித்து | 17 (75) | ,, |
| (76) | விளக்கு | 17 (76) | ,, |
| (77) | வினைகுறுகாமை | 17 (77) | ,, |
| (78) | வினை கெடுதல் | 17 (78) | ,, |
| (79) | வெள்ளம் | 17 (79) | ,, |
| 17. | சிவபிரான் திருஉருவம் | 18 | உஅ |
| (1) | உடம்பு | 18 (1) | ,, |
| (2) | உருவம் | 18 (2) | ,, |
| (3) | கண் | 18 (3) | ,, |
| (4) | கண்டம் (கழுத்து) | 18 (4) | உகூ |
| (5) | கரம் (கை) | 18 (5) | ,, |
| (6) | சுழியம் (உச்சிக் கொண்டை) | 18 (6) | ,, |
| (7) | செவி | 18 (7) | ,, |
| (8) | சென்னி | 18 (8) | ,, |
| (9) | திருவடி | 18 (9) | ௩0 |
| (10) | திலகம் (நுதல்) | 18 (10) | ,, |
| (11) | தொடை (குறங்கு) | 18 (11) | ,, |
| (12) | தோள் (புயம்) | 18 (12) | ,, |
| (13) | நிதம்பம் (அரை) | 18 (13) | ,, |
| (14) | நிறம் (வண்ணம்) | 18 (14) | ௩க |
| (15) | நுதல் (நெற்றி — திலகம்) | 18 (15) | ,, |
| (16) | பல் (முறுவல்) | 18 (16) | ,, |
| (17) | புருவம் | 18 (17) | ,, |
| (18) | மகுடம் - முடி | 18 (18) | ,, |
| (19) | மார்பு | 18 (19) | ௩உ |
| (20) | முகம் | 18 (20) | ,, |
| (21) | முடி — (மகுடம் — முடி பார்க்க) | 18 (21) | ,, |
| (22) | முறுவல் (பல் — வாய் பார்க்க) | 18 (22) | ,, |
| (23) | மேனி | 18 (23) | ,, |
| (24) | வயிறு | 18 (24 24,A) | ,, |
| (24A) | வயிற்றினுள் உந்தி வளைப்பு (சுழி) | 18 (24A) | ,, |

| | | |
|---|---|---|
| (25) வாய் | 18 (25) | கக |
| (26) விரல் | 18 (26) | ,, |
| 18. சிவபிரான் திரு நாமங்கள் | 19 | ,, |
| (1) சிறப்பு | 19 (1) | ,, |
| (2) பொது | 19 (2) | கச |
| 19. சிவபிரான் நாம விசேடம் முதலிய | 20 | ,, |
| 20. சிவபிரான் திருநாமங்கள் விளி | 21 | கரு |
| (1) சிறியன | 21 (1) | ,, |
| (2) நடுத்திரத்தன | 21 (2) | ,, |
| (3) பெரியன | 21 (3) | ,, |
| 21. சிவபிரான் நஞ்சுண்டது | 22 | கஅ |
| 22. சிவபிரான் நடம் | 23 | கசு |
| (1) இருளில் நடம் | 23 (1) | சக |
| (2) தியாகேசர் நடம் | 23 (2) | ,, |
| (3) நடனம் செய்யும்போது வாத்தியம் | 23 (3) | சஉ |
| 23. சிவபிரான் படை | 24 | ,, |
| 24. சிவபிரான் போற்றித்துதி | 25 | ,, |
| 25. சிவபிரான் மாலை | 26 | ,, |
| 26. சிவபிரான் வாகனம் | 27 | சந |
| (1) விடை | 27 (1) | ,, |
| (2) மேகம் | 27 (2) | ,, |
| (3) அயிராவணம் வெள்ளானை | 27 (3) | ,, |
| 27. சிவபிரான் வாய்மொழி | 28 | ,, |
| 28. சிவபிரான் விரும்புவன | 29 | ,, |
| 29. சிவபிரானல் தண்டிக்கப்பட்டவர் | 30 | சச |
| 30. சிவபிரானல் தண்டனை அடைந்த பின் அருள் பெற்றவர் | 31 | சரு |
| 31. சிவனடியார் | 32 | ,, |
| 32. சிவனடியாரும் புரந்தராதிகளும் | 33 | ,, |
| 33. சிவனும் அடியார்களும் | 34 | சசு |
| 34. சிவனும் அடியார் அல்லாதவரும் | 35 | சஎ |
| 35. சிவனும் அண்டமும் | 36 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 36. | சிவனும் அருளும் | 37 | சஎ |
| 37. | சிவனும் ஆணும் பெண்ணும் | 38 | சஅ |
| 38. | சிவனும் இசையும் (கீதமும்) | 39 | ,, |
| 39. | சிவனும் இந்திரனும் | 40 | ,, |
| 40. | சிவனும் உயிர்ப்பும் | 41 | சகூ |
| 41. | சிவனும் உயிரும், ஊனும் | 42 | ,, |
| 42. | சிவனும் உலகமும் | 43 | ,, |
| 43. | சிவனும் எரியும், எரியாடுதலும் | 44 | ,, |
| 44. | சிவனும் ஐந்தெழுத்தும் | 45 | ,, |
| 45. | சிவனும் கங்கையும | 46 | ருo |
| 46. | சிவனும் கடலும் | 47 | ,, |
| 47. | சிவனும் கற்றோரும் | 48 | ,, |
| 48. | சிவனும் காமனும் | 49 | ,, |
| 49. | சிவனும் சமண புத்தரும் | 50 | ,, |
| 50. | சிவனும் செபவடமும் | 51 | ,, |
| 51. | சிவனும் ஞாயிறும் (சூரியனும்) | 52 | ,, |
| 52. | சிவனும் ஞானமும் | 53 | ருக |
| 53. | சிவனும் திருமாலும் | 54 | ,, |
| 54. | சிவனும் திருமாலும் பிரமனும் | 55 | ருஉ |
| 55. | சிவனும் திருமாலும், பிரமனும் இந்திரனும் | 56 | ,, |
| 56. | சிவனும் தில்லைவாழ் அந்தணரும் | 57 | ருங |
| 57. | சிவனும் தேவர்களும் | 58 | ருச |
| 58. | சிவனும் நந்தியும் | 59 | ருரு |
| 59. | சிவனும் நாயன்மாரும் | 60 | ருசா |
| 60. | சிவனும் பஞ்சபூதமும் | 61 | ருஎ |
| 61. | சிவனும் பலியும் | 62 | ,, |
| 62. | சிவனும் பார்வதியும் | 63 | ருஅ |
| 63. | சிவனும் பார்வதியும் கங்கையும் | 64 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 64. | சிவனும் பிரமனும் | 65 | ருஅ |
| 65. | சிவனும் பெறும் பேறும் | 66 | ருசு |
| 66. | சிவனும் பேயும் | 67 | ,, |
| 67. | சிவனும் பொய்யும் மெய்யும் | 68 | ,, |
| 68. | சிவனும் மறையும் (வேதமும்) | 69 | சு0 |
| 69. | சிவனும் மறையோரும் (அந்தணரும்) | 70 | ,, |
| 70. | சிவனும் மாதரும் | 71 | ,, |
| 71. | சிவனும் முருகரும் | 72 | சுக |
| 72. | சிவனும் முனிவரும், பெரியோரும் பழைய அடியார்களும் | 73 | ,, |
| 73. | சிவனும் யோகமும் | 74 | சுஉ |
| 74. | சிவனும் இராவணனும் | 75 | ,, |
| 75. | சிவனும் வாத்தியமும் | 76 | ,, |
| 76. | சிவனும் விளக்கும் | 77 | சுரு |
| 77. | சிவனும் வெண்மையும் | 78 | ,, |
| 78. | சிவனும் வேடரூபமும் | 79 | ,, |
| 79. | சிவனைப் பற்றிய வினாவும், விடையும் | 80 | ,, |
| 80. | சிவனைப் பாடுபவர் | 81 | சுசு |
| 81. | சிவனை வழிபட்டுப் போற்றுபவர் | 82 | ,, |

| | | |
|---|---|---|
| உ. | தில்லை முதலாம் தலப்பகுதி | சுசு |
| ரு. | அகப்பொருட் பதிகம் | அச |
| ச. | பாடினோர்ப் பகுதி | க0உ |
| ரு. | இலக்கணப் பகுதி | கஉரு |

## ௬. பிற பொருட் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | அக்கினி (தலைப்பு 103 பார்க்க) | 1 | ௧௫௩ |
| 2. | அடியார் (சிவபிராற் பகுதியில் "சிவனடியார்" என்னுந் தலைப்பு 31 பார்க்க) | 2 | ,, |
| 3. | அடியார் அல்லாதார் | 3 | ,, |
| 4. | அடுக்குச் சொற்றொடர் | 4 | ,, |
| 5. | அண்டம் | 5 | ,, |
| 6. | அணு | 6 | ,, |
| 7. | அந்தம் | 7 | ,, |
| 8. | அமுதம் (சிவன் தன்மையில் 16 (2) பார்க்க) | 8 | ,, |
| 9. | அயிராவணம் | 9 | ௧௫௪ |
| 10. | அரக்கர்; அசுரர் | 10 | ,, |
| | (1) சிறப்பு | 10 (1) | ,, |
| | (2) பொது | 10 (2) | ,, |
| 11. | அரங்கு | 11 | ,, |
| 12. | அரசர் - அரசு | 12 | ,, |
| 13. | அருள் (சிவனும் அருளும் தலைப்பு 36 பார்க்க) | 13 | ,, |
| 14. | அறம் | 14 | ,, |
| 15. | அறிவு | 15 | ௧௫௫ |
| 16. | அன்பு | 16 | ,, |
| 17. | ஆசை | 17 | ,, |
| 18. | ஆடை | 18 | ,, |
| 19. | ஆவா | 20 | ,, |
| 20. | ஆறு | 21 | ,, |
| (1) | சிறப்பு | 21 (1) | ,, |
| (2) | பொது ("நீர்நிலை" தலைப்பு 121 பார்க்க) | 21 (2) | ௧௫௬ |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆனந்தம் | 22 | கரு௬ |
| 22. | இசைப்பண் | 23 | ,, |
| 23. | இந்திரன் | 24 | ,, |
| 24. | இந்திரசாலம் | 25 | ,, |
| 25. | இரவு | 26 | கரு௭ |
| 26. | இருள் | 27 | ,, |
| 27. | இலக்குமி | 28 | ,, |
| 28. | இறப்பு | 29 | ,, |
| 29. | இனச் சொல் | 30 | ,, |
| 30. | உடல் (மெய்) | 31 | ,, |
| 31. | உணர்வு சிவபிராற் பகுதியில் தலைப்பு 16 (16) பார்க்க) | 32 | கரு௮ |
| 32. | உயிர் (மூச்சு) (சிவபிராற் பகுதியில் தலைப்பு 16 (17) பார்க்க) | 33 | ,, |
| 33. | உலகம் (தலைப்பு 126-1 பார்க்க) | 34 | ,, |
| 34. | உலோகம் | 35 | கரு௯ |
| 35. | உவமை | 36 | ,, |
| 36. | உவமை உருபு | 37 | ,, |
| 37. | உறவு | 38 | க௪0 |
| 38. | ஊண் | 39 | ,, |
| 39. | ஊர் | 40 | ,, |
| | (1) சிறப்பு | 40 (1) | ,, |
| | (2) பொது | 40 (2) | க௪க |
| 40. | எண்ணும் தொகையும் | 41 | ,, |
| 41. | எதிர் மொழிகள் | 42 | க௪உ |
| 42. | எதுகையில் வரும் சொற்கள் | 43 | ,, |
| 43. | ஐம்புலன் | 44 | ,, |
| 44. | ஒலியும், ஒலிக் குறிப்பும் | 45 | க௪ரு |
| 45. | ஒளி, சுடர், சோதி | 46 | ,, |
| 46. | ஒன்று | 47 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 47. | ஓர் | 48 | ௧௪௩ |
| 48. | கங்கை (ஆறு) | 49 | ,, |
| 49. | கங்கை (தேவி) | 50 | ,, |
| 50. | கடல் | 51 | ,, |
| 51. | கணம் | 52 | ௧௪௪ |
| 52. | கப்பல் | 53 | ,, |
| 53. | கரும்பு | 53A | ,, |
| 54. | கலாம் | 54 | ,, |
| 55. | கலை | 55 | ,, |
| 56. | கற்பகம் | 56 | ,, |
| 57. | கறு | 57 | ,, |
| 58. | கனி (சிவபிராற் பகுதியில் தலைப்பு - 16 (25) பார்க்க) | 58 | ,, |
| 59. | காடு | 59 | ௧௪௫ |
| 60. | காமம் | 60 | ,, |
| 61. | காமன் | 61 | ,, |
| 62. | காலம் | 62 | ,, |
| 63. | காலன் | 63 | ,, |
| 64. | கிடங்கு | 64 | ,, |
| 65. | குங்குமம் | 65 | ௧௪௬ |
| 66. | குடை | 66 | ,, |
| 67. | குழாம் | 67 | ,, |
| 68. | குறி | 68 | ,, |
| 69. | கூத்து | 69 | ,, |
| 70. | கொடி | 70 | ,, |
| 71 | கோயில் | 71 | ,, |
| 72. | கோலம் | 72 | ௧௪௭ |
| 73. | சங்கு | 73 | ,, |
| 74. | சந்திரன் | 74 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 75. | சமண புத்தர், தேரர் | 75 | ௧௪௭ |
| 76. | சமயம் | 76 | ,, |
| 77. | சாதி | 77 | ,, |
| 78. | சித்தர் | 78 | ,, |
| 79. | சினம் | 79 | ௧௪௮ |
| 80. | சீர் | 80 | ,, |
| 81. | சுவை | 81 | ,, |
| 82. | சூரியன் | 82 | ௧௪௯ |
| 83. | சூழல் | 83 | ,, |
| 84. | செல்வம் | 84 | ,, |
| 85. | சேவின்மணி | 85 | ,, |
| 86. | சைவம் | 86 | ௧௫௦ |
| 87. | சொல் (பதம்) மொழி | 87 | ,, |
| 88. | சொல் அழகு | 88 | ,, |
| 89. | ஞானம் | 89 | ,, |
| 90. | தமிழ் | 90 | ,, |
| 91. | தமிழ் மாலை | 91 | ,, |
| 92. | தவம் | 92 | ,, |
| 93. | தனம் | 93 | ௧௫௧ |
| 94. | தானியம் | 94 | ,, |
| 95. | திசை (திக்கு) | 95 | ,, |
| 96. | திருநீறு (சிவபிரான் பகுதியில் 5 (9) பார்க்க) | 96 | ,, |
| 97. | திருமால் | 97 | ,, |
| 98, 99. | திருமாலும் பிரமனும், இந்திரனும் | 98, 99 | ௧௫௨ |
| 99A. | தில்லை வாழ் அந்தணர் (சிவபிரான் பகுதியில் "சிவனும் தில்லை வாழ் அந்தணரும் தலைப்பு 57 பார்க்க) | 99A | ,, |

| | | | |
|---|---|---|---|
| 100. | தெய்வம் | 100 | ௧௫௩ |
| 101. | தென்றல் | 101 | ,, |
| 102. | தேர் | 102 | ,, |
| 103. | தேவர் | 103 | ,, |
| | (1) சிறப்பு | 103 (1) | ,, |
| | (2) பொது | 103 (2) | ௧௫௪ |
| 104. | தேவாரம் | 104 | ,, |
| 105. | தேன்; தேறல் | 105 | ,, |
| 106. | தொகை (தலைப்பு 41 பார்க்க) | 106 | ,, |
| 107. | தொண்டு | 107 | ௧௫௫ |
| 108. | நகரலட்சணம், | 108 | ,, |
| 109. | நகை (சிவபிராற் பகுதியில் தலைப்பு 4 பார்க்க) | 109 | ௧௫௬ |
| 110. | நட்சத்திரம் (நாள்) | 110 | ,, |
| 111, 112. | நடனம் நாடகம், நாடகசாலை | 111, 112 | ,, |
| 113. | நந்தி (சிவபிராற் பகுதியில் தலைப்பு 59 பார்க்க) | 114 | ௧௫௭ |
| 114. | நாடு (தேசம்) | 115 | ,, |
| 115. | நாணம் | 116 | ,, |
| 116. | நாமம் (பெயர்) | 117 | ,, |
| 117. | நாயன்மார் | 117A | ,, |
| 118. | நிலம் | 118 | ,, |
| 119. | நிறம் சிவபிராற் பகுதியில் தலைப்பு 17 (14) பார்க்க | 119 | ௧௫௮ |
| 120. | நிறை | 120 | ,, |
| 121. | நீதி | 121 | ,, |
| 122. | நீர் நிலை (தலைப்பு 128 பார்க்க) | 122 | ௧௫௯ |
| 123. | நூல் | 123 | ,, |
| 124. | நெய் | 124 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 125. | நெறி | 125 | கடுகூ |
| 126. | நோய் - பிணி | 126 | கசுo |
| 127. | பகல் | 127 | ,, |
| 128. | பஞ்சபூதம் | 128 | ,, |
| 129. | படலம் | 129 | கசுக |
| 130. | படை (ஆயுதம்) | 130 | ,, |
| 131. | பத்தி நிலை மெய்ப்பாடு | 131 | ,, |
| 132. | பதிக விசேடங்கள் | 134 | ,, |
| 133. | பந்தம் | 135 | கசுஉ |
| 134. | பரிசு | 135A | ,, |
| 135. | பழமொழிகள் | 136 | ,, |
| 136. | பளிங்கு | 137 | ,, |
| 137. | பனி | 138 | ,, |
| 138. | பாசம் | 139 | ,, |
| 139. | பாடல் | 140 | ,, |
| 140. | பாடலும், பாடல் விசேடமும் | 141 | ,, |
| 141. | பாதகம் (தலைப்பு 134 பார்க்க) | 142 | கசுச |
| 142. | பார்வதி | 143 | ,, |
| 143. | பால் | 144 | கசுரு |
| 144. | பாவம் | 145 | ,, |
| 145 | பிரமன், ("சிவபிரான் பகுதியில்" சிவனும், திருமாலும், பிரமனும் என்னும் தலைப்பும், பிறபொருட் பகுதியில் "திருமாலும் பிரமனும்" என்னுந் தலைப்பும் பார்க்க) | 147 | ,, |
| 146. | பிறப்பு - இறப்பு | 148 | ,, |
| 147. | புகழ் | 149 | கசுஎ |
| 148. | புகை | 150 | ,, |
| 149. | புண்ணியம் (பாவம் என்னுந் தலைப்பு 144 பார்க்க) | 151 | கசுஎ |

| | | | |
|---|---|---|---|
| 125. | நெறி | 125 | ௧௫௯ |
| 126. | நோய் - பிணி | 126 | ௧௬௦ |
| 127. | பகல் | 127 | ,, |
| 128. | பஞ்சபூதம் | 128 | ,, |
| 129. | படலம் | 129 | ௧௬௧ |
| 130. | படை (ஆயுதம்) | 130 | ,, |
| 131. | பத்தி நிலை மெய்ப்பாடு | 131 | ,, |
| 132. | பதிக விசேடங்கள் | 134 | ,, |
| 133. | பந்தம் | 135 | ௧௬௨ |
| 134. | பரிசு | 135A | ,, |
| 135. | பழமொழிகள் | 136 | ,, |
| 136. | பளிங்கு | 137 | ,, |
| 137. | பணி | 138 | ,, |
| 138. | பாசம் | 139 | ,, |
| 139. | பாடல் | 140 | ,, |
| 140. | பாடலும், பாடல் விசேடமும் | 141 | ,, |
| 141. | பாதகம் (தலைப்பு 134 பார்க்க) | 142 | ௧௬௪ |
| 142. | பார்வதி | 143 | ,, |
| 143. | பால் | 144 | ௧௬௬ |
| 144. | பாவம் | 145 | ,, |
| 145 | பிரமன், ("சிவபிரான் பகுதியில்" சிவனும், திருமாலும், பிரமனும் என்னும் தலைப்பும், பிறபொருட் பகுதியில் "திருமாலும் பிரமனும்" என்னுந் தலைப்பும் பார்க்க) | 147 | ,, |
| 146. | பிறப்பு - இறப்பு | 148 | ,, |
| 147. | புகழ் | 149 | ௧௬௭ |
| 148. | புகை | 150 | ,, |
| 149. | ப்ண்ணியம் (பாவம் என்னுந் தலைப்பு 144 பார்க்க) | 151 | ௧௬௭ |

| | | | |
|---|---|---|---|
| 150. | புனம் | 152 | கருஎ |
| 151. | பூதம் | 153 | ,, |
| 152. | பேய் (சிவபிராற் பகுதியில் தலைப்பு 66 பார்க்க) | 154 | ,, |
| 153. | பொய் | 155 | ,, |
| 154. | பொருள் | 156 | ,, |
| 154. | பொழில், சோலை, தண்டலை | 157 | கருஅ |
| 156. | பொன், மணி, முத்து, பவளம், மாணிக்கம், வயிரம் | 158 | ,, |
| 157. | போகம் | 159 | கருகூ |
| 158. | போனகம் | 160 | ,, |
| 159. | மக்கள் | 161 | ,, |
| 160. | மண்டலம் | 162 | ,, |
| 161. | மரம், கொடி, செடி, இலை, தழை, தளிர் | 163 | ,, |
| 162. | மருந்து | 163 | களக |
| 163. | மலர் | 165 | ,, |
| 164. | மலை | 166 | களஉ |
| | (1) சிறப்பு | 166 (1) | ,, |
| | (2) பொது | 166 (2) | களச |
| 165 | மறை, வேதம், அங்கம் | 167 | ,, |
| 166. | மறையோர், அந்தணர், வைதிகர் | 168 | களரு |
| 167. | மறையும் சிவனும் (சிவபிராற் பகுதியில் தலைப்பு 68 பார்க்க) | 169 | ,, |
| 168. | மனப்பாடம் செய்யத்தகுவன | 170 | களசு |
| 169. | மனப்பாடத்திற்குரிய அடிகளும், சொற்பொழிவின் போது உபயோகப்படுத்தக் கூடிய அடிகளும் | 171 | களசு |

| | | | |
|---|---|---|---|
| 170. | மனம், நெஞ்சு, சிந்தை, சித்தம், உள், உள்ளம், இதயம் | 172 | கஅரு |
| 171. | மாதர் | 173 | கஅச |
| 172. | மாலை | 174 | கஅரு |
| 173. | முத்தி | 175 | ,, |
| 174. | முருகவேள் | 176 | ,, |
| 175. | முருகரும் சிவனும் (சிவபிராற் பகுதியில் தலைப்பு "71" பார்க்க) | 177 | கஅஅ |
| 176. | முருகரும் தேவரும் | 178 | ,, |
| 177. | முருகரும் படையும் | 179 | ,, |
| 178. | முருகரும் வள்ளியும் | 180 | ,, |
| 179. | முருகரும் தேவயானையும் | 181 | ,, |
| 180. | முனிவர், பெரியோர் | 183 | கஅகூ |
| | (1) சிறப்பு | 183 (1) | ,, |
| | (2) பொது | 183 (2) | ககூ0 |
| 181. | மூர்த்தி (கடவுள்) | 184 | ,, |
| 182. | மெய் | 185 | ,, |
| 183. | மேகம், மழை, மின் | 186 | ,, |
| 184. | யோகம் | 187 | ககூக |
| 185. | ராவணன் (சிவபிராற்பகுதியில் தலைப்பு 74 பார்க்க) | 188 | ககூஉ |
| 186. | வணங்கும் முறை | 189 | ,, |
| 187. | வயல் (கழனி, செய், பணை, பழனம், வயல்) | 190 | ,, |
| 188. | வரலாறு...... | 191 | ககூரு |
| | (1) கோழியூர் | 191 (1) | ,, |
| | (2) சிலந்தி சோழன் ஆனது | 191 (2) | ,, |
| | (3) தில்லையில் திருமால் வரங் கிடந்தது | 191 (3) | ககூச |
| | (4) திருமால் சக்கரம் பெற்றது | 191 (4) | ,, |

| | | | |
|---|---|---|---|
| | (5) கருடன் சிறகு அறுபட்டது | 191 (5) | கசுரு |
| | (6) இராவணனுக்கு வாளும், நாளும் ஈந்தது | 191 (6) | ,, |
| | (7) உபமன்யு முனிவர்க்குச் சிவன் பாற்கடல் ஈந்தது | 191 (7) | ,, |
| 189. | வலை | 192 | கசுசு |
| 190. | வழி | 193 | ,, |
| 191. | வழிபாடு | 194 | ,, |
| 192. | வாத்தியம் | 195 | ,, |
| 193. | விசயனும், சிவனும் | 196 | கசுஎ |
| 194. | விழா (திருவிழா) | 197 | கசுஅ |
| 195. | (திரு) விழாவும் அடியாரும் | 198 | ,, |
| 196. | விளக்கு | 199 | ,, |
| 197. | வினை | 200 | ,, |
| 198. | வெள்ளம் | 203 | கசுகூ |
| 199. | வேள்வி | 204 | ,, |
| 200. | வைத சொற்கள் | 205 | உ00 |
| 201. | ஜீவராசிகள் | 206 | ,, |
| | (1) ஊர்வன | 206 (1) | ,, |
| | (2) நீர் வாழ்வன | 206 (2) | உ0க |
| | (3) பறவை | 206 (3) | உ0உ |
| | (4) மக்கள் | 206 (4) | உ0௩ |
| | (5) விலங்கு | 206 (5) | ,, |


---

திருச்சிற்றம்பலம்

# திருஇசைப்பா ஒளிநெறிக் கட்டுரை

## க. சிவபிராற் பகுதி

### கணபதி

கணபதி :—இவர் மதநீரையும் பானைபோன்ற வயிற்றினையும் உடைய யானைமுகத்தவர். இவருடைய தம்பி முருகவேள். இவருக்கும், முருகவேளுக்கும் தந்தையார் சிவபிரான்.

### 1. சிவபிரான் அட்டமூர்த்தி [1]

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா எனப்பட்ட எண்பொருள்களிலும் இறைவர் கலந்து உள்ளபடியால் "எட்டுரு விரவி" எனப்பட்டார்.

### 2. அட்டவீரச் செயல் [2]

#### (1) காமனை எரித்தது [2-1]

காமன் அழிந்துபோம்படி செய்து (பின்பு அவனுக்குச் சிவபிரான் அருள் பாலித்தனர்.

#### (2) காலனை அட்டது [2-2]

துன்பமடைந்த மார்க்கண்டேயனுக்காகக் காலனை உயிர் நீங்கும்படி உதைத்தருளிய திருவடியை உடையவர் சிவபெருமான.

தமது திருவடியைப் பணிந்த அந்த அந்தணச் சிறுவன் பொருட்டுக் காலனை உதைத்தருளினார். அதனால் "கால காலர்" எனப்பட்டார் இறைவர். பின்னர் அக்காலனுக்குத் திரு அருள் பாலித்தார்.

## (3) சலந்தரனைத் தடிந்தது [2 - 3]

சலந்தரனுடைய வரம்பு கடந்த அகந்தை அழியும்படி சக்கரப்படையால் அவன் அறுபட்டு இறக்கும்படி செய்தார் இறைவர்.

## (4) தக்கன் வேள்வியை அழித்தது [2 - 4]

தக்கன் செய்த வேள்வியில் தலைவனாய் இருந்த எச்சனுடைய தலை விண்டு உருளும்படி செய்வித்தார் இறைவர்.

தக்கனுடைய தலையும் விண்டு உருளும்படி கோபித்தளித்தார் இறைவர்.

### வேள்வியில் தண்டனை அடைந்தவர்கள்

தக்கன், பிரமன, சூரியன், சந்திரன், இந்திரன், எச்சன், தேவர்கள். இவர் தம்முள் தக்கன், பிரமன், எச்சன் இவர்களுடைய தலையும் ஒரு சூரியனுடைய (பூடா) என்பவனுடைய பற்களும், பகன் என்னும் சூரியனுடைய கண்களும் பறிக்கப்பட்டன.

சந்திரன் காலால் தேய்க்கப்பட்டான்.

குயில் உருவம் எடுத்துப் பறந்து ஓட நினைத்த இந்திரனுடைய சிறகு அரியப்பட்டது.

வேள்விக்கு வந்திருந்த தேவர்கள் யாவரும் எழுந்து ஓடிக்கெடும்படி செய்தார் இறைவர்.

## (5) புரம் எரித்தது [2-5]

திரிபுராதிகளின் கொடுமையை ஆற்றாத தேவர்கள், பெருமானுடைய அடிபணிந்து அரற்ற முப்புரங்களும் ஓரம்பால் அழியும்படி வில்லை வளைத்துத் தீயினுக்கு இரையாக்கினார் பெருமான்.

**புரம் :**—மதில் மூன்று கொண்டன முப்புரங்கள்.

**சிவபிரான் ஏறிய தேர் :**—வேதங்களை தேரில் பூட்டப் பட்ட குதிரைகள் ஆதலின் தேர் "வைதிகத் தேர்" எனப்பட்டது.

### தேர்ச்சாரதி பிரமன்

**வில் :**—மேருவாகிய பொன்மலை.

**வில்லின் நாண் :**—பாம்பு.

**திரிபுராதிகள் :**—முப்புரங்கள் தீயினால் எரிக்கப்பட்ட போது அப்புரங்களில் இருந்த அசுரர் யாவரும் எரிபட்டு அழிந்தார்கள். ஆயினும் அவ்வசுரர்களில் மூவர்மீது அவர் தம் பக்திக்காகக் *கருணைபுரிந்தார் இறைவர்.

## (6) பிரமன் சிரத்தைக் கொய்தது [2-6]

அகந்தை கொண்ட பிரமனுடைய தலையைக் கொய் தனர் பெருமான்.

## (7) யானையை அட்டது [2-7]

தம்மைக் கொல்லும்படி [தாருகாவனத்து முனிவர்கள்] ஏவின யானையின தோலை உரித்துப் போர்வையாகப் பூண் டனர். அங்ஙனம் உரித்தபோது பார்வதியை அஞ்சும்படி செய்தனர் பெருமான்.

---

*மூவரில் இருவர் தமது கோயில் வாயில் காப்பவராகவும், ஒருவர் கோயிலில் மணிமுழா முழக்கவும் அருள் புரிந்தார் இறைவர். —சுந்தரர் தேவாரம் 55-8

"மால்கரி ஈருரித்தெழு போர்வையினீர்" என்கின்றார் ஆசிரியர் திருவாலியமுதனார். "மால்கரி" என்பதற்குப் பெரிய யானை என்பது ஒரு பொருள். மாலின் ஈருரி, கரியின் ஈருரி எனப் பிரித்தும் பொருள் காணலாம். மாலின் ஈருரி என்பது "வாமன அவதாரத்தில்" திருமாலின் தோலை உரித்துப் பைரவமூர்த்தி சட்டையாகத் தரித்தார் என்பது ஒரு வரலாறு.

### (8) அந்தகாசுரனை அட்டது [2-8]

இதுபற்றி ஒன்றும் திருஇசைப்பாவிற் கூறப்பட வில்லை.

## 3. சிவபிரானைக் குறிக்கும் அடையாளங்கள் [3]

(1) இடது பாகம் கருநிறம். மற்றொரு பாகம் சிவப்பு. கழுத்திலொரு தனி மாலை. அவர் ஒருவர். ஆனால் இருவர். ஓர் உடம்பினர். கண் மூன்று. தடந்தோள் நான்கு. மறைகள் தேட அரியர். இப்படிப்பட்டவரின் இருப்பிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(2) திருவாய் குமுதமலர். கழுத்து குவளை மலர் இருசெவிகளில் குழைகள். ஒரு பக்கத்தில் மேகலாபரணம். சடைமேல் நல்லபாம்பு. பிரகாசிக்கும் திருமுகமும், திருக் கண்களும் செந்தாமரை மலர். பாதக்குறடுகள் பொன் னிறத்தன. குணத்தின் தன்மை பரிசுத்தமானது. இத் தன்மையரின் இருப்பிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(3) திருமேனியில் சந்தனமும், வெண்ணீறும் விளங்கும் நெருப்புப்போன்ற திருஉருவத்தில் நெற்றிக்கண் விளங்கும். இப்படிப்பட்டவரின் இருப்பிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(4) தம்மை நினைந்து நெஞ்சு உருகும் அன்பர்கள் புறத்திருந்து வேண்ட, அவர்களை விட்டுக் கடாப்போன்ற எனை ஆள விரும்பி நான் மீண்டும் பிறவா வண்ணம் காத்து அருள் புரிய வல்லவர் இருப்பிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(5) திருமகன் முருகன் தேவி உமையாள் மாமன் இமவான். தோழன் குபேரன் இவர்கள் சாட்டியக்குடி ஈசனுக்கு உறவினராவார்.

(6) தொழுது தன்பின் வருபவர் பிரமன் முதலிய தேவர்கள். தம்மைத் தொடர்ந்து வருவன நான்மறைகள். உறைவிடம் பேய்கள் உலவும் சுடுகாடு. போர்வை யானைத் தோல்; உணவு பிச்சை ஊண். கோவணம் பாம்பு. செப மாலை பளிங்கு. நெய் விளக்கின் ஒளி விளங்கும் இடம் ஈசனின் இருக்கை ஆகும்.

(7) கழுத்து நீல நிறம். வாய் பவள நிறம். வாயில் உள்ள பல் முத்தின் வரிசையில் உள்ளது. திருமுகம் நிறைய ஆனந்தம் பொழியும். அவனுடைய கோலம் அட! அடா! மிக அழகு என்று அவரைக் கண்டவர் எண்ணுவர். அவருடைய ஊண் ஆலம் (விஷம்). இத் தகையர் உறைவிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(8) அவருக்குப் பாடும் பாட்டுக்கள் நான்மறைகளாகும். பாடுகின்ற கந்தர்வர் தும்புருவும், நாரதரும். உயிர்கட்குப் புகலிடம் அவருடைய நடன சாலையாகும். மூவுலகங்களிலும் இருளில் கைகளால் அபயங் காட்டி நடம் புரிவர். அவர் கையிலுள்ள உடுக்கை தாள ஒலி செய்யும். அன்பர்களின் இதயம் அவருக்குக் கமலாசனமாகும். இப்படிப்பட்டவர் சாட்டியக்குடியில் இருக்கை கொண்டவர்.

(9) சடைமுடி பவளம், வாய் பவளம் போன்ற செந் நிறத்தது. அழகிய மேனி பவள நிறத்தது. மேனியிற் பூசப்பட்ட திருநீறு வெண்ணிறத்தது. பூணூல் வெண்

ணிறம். பற்கள் வெண்ணிறம். மேனிமேல் உள்ள பாம்பு வளைந்து கிடக்கும். இடை துடிபோன்றது. அவ்விடையில் மேகலை, ஆடை ஒரு புறம், இடது பாகத்தில் ஒருத்தி உள்ளாள். இங்ஙனம் இருப்பவரின் உறைவிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(10) பழைய தொண்டர்களுக்கு எளியர். மிண்டர் களுக்கு அரியர் எனக்குள்ள பிணியை என்மீது அருள் வைத்து நீக்காதவர். குழைகளாக விஷப்பாம்புகளை அணிந் தவர். என் (கருவூராரின்) குடிமுழுதாளும் குழகர். கங்கையை அணிந்த அழகர். இப்படிப்பட்டவரின் உறைவிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(11) கழுத்தில் ஆரம் பாம்பு. பிச்சைப் பாத்திரம் கபாலம் (மண்டை ஓடு); பட்டத்து யானை எருது. அன்ப ருடைய கண்ணீர் அவர் திருமஞ்சனமாடும் இடம். தேவி மலைமகள். பூசும் சந்தனம், திருநீறு, இசைப்பாட்டு அரு மறை. முடி சடை. இவ்வாறு கொண்டவர் சாட்டியக்குடிப் பெருமான்.

(12) மெய்யர்க்கு மெய்யர். சோதி வடிவினர். உமை உள்ள பாகம் கறுப்பு நிறம். பிச்சைக்குத் திரிபவர். சுடு காட்டில் வாழ்பவர். பொய்யர்க்குப் பொய்யர். அஞ்ஞான இருளை நீக்கும் குருமூர்த்தி. இப்படிப்பட்டவரின் உறை விடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(13) உண்ட விஷத்தின் கருமையும் திருநீற்றின் வெண்மையும், திருமேனியின் செந்நிறமும், கரியையும், நீறுபூத்த நெருப்பையும், ஒத்து விளங்கும் கழுத்திலே ஒப்பற்ற ஒற்றை வடத்தை அணிந்து எல்லாமாய்த் தோன்றி நிற்கும் அழகு உடையவர் திருமுகத்தலை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமான்.

(14) பிறை தவழும் சடைமுடியும், இருபுறத்தில் காதில் குழையும், கழுத்தில் கருநிறமும், சிவந்த வாயில் புன்சிரிப்பும் கொண்டவர் இடம் சாட்டியக்குடி.

## 4. சிவபிரான் அணிகலன் [4]

**1.** அக்கு :—(எலும்பு), உருத்திராட்சம்.

**2.** தோடு :—செம்பொற்றோடு.

**3.** பாம்பு :—திருஉடம்(பு) அதனில்.........ஆடரவம் துவளுமே. நல்அரவம், பன்னகாபரணம்.

### அணிந்துள்ள பாம்புகளின் வர்ணனை

கூட்டமாக விரிந்த தலைகளிலுள்ள செம்மணிகளையும், பிளவுள்ள நாக்குகளையும், விடம் பொருந்திய மேல் வாய்களையும், கண்களாகிய காதுகளையும், பிளந்த வாய்களையும், விரிபடத்தில் உள்ள நெருக்கமான புள்ளிகளையும், வெண்மையான பற்களையும், கொண்டுள்ள பாம்புகளை ஆபரணமாக அணிந்துள்ளார் பெருமான்.

**4.** மாத்திரை :—காதணி.

**5.** வடம் - தனிவடம் :—வயிற்றின்மேல் ஒரு தனி வடம், ஒற்றை வடம். (ஏதாவலி என்பர்) கழுத்திலோர் தனிவடங் கட்டி.

**6.** வளை :—வான்முத்தின் சரிவளை.

## 5. சிவபிரான் (1) அரையில் (வயிற்றில்) அணிவன [5-1]

ஐந்தலை நாகத்தை அரையில் மேகலைபோல் அணிந்துள்ளார்.

வயிற்றின்மீது ஒரு தனிவடம் தொங்கும்.

தோலாடை உடுப்பர்.

வயிற்றில் அரைப்பட்டிகை விளங்கும்.

புலித்தோல், கத்தி, கச்சு, மாலை, ஆடை, இவை வயிற்றின்மீது விளங்கும். ஆடையின்மீது மணியுமிழ் நாகம் தோன்றும்.

## (2) கரத்தில் அணிவன ஏந்துவன முதலிய [5-2]

அபய மளிக்கும் ஒருகை.

அனல் ஏந்தும் ஒருகை.

இளமான் ஒருகையில் விளங்கும்.

கவணுங் கைக் கொண்டவர்.

(வேடனாய்ச் சென்றபோது)

தாளவொத்தோடு நடம் செய்யும்போது அவர் கையில் பிடித்திருக்கும் உடுக்கை தானே ஒலி செய்யும்.

பின்னும் கரத்தில் பிச்சைப் பாத்திரம், பாம்பு, யாழ், வீணை, வெண்டலை உள.

## (3) கழுத்தில் அணிவன [5-3]

ஒருதனிவடம்.

## (4) காதில் அணிவன [5-4]

(1) அழகிய தோடு.

(2) குழை—குழையைக் "கருவடி குழை"

அதாவது "பிறவியை வற்றச் செய்யும் குண்டலம்" என்கின்றார் ஆசிரியர்.

விஷப்பாம்புகள் குழையாக விளங்கும்.

(3) மாத்திரை—இஃது ஒரு காதணி.

## (5) காலில் அணிவன [5-5]

கழல், கிண்கிணி, சதங்கை, சிலம்பு, பாதுகை, செருப்பு. (வேடனாய்ச் சென்றபோது)

## (6) சடையில, சென்னியிற் சூடுவன [5-6]

கங்கை, திங்கள், பாம்பு, கொன்றைமலர்.

**1. கங்கை:—**

அருப்புனல், அலையெறி கங்கை, ஆறு, இன்னகை மழலை கங்கை, ஒழுகுநீர்க் கங்கை, தரங்கம், திரளும் நீர் மணிக்கங்கை திருநீறு, அழிபொசி வனப்பில் புனல், நிலை நீர், நீர், பாயிருங் கங்கை, வளங்கிளர் நதி எனப்பட்டுளது.

**2. திங்கள்:—**

அந்தியிற் பிறை, அம்புலி, அவிர்சடைமேல் நிரம்பாத பிறை, இளநிலா, இளம் பிறை, ஐம்மதி, சசிகண்டம், தண்ணிலா, தருணேந்து, திங்கள், துண்டவெண் பிறை, தேய்மதி, நிரம்பாத பிறை, நிலா, நிலாமதி, பனி நிலா, பனி மதி, பிறை, மதி, முளை, வெண்மதி, முளையாமதி, வளர் இளம் திங்கள், வளை இளம்பிறை என விளக்கப்பட்டுளது.

**3. பாம்பு:—**

ஆடிவருங் காரரவு, காரரவு சடைமேல் மிளிரும் பொறிவரிநாகம் எனப்பட்டுளது.

**4. மலர் - மொட்டு:—**

அகத்தி மொட்டு, இதழி (கொன்றை), கங்கை நீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றை, குவளை மலர்க் கண்ணி, கொக்கிறகு, (கொக்கு மந்தாரை) கொன்றை, கோங்கு, தழை (வில்வம்), பைங்கொன்றை, மத்தம் (புதுமத்தம்) கூறப்பட்டுள.

## (7) புயத்தில் அணிவன [5-7]

புலித்தோல்.

## (8) மார்பிலும் நெற்றியிலும் (முண்டத்திலும்) அணிவன [5-8]

**1. மார்பு:—**

ஏன மாமணிப்பூண், தடமார்பினிற் பூண்கள், பூணூல் (புரிநூல்), தவளமே புரிநூல், புலித்தோல் மிசைத்

தொடுத்து வீக்கும் பொன்னூல் பூணநூல், அகலம் வெண்புரி நூல் கூறப்பட்டுள.

2. பொட்டு:—

அழகிய பொட்டு இடப்பட்ட நெற்றி.

### (9) திருநீறு [5-9]

அழிவழகிய திருநீறு (அழிவழகு - மிக்க அழகு,) சாந்தின் வெண்மை, தவள நீற்று ஒளி, தவளமே களபம், தவளவெண் பொடி, திருநீறு, திருநீறுமெய்த் திரு முண்டத் திட்டு, தெள்ளுநீறவன் நீறு, பவள மால்வரையைப் பனி படர்ந்ததே தார் படரொளி தருதிருநீறு, பொங்கெழில் திருநீறு, பொடி, வெண்நீறு.

## 6. சிவபிரான் அபிடேகப் பொருள் [7]

அன்பர் வார்ந்த கண் அருவி பிரானுக்கு மஞ்சன சாலே.

ஆரழலாடுவார்.

ஆனஞ்சாடும் சென்னியர்.

பால் நெய் ஐந்துடன் ஆடிய படர் சடைப் பால் வண்ணர்.

## 7. அர்த்தநாரீசர் [8]

செம்மை நிறைந்த தேவிக்குத் தமது உருவமும், பாகமும் அளித்தார். ஒரு பக்கத்தில் மேகலே அணிந்துள்ளார். இருவரே ஒருவராய் உள்ளார். இருவர்க்கு ஒருடம்பு. இடப்பாகம் கறுப்பு. மற்றொரு பாகம் சிவப்பு. காதில் மாத்திரைகளோடு தோடு விளங்கும். குவளே மலர் மாலேயும், கொன்றைமாலேயும் அணிந்துள்ளனர். குழலும் சடையும், கையில் வளேயும், கழுத்தில் தனிவடமும்,

**உடையர்.** ஒருபால் மேகலையும் ஆடையும் துடி இடையும் **கொண்ட** தேவியின் பாகம் **உளது.** ஒரு புறத்தில் கொங்கை **யும் கொடி** இடையும் துலங்கும்.

## 8. அறம் உரைத்தது [9]

கல்லால மரத்தின் நிழற்கீழ் அருந்தவர்க் கரசாய் வீற்றிருந்து பல அறங்களின் திறங்களை முனிவர்கட்கு உபதேசித்தார். அதனால் "ஆலநிழற்பட்டன்" எனப்பட்டார் இறைவர்.

## 9. சிவபிரான் ஆடை, உடை, போர்வை [10]

1. ஆடை, உடை:—

அரையிலோராடை, பாய்புலித் தோல் உடை, அப் புலித்தோல்மேல் கச்சும் பொன் நூலும் விளங்கும். அரையில் புலித்தோல்மீது, சுரிகை (கத்தி) விளங்கும்.

புயத்தின்மீதும் புலித்தோல்.

அரையில் நெருப்பு உமிழ்கின்ற பாம்பைக் கோவண மாகக் கொண்டுள்ளார். கோவணம் வெண்கோவணம் காலில் செருப்பு அணிந்துள்ளார். (வேடனாய்ச் சென்றபோது)

2. போர்வை:—

பெரிய யானையின் உரிவையை உத்தரியமாகக் கொண்டுள்ளார். திருமால் (வாமனரின்) தோலை உரித்துச் சட்டையாக அணிந்துள்ளார்.

## 10. இருவர்க்கு அரியர் [11]

அயனும் மாலும் மயங்கி முறையிட்டும் அவர்களால் உணர முடியாதவர் பெருமான். அவர்கள் அறியா வண்ணம் ஒளி பரப்பி சோதி வடிவாய் நின்றார் பெருமான். ஊழி

ஊழி காலம் பரவிக் கிடந்தும், பணிந்தேத்தியும் காண முடியாத எரியுருவாய் நின்றவர் பெருமான். அவர் திருவடியைக் காண ஊழிதோறூழி உளங்கசிந்து நெக்கு நைந்து பன்றியும், பறவையுமாய்த் தேடி உருகிநின்றும் காணமுடியாத பெருமையுடைய தழற் பிழம்பர் பெருமான். அவரது திருவடியைத் திருமால் காண்கிலன். அவர் திருமுடியைப் பிரமன் காண்கிலன். ஆதலால் இருவரும் மறைகொண்டு இன்னமும் இறைவனைத் துதித்து நிற்கின்றனர்.

## 11. சிவபிரான் உலாவும் (பவனியும்) [12]

கையில் முத்து வளைகள், கழுத்தில் தனிமாலை, முக்கண்கள் இவைதமை உடையவராய்த் திருவாரூரில் வீதியில் எழுந்தருளும் விடங்கராய் நடம் செய்யும் அழகிய தோற்றம் உமாதேவிக்கும், கங்காதேவிக்கும் சிறிதும் இடையாது.

சடா மகுடத்தில் வெண்ணிலா விளங்க, முத்துக் குடை நிழலில் இடப வாகனத்தின்மேல் உலா வரும்போது கண்ட குறிப்பு யாது.

## 12. சிவபிரான் உறைவிடம் [13]

### 1. அன்பர் உள்ளம்:—

தணியாத பேரன்புடைய உள்ளத்தில் குடி கொண்டிருப்பர் பெருமான்.

### 2. கல்லால மரம்:—

கல்லால் நிழலில் வீற்றிருப்பவர் பெருமான்.

### 3. சுடுகாடு:—

பேய்கள் உறையும் கரிகாடு. மயானம் அவர் உறைவிடம்.

4. மலை:—

இருப்பிடம் மலைகள்.

5. தலங்கள்:—

### 1. ஆரூர்

ஆதியாய் வீதி விடங்காரய் நடங்குலாவினரே.

### 2. ஆவடுதுறை

சாந்தையூருக்கு இன்பன், தருணேந்து சேகரன், நம்பி, எம்மான், அமுது, வேந்தன் திருஆவடுதுறை ஆளி - இவர் இருப்பிடம் திருஆவடுதுறை.

### 3. (திரு) இடைமருதூர்

அண்ட வானவர் கோனின் இருப்பிடம் திரு இடை மருதூர்.

### 4. கயிலை

கயிலை மலை இறைவன் இருப்பிடம்.

### 5. களந்தை

எண்ணில் பல் கோடி குணத்தர் கங்கை அழகர், தம் தாயினும் மிக்க நல்லவர், முக்கண்ணர், தமக்கு (கருவூரார்) அருள் புரிபவர், மறைகள் தேட அரியவர், இப்படிப்பட்ட வருடைய இடம் களந்தை ஆதித் தேச்சரம்.

### 6. சாட்டியக்குடி

ஏழ் இருக்கை; சாட்டியக்குடி வாழ்வோர் தம் இதயக் கோயில் - இவை இறைவர் இருப்பிடம்.

### 7. தில்லைச் சிற்றம்பலம்

பிரானும்; பிராட்டியும் பொன்னம்பலத்தை இருக்கை யாகக் கொண்டுள்ளார்கள்.

## 8. பூவணம்

ஆவண வீதிப் பூவணம் கோயில் கொண்டுள்ளார் பெருமான்.

## 9. மகேந்திரம்

மகேந்திர நாதர், மகேந்திர மாமலைத் தேன், மருந்து, குரவர், அஞ்ஞானத்தை நீக்குபவர். இத்தகையவர் இருப்பிடம் மகேந்திரம்.

## 10. வீழி மிழலை

உமை மணவாளன் தெய்வத்தான் தோன்றி கேடிலங் கீர்த்திக் கனக கற்பகம், யோக நாயகன் விரும்பும் இடம் திருவீழி மிழலை.

## 13. சிவபிரான் குடை [14]

தரளக்குடை, (முத்துக்குடை) நிழலில் விடைமேற் கொண்டு உலா வருவார் இறைவர்.

## 14. சிவபிரான் கொடி [15]

சிவபிரான் கொடி விடை; விடைக்கொடி, ஏறணி கொடி, சேஏந்து வெல் கொடி என்று கூறப்பட்டுள்ளது.

## 15. சிவபிரான் சடை [16]

அந்திப் பிறைச்சடை, அரும்புனல் அலமருஞ்சடை, அவிர்சடை, அழகிய சடை, ஆறணி சடை, இளநிலா எறிக்கும் பிறைதவழ் சடை, இளம் பிறைச் செஞ்சடை, குருள் புன்சடை குளிர் சடைத்தெண்டு, கொத்தாச் சடை, கோலச் சடை. சைவம் விட்டிட்ட சடைகள், திருச்சடை, தீமெய்ச் சடை, நிலாக் கோலச் செஞ்சடை, நீர் கொள் செஞ்சடை, படர்சடை, பனிமதிச் சடை, பாலாடு முடிச்சடைகள் பாயிருங்கங்கை

பனிநிலா கரந்தபடர் சடை, பின்னு செஞ்சடை ஒளி துளும்பும் அவிர்சடை, விரிசடை என சடை விளக்கப் பட்டுள்ளது. பிற ஒளிநெறியிற் காணலாம்.

## 16. சிவபிரான் தன்மை முதலியன [17]

### (1) அண்டம் அணு [17-1]

பெருமானுடைய பெருமையை நோக்குங்கால் அண்டம் அணுவாகத் தோன்றும், அவருடைய சிறுமையை நோக்குங்கால் அணுவானது அண்டமாகத் தோன்றும்

### (2) அமுது [17-2]

பெருமான் உயிர்க்கு அமுதாவார் அவருடைய திருவருளை அநுபவித்துப் பருகுங்கால் அமுதத்துக்கு ஒப்பு ஆவார். அன்பரானவர் பருகுகின்ற ஆரமுது அவர்.

### (3) அரசுவேந்தன் [17-3]

அம்பலவர் அருந்தவர்க்கு அரசு. இமையவர்க்கும் அரசு. சுந்தரத்து அரசு அவர். தில்லை வேந்தர் நாதாந்தத்து அரசு.

### (4) அருவும் உருவும் [17-4]

அருவுரு என்று அறிதற்கு அரியவர். ஓலிட்டு அழைத்தாலும் தமது உருவைக் காட்டமாட்டார்.

### (5) அழகு [17-5]

பெருமானுடைய பொட்டிட்ட நெற்றியும், விழியும், வெண்ணீறும் அழகுள்ளது. அழகெலாம் நிறைந்த நீவண்ணர் அவரைக் கண்டவர், அவர் கோலத்தைக் கண்டு "அச்சோ! அழகிதே" என்பர் கங்கை நீர் ஒழுகும் அழகர் அவர். அவருடைய திருவுடம்பு அச்சோ! அழகிதோ! எனத்தக்கது.

### (6) அழிவின்மை [17-6]

இறைவன் அழிவில்லாதவர்.

## (7) அறிவு [17-7]

அறியப் புகுந்த யோகத்தில் பொதிந்து தோன்றும் நுண்ணியர், கலைகளின் பொருளும் அறிவும் ஆவார்.

## (8) ஆட்கொள்ளுதல் [17-8]

பெருமான் தம்முடைய அழகிய விழியையும் காதையுங் காட்டி அருளும் வகையில் அருளி ஆளும் வகையில் ஆள்வர்.

## (9) ஆண் பெண் [17-9]

ஆணோ பெண்ணோ அருவமோ உருவமோ என்று அறிதற்கு அரியவர், பெண்கள்மீது வைத்த காதலை நூறுயிரம் கூறுசெய்து அதில் ஒரு கூறு பெருமானே உன்னிடம் வைத்தால் அங்ஙனம் வைத்தவரை தேவ லோகத்தை ஆளவைக்கும் பெருமை உடையவன் நீ. ஆண் பெண் எனப் பிறக்கும் பிறப்பையறுத்த பேரொளி நீ. மிக்க அருள் புரிந்து ஆனந்தத்தைத் தருகின்ற பெருமையை யுடைய பெரியோன் நீ.

## (10) ஆதி [17-10]

ஆதி நீ.

## (11) ஆனந்தம் [17-11]

அடியேன் மாட்டு ஆனந்தம் இடையறு வண்ணம் பண்ணின ஆனந்தக் கனி நீ என்னுள்ளத்தை இனிய ஆனந்த வெள்ளமாய் ஆக்கினவனாய் இருக்கின்றாய் நீ பெருமானின் திருமுகம் ஆனந்தத்தைப் பொழியும் அருள் பெரிதும் புரிந்து ஆனந்தத்தைத் தரும் உன்னுடைய பெருமையினும் பெரிய தொன்றும் இல்லை.

## (12) இயல்பு [17-12]

பெருமானே! அழகுள்ள உன் முக்கண் முகத்தின் இயல்பு பல கோடியது.

## (13) இரவு பகல் [17-13]

பெருமான் இரவும் பகலும் ஆவர்.

## (14) இன்பம் [17-14]

அஞ்செழுத்தில் தன்னை வைத்து உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகும் தொண்டருக்கு எட்டுத்திசையிலும் உள்ள பலவித சொல்லாட்சி என்ன? பைம்பொன் மாளிகை என்ன? பவளவாயுள்ள மாதர்களின் பருத்த கொங்கை என்ன? கற்பகப் பொழில் என்ன? ஆக எல்லாம் தருவர் கங்கை கொண்ட சோளேச்சரத்தில் வீற்றிருக்கும் பெருமான். ஆதலால் அற்புத் தெய்வம் அவரன்றி வேறு ஒருவரும் கிடையாது. மோக்ஷ வீட்டின் இன்பம் அவர்.

## (15) இனிமை [17-15]

இனிய கரும்பு அவர். இனிய ஆனந்த வெள்ளம் அவர். இனிய பாலும், அமுதமும் அவர். பாம்பை ஆபரணமாக அணிந்தவர். கரும்பு, பால், தேன், அமுது, கனி இவை போல இனியராகிய பெருமான் நமக்கு உள்ளே ஆனந்தத்தைத் தருவார். பொய்யில்லாத மெய்யர்க்கு நலம் பயின்ற இனியவர் பெருமான்.

## (16) உணர்வு [17-16]

பெருமான் உணர்வைக் கடந்த ஓர் உணர்வு ஆவார்.

## (17) உயிர் [17-17]

உயிர்களுக்கு அருள் செய்யும் உமாபதி பெருமான். எல்லா உயிர்க்கும் ஈசன் அவர்.

## (18) உலகு ஆவர் [17-18]

பெருமான் உலகாவர்.

## (19) எங்கும் நிறைந்தவர் [17-19]

உலகெங்கும் நிறைந்தவர் பெருமான்.

## (20) எல்லாம் ஆவர் [17-20]

எவர்களும் யாவையுமாம் தனிப் பெருந்தன்மையினை உடைய பூரணப் பொருளவர் விலையற்ற பொன் போன்று யாவையும் ஆவர்.

## (21) எல்லை கடந்தவர் [17-21]

எண்ணற்ற பலகோடி எல்லைக்கு அப்பால் நிற்பர் பெருமான்.

## (22) என்றும் நிறைந்தவர் [17-22]

என்றைக்கும் நிறைந்த ஒண் சுடர் பெருமான்.

## (23) ஒப்பில்லாதவர் [17-23]

ஒப்பில்லாதவர் பெருமான்.

## (24) ஒளி சோதி சுடர் [17-24]

பிரமனும் திருமாலும் தொடர்வதற்கு அரிய ஒளி வளர் விளக்கு அவர். சென்னிறத்தவராய் நூறாயிரம் சூரிய ஒளித்திரள் கொண்டவர். தில்லைச் சொக்கர். அவருக்கு உரியவள் சோதி மங்கை. இடர் நீங்க மனதிற் பொருந்த நிலைமையில் அஞ்ஞானத்தை ஒழித்துச் சுடர் போன்ற (ஞான) ஒளியைத் தருவர் அவ்விரி சடையழகர்.

## (25) கனி [17-25]

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியவர். காம் விழுங்கக் கூடிய இனிய கனியவர்.

## (26) கண்மணி [17-26]

கண்ணீர் உகுக்கும் கண்ணில் கண்மணி போன்றவர் பெருமான்.

## (27) கருணை [17-27]

பெருமான் கருணைமா கடல். கருவூர்த் தேவருடைய இனிய தமிழ்ப் பாமாலையிற் பொருந்தியுள்ள கருணைப் பாமா் அவர். திரிபுராதிகள் மூவருடைய கா்தலில் அகப் பட்ட கருணைக் கடல். (நமக்கு) யார் துணை என்றால் "அஞ்சல்!" என்று அருள்புரியும் பெருமானுடைய கோயில் திருச்சிற்றம்பலம்.

## (28) கரும்பு [17-28]

மூன்று கண்களை உடைய கரும்பு பெருமான்.

## (29) கருமை வெண்மை [17-29]

கரிய (நீல) கண்டத்தில் (வெண்மை) நிறத் திருநீற்றுக் கோலத்தை உடையவர்.

## (30) கலை [17-30]

கலைகளின் பொருளாவார் பெருமான்.

## (31) கற்பகம் [17-31]

கற்பகக் கனி ஆவார் பெருமான். கனக கற்பகம் அவர்.

## (32) கன்னல் [17-32]

கன்னலும், பாலும், ஆவர் நாற்பெருந் தடந்தோள் அண்ணல்.

## (33) காலம் ஆயினவர் [17-33]

கற்பகாலமாய், உலகாய், அவை இரண்டும் இல்லாத வராய் விளங்குவர் பெருமான்.

## (34) கீர்த்தி [17-34]

அழிவில்லாத கீர்த்தியை உடைய கனகக் கற்பகம் பெருமான்.

## (35) (36) குணமும், குணங்குறி கடந்தமையும் [17-35; 36]

திருவீழி மிழலை என்னுந் தலத்தில் ஐந்நூறு அந்தணர்கள் ஏத்திப் போற்றுகின்ற எண்ணற்ற பல கோடிக் குணத்தர் பெருமான். குணக்குன்றம் பெருமான். குணமும் குறியும் கடந்தவர். அவருடைய பாதக்குறடுகள் பொன்னிறமுடையன. அவருடையகுணம் பரிசுத்தமானது.

## (37) குரு [17-37]

சிவபிரான் மலைமகளுக்கு அருள் பாலித்த குரு.

## (38) குற்றம் அற்றவர் [17-38]

இறைவன் குற்றம் அற்றவர்.

## (39) கொழுந்து [17-39]

பெருமான் தேவர்களின் ஒப்பற்ற கொழுந்து. அவர் கற்பகக் கொழுந்து. ஞானக் கொழுந்து.

## (40) கோலம் [17-40]

சிவபிரானுடைய கோலத்தைக் கண்டு "அச்சோ அழகிதே!" என்று கூறி அவரைப் பார்த்தவர்கள் மனம் குழைவர். வேடரூபம் எடுத்த கோலத்தின் அழகு அவரே.

## (41) சத்தி, சிவம் [17-41]

பெருமான் சத்தியாய்ச் சிவமாய்த் திருஆரூரில் ஆதி விடங்கராய் நடம் புரிந்தனர்.

## (42) சிவம் [17-42]

திருவீழி மிழலையில் தெய்வ நெறியிற் சிவமாய் விளங்குவார்.

## (43) சீர் [17-43]

திரைலோக்கிய சுந்தரம் சீரோங்கும் புகழை உடையது. தெய்வத்தான் தோன்றி நம்பி நிலைபெற்ற செல்வச் சீருடையவர்.

## (44) செய்கை [17-44]

பிச்சை கேட்க வந்த பெருமான் "ஏடி! போருக்கு வா!" என்று அழைப்பது போலப் புருவத்தை நெரிக்கின்றார். நீங்காத நோயைத் தருகின்ற செய்கையை உடையவரை ஒக்கின்றார். பெருமான் நாம் பார்க்காத காரணத்தால் நாம் அவரைப் பார்க்க வில்லையே என்று எண்ணி நம்முடைய ஊருக்கே வந்து என் வளைகளைக் கொண்டு போவாரோ? என்செய்வாரோ? தெரியவில்லை. மேகங்கள் சூழ்ந்தபோது சூரியன் மறைந்து இருப்பது போல வஞ்சகருக்கு மறைந்து நிற்பர் பெருமான். ஆனால் பெருமானுடைய திருவடி ஒளியை அநுபவிப்பவரை அவர் இள வேனிற்காலத்துச் சூரியனைப்போல வாழவைக்கும் தன்மை உடையவராவர்.

## (45) செல்வம் [17-45]

திருவளர் சிற்றம்பலம் என்றும், செல்வம் நிறைந்த சிற்றம்பலம் என்றும் புகழைப் பெற்றுள்ளது., சிற்றம்பலத் தான் தோன்றி நம்பிப் பெருமானைச் செல்வத்தான் தோன்றி நம்பி என்கின்றார் சேந்தனார். சிவஞானம் அழிவொன்றிலாச் செல்வம் எனக் கூறப்பட்டுள்ளது. திரு ஆவடுதுறைக் கோயில் "புகழ் செல்வம் மல்கு பொற் கோயில்" என்று சேந்தனரால் போற்றப் பட்டுள்ளது.

## (46) தன்மை [17-46]

தம்மை மட்டு அன்பில்லாதவரிடம் மறைந்திருந்து, அன்புள்ளவரிடம் அவரவர் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் கற்பக மரம் போல் ஆவார் பெருமான். அவர் தனியர்

ஆயினும் ஓராயிரம் பேருடைய தன்மை உடையவர். தம்மை நினைப்பவருடைய மனத்தினுள் இருக்கும் மணி மாணிக்கம் ஆவார்.

தாமரை மலரில் நீர் பொருந்தாத் தன்மை போல வினையேன்பால் மறைந்து இருப்பர் பெருமான். ஆயினும் நான் பழி பாராமல் "பெருமானே!" உன்பால் விழுந் தொழிந்தேன்.

அன்பர்களின் நெஞ்சில் இடங் கொண்டிருப்பர் பெருமான்.

எங்கும் பரவியும், நிறைந்தும் உள்ள பெருமான் எல்லையற்ற தோழமை உடையராய் என்மாட்டு விளங்குவர்.

மூவுருவின், முதல்வர் அவர். பாதகத்துக்குப் பரிசு தந்தவர் அவர்.

## (47) தாயினும் நல்லவர் [17-47]

தாயினும் மிக நல்லவர் பெருமான்.

## (48) தாயும் தந்தையும் [17-48]

எல்லோருக்கும் தாயும் தந்தையும் ஆவர் பெருமான்.

## (49) தான் தோன்றி [17-49]

பெருமான் செல்வத் தெய்வத்தான் தோன்றி நம்பி என்பர் சேந்தனர்.

## (50) துயர் களைவர் [17-50]

பெருமான் அவரவர் படுகின்ற துயர்நீக்கும் உயிர்க் கடவுளாவார்.

## (51) தூண் [17-51]

பெருமான் ஒரு பொற்றூண் (கனக நற்றூண்).

## (52) தெய்வம் [17-52]

ஐந்தெழுத்தை உள்ளத்தில் வைக்கும் தொண்டருக்கு, பொன் என்ன? பலவகைப் பட்ட நிதிக்குவியல் என்ன? பைம்பொன் மாளிகைகள் என்ன? மாதர்களின் பருத்த கொங்கைகள் என்ன? கற்பகப் பொழில் என்ன? இவை தரும் இன்பங்கள் எல்லாம் தருவர் கங்கை கொண்ட சோளேச்சரத்தில் வீற்றிருக்கும் பெருமான். ஆதலால் அவரைப் போல அற்புதத் தெய்வம் வேறு உண்டோ? (இல்லை என்றபடி.)

## (53) தேன் [17-53]

பெருமான் பாலும், அமுதும், தேனும் ஆவர். அவருடைய பவள வாய் தேனைப் பொழியும்.

## (54) நாயகன் [17-54]

(உலக) புவன நாயகர் பெருமான்.

## (55) நினைத்தற்கு அரியர் [17-55]

நினைத்தற்கு அரியர் பெருமான்.

## (56) நுண்மை [17-56]

பெருமானே! நீ நுண்ணியை எனினும்' உன்னுடைய பெருமை நுண்மை கடந்தது. யோகத்தில் விளங்கும் நுண்ணியர் பெருமான்.

## (57) பண்பு [17-57]

புண்ணியர், புனிதர், மூப்புரங்களை ஓர் அம்பினால் எய்துகந்த பண்பினர் பெருமான்.

## (58) பரஞ்சுடர் [17-58]

பரமாய பரஞ்சுடர் பெருமான்.

## (59) பளிங்கு அனையர் [17-59]

தனது பக்கத்தில் உள்ள பொருளை விளக்கும் பளிங்கு போலத் தம்மை அடுத்தவருடைய அஞ்ஞான இருளைப் போக்குவர் பெருமான். தம் மீதுள்ள வெண்ணீற்றின் ஒளியால் பளிங்குத்திரள் போன்று தோன்றுவர் பெருமான்.

## (60) பால் [17-60]

கன்னலும், அமுதும், பாலுமாய் இனிமையாய் இருப்பர் பெருமான். பாலோடு கலந்த நீர் பாலைக் காய்ச்சின பின்பு பாலை விட்டு நீங்கிவிடுவது போலப் பாவம் நீங்கி புண்ணியம் பின் நிற்கும். அதுபோலப் பெருமான்! என்னுடைய யோக மார்க்கத்தில் விளங்கி என் பாவம் தொலைய; எளியனாய் வந்து என் கண்ணினுள் கலந்து நிற்கின்றார் பால், நெய் முதலிய ஐந்துடன் திருமுழுக்குச் செய்யப்பட்டது (அவர்) சடை. பால் வண்ணர் அவர். பாலும், அமுதமும் தேனுமாய் ஆனந்தத்தை உள்ளத்தில் தருவர். பால் முழுக்குச் செய்யப்பட்ட சடைகள் தாழப் பரமன் ஆடுவார்.

## (61) பிழைத்தவை பொறுப்பர் [17-61]

அடியார்கள் செய்த பிழையைப் பெருமான் பொறுப்பர். ஒருகால் *பித்தனென்று தம்மைப் பேசினவர் செய்த பிழையைப் பொறுத் தருளும் பெருமையை உடையவர் பெருமான்.

## (62) புகழ் [17-62]

பெருமானுடைய புகழை உலகோரே பாடி, ஆடிப் பல்லாண்டு கூறுங்கள்.

## (63) பெருமை சிறுமை [17-63]

எவரும், மறைகள் எவையும், தேவர் கூட்டமும், பிரமனும், மாலும் அறிதற்கு அரிய பெருமையுடையவர் பெருமான். சிறியனுக்கு (கருவூரனாகிய எனக்கு) இனியது

---

*இது சுந்தரர் "பித்தா!" எனப் பாடினதைக் குறிக்கும்.

காட்டிப் பெரிதருள் புரிந்து ஆனந்தத்தைத் தருகின்ற பெருமானே! உன்னுடைய பெருமையிற் பெரிது ஒன்றுளதோ? (இல்லை என்றபடி.)

உலகம் முழுவதையும், திசைகளுள்ள அண்டங்கள் எல்லாவற்றையும் மூடிக்கொண்ட பெருமையில் சிறியதாம் தன்மையை அடைந்து ஒடுங்கிப் போகும் செயலை உடையவர் பெருமான்.

பெண்கள்மீது வைத்த காதலை நூறாயிரம் கூறிட்டு அதில் ஒரு கூற்றைப் பெருமானே! உன்னிடத்தில் வைத்தவர்க்குத் தேவர் உலகத்தை அளிக்கும் உன் பெருமை.

நீ நுண்ணியையாய் இருந்த போதிலும் உன்பெருமை நுண்ணிமையைக் கடந்தது என்பது நான் அறிவேன்.

உன் பெருமையானது, அருள் மிகப் புரிந்து ஆனந்தம் தருவதாகும்.

நுண்ணியை ஆயினும் அந்த நுண்மை ஒடுங்க என் கண்மணியிற் கலந்த பெருமையை உடையவன் நீ.

## (64) போதுத் தன்மை [17-64]

தேவ! நீ யாவருக்கும் பொதுவாக இருக்கின்றாய் அத்தன்மையினின்றும் உன்னை நீக்கித் தனக்கேஉரியவனாகச் செய்யும் வழி இன்னதென்று தெரியாமல் இருக்கின்றாள் இவள்.

## (65) பொருள் [17-65]

பெருமான் அண்டங் கடந்த பொருள். அளவில்லாத ஆனந்த வெள்ளப் பொருள். அவர் பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள். கலைகள் தம் பொருள் சாட்டியக்குடி என்னுந் தலத்தில் இருப்பவர் தம் சேமப் பொருள். வேதப் பொருள். உனது தேன் பொழியும் பவள வாயால் ஞான நூல்களில் உள்ள மெய்ப் பொருளை உணர்த்து.

## (66) பொறுப்பர் [17-66]

அறிவில்லாத என்னுடைய (திருமாளிகைத் தேவர்) சிறுமையைப் பொறுக்கும் கருணை நிலயம் நீ.

## (67) போகம் [17-67]

உயிர்களுக்குப் போகமும், யோகமுமாய் நின்று உயிரை ஆள்பவன்! வெவ்வேறாகிய உலகங்களுக்குப் போகப் பொருளானவன்! என்னுடைய (சேந்தனாருடைய) உயிர்ப் போகமான, [கால காம புராந்தகன்.]

## (68) மருந்து [17-68]

மகேந்திர மலைமேல் இருந்த மருந்து. மங்கையை ஒரு பாகத்தில் வைத்துள்ள அருமருந்து. மணம் வீசும் பழம். எனக்கு அமுதம் போன்றவன்!

## (69) முதல் [17-69]

மூவுருவின் முதல்வர் அவர். உலகெலாம் படைத்த தனி முழுமுதல் அவர். முடிவில்லாத முதல்வர் அவர்.

## (70) மூலம்-முடிவு [17-70]

மூலப் பொருளாய்: முடிவாய், முடிவிலா முதலாய் உள்ளவர் பெருமான்.

## (71) மூத்தன் [17-71]

தேவர் தம் கொழுந்தாய் எழுந்த மூத்தவர் அவர்.

## (72) யார்க்கு அரியர், யார்க்கு எளியர், யாரால் அறியப்படாதவர் [17-72]

பிரமனுக்கும் திருமாலுக்கும் அரியவர். ஆயினும் அடியார்க்கு எளியர்.

ஆண்பெண் அருவம் உருவம் என்று அறிதற்கு அரிதாயவர். மாமறைகளும், தேவர்களும், பிரமனும் திருமாலும் அறிதற்கு அரிய தன்மை உடையவர்.

வஞ்சகர் நெஞ்சகத்து ஒளிக்கும் பெருமான். அவருடைய திருவடி ஒளியில் மூழ்கிய அன்பர்கட்கு இளவேனிற் காலத்து உதித்த சூரியன் போல விளங்குவர்.

## (73) யார்க்குக் கண் ஆவார் கண் ஆகார் [17-73]

மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் கண்ணாகின்ற பெருமான் எனக்குக் கண் ஆகாமல் நான் மிகக் கலங்கி அண்ணாவோ என்று அண்ணாந்து வேதனைப்பட்டு அழைத்தாலும் கிட்டே வருகின்றார் இல்லை.

## (74) யோகம் [17-74]

யோக வெள்ளம் பெருமான். யோகமும், போகமுமாக் உறவாகி உயிரை ஆள்பவர் பெருமான்.

## (75) வித்து [17-75]

உலகெலாம் படைத்த முழுமுதலாய்-அதற்கு ஒரு வித்துமாகி விளங்குவர் பெருமான்.

## (76) விளக்கு [17-76]

தம்மை மதிப்பவருடைய மணி விளக்கு பெருமான்.

## (77) வினை குறுகாமை [17-77]

நீலகண்டப் பெருமானை நாம் கூறினால் (அணுகினால்) வல்வினை குறுகா (அணுகா).

## (78) வினை கெடுதல் [17-78]

தீவினையால் வேதனைப்படுகின்ற எனது (கருவூர்த் தேவாரது) வினை கெடப் புகுந்துள்ளார் பெருமான்.

## (79) வெள்ளம் [17-79]

பெருமான் அருள்சேர் நெடுங் கடலுள் வெள்ளம், ஆனந்த வெள்ளம், இன்ப வெள்ளம், இனிய ஆனந்த வெள்ளம், ஊறும் இன்ப வெள்ளம் - மனிதர்க்கு இன்ப வெள்ளம்.

## 17. சிவபிரான் திருஉருவம் [18]

### (1) உடம்பு [18-1]

பருதி ஒன்று நூறாயிரங் கோடி கிரணங்களைக் கொண்ட திருவுடம்பு மிக்க அழகு உள்ளது. தஞ்சை இராசராசேச்சரத்தவருக்கு. திருஉடம்பில் ஆடரவம் துவளும்; மேகலையும், ஆடையும் துடி இடையும் கொண்ட ஒருத்தி இடதுபாகத்தில் உள்ளாள். அவர் உடம்பில் திருநீறும் புரிநூலும், பற்களும் வெண்ணிறத்தன. திருஉடம்பு பவள நிறத்தது.

### (2) உருவம் [18-2]

அவர் உருவம் எண்ணில் பல்கோடி திருவுருவம்; கருதுவார் கருதும் உருவம். திருவாய் குமுதம். களம் (கழுத்து). குவளை இரு செவியிற் குழை; ஒருபால் மேகலை சடைமேல் பொறிவரி நாகம். முகங் கமலம்! கண்கமலம்: பாதக்குறடுகள் பொன்னிறம். குணம் பரிசுத்தம்.

அவருக்கு முகம் இரண்டு. கழல் மூன்று, கைத்தலம் ஏழு (அக்கினி சொருபர் ஆதலின்).

நெற்றியில் விழியும், பவளவாய் இதழும்; திலகமும் உடையவர். தூய பளிங்கு அன்ன தோற்றத்தவர். பவள மால்வரை போன்றவர். மூவுருவின் முதல்வர். பக்தர்கள் இவரது திருவருளை அடைந்து பருகுந்தோறும் அமுதம் போலத் தித்திப்புச் சுவையை அனுபவிப்பர். தேவர்களே! இவருடைய திருவுருவம் இருக்கும் தன்மையைப் பாருங்கள்.

### (3) கண் [18-3]

அருளுமாறருளி ஆளுமாறாளும் அடிகளுடைய அழகிய விழிகள் ஆயிரந்தாமரையின் அழகு ஒக்கும் முக்கண்கள். கண்கள் மூன்றுடைய கரும்பு அவர். நெற்றியிற் கண்ணும் திலகமும் உடையவர். நுதலில் தீயை வைத்துள்ளவர்.

## (4) கண்டம் [18-4]

நஞ்சு உண்டதால் கண்டம் (கழுத்து) இருள் போன்ற கரிய நிறத்தது. கழுத்தில் தனிவடங் கட்டியுள்ளார். மேகம் போலும், குவளை போலும், நீலமணி போலும் கறுத்த கண்டத்தை உடையவர் பெருமான். விடமூண்ட கண்டத்தவர் அவர்.

## (5) கரம் (கை) [18-5]

பெருமான் கரம் ஆயிரங் கமலத்தை ஒக்கும். எரியும், துடியும் கொண்ட அழகிய கரத்தை உடையவர். கரத்தில் முத்தின் வளை உண்டு. (அர்த்தநாரீசுரராதலின்) தடங்கைகள் நான்கு உடையவர். கையில் சூலம், மான்மறி உண்டு. விடப்பாம்பு கங்கணம். அவர் கைத்தலத்தை வீசி ஆடும்போது நம்மை நோக்கார்.

அடியேனுடைய (கருவூருடைய) சென்னியின் மேல் தமது கைத்தலத்தை வைத்த அருளினர் பெருமான். வலக்கையைக் கவிழ்த்து நின்று ஆடும் அழகுடையர்.

## (6) சுழியம் (உச்சிக் கொண்டை) [18-6]

சடையில் சுழியம், அவிழ்ந்து சரியும்.

## (7) சேவி [18-7]

பெருமானுடைய குழைக்காது பிறவியை வற்றச் செய்யும். காதில் மாத்திரையோடு அழகிய செம்பொற்றோடு விளங்கும்.

## (8) சென்னி [18-8]

ஆன் அஞ்சு (பால், தயிர், நெய், கோதனம், சாணம்)* ஆடும் சென்னியர் பெருமான். அவர் சென்னியில் கொக்கிறகும், (கொக்குமந்தாரை) கொன்றையும் விளங்கும்

*கோதனம், சாணம் இவற்றிற்குப் பதில் மோர், வெண்ணெய் எனவும் கூறப்பெறும்.

துண்டவெண்பிறையும், படர்சடைக் கொத்தும், சுழிய மும், சூலமும், நீலகண்டமும், குழையும், பவளவாய் இதழும், கண்ணுதலும் திலகமும் அவரிடம் விளங்கும்.

## (9) திருவடி [18-9]

தமது கழல் வீசி ஆடுவர். அவர் திருவடியில் சிலம்பு ஒலிக்கும். ஆடல் வாய்ந்த மாமலர்ப் பாதங்கள் ஆயிரஞ் சூரியனை ஒக்கும்.

அவர் திருவடி எண்ணில் பல் கோடி சேவடி, எழிலார் எடுத்த பாதம், கனகமே பாதக்குறடு, செய்யபாதம், தளி ரொளி மணிப்பூம் பாதங்கள், திருந்திய மலரடி, துணை மலர்ச் சேவடி நிறம் பொன்னும் மின்னும் நிறைந்த சேவடி, பனிமலர்த்திருவடி இணை, பாத பங்கயம், பொற்றிருவடி, பொன்னடி, மழலையஞ்சிலம்படி, பையமேலெடுத்த வாமத்து எழிலார் எடுத்த பாதம் என்றெல்லாம் திருவடி விளக்கப் பட்டுள்ளது.

மார்க்கண்டேயருக்காகத் தம் திருவடியால் காலனுடைய உடலவிய உயிர் போகும்படி உதைந்தார் பெருமான்.

தேவர்களுடைய மகுடந் தோயும் மலர்ச்சேவடி.

## (10)' திலகம்-நுதல் நெற்றி பார்க்க [18-10]

## (11) தொடை (குறங்கு) [18-11]

திரள் மாமணிக் குறங்கைத் தேவி வருடுவள்.

## (12) தோள் (புயம்) [18-12]

எண்ணில் பல்கோடி திண்தோள்கள்.

நாற்பெருந் தடந்தோள்கள் பெரிய மலை போன்ற தோள்களின்மீது புலித்தோல் விளங்கும்.

## (13) நிதம்பம் [18-13]

நிதம்பம் - அரை.

பொறையணி நிதம்பப் புலியதள் ஆடை - அரையிற் கட்டிய பாரம் உள்ள அழகிய புலித்தோலாடை.

## 14 நிறம் (வண்ணம்) [18-14]

அழகு நிறைந்த தீவண்ணர். இடது பாகம் கறுப்பு. ஆயிரம் சூரியன் திரண்ட சிவந்த ஒளியை உடையவர் செம்மேனிச் சொக்கர். மற்றொரு பாகம் சிவப்பு. பொன்னிற வண்ணர். மகுடம், திருவாய், திருஉடம்(பு) இவை பவள நிறம், விடம் உண்ட கருமையும் திருநீற்றின் வெண்மையும், வெண்ணிறத்து ஒளியும் கொண்ட பால் வண்ணர் பெருமான்.

## (15) நுதல் (நெற்றி, திலகம்) [18-15]

அழகிய நெற்றியில் அழகிய பொட்டு நெருப்பென்னும் உருவத்தில் நெற்றியிற் கண்ணுடையவர் பெருமான்.

## (16) பல் முறுவல் (புன் சிரிப்பு) [18-16]

அணிமணி முறுவல், தவளம் முறுவல் நித்திலம் நிரைத்து இலங்குவதுபோலும முறுவல் எனப் பல்லின் அழகும் இன்னகை, செய்யவாய் முறுவல் எனப் புன்னகை முதலியன விளக்கப்பட்டுள.

## (17) புருவம் [18-17]

இருநிலாப் புருவம், ஒண்திருப் புருவம், எனப் புருவம் கூறப்பட்டுளது.

போருக்கு வருவாயடி! என்று அழைப்பது போலப் பிராட்டி புருவத்தை நெரிக்கின்றார் எனவும கூறப்பட்டுளது.

## (18) மகுடம் - முடி [18-18]

எண்ணில் பல் கோடி முடிகள், சசிகண்ட சிகண்டம், மகுடம் - பவளம், பாலாடு முடி, மூன்றும் பொன்முடி என்று முடி விளக்கந் தரப்பட்டுள்ளது.

## (19) மார்பு [18-19]

(1) "சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணார்
இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு
மென்று புண்ணியர் போற்றிசைப்ப."

[பெண்கள் மார்பில் அணிந்த குங்குமம் எவ்வாறு காமுகர்க்குக் காதலைப் பெருக்குமோ அவ்வாறு சிவன் மார்பில் அணிந்துள்ள திருநீறு அடியார்கட்குச் சிவபக்தியை வளர்க்கும் என்பது கருத்து.

(2) பிரான் மார்பில் பூண்களும், கொன்றை மாலையும் விளங்கும்.

## (20) முகம் [18-20]

ஆயிரங் கமலம் முகம், விரித்த சடை மேலுள்ள கங்கையின் நீர்த்துளிகள் முத்துப்போல் அரும்பி மலர்ந்த திருமுகத்தில் சொட்டும் ஆயிரம் சூரிய ஒளி கொண்டது முகம்; திருமுகத்தில் நுதல் விழியும், பவள வாய் இதழும் திலகமும் உடையவர் பெருமான். அவர் திருமுகம் ஆனந்தம் நிறையப் பொழியும்.

## (21) முடி - "மகுடம் - முடி" பார்க்க [18-18]

## (22) முறுவல் - பல் வாய் தலைப்பு பார்க்க [18-22]

## (23) மேனி [18-23]

அந்தி போலும் ஒளிர் மேனி, மேனிமுழுவதும் திருநீற்று வெண்மை விளங்கும், செந்தழல் புரை மேனி, பவள மேனி, பணிந்த (பொன்) மேனி எனப் பரமன் மேனி விளக்கப்பட்டுள்ளது.

## (24) வயிறு [18-24-24 A]

## (24) A வயிற்றினுள் உந்தி வளைப்பு

அவர் வயிற்றில் - பிரான் வயிற்றில் உந்தி வளைப்பு உண்டு. வயிற்றின்மேல் தனிவடமும், மாலையும் விளங்கும்.

## (25) வாய் [18-25]

அணிமணி முறுவற் பவள வாய், ஆரணம் பொழியும் பவள வாய், குமுதமே திருவாய், செங்கனிவாய், என வாய் விளக்கப்பட்டுள்ளது.

மெய்ப்பொருள்களை ஞான ஒளி வாயிலாகப் பேரின்ப உணர்ச்சியாகிய தேனைப் பொழியும் பிரானுடைய பவளவாய் எனவும் கூறப்பட்டுள்ளது.

## (26) விரல் [18-26]

இராவணன் நெரியும்படி விரலால் அடர்த்தார் பெருமான்.

# 18. சிவபிரான் திருப்பெயர்கள் [19]

## (1) சிறப்பு [19-1]

அம்பலத்தமுது, அம்பலத்தாடும் சொக்கன், அரன், ஆயிரங் கமலம், ஆயிரம், ஆயிரம் முக்கண் முககர சரணத்தோன், ஆரழல் ஆடுவான், ஆலநிழற்பட்டன், இணங்கிலா ஈசன், உமாபதி, எயில்கள் மூன்று எரித்த ஏறு சேவகன், எருது வாகனன், கங்கை நாயகன், கடியார் கொன்றை மார்பன், கண்ணுதலான், கறைக்கண்டன், கனல் மழுவான், காமநாசன், காலகாம புராந்தகன், கூத்தனார், கொண்டிலங் கண்டத்து எம்குருமணி, கோவணவன், சங்கரன், சசிகண்ட சிகண்டன், சடாமகுடர், சாங்கைதயர் வேந்தன், சாமகண்டன், சிவம், சிவன், சிவலோக நாயகன், சிற்றம் பலவன், சூலபாணி, சேந்தன தாதை, சொக்கர், அம்பலவர், தருணேந்து சேகரன், தாணு, திருஆவடுதுறை வேந்தன், தில்லை நாயனார், தில்லை வாணன், தெய்வத் தான்தோன்றி, படர்சடை முக்கட் பகவன், பல்லாண்டென்னும் பதங் கடந்தான், பலிதிரி அடிகள், பன்னகாபரணன், பிச்சர், பித்தன், பொன்மலை வில்லி, மத்தன், மயானர், மழவிடையார், மழுவான், மறியேந்திய தடங்கையன், மறையோன், (இல்லை

மூவாயிரம் அந்தணருள் ஒருவர் கூத்தபிரான் ஆதலின் மறையோர் எனப்பட்டார்), மாதவர் (மாது + அவர்), விடங்கன், விடமிடற்(று) அடிகள், விடையேறி, விரிசடை அடிகள், வீழிமிழலையுள் விளங்கு வெண்பளிங்கு, வெண்டலை ஏந்தும் குழகன்.

பிற ஒளி நெறியிற் காணலாம்.

## (2) போது [19-2]

அட்ட மூர்த்தி, அண்ணல், அப்பன், அம்மான், அமரர் புராணன், அருந்தவர்க்கரசு, அரு மருந்து, அழகன், ஆண்டகை, ஆத்தன், ஆதி, ஆனந்த வெள்ளப் பொருள், எதிரில் போக நாயகன், ஏகநாயகர், ஐயன், கடவுள், கதி, கரையில் கருணைக் கடல், கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி, குணக்கடல், குருமணி, குழகர், கொற்றவன், கோ, கோன், ஞானக்கொழுந்து, தனியர், தேவன், நம்பி, நவலோக நாயகன், நாதன், நினைப்பார் மனத்தினுளே யிருந்தமணி, நூறு நூறுயிரகோடி அண்டவானவர் கோன் பகவன், பட்டன், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள், பரமன், பிரான், புனிதன், பொய்யிலா மெய்யர்க்கு இனியர், மணவாள நம்பி, மேக நாயகன், யோக நாயகன்.

பிற ஒளிநெறியிற் காணலாம்.

## 19. சிவபிரான் பெயர் சிறப்பு முதலிய [20]

பயில வேண்டியது பெருமானுடைய திருப்பெயர்கள். அவரது திருநாமம் ஆயிரம் நூறுயிரம் பிதற்றும் பெற்றியோர் உண்டு. எண்ணில் பல்கோடி திருப்பெயர் கொண்டவர் அவர்.

# 20. சிவபிரான் திருப்பெயர்கள் விளி [21]

## (1) சிறியன [21-1]

அங்கணா !, அண்ணாவோ !, அணுவே !,
அத்தா !, அப்பனே !, அம்பலவா !,
அமுதே! அரசே! அரனே! அறவனே!
அனகனே! அனலமே அனிலமே! ஈசனே! உணர்வே!
கன்னலே! காலமே! காளாய்! குரவா!
கூத்த(ா)! கோடா! கோலமே! கோவே!
சிவனே! சேடா! சைவனே! ஞாலமே!
திசைமுகா! தென்னா! தேவா! நம்ப! நாத!
நாயகா! நெறியே! பசுபதி! புனலே!
மருந்தே! மறவா! முக்கணா!
வள்ளலே! வேடா! வேந்தே!

பிற ஒளிநெறியிற் காணலாம்.

## (2) நடுத்தரத்தன [21-2]

அம்பலக் கூத்தனே! அமரர்கள் தலைவனே!
அற்புதக் கூத்தா! ஆலகண்டா!
ஆனந்தக்கனியே! உமையவள் களைகண்ணே!
உலப்பிலா ஒன்றே!
என்சேமத் துணையே! ஏறு சேவகனே!
ஒருவனும் இருவா! கங்கை நாயகா!
கருணையின் வெளியே! கற்பகக் கொழுந்தே!
கனக நற்றாணே! காமநாசா!
கால காலா! குணக்குன்றே!
சசிகண்ட சிகண்டா! சூலபாணியே! சோதியுட்சோதி!
தற்பெரும் பொருளே!
தனதன் நற்றோழா! திரள்மணிக் குன்றே!

திரைலோக்கிய சுந்தரனே!
தில்லைக் கூத்தாட! தேவதேவீசனே!
நடம் மகிழ்வானே! நாதாந்தத்(து)
அரையா! நிகரிலா மணியே! நீலகண்டனே!
பரம்பரமா! பவளக்குன்றமே! [பன்னகாபரணா!
பன்னகாபரணர் என்னும் திருப்பெயர் முகத்தலைப்
பெருமான் திருப்பெயராகும்.]
புளின நற்காளாய்! மகேந்திர வெற்பா! முக்கட்
செம்பளிங்கே! முளையா மதிசூடி!
யோக வெள்ளமே! விநாயக சனக!
வெள்ளிக் குன்றமே!

பிற ஒளிநெறியிற் காணலாம்.

## (3) பெரியன [21-3]

அக்கணி புலித்தோலாடை மேலாட ஆடப் பொன்னம்பலத்தாடுஞ் சொக்கனே!
அடங்கவல் அரக்கன் அருள் திருவரைக் கீழடர்த்த பொன்னம்பலத்தரசே!
அந்தரப் புட்(கு) அரசுக்கரசே!
அம்பலம் செம்பொற் கோயில் கொண்டாட வல்லானே!
அவரவர் படுதுயர் களைகின்ற சிறுயிரே!
அவிர்சடை முடிமேல் கங்கை கொண்டிருந்த கடவுளே!
அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே!
ஆடரவாட ஆடும் அம்பலத்(து) ஆரமுதே!
ஆருயிர்மேல் பந்தம் பிரியப் பரிந்தவனே!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
உறவாகிய யோகமும் போகமுமாவ் உயிராளீ!
எவர்க்குந் தொடர்வரியாய்!

என்னுயிர் காவல் கொண்டிருந்த எந்தாய்!

ஏன மாமணிப் பூணணி மார்பனே!

கங்கை நங்கைக் காதலனே!

கருமால் கரி ஈருரித்தெழுபோர் வையினீர்!

கனகன் மார்பு கீண்டானுக் கருள் புரிவள்ளலே!

குணங்குறி இறந்ததோர் குணமே!

குமர விநாயக சனக! சித்தத்துள் தித்திக்கும் தேனே!

சுடர்நீள் முடிமால், அயன் இந்திரன் முதல் தேவர்க் கெல்லாம் குரவா!

செல்வர் மூவாயிரஞ் செழுஞ்சோதி அந்தணர் செங்கை தொழும் கோடா!

திசைமுகன் மால் முதற்கூட்டத்(து) அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே!

திருவளர் தெய்வப்பதிவதி நிதியம் திரண்ட சிற்றம் பலக் கூத்தா!

தில்லை நடம்பயிலும் நம்பானே!

தெய்வவாய் மொழியார் திருவாளர் மூவாயிரவர் தெய்வக்கோனே!

தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!

நாத நாதாந்தத் தரையா என்பார்க்கு நாதாந்த பதங் கொடுப்பாய்!

நாவுக்கரசைச் செல்ல நெறிவகுத்த சேவகனே!

நீ இவே தாந்த நிலைக்குறியே!

பணி செய்வார்க்கு இரங்கும் பசுபதி!

பன்றிப்பின் ஏகிய மறவனே!

பால் நெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப் பால் வண்ணனே!

பூவேந்தி மூவாயிரவர் தொழப் புகழேந்து மன்று பொலிய நின்ற கோவே!

பொன்னம்பலத்தாடுஞ் சொக்கனே!

மகேந்திரத்(து) அந்தரப்புட்(கு) அரசுக்கரசே!
மடங்கலாய்க் கனகன்மார்பு கீண்டானுக்கருள் புரி வள்ளலே!
முக்கண் வளரொளி மணிநெடுங் குன்றே!
மூவாயிரவர் தங்களோ(டு) முன் அரங்(கு) ஏறிநின்ற கோவே!
விடங்கொள் கண்டத் தெம் விடங்கனே!
வைதிகத்தேரேறிய ஏறு - சேவகனே!

## 21. சிவபிரான் நஞ்சுண்டது [22]

ஆலத்தை அமுதாக உண்டு உகந்தார் பெருமான். அதனால் அவர் கண்டம் கருந்தட மலர்புரை போன்றது. அவர் விடமிடற்(று) அடிகளாயினர். தேவர்கள் வேண்ட நஞ்சை உண்டார் பெருமான். என்ன விளையுமோ என்று நெஞ்சம் அஞ்சி வன்பழியாளர்களாம் தேவர்கள் பெருமானுக்கு நஞ்சை ஊட்டினர்.

ஆலகண்டா!; சாமகண்டா!; விடங்கொள் கண்டத் தெம் விடங்கனே! என்பன பெருமானைக் குறிக்கும் விளிச் சொற்கள்.

### வர்ணனை

வளர் நஞ்சு வேலைமார் விடம் பிற ஒளிநெறியிற் காணலாம்.

# 22. சிவபிரான் நடம் [23]

நடமாடும் வகை :—எலும்பு மாலையும், (உருத்திராக்க மாலையும்) புலித்தோலாடையும், மேலாடைமீது ஆடப், பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சொக்கர் பெருமான்.

முத்தும் மணியும் நிறைந்துள்ள சிற்சபை அரங்கத்துள், பிறைசூடிச் சடைகள் தொங்க அணியம்பலத்தில் அவரவர் ஏத்த நட்டம் ஆடுவர் பெருமான்.

அந்தணர் ஏத்த, கழல்வீசி ஆடுவர் பெருமான்.

செவ்வானம் போன்று ஒளிர்கின்ற திருமேனிமீது வரியரவு ஆட அருள் நடம் ஆடுவர். அம்பலமே ஆடரங்காக வெளிவளர் தெய்வக்கூத்தை உகந்து ஆடுவர் பெருமான். அளவற்ற பெருமை பொருந்திய தேவர் போற்ற அழகர் ஆடுவர். இருளில் அருள் நடம் அழகாக ஆடுவர். அனல் கையேந்தி ஆடுவர்.

ஆலகண்டனே!; அரனே ! அருள்புரிவாய் என்றென்று அவரவர் ஏத்தச் சிற்றம்பலத்தில் சடைகள் தாழ ஆறணி சடையெம்பெருமான் அற்புதக் கூத்தாடுவர். உகந்தார் ஓதி ஆரவாரம் செய்யும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகக் கொண்டு நடம் பயிலும் பெருமானே !

குற்றமற்ற முனிவர்களுடன் எழுந்தருளும் ஞானக் கூத்தா !

காட்டிலாடுகின்ற பெருமான் பெருங்கணம் சூழப் பொன்னம்பலத்தில் ஆடுவர்.

பதஞ்சலி போன்ற பல்லாயிரம் பதஞ்சலிகள் தம்மைப் பரவும்படி செல்வச் சிற்றம்பலத்தில் வெளிப்பட்டு ஆடுவர்.

கோட்டூர் மணியம்பலத்தின் ஆடும் பெருமான் அவர்.

சித்தர், தேவர், இயக்கர், முனிவர் இவர்களெல்லாம் தில்லை அந்தாதி அருளாய்! என்று ஏத்துந் தலத்து முடிசூடி கொத்தார் சடைதாழ ஆடுவர் பெருமான்.

தேவலோகம் (உம்பர் நாடு) பூலோகத்தில் (இம்பர்) வந்து விளங்குவதுபோல ஒளிவீசும் கோயிலும், கோபுரமும், மண்டபமும், உள்ள தில்லைப் பதியை இடமாகக் கொண்டுள்ளார் பெருமான்.

ஆடும்போது மணி நீர்த்திவலை முத்து அரும்பித் திருமுகம் மலர்ந்து சொட்டக் கீழ்க்கோட்டூர் மணியம் பலத்தில் ஆடுவர் பெருமான்.

நந்தி முழவங்கொட்டச் சிற்றம்பலத்தில் நாதர் ஆடுவார்.

புலித்தோலைத் தோளில் இட்டு உமையாள் காண ஆடுவர்பெருமான்.

பொன்மலையுள் வைரமலைபோல் வலக்கை கவிழ்த்து நின்று அமரர் போற்றச் சிற்றம்பலத்தில் அழகர் ஆடுவர்.

திருவயிற்றின்மீது உள்ள மாலை நான்கு திசைகளிலும் அலையும்படி நடம்புரிவர் பெருமான்.

தேவர்களும், வித்தியாதரர்களும், ஆனந்தக் கண்ணீர் விட்டுப் புகழ்ந்து துதிக்க ஆடுவர் கூத்தனார்.

சிந்திப்பரிய தெய்வப் பதியாகிய சிற்றம்பலத்தில் ஆரூர் நம்பி (சுந்தரமூர்த்தி) அவர்கள் இசைபாடப் பெருமான் ஆடுவர்.

தில்லை மறையோர்கள் தொழ வையம் உய்ய மகிழ்ந்து ஆடுவர் சிற்றம்பலவர்.

துந்துபி, குழல், யாழ், மொந்தை இவை ஒலிக்க, இருடியர் கணம் துதிக்க, நந்தி கை கொண்டு முழவம் வாசிக்க நடஞ்செய்யும் பரமருடைய கோயில் சிற்றம்பலமாம்.

உலகமாகிய நாடக மேடையில் (உயிர்களை யெல்லாம்) கூத்தாடச் செய்பவராகிய எம்பெருமான் தில்லைப்பெருமான்.

உலகோர் யாவரும் வந்து போற்ற, பதஞ்சலி முனிவரின் பொருட்டு ஆடல் உகந்தவர் பெருமான்.

நான்மறைகளைக் கொண்டு அந்தணர் ஏத்த நடம் புரிவர் பெருமான்.

திருமால், பிரமன், இந்திரன் இவர்கள் வந்து வணங்கி நின்று ஆலகண்டா! அரனே! அருளாய் என்று ஏத்தச் சிற்றம்பலத்தில் ஆடுவர் பெருமான்.

மூவாயிரவரோடு குலாவிக்கூத்தாடுவாயே.

மலைபோன்ற மணி மண்டபத்தில் மறையோர் மகிழ்ந் தேத்த, அரவம் ஆட, கையேந்தி வலக்கை கவிழ்த்து நின்று சிலம்பார்க்க அழகர் ஆடுவார்.

வானவரும், தானவரும் (வித்தியாதரர்) புகழ்ந்தேத்தச் சிற்றம்பலத்தில் வையமுய்ய நின்று ஆடுவர்.

## (1) இருளில் நடம்புரிவர் [23-1]*

பேய்கள் எழுந்து ஆடும் நடுநல் யாமத்தில் புன் சிரிப்புடன், அரவமாட ஆடுவர்.

## (2) தியாகேசர் நடம் [23-2]

உலகெலாம் படைத்த தனி முழுமுதலுமாய் வீதி விடங்கராய்க் கையில் வளையுடனும், கழுத்திலோர் தனி வடமும், கட்டி முக்கண் நாயகராய்ப் பவனிபோந்து பார்வதிக் கும், கங்கைக்கும் இல்லாத சீருடன் வீதிவிடங்கராய் நடம் குலாவுவர்.

### (3) நடனம் செய்யும்போது வாத்தியம் [23-3]

முழவம், துந்துபி, குழல், யாழ், மொந்தை, தமருகம் இவை ஒலிக்கும் நந்தி கை கொண்டு முழவம் வாசிப்பர். பெருமான் கையிலுள்ள தமருகம் அவர் நடம்புரியும்போது தானே ஒலி செய்யும்.

## 23. சிவபிரான் படை [24]

(1) அம்பு :—முப்புரத்தை எரித்தபோது செங்கண் மால் வெங்கணையாய் (அம்பாய்) இருந்தனர்.

(2) கவண் :—பெருமான் வேடராய்ச் சென்றபோது கவண் கைக்கொண்டு சென்றார்.

(3) சுரிகை :—பன்றிப்பின் சென்றபோது பெருமான் அரையிற் சுரிகை (கத்தியுடன்) சென்றனர்.

(4) சூலம் :—பெருமான் சூலபாணியர்.

(5) மழு :—கையில் கனல் மழு ஏந்தியவர்.

(6) வில் :—முப்புரம் எரித்தபோது பெருமான் மேரு மலையை வில்லாகக் கைக்கொண்டு விளங்கினர்.

## 24. சிவபிரான் போற்றித்துதி [25]

அங்கணா போற்றி! அமரர் தலைவனே போற்றி! ஏழ் இருக்கை இறைவனே போற்றியே போற்றி! செங்கணா போற்றி! திசை முகா போற்றி!

[பிற ஒளி நெறியிற் காண்க].

## 25. சிவபிரான் மாலை [26]

கொன்றைமாலை, குவளை மாமலர்க் கண்ணி, சோதி விட்டிலங்கு அலங்கல், உதாத்தார், பாந்தள் பூணாரம், மூறுக்கு வாசிகை (வாசிகை பூமாலை) இவை கூறப்பட்டுள.

## 26. சிவபிரான் வாகனம் [27]

1. விடை :—இஃது இடபம், எருது, குண்டை, சே, விடை எனப்பட்டுள்ளது. இவற்றுள் எருது பட்டவர்த்தனம் - பட்டம் தரித்த யானை எனப்பட்டுள்ளது. சிவபெருமான் விரும்பி ஏறுவது "சே" (விடை).

விடை - காய் சினமால் விடை; கொல்லை விடை; மழவிடை, மால்விடை என விளக்கப் பட்டுள்ளது.

2. மேகம் :—*திருமால் நெடுங்காலம் தவம் செய்து மேகமாக வாகனமாகத் தாங்கினர்.

3. அயிராவணம் :—(சிவலோகத்து யானை) இதன் மேல் மனித உடலுடன் சுந்தரரும், சேரமானும் கயிலைக்குச் சென்றது கூறப்பட்டுள்ளது.

## 27. சிவபிரான் வாய்மொழி [28]

சிவனுடைய வேதாகம சாத்திரங்களைக் கேட்டு அறிவார் உலகிற் பெரியோராவர்.

## 28. சிவபிரான் விரும்புவன [29]

### (1) கருவூரர் [29-1]

கரிய எருமைக்கடா போன்ற தன்னை விரும்பி ஆண்டனர் பெருமான்.

---

* மேக நலூர்தியர் - அப்பர் - 4-16-2 ஏழு உலகையும் பெறுவதற்கு ஆசையுடன் திருமால் சிவபெருமானைப் பலநாள் மேக உருக்கொண்டு தாங்கினர்.

—காஞ்சிப் புராணம் புண்ணிய கோடி - 3, 4.

அயிராவணம் ஏறுது ஆன் ஏறு ஏறி...ஆரூர் ஆண்ட அயிராவணமே - அப்பர் - 6-25-1

### (2) காலனைக் கொன்றது [29-2]

எமனது உடலை (அடியேனுக்காக) மாய்த்தனர் பெருமான்.

### (3) கூத்து [29-3]

அம்பலம் ஆடரங்காகத் தெய்வக்கூத்து உகந்தார் பெருமான்.

### (4) தலம் [29-4]

பெருமான் திருவீழிமிழலை என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருக்கின்றார்.

### (5) யானை உரி [29-5]

யானையின் உரிவை உத்தரியமாக உகந்து கொண்டனர்.

### (6) விடம் [29-6]

கடல் விடத்தை விரும்பி உண்டனர்.

### (7) விடை [29-7]

விடையைக் காதலித்து வாகனமாகக் கொண்டனர்.

## 29. சிவபிரானால் தண்டிக்கப் பட்டவர்கள் [30]

தக்கன், சூரியன், சலந்தரன், பிரமன், சந்திரன், இந்திரன், எச்சன், இராவணன், திரிபுர வாசிகள், யானை, கருடன், எமன், மன்மதன் இவர்களைச் சிவபெருமான் தண்டித்தனர்.

தக்கன், சூரியன், பிரமன், சந்திரன், இந்திரன், எச்சன் இவர்கள் தக்கன் யாகத்தில் தண்டனை அடைந்தார்கள்.

சலந்தரன், பிரமன், திரிபுரம், யானை, எமன், காமன் இவர்களைப்பற்றி அட்ட வீரத்தில் பார்க்க. தலைப்பு 75 இராவணன்; பிறபொருட் பகுதியில் தலைப்பு 191-5 கருடன், இவர்களைப்பற்றிப் பார்க்க.

தக்கன், எச்சன், பிரமன் இவர்களின் தலை விண்டு உருளக் கோபித்தனர் பெருமான்.

ஒரு சூரியனுடைய பற்களையும் பிறிதொரு சூரியனுடைய கண்ணையும் போக்க அடித்தனன்.

## 30. சிவபிரானால் தண்டனை அடைந்தபின் அருள் பெற்றவர் [31]

காமன், காலன், தக்கன், எச்சன், இவர்களைப் பெருமான் அழியும்படி செய்து, பின்னர் அவர்களுக்கு அருள் பாலித்தார்.

## 31. சிவனடியார் [32]

வென்சீர் அடியார், சிறப்புடை அடியார்,* நேசமுடையவர்கள், பக்தர்கள், பணி செய்பவர், பத்தியாய் உணர்வோர், பன்னெடுங்காலம் பணி செய்து பழையோர், புண்ணியர், புராண பூதங்கள் (பழைய அடியார்), மணஞ்செய் குடிப்பிறந்த பழ அடியார், மெய்யடியார்கள் எனச் சிவனடியார்கள் குறிக்கப்பட்டு உள்ளார்கள்.

## 32. சிவனடியாரும் புரந்தராதிகளும் [33]

திருவீழிமிழலைச் சோலையில் தங்கி இறைவன் திருவடிகளைப் போற்றுகின்ற அடியவர் பாதங்களை இந்திரன் முதலான தேவர்கள் போற்றிப் புகழ்வார்கள்.

## 33. சிவனும் அடியார்களும் [34]

அடியவர்கள் தம்மைச் சூழ்ந்துவரப் பெருமான் வேறு இடத்தைத் தேடாமல் தாம் சேருமிடம் சிவ புண்ணியச் செயல்கள் உள்ள சிறப்பினை உடைய சிவலோகமாக விளங்குவது தில்லைச் சிற்றம்பலம்.

அடியார்க்கு எளியவர். பவளமலை போன்ற பெருமான் அன்புடன் தம்மை ஐந்து எழுத்துடன் தியானித்து உள்ளம் உருகும் தொண்டர்கட்கு வேண்டியவெல்லாம் கொடுப்பர் பெருமான். அவர்கள் உள்ளத்துக் குடியிருப்பார் பெருமான். அடியார்க்கு அருள்புரிந்து மறுபிறவியை அறுக்கும் வழி தருவர் பெருமான்.

என்றும் மனம் உருகிக் கதறுகின்ற அடியார்கள் பயனற்ற தன்மையை அடையார் நல்ல பயனைப் பெறுவர். அவருடைய நீர் அரும்பும் கண்களில் திகழ்கின்ற கண்மணி போன்றோர் சிவபெருமான்.

கங்கை நங்கைக் காதலனே! என்று கூறித் திருமால் முன்னர் வரங்கிடக்க, நீ உன் அடியார்களுக்கு அருள்புரியும் அமுதம்போல் விளங்குகின்றாய்.

குடிகுடியாகத், தலைமுறையால் (பெண்களை) சிவன் அடியார்க்குக் கொடுத்தும், வாங்கியும், பெருமானுக்கு ஆளாகுவர் மெய்யடியார்கள்

மெய்யடியார்கள் திருவடிக்கு அடிமை பூண்டு திருநீறு இடாதவர்கள் இறப்புக்கும், பிறப்புக்கும் ஆளாகி மீண்டும், மீண்டும் பிறப்பர்.

சில ஆண்டுகளில் அழிகின்ற சில தேவர்களைப் போற்றாமல் பல்லாண்டு எனப்பட்ட நிலை கடந்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோமாக.

பிரமன், திருமால், முதலான கூட்டத்து அன்பர்கள் பருகும் ஆரமுது பெருமான்.

நேச முடை அடியார்கள் நெஞ்சினுள் இடங்கொண்டு இருப்பர் பெருமான். அவரைப் பல்லாயிரக் கணக்கானவர் பதஞ்சலி போன்ற அடியார்கள் போற்றுவர்.

சிவ பக்தர்கள் பெருகி வளர்வாராக!

## 34. சிவனும் அடியார் அல்லாதவரும் [35]

(1) அம்பலத்தாடும் பெருமான்மீது ஆசையில்லாத அறிவிலிகள்.

(2) தில்லைக் கூத்தன்மீது அன்பு வைத்து வெண்ணீறு இடும் நம்மவர்களை நணுகாத நாய்கள் துட்டர்கள்.

## 35. சிவனும் அண்டமும், [36]

எல்லா அண்டங்களையும் ஆள்பவர் பெருமான்.

## 36. சிவனும் அருளும் [37]

அடியார்களுக்கு அருள்புரிவர் பெருமான். அவருடைய அருட்கடலால் தான் அரசு வீற்றிருப்பது. அவருடைய அருளைப் பெற்றால் "வீடு பேறு" அடையக்கூடும். அவருடைய அருளைப் பெறும் பொருட்டு 'இந்திரனும்; பிரமனும்; திருமாலும்; [பதஞ்சலி வியாக்கிரபாதர்] இருவரும் அவரைப் போற்றுகின்றார்கள்.

ஒருதாய் தேன் கலந்த அமுது ஊட்டுவது போல பெருமான் அருள் புரிவர். அருளுமாறருளி ஆளுமாறுளுவர் பெருமான்.

சம்பந்தருக்கு அருளி ஆட்கொண்டார். சிலந்தியை அரசாள வைத்தார்.

சிற்றம்பலத்தில் புகுந்து அங்குள்ள பல பணிகளைச் செய்து பெருமான் திருவருளைப் பெற்றால் என்றும் இன்புற்றிருக்கலாம்.

## 37. சிவனும் ஆணும்பெண்ணும் [38]

பெண்கள் மீதிருந்த காதலை நூறு நூறாயிரம் கூறிட்டு அதில் ஒரு கூறு தன்மாட்டு வைத்தவருக்குத் தேவலோக வாழ்வைக் கொடுக்கும் பெருமையை உடையவர் பெருமான்.

## 38. சிவனும் இசையும் (கீதமும்) [39]

ஈசனுக்கு வேதம்தான் கீதம். பலிக்குத் திரிகின்ற பெருமான் வீணையின் இசையை எழுப்பிப் பாட, அவ்விசையோடு கலந்து கின்னரம் முதலிய இசைக்கருவி ஒலிக்க வேத மந்திர மாகிய இசைப் பாடல்களும், குழல் ஓசையும் எங்கும் பொருந்தும் தலம் திருவிடை மருதூர்.

## 39. சிவனும் இந்திரனும் [40]

சிவனது திரு அருளைப் பெற்றால் பேரின்ப வீட்டில் இருக்கலாம் என்று இந்திரன் பெருமானை ஏத்துகின்றான். இந்திரனுடைய வரம்பு கடந்த அகந்தையை அழித்தார் பெருமான்.

இந்திரன் முதலான தேவர்களுக்கெல்லாம் தலைவர் பெருமான்.

பெருமானைச் சேவிக்கவந்த பிரமன், இந்திரன், திருமால் முதலியோர் பெருமானுடைய காவல் பொருந்திய திருக்கோயில் வாயிற்படியில் எங்கும் நெருங்கினர் இன்னும் புகலுதற்கரிதாய்ப் பெருமானைக் காண இரந்திரந்து வேண்டுகின்றார்.

திருவீழிமிழலைப் பொழிலிலிருந்து பெருமானைப் போற்றுகின்றவர்களுடைய திருவடிகளை இந்திரன் ஆதிதேவர்கள் போற்றிப் புகழ்வார்கள்.

## 40. சிவனும் உயிர்ப்பும் [41]

திருவாலி அமுதனர் உள்ளத்தில் உயிர்ப்பாய் விளங்கு கின்றார் பெருமான்.

## 41. சிவனும் உயிரும் ஊனும் [42]

பெருமான் எல்லாப் பொருள்களிலும் பொருந்தி இருக் கின்றார். பிறப்பு தளிர், இறப்பு இலை உதிர்வு என்று இருப் பதனால் இறைவனிடம் தற்காலம் சேர்வதற்கில்லை யென்று நெஞ்சம் உருக வேண்டிய அவசிய மில்லை.

மலத்தோடு கட்டப்பட்டிருக்கும் நிலையினையும் மலத்தை விட்டு நீங்கும் நிலையையுந் தெரிவிக்கும் பொருளையுடைய ஞான நூல்களில் கூறிய வழியிலே ஒழுகி நின்று, சிறிது சிறிதாக மேல் நிலையை அடைந்து, இறைவன் கலந்ததாகிய ஒரு கலப்பு முற்றிலும் அறியாதவகையில் தந்தையாகவும் தாயாகவும் விளங்குவர் பெருமான்.

## 42. சிவனும் உலகமும் [43]

உலகெலாம் படைத்த தனி முழு முதலுமாய் அதற்கு ஒரு வித்துமாய் விளங்குவர் பெருமான். அவர் கற்பமாய் உலகாய் அவை அல்லாதவராய் விளங்குவர்.

## 43. சிவனும் எரியும் எரியாடுதலும் [44]

சிற்றம்பலத்தில் எரிமகிழ்ந்து ஆடுவர் பெருமான்; அப் பெருமானை நாம் உணர்வது அரிது. தில்லை அந்தணர் பலர் போற்ற எரி ஆடுவர் ஈசனர்.

## 44. சிவனும் ஐந்தெழுத்தும் [45]

யார் தம்மை ஐந்தெழுத்தால்ஓதி இன்புறுகின்றார்களோ அவர்களுக்குப் பொன், பெண், மண் இம்மூவகைப் போகமுங் கொடுக்கும் கற்பகப் பொழில் ஆவர் இறைவர், ஆதலால்

அற்புதத் தெய்வம் இவர் அல்லாது வேறு யார் உளர்? ஐந்தெழுத்தைப் பிதற்றிப் பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன் நான் என்கின்றார் ஆசிரியர் [கருவூர்த்தேவர்.]

## 45. சிவனும் கங்கையும் [46]

கங்கை நங்கை காதலர் பெருமான். கங்கை அழகர் அவர்.

## 46. சிவனும் கடலும் [47]

கரையிலாத கருணைப் பெருங்கடல் பெருமான்.

## 47. சிவனும் கற்றோரும் [48]

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி பெருமான். அறிவுடையோர் சிவநெறியில் செல்வர்.

## 48 சிவனும் காமனும் [49]

ஈசன் மருமகன் மன்மதன். அவன் தாய் திருமகள்.

## 49. சிவனும் சமணபுத்தரும் [50]

சமணரும், தேரரும் சிற்றம்பலக் கூத்தரைச் சேரமாட்டார். புறச்சமணிகளாம் சமணபுத்தருடைய பொய்ம்மையைக் கண்ட உன்னை அடியேன் சேரும் வகை சேர்த்து அருளுவாயாக! [என வேண்டுகின்றார் திருமாளிகைத் தேவர்.]

## 50 சிவனும் செபவடமும் [51]

பெருமான் பளிங்கு செப மாலையைக் கொண்டுள்ளார்.

## 51. சிவனும் ஞாயிறும் (சூரியனும்) [52]

["அட்டவீரம்" தலைப்பு 2 - ல் பார்க்க.]

அன்று ஒரு சூரியனுடைய பல்லைத் தகர்த்தார் பெருமான்.

## 52. சிவனும் ஞானமும் [53]

ஞானக் கொழுந்து கூத்தப் பெருமான்.

## 53. சிவனும் திருமாலும் [54]

பெருமானுடைய திரு அருளைப் பெற்றால் பேரின்ப வீட்டில் இருக்கலாம் என்று திருமால் அவரைப் போற்று கின்றார். திருமாலும் சிவனும் ஓர் உடம்பினர். கங்கை கங்கை காதலரே! அருள் புரிக என்று திருமால் வரங்கிடக்கப் பெருமானே! நீ உன் அடியார்களுக்கு அருள் செய்கின்ற அமுதமாய் இருக்கின்றாய்.

திருமாலுடைய (வாமனருடைய) உரியைச் சட்டையாகக் கொண்டுள்ளார் பெருமான். (இவர் சீகாழியின்) "சட்டை நாதர்" எனப் பெயர் பெறுவர்.

திருமாலே விடை ஊர்தியாகவும் கொண்டு உள்ளார். நாரணர் பரவும் திருவடியை உடையவர் பெருமான். "பரம் பரமா! அருள்" என்று திருமால் தமது கையால் திருச்சிற்றம்பலவரைத் தொழுகின்றார்.

திருமாலுக்கு அருள் புரிந்து அவரைச் சிவிகையாக ஊர்ந்த மேகநாயகர் பெருமான். [திருமால் மேகஉருக் கொண்டு சிவபிரானைத் தாங்கியதைப் பிறபொருட் பகுதியில் வரலாறு என்னும் தலைப்பில் காண்க.]

நரசிம்மமாய் இரணியனுடைய மார்பைப் பிளந்த திருமாலுக்கு அருள் புரிந்த வள்ளல் பெருமான்.

திருமால் ஓலமிட்டு இன்னும் புகுவதற்கு அரிதாய், பெருமானுடைய சந்நிதியில் இரந்திரந்து அழைக்கின்றார்.

திருமால் அறிதற்கரிய பெருமையை உடையவர் பெருமான். திருமாலுக்குச் சக்கரம் அளித்து அருள் செய்தவர் பெருமான். (வரலாறு என்னுந் தலைப்பில் காண்க).

சிவபிரானுடைய திருவடியைத் திருமால் காணமுடிய வில்லை.

## 54. சிவனும், திருமாலும், பிரமனும் [55]

திருமாலும்,பிரமனும் கைகூப்பித் தொழுது "பரம்பரமா" அருள் என்று சிற்றம்பலந் தொழுகின்றார்

திருமாலும், பிரமனும் பூசலிட்டு, ஓலமிட்டுச் சிவனது சந்நிதியில் புகுவதற்கு அரிதாய் இரந்திரந்து அழைக் கின்றார்கள்.

திருமாலுக்குச் சக்கரம் தந்து பிரமனை நிந்தித்து விடை வாகனத்தைக் காதலித்து ஏறினர் சிற்றம்பலவர்.

திருமாலும் பிரமனும் பேரின்ப வீட்டில் இருக்க விரும்பிப் பெருமானைப் போற்றுகின்றார்கள்.

## 55. சிவனும், திருமாலும், பிரமனும், இந்திரனும் [56]

பிரமன், இந்திரன், திருமால் இவர்கள் குழாங் குழாமாக நெருங்கி நின்று நிற்கக் கூத்தாடுவர் பெருமான்.

திருமால், பிரமன், இந்திரன் இவர்கள் பெருமான் சந்நிதியில் புகல் அரிதாய் ஓலமிட்டு அழைத்து ஆலகண்டா! அரனே அருளாய் என்று போற்றுவர்.

## 56. சிவனும் தில்லைவாழ் அந்தணரும் [57]

உன் அடியார் தேவலோகத்தை ஆள, நீ அங்ஙனம் ஆளாதே, மூவாயிரவரொடும் குடிவாழ்க்கை கொண்டும், குலாவியும் கூத்தாடுகின்றாய்.

அருமறையை அறிந்து எப்போதும் வேள்வி இயற்றும் பெரியோர் தில்லைவாழ் அந்தணர்.

பூமியில் சிவலோக வேத நிலைமாறாத மூவாயிரவரையும், மகிழ்ந்து ஆளவல்லவர் பெருமான்.

பசுவை வேள்விக்கு உபயோகப்படுத்தும் அந்தணர் தில்லை அம்பலத்துள் உள்ள மூவாயிரவர்.

ஆறங்க நான்மறையோர் மூவாயிரவர்.

கற்பக விருட்சம் போன்று சிவபிரானுடைய திருப் பெயர்கள் ஆயிரம் நூறாயிரக் கணக்கில் பிதற்றும் (சபம் செய்யும்) தன்மை உடையவர்கள் வாழும் தில்லைநகர்.

மூவாயிரம் செழுஞ்சோதி அந்தணர் செங்கை கூப்பித் தொழுகின்ற பெருமான் கூத்தப் பிரான்.

தெய்வ வாய்மொழியார் திருவளர் மூவாயிரவர் வணங்கு கின்ற தெய்வம் கூத்தப்பிரான். தேசமிகு புகழோர் தில்லை மூவாயிரவர்.

மூவாயிரவர் "பூ" ஏந்தித்தொழ, புகழேந்தும் மன்றினுள் பொலிகின்ற தலைவர் கூத்தப்பிரான். மறைகள் நான்கையும் கொண்டு அந்தணர் ஏத்த மகிழ்ந்து நடம்புரிவார் பெருமான்.

பெருமான் புயத்தின்மீது புலித்தோலும் திருநீறும் பூநூலும் விளங்கக் காணப் பெற்றவர் தில்லைவாழ் அந்தணர்.

தில்லைவாழ் அந்தணர் ஏத்த அனலைக் கையிலேந்தி அரவமாட அழகர் ஆடுவார்.

மறைவல நாவலர்கள் தில்லைவாழ் அந்தணர் வணங்க அம்பலத்தில் ஆடுகின்றார் பெருமான்.

முத்தீயாளர், நான்மறையோர் ஆகிய மூவாயிரவர் பெருமானுடன் ஒத்து வாழும் தன்மை உடையவர்; இவர்கள் ஓதிய நான்மறையைத் "தெத்தே" என்று வண்டுகள் பாடும்.

மூவாயிரவருடன் கலந்து விளையாடும் அம்பலந்தான் பெருமானுடைய நடன சபை.

மூவாயிரவர்களோடு குடிவாழ்க்கை கொண்டு அவர்களோடு குலாவிக் கூத்தாடுவர் பெருமான்.

வேதம் ஓதும் தன்மை மாறுபடாத மூவாயிரம் அந்தணர்களை மகிழ்ந்து ஆளுகின்ற பெருமான்.

## 57. சிவனும் தேவர்களும் [58]

தேவர் கணம் தொழுதேத்தும் தேவன்; அவர்கள் முறையிட்டும் அவர்களால் அறிய முடியாதவர் பெருமான்; எல்லாத் திசைகளினின்றும் தேவர்கள் ஏத்தும் அழகிய தில்லை அத்தர் பெருமான்.

தேவர்கள் பாவிக்கும் பாவகத்துக்கு அப்பாற் பட்டவர் பெருமான்.

தேவர்களும், சித்தர்களும், இயக்கரும், முனிவரும் தில்லை அத்தா! அருள் புரிக அம்பலவா என்றென்று ஏத்தப் பெருமான் நடம் புரிவர்.

பிரமன், திருமால், இந்திரன், சூரியன், ருத்திரன் எல்லாம் ஆவர் கங்கைகொண்ட சோளேச்சரத்துப் பெருமான்.

பிரமன், திருமால், முதலாகக் கூட்டத்து அன்பர்கள் பருகுகின்ற அமுதம் ஆவார் பெருமான்.

நீரொடு பூவைத் தூவித் தொழுதேத்து கையினராய் சுவாசத்தை உள்ளடக்கி உருகிய அன்புள்ளவராய்த்

தேவர்கள் தொழ ஆடுவர் தில்லைக் கூத்தர். தம்மைத் தேடித் தேவர்கள் பரவுகின்ற பெருமான் சிற்றம்பலவர்.

நாராயணனோடு பிரமன்; அக்கினி; சூரியன்; இந்திரன் தேவர் கூட்டம் தேரோடும் வீதியில் எல்லாத் திசைகளிலும் நிறைந்து நிற்க நாம் பாடியும் ஆடியும் அவருக்குப் பல்லாண்டு கூறுவோமாக!

நூறு நூறுயிர கோடி தேவர்களுக்குத் தலைவர் பெருமான்.

திருமால்; பிரமன்; தேவர்கள் இவர்கள் நெருங்கி முடியோடு முடிகள் மோதுவதால் அவரவர் முடிகளினின்றும் கீழே விழுந்த மணிகளை அடியார்கள் அலகால் (துடைப்பத்தால்) தில்லை அம்பலத்தில் திரட்டுவர்.

பக்தியுடன் உணர்வோர் பெருமானுடைய அருளைப் பருகுந்தோறும் அமுதம்போலத் தித்தித்திருப்பர் பெருமான்; அத்தகைய பெருமானுடைய திருஉருவத்தைத் தேவர்களே நீங்கள் பாருங்கள்.

திருமால்; பிரமன் ஆகிய தேவர்கள் பல நெடுங்காலம் பெருமானைக் காண்பதற்கு ஏங்கி நிற்பர்.

தேவர்கள் வேண்டப் பெருகி வந்த நஞ்சை பெருமான் உண்டனர். விண்ணவரும், மண்ணவரும், பணியத் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடுகின்றார் பெருமான்.

திரு அம்பலத்தில், கோடிக்கணக்கான தேவர்களின் மகுடத்தில் உள்ள மணிகள் ஒளி வீசும்.

## 58. சிவனும் நந்தியும் [59]

நந்தி கையால் முழவத்தை இடிபோற் கொட்ட நடம் புரிவர் பெருமான்.

## 59. சிவனும் நாயன்மாரும் [60]

### (1) அப்பர் .சம்பந்தர்:—

இவர்கள் பழுத்த செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காசு பெற்றனர். இவர்கள் நெஞ்சில் நிறைந்து நின்றார் பெருமான்.

[திருவீழி மழலையில் சிவபிரான் இவர்களுக்குக் காசு அருளியதைக் குறிக்கும்]

### (2) கண்ணப்பர் கணம் புல்லர்:—

கண்ணப்பர் கணம் புல்லர் எனப் பெயர்பெற்ற உனது அடியார்கள் தேவலோகத்தை ஆள, பெருமானே! நீ அங்ஙனம் ஆளாமல் (தில்லை) மூவாயிரவரொடும் குடி வாழ்க்கை கொண்டு குலாவிக் கூத்தாடுகின்றாய்.

### (3) கோச்செங்கட் சோழ நாயனார்:—

இவர் முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து திருஆனைக் காவில் சிவபிரானை வழிபட்டு அப் பெரும் புண்ணியத்தால் அரசராய்ப் பிறந்தவர்.

### (4) சம்பந்தர்:—

எம்முடைய வல்வினை நோயை நீக்கி எம்மை ஆளுகின்ற காழியர்கோன் சம்பந்தரை ஆட்கொண்டு அருள் செய்தார் பெருமான்.

### (5) சுந்தரர் (ஆரூரர்):—

பெருமானை ஆரூர் நம்பி (சுந்தரர்) இசை பாடப் பெருமான் நடம் ஆடினர்.

### (6) சுந்தரரும் சேரமானும் :—

மனித உடலோடு சுந்தரர் (இறைவன் அனுப்பின) வெள்ளை யானைமீது ஏறிச் சேரமானுடன் கயிலைக்குச் சென்றனர்.

### (7) திருநாவுக்கரசு :—

திரு ஆமூர் நாவுக்கரசு கயிலைக்கு வரும் சிவநெறியைக் காட்டினர் பெருமான்.

**(8) தில்லைவாழ் அந்தணர் :—**

*["சிவனும் தில்லைவாழ் அந்தணரும்" என்னும் தலைப்பு 56 பார்க்க]*

**(9) சண்டேசுரர் :—**

*தந்தையின் தாள் அறும்படி செய்த* ***சண்டிக்கு விண்ணுலகத்தவரும்,*** *மண்ணுலகத்தவரும், வணங்கக் கோயிலும், சிவ நிர்மாலியமான அமுதும் தந்தருளிப் பரி* ***வட்டமும்,*** *இண்டை மாலையும் "சண்டேசுரர்" என்னும் திருப்பெயரையும் தொண்டர்களுக்கு அதிபதியாம் தலைமைப் பதவியையும், அவர் செய்த பாபச்செயலுக்குப் பரிசிலாகக் கொடுத்து அருளிய பெருமானுக்கு நாம் பல்லாண்டு கூறுவோமாக!*

*[தமது தலையில் சூடி இருந்த கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினர் சிவபிரான் சண்டேசுரருக்கு]*

## 60. சிவனும் பஞ்ச பூதமும் [61]

*வாயு; நீர்; தீ, பூமி, ஆகாயம் எல்லாம் நீயே.*

*[பஞ்சபூதம் என்னும் தலைப்பு 128 பிறபொருட் பகுதியில் காண்க]*

## 61. சிவனும் பலியும் [62]

*வீடுகள்தோறும் பலி வேண்டித் திரிவர் பெருமான்; அப்படி அவர் எழுந்தருளும்போது அவருக்குப் பலி இட வந்த பெண்களின் கூந்தல் அவிழ்ந்து அதிலிருந்த வண்டுகள் "பொம்" என்று ஒலிக்கும்.*

*இந்திர லோகம் முழுவதும் பெருமான் இடும் பணியைக் கேட்க விரும்பி இருக்கும்போது பெருமான் அங்கு போகாமல் ஐந்தலை நாகத்தை அரையிற் கட்டி வீடுகள் தோறும் பலிக்குத் திரிவர். அப்படித் திரிந்து கிடைக்கும்*

ஊணை உண்பர். அவர் உண்ணும் பாத்திரம் கபாலம் (ஓடு). பெருமான் பகற் பொழுதிலிருந்து "பக்தா பலியிடுக" என்று கூறி எங்கும் பார்க்கின்றார்.

## 62. சிவனும் பார்வதியும் [63]

அன்ன நடையுடைய உமா தேவியின் கணவர் சிவபெருமான். தேவி பார்க்க வேட ரூபம் கொண்டு நாயுடனும், கையில் வில்லுடனும், சென்றனர்.

பெருமான் உமை அஞ்ச யானையின் தோலை உரித்தார். மலைமகள் தொழ ஆடுவர் கூத்தப்பிரான். அவள் பெருமான் மகிழும் பெருந்தேவி. அவளுக்கு அருளும் குரு அவர். அவளுடன் ஆன் ஐந்தாடுவர். அவள் பெருமானது தொடையை வருடுவள்.

## 63. சிவனும் பார்வதியும் கங்கையும் [64]

கொடி போன்ற இடையை உடைய பார்வதி பார்த்தால், கொடியளாகிய அவள் கோபிப்பாள் என்று சடைமுடிமேல் கங்கையை ஒளித்து வைத்திருக்கின்றார் பெருமான்.

பெருமான் உலாப் போந்து ஆடும் அழகிய தோற்றம், உமாதேவியிடத்திலேனும், கங்கையிடத்திலேனும் கிடையாது. அப்படி அவர் ஆடும் கோலம் கொள்வதற்கு அவரது மனக்கருத்துத் தான் யாதோ ?

## 64. சிவனும் பிரமனும் [65]

பிரமனும் இந்திரனும் பெருமானை வணங்கி "ஆல கண்டா அரனே !" அருளாய், என்று துதிக்கப் பரமன் ஆடுவர். அவர் ஆடும் அரங்கம் அம்பலம். பிரமனும், திருமாலும் எம் கூத்தப்பெருமானுடைய திருவருளைப் பெற்றார். பேரின்ப வீட்டில் இருக்கலாம் என்று இன்னமும் போற்றி நிற்கின்றார்கள். அன்னப்பறவையின் உருவத்துடன்

பறந்து பிரமன்தேட, அவனுக்குக் கிட்டாது, பெரியராய் நின்றார் பெருமான்.

## 65. சிவனும் பெறும் பேறும் [66]

ஒருவர் பெறக்கூடிய பேறு பெருமானுடைய திருப் பெயரைப் பயில்வதும் அவருடைய திறத்தை நினைந்து அழுவதுமே.

## 66. சிவனும் பேயும் [67]

எரிகின்ற சுடுகாட்டில் பிணங்களின் இறைச்சியை உண்டு ஏப்பம் விட்டு விளங்கும் பற்களுடன் பேய்களின் கூட்டம் ஆடுகின்ற இருளில், நடுஇரவில் அருள் புரிவதைக் காட்டும்புன் சிரிப்புடன் தமது திருமேனியில் பாம்புகள் ஆட, ஆடுகின்ற எம்பெருமான் வீற்றிருக்கும் இடம் திருவிடை மருதூர்.

பேய்கள் உள்ள சுடுகாடு தான் அவருக்கு உறைவிடம்.

புறச்சமயிகள் முன்பு அடியேனைப் பல நோய்கள் வருத்த இருக்கின்ற காரணத்தால் "இத்தொண்டனைப் பேய் என்று கருதித் தம்பிரானே 'அருளாது இகழ்கின்றான்" என்று அவர்கள் என்னைப் பரிகசிக்கும்படி செய்வித்தாய் தில்லைக் கூத்தப்பெருமானே!

[என்னை - வேணாட்டடிகளைக் குறிக்கும்]

## 67. சிவனும் பொய்யும் மெய்யும் [68]

பொய்யருடைய உள்ளத்தில் பெருமான் கலந்து நின்றும் அந்தப் பொய்யர்க்குப் பொய்யராவார் பெருமான் அவர் மெய்யர்க்கு மெய்யரே.

## 68. சிவனும் மறையும் (வேதமும்) [69]

மறைதான் கீதம் பெருமானுக்கு நான்கு மறைகளும் ஓலமிட்டு அரற்றும் அப்பன் பெருமான். அந்த நான்கு மறைகளும் உணர்வதற்கு அரிதான சூழலில் ஒளித்திருப்பார் பெருமான். நான்கு மறைகளும் பெருமானைத் தொடர்ந்து செல்லும். மறைகள் எவையும் அறிதற்கு அரிய பெருமையை யுடையவர் பெருமான். மறைகள் தேட அரியராய் அவை முறைமுறை முறையிட்டும் உணர்வதற்கரியவர் பெருமான்.

வேதத்தைப் பொழியும் பவளவாய் உடையவர் பெருமான்.

## 69. சிவனும் மறையோரும் (அந்தணரும்) [70]

இராவணனை விரலால் அடர்த்த பெருமானே! அருள் புரிவாயாக! என்று துதித்து மறையோர் வணங்கத் தில்லைச் சிற்றம்பலத்தில் பரமன் ஆடுவர்.

பொய் சொல்லாத வேதியர் சாந்தை ஊர் ஆயிரம் மறையோர் உண்மையுடன் திருப்பணி செய்யக் காவிரிக் கரையில் திரு ஆவடுதுறையில் வீற்றிருக்கும் அமுது பெருமான்.

வேத வழியில் நிற்கும் மெய்யர். தொழுகின்ற ஆதி பெருமான்.

## 70. சிவனும் மாதரும் [71]

அம்பலத்தில் தாண்டவம் புரியும் பெருமானைப் பெண்கள் நாள்தோறும் கூடி நின்று ஆரவாரம் செய்து பாடி எழும் மாலைக் காலத்துப் பேரொலியை ஆசிரியர் "புருடோத்தம நம்பி" கண்டு கூறின பாடலை ஓதுகின்ற அடியார்கள் மலைமகளாகிய பார்வதியின் கணவனாகிய சிவபெருமானை அடைந்து இன்புறுவர்.

## 71. சிவனும் முருகரும் [72]

அரன்மதலை; கூத்தன் குல இளங்களிறு; பொன்மலை வில்லிதன் புதல்வன்; மானமர் தடக்கை வள்ளல் தன் பிள்ளை; முக்கண் கண்ணுடைக் *கோமளக் கொழுந்து என்பன முருகவேளைக் குறிக்கும்.

## 72. சிவனும், முனிவரும் பெரியோரும் பழைய அடியார்களும் [73]

சிவபிரானுடைய திரு அருளைப் பெற்றால் பேரின்ப வீட்டில் இருக்கலாம் என்று இருவரும் [பதஞ்சலி, வியாக்கிர பாதர்] கூத்தப்பிரானை இன்னமும் ஏத்துகின்றார். இருடியர் கூட்டம் துதிக்கப் பரமர் நடம் புரிவார்.

குற்றமற்ற முனிவருடன் எழுந்தருளுவர் ஞானக் கொழுந்தாகிய கூத்தர். செம்மையாகிய மனத்தினை உடையவர்கள் "இறைவனே! அன்புதா" என்று பெருமானது திருவடியை நோக்கி மனம் உருகுவர். எப்போதும் பெருமானுடைய கணைக்காலை முனிவர்கள் நினைத்துத் தியானம் செய்வர். அந்தணர்கள் பல முனிவர்களோடு தில்லை அம்பலவனை வணங்குவர். பழ அடியார்கள் பல நெடுங்காலம் இறைவனுக்குப் பணி செய்து அவரது திருவருளுக்குக் கவலையுடன் காத்திருப்பர்.

பாலகன் [உபமன்யு முனிவர்] பால் வேண்டி அழுத போது †பாற்கடலையே கொடுத்தார் பரமர்.

---

*கோமளக் கொழுந்து - சிவனுடைய குலக் கொழுந்தான முருகன்.

†பிறபொருட் பகுதியில் "வரலாறு" என்னும் தலைப்பு 191 (7) காண்க.

## 73. சிவனும் யோகமும் [74]

அறிவினுக்கு அறியப் புகுந்த யோகத்தில் பொலியும் நுண்ணியர் பெருமான். அவர் மங்கையோடு (உமையுடன்) இருந்தே யோக நிலையில் விளங்குவர்.

## 74. சிவனும் இராவணனும் [75]

அரக்கனும் இராவணனை மலையின்கீழ் அடர்த்தின அரசு ஈசன். அவன் நெரியும்படி விரலால் அடர்த்தார்.

அரக்கர்களை அடர்த்தவனே எனத் துதித்து மறையோர் வணங்குவர் சிற்றம்பலவரை.

மலையை எடுத்த இலங்கை வேந்தனுடைய இருபது தோளும் இற்று விழும்படி செய்து அவனுக்கு *வாளும் நாளும் கொடுத்தார் பெருமான்.

என்னைவிட வலியவர் யார் உளர் என்று கர்வம் கொண்ட இலங்கையர் கோனுடைய தோளை நெரித்தோர் சிவனார்.

## 75. சிவனும் வாத்தியமும் [76]

(1) தமருகம் துடி :—தமது திரு அரையில் கட்டியுள்ள கயிற்றைக் கொண்டு தமருகத்தை ஒலிக்கச் செய்வர் பெருமான்.

[தாருக வனத்து முனிவர் தாம் செய்த அபிசார வேள்வியினின்றும் உடுக்கையைத் தோற்றுவித்துச் சிவ பெருமான்மீது ஏவ, அதனை அவர் தம் கையில் ஏந்தி ஒலிக்கச் செய்தார்]

---

*பிறபொருட் பகுதியில் "வரலாறு" என்னும் தலைப்பு 191 (6) பார்க்க.

(2) **முழவம்** :—நந்தி தேவர் முழவங் கொட்ட நாதர் நட்டம் ஆடுவர்.

(3) **யாழ்** :—கருவூரார் பாடிய தமிழ் மாலையை மருத யாழோசை ஒலிக்கப் பாட எழுந்தருளுவர் சிவபிரான்.

## 76. சிவனும் விளக்கும் [77]

ஒளிவளர் விளக்கு பெருமான். சாட்டியக்குடியில் உள்ளவர்கள் நெய் சொரிந்து ஈசனுக்கு ஒளிவிளக்கு ஏற்றி வைப்பர்.

தம்மை மதிப்பவர் உடைய மனமணி விளக்கு சிவன் மெய்யர்க்குத் திருவிளக்கு ஆவர் பெருமான்.

## 77. சிவனும் வெண்மையும், [78]

திருநீற்று வெண்மை விளங்கும் ஒளியை உடையர் பெருமான்.

## 78. சிவனும், வேடரூபமும் [79]

வேடரூபம் கொண்ட வேடக்காளை.

காட்டில் வந்த பன்றியை அம்பினால் எய்த வேடர் பெருமான்.

## 79. சிவனைப் பற்றிய வினாவும் விடையும் [80]

I

**வினா** :— சிவனுக்கு ஆரம் எது?

**விடை** :— பாம்புதான் அவர் பூணும் மாலை (ஆரம்).

**வினா** :— சிவனுக்குப் பரிகலம் எது?

**விடை** :— கபாலம் (மண்டைஓடு) அவருக்கு உண்கலம்.

**வினா** :— சிவனுக்குப் பட்டவர்த்தனம் எது? (பட்டம் தரித்த யானை)

விடை :— எருது தான் அவருக்குப் பட்டவர்த்தனம்.

வினு :— சிவனுக்கு மஞ்சன சாலை எது?

விடை :— அன்பர்களுடைய கண் அருவிதான் அவருக்கு மஞ்சன சாலை.

வினு :— சிவனுக்குத் தேவி யார்?

விடை :— மலைமகள் தான் அவர் மகிழ்பெருந்தேவி

வினு :— சிவனுக்குச் சாந்தம் (சந்தனம்) எது?

விடை :— சிவனுக்குச் சாந்தம் திருநீறு தான்.

வினு :— சிவனுக்குக் கீதம் எது?

விடை :— மறை (வேதம்) தான் அவருக்குக் கீதம்.

வினு :— சிவனது முடி எது?

விடை :— சடை தான் அவரது முடி.

வினு :— சிவனது கோயில் மாளிகை எது?

விடை :— சாட்டியக்குடியில் வாழ்வோருடைய இதயம் (நெஞ்சு) தான் அவரது கோயில் மாளிகை.

II

வினு :— சிவனைத் தொழுது பின் செல்பவர் யார்?

விடை :— அவரைத் தொழுது பின் செல்பவன் அயன் முதற்கூட்டம்.

வினு :— சிவனைத் தொடர்வன எவை?

விடை :— அவரைத் தொடர்வன நான்கு மறைகள் (வேதங்கள்.)

வினு :— சிவனது உறைவிடம் எது?

விடை :— சிவனது உறைவிடம் பேய்கள் வாழ்கின்ற கரிகாடு (சுடுகாடு).

வினு :— சிவன் போர்வை எது?

விடை :—சிவனது போர்வை கரியுரி (யானைத்தோல் உரி).

வினு :—சிவனது ஊண் எது?

விடை : — திரிந்து வாங்கும் ஊண்தான் அவருக்கு உணவு.

வினா :— சிவனது கோவணம் எது ?
விடை :— நெருப்புப் பிழம்பு உமிழ்கின்ற அரவம் (பாம்பு) அவரது கோவணம்.
வினா :— சிவனது செபவடம் எது ?
விடை :— பளிங்கு செபவடம்.
வினா :— சிவனது ஒளி விளக்கு எது ?
விடை :— சாட்டியக்குடியில், உள்ளினர் ஏற்றிய நெய் விளக்குதான் அவர் ஒளிவிளக்கு.

## III

வினா :— சிவனுக்குப் பாடும் பதிகம் எது ?
விடை :— நான்மறை.
வினா :— சிவனை அன்பொடு பாடுவார் யார் ?
விடை :— தும்புருவும்; நாரதரும் அன்பொடு பாடுவர்.
வினா :— சிவனுடைய நடனசாலை எது ?
விடை :— உயிர்களுக் கெல்லாம் புகலிடம் அவரது நடனசாலை.
வினா :— சிவனுடைய கமலாசனம் (தாமரைப் பீடம்) எது ?
விடை :— சாட்டியக்குடியார் இதயக்கமலந்தான் அவருக்குக் கமலாசனம்.

## IV

வினா :— சிவனுக்குத் திருமகன் யார் ?
விடை :— திருமகன் முருகன்.
வினா :— சிவனுக்குத் தேவி யார் ?
விடை :— தேவி உமையாள்.
வினா :— சிவனுக்கு மருமகன் யார் ?
விடை :— மருமகன் மதனன் (மன்மதன்).
வினா :— மருமகன் தாயார் யார் ?
விடை :— திருமகள் (இலக்குமி) மருமகன் தாயாம்.

**வினு :—** சிவனுக்கு மாமனுர் யார் ?
**விடை :—** மாமன் இமவான்.
**வினு :—** சிவன் தோழன் யார் ?
**விடை :—** தனபதி (குபேரன்) தோழன்.

## 80. சிவனைப் பாடுபவர் [81]

தும்புருவும் நாரதரும் சிவனை அன்போடு பாடும் கந்தர்வர்.

## 81. சிவனை வழிபட்டுப் போற்றுபவர் [82]

சிவனுடைய திருவருளைப் பெற்றுல் பேரின்ப வீட்டில் இருக்கலாமென்று பிரமனும், திருமாலும், இந்திரனும், அறிவுமிக்க பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் இருவரும் எங்கள் கூத்தப்பிரானை இன்னும் போற்றுகின்றனர்.

# உ. தில்லை முதலாம் தலப்பகுதி

### பதிகம் பெற்ற தலங்கள்

| | தலம் | பதிக எண் | பதிக மொத்தம் |
|---|---|---|---|
| 1. | தில்லை | 1-4, 8. 19-29 | 16. |
| 2. | திருஆரூர் | 18[29-11] | 1 |
| 3. | திரு ஆவடுதுறை | 6 | 1 |
| 4. | திரு இடைக்கழி | 7 | 1 |
| 5. | திருஇடை மருதூர் | 17 | 1 |
| 6. | கங்கை கொண்ட சோளேச்சரம் | 13 | 1 |
| 7. | திருக் களந்தை ஆதித்தேச்சரம் | 9 | 1 |
| 8. | திருக் கீழ்க்கோட்டூர் மணிஅம்பலம் | 10 | 1 |
| 9. | திருச்சாட்டியக்குடி | 15 | 1 |
| 10. | தஞ்சை இராச ராசேச்சரம் | 16 | 1 |
| 11. | திருப்பூவணம் | 14 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 12. | திருமுகத்தலை | 11 | 1 |
| 13. | திரைலோக்கிய சுந்தரம் | 12 | 1 |
| 14. | திருவிழி மிழலை | 5 | 1 |

ஆகத் தலங்கள் 14 பதிகம் 29

### வைப்புத் தலங்கள் [8]

வந்துள்ள பதிக எண்

| | | |
|---|---|---|
| 1. | ஆரூர் - திருஆரூர் | 19— 3 |
| 2. | கயிலை | 16—11 |
| 3. | காழி [சீகாழி] | 19— 4 |
| 4. | சிவபுரம் | 15—5,8 |
| 5. | செப்புறை | 29 —13 |
| 6. | பிடவூர் | 7—10 |
| 7. | மகேந்திரம் | 3 |
| 8. | மயிலை | . 28—10 |

## தில்லை முதலாம் தலங்கள் - அகரவரிசையில்

### 1. தில்லை

இத்தலம் சிதம்பரம். இது சிற்றம்பலம்; புலியூர்; பெரும்பற்றப் புலியூர் எனப்படும். இத்தலத்தைப் பற்றிய விவரங்களை ஒளி நெறியில் தலப்பகுதி என்ற தலைப்பிற் காணலாகும்.

**1. அம்பலம்**

இறைவனை அம்பலக் கூத்தன்; அம்பலத்தமரசேகரன்; அம்பலத்து அமிர்து என்று கூறி உள்ளார்கள்.

தேவிக்கும், அவருக்கும்

(1) "செம்பொன் செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்று"

---

குறிப்பு : "திரு இசைப்பாத் தலங்கள்" என்னும் தலைப்பில் புலவர் ஏறு •திருவாளர் மு. அருணைசலம் எம். ஏ. அவர்கள் சித்தாந்தம் ஆனி, 1970 ஜுன் இதழில் எழுதிய கட்டுரை படித்து இன்புறத்தக்கது.

(2) "ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம் அவரது ஆடரங்கு"

(3) "எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில் தில்லை அம்பலமே அவரது ஆடரங்கு"

**2. கூத்தன்**

"ஞானக் கொழுந்தது ஆகிய கூததன்"

**3. சிற்றம்பலம்**

(1) "மறையோர் வணங்கும் தில்லைச் சிற்றம்பலம்"

(2) "தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்"

(3) "தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு சிற்றம்பலம்"

(4) "கனகம் நிறைந்த சிற்றம்பலம்"

(5) "சிரம்புணர் முடி வானவர் அடிமுறையாலிறைஞ்சு சிற்றம்பலம்"

(6) "தண்புனல் சூழ் தடம் மல்கு சிற்றம்பலவன்"

(7) "மறைவல நாவலர்கள் மகிழ்ந்தேத்து சிற்றம்பலம்"

**4. திருச்சிற்றம்பலம்**

திருச்சிற்றம்பலத்தில் புகுந்து, அங்குள்ள பணிகள் பல செய்து நாளும் இறைவன் அருள் பெற்றால் வீடுபேறு கிடைக்கும்.

**5. தில்லை**

(1) "காண அருளென்று பல்லாயிரம் பேர் பதஞ்சலிகள் பரவ வெளிப் பட்டுத் தில்லையில் தேவன் ஆடுவர்"

(2) "வங்கம் [கப்பல்கள்] வந்து அணைகின்ற தில்லை"

(3) "சேடர் உறை தில்லை"

(4) "தில்லை மல்கு செம்பொனின் அம்பலத்துக் கோனை"

(5) "நிவா நதியின் கரையின் மேல் உயர்ந்த மதிற் றில்லை"

[நிவா - வட வெள்ளாறு. சிதம்பரத்திற்கு வடக்கில் உள்ளது.]

(6) "வானோர் பணிய மண்ணோர் ஏத்த மன்னி நடமாடும் தேனார் பொழில் சூழ் தில்லை"

## 6. தில்லையம்பலம்

(1) "அங்கோல் வளையார் பாடி ஆடும் அணி தில்லை அம்பலம்"

(2) "அந்தணர் தில்லை அம்பலத்துள் ஏத்த நின்றாடு கின்ற எம்பிரான்"

(3) "நான்மறையைத் தெத்தே என்று வண்டு பாடும் தென் தில்லை அம்பலத்துள் அத்தன்"

(4) "திருமாலும், பிரமனும், வானவரும் நெருங்கி முடியான் முடிகள் மோதி உக்க, முழு மணியின் திரளை அடியார் அலகினால் திரட்டும் அணி தில்லை அம்பலம்"

(5) பல முனிவரொடு அந்தணர் வணங்கும் தில்லை அம்பலம்"

## 7. தில்லைச் சிற்றம்பலம்

(1) "கனக மணிமாடத்தில் ஆயிழையார் போற்றிசைப்ப, தெளிகொண்ட தில்லைச் சிற்றம்பலத்தில் சேர்ந்திருக்கின்றார் இறைவன்"

(2) "மறையோவாத் தில்லைச் சிற்றம்பலவர்"

(3) "சித்தர் கனகம் பயிலும் தில்லைச் சிற்றம்பலவர்"

(4) "செடியுந் தவத்தார் அடையாத் தில்லைச் சிற்றம் பலம்"

(5) "செங்நெல் விளை கழனித் தில்லைச் சிற்றம்பலவர்"

(6) "தில்லைச் சிந்திப் பரிய தெய்வப் பதியுட் சிற்றம் பலம்"

(7) "தேடி யிமையோர் பரவும் தில்லைச் சிற்றம்பலவர்"

(8) "தேரார் விழவோவாத் தில்லைச் சிற்றம்பலவர்"

(9) "தேவர் மறை பயிலுந் தில்லைச் சிற்றம்பலவர்"

(10) "புவலோக நெறி படைத்த புண்ணியங்கள் நண்ணிய சீர்ச் சிவலோகம் ஆவது தில்லைச் சிற்றம்பலமே."

(11) மாலோடயனும் அமரர் பதியும் வந்து வணங்கி, நின்(று) அருளாய் என்றென்றவரேத்த........தில்லை மல்கு சிற்றம்பலந் தன்னுள்........பரமன் ஆடுமே".

## 8. புலியூர்

"வேண்டு வோர்க்கு அருள் செய்யும் புலியூர்"

## 9. பெரும்பற்றப் புலியூர்

1. "மறையோர் தம் சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்."

2. "அமரரும், பிறரும் அலைகடல் இடுதிரைப் புனித்த* தீர்த்த நீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்."

3. பெருமான் நடம் செய் சூழலிற் கோயில் கோபுரம், கூடம் மாட மாளிகை எல்லாம் செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

(4) அழகு மிகுந்த பெரும்பற்றப் புலியூர்.

(5) முக்கண்ணை உடைய பெருமானுடைய பேர்கள் ஆயிரம் நூறுயிரம் பிதற்றுகின்ற பெற்றியோர் வாழ்கின்ற பெரும்பற்றப்புலியூர்.

(6) ஒழிவில்லாமல் வேள்வி செய் பெரியோர் வாழ்கின்ற பெரும்பற்றப்புலியூர்.

(7) செந்நெற்கழனி செங்கழுநீர்ப்பூ இவைகொண்ட பெரும்பற்றப்புலியூர்.

---

*மூர்த்திதலம் இவையுடன் தீர்த்த விசேடமும் கொண்டது தில்லை. தீர்த்தம் சிவகங்கை. "தீர்த்தம் என்பது சிவகங்கையே ஏத்தருந்தலம் எழிற்புலியூரே மூர்த்தி அம்பலக்கூத்தனதுருவே'
—சிதம்பரச்செய்யுட் கோவை.

(8) திருமால், இந்திரன் பிரமன், தேவர்கள் இவர்கள் கடைக்காவலில் நெருங்கி முடி மோதுவதால் கீழ் விழுந்த மணிகள் முன்றிலில் விளங்கும் பெரும்பற்றப்புலியூர்.

(9) துந்துபி, குழல், யாழ், மொந்தை இவை ஒலிக்க இருடியர் கணம் துதிப்ப நந்தி முழவம் வாசிக்க நடம் புரிகின்ற பரமர் கோயில் பெரும்பற்றப்புலியூர்.

(10) தேர் விழாவில் குழலொலியும் தெருவில் கூத்தொலி, ஏத்தொலி, வேதம் ஓதும்ஒலி இவை எல்லாம் கடலொலிபோல விளங்கும் பெரும்பற்றப்புலியூர்.

(11) மறையோர் ஓம குண்டத்தில் வளர்த்த தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

(12) மறைத் தொழில் மிகுந்த அழகுமிக்க பெரும்பற்றப் புலியூர்.

(13) நீலோற்பலமும், செருந்தியும் செண்பகமும் அரும்பும் பெரும்பற்றப்புலியூர்.

(14) மாம்பொழிலும் கமுகுமரங்களும் சூழும் பெரும் பற்றப்புலியூர்.

(15) தேன் சொரியும் பொழிலில் வண்டுகள் தென்ன எனப் பாடுகின்ற பெரும்பற்றப்புலியூர்.

(16) நடன இலக்கணங்கள் பொலிகின்ற பெரும்பற்றப் புலியூர்.

(17) நான்கு மறைகளைக் கொண்டு அந்தணர்கள் ஏத்தப் பெருமான் நடம் செய்கின்ற பெரும்பற்றப்புலியூர்.

(18) புலித் தோலையும், திருநீற்றையும், பூணூலையும், கொண்ட மார்பைத் தரிசிக்கும் பேறுபெற்ற அந்தணர்கள் வாழ்கின்ற பெரும்பற்றப்புலியூர்.

## 10. பொன்னம்பலம்

(1) சோழன் பொன் அணிந்த தில்லை அம்பலம்.

(2) உலகத்தினர் இறைஞ்சப் பதஞ்சலி முனிவர்க்கு ஆடலைக் காட்டிப் பெருமான் அமர்ந்துள்ள செம்பொன் அம்பலம்.

### 11. தில்லை மூவாயிரவர்

(1) மூவாயிரவரும் குடிவாழ்க்கை கொண்டு அவர்களோடு குலாவிக் கூத்தாடுகின்றார் பெருமான்.

### 12. தில்லையும் திருமாலும்

தில்லைச் சிற்றம்பலத்துத் திருவாயில் முன்றிலில் திருமால் [கோவிந்தராசப் பெருமாள்] வரம் கிடக்கின்றார்.

## 2. ஆமூர்—திருஆமூர் வைப்புத்தலம்

இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு மேற்கே 5 மைல் தூரத்தில் உள்ளது.

அல்லிப்பூ மலர்கின்ற வயல்களை உடைய திருவாமூர் திருநாவுக்கரசரின் ஊர்.

## 3. திரு ஆரூர்

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. மூவர் தேவாரம் பெற்றது. பஞ்ச பூதத்தலங்களில் இது பிருதிவித்தலம். மூலவர் புற்றிடங் கொண்டவர்; சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மையானது. இத்தலத்துத் தியாகேசர் முசுகுந்த சக்கரவர்த்தியால் தாபிக்கப்பட்டவர். வீதிவிடங்கன் எனப் பெயர் பெற்றவர். பிறக்க முத்தி அளிக்கும் பெரும் பதி. கோயில், குளம், செங்கழுநீரோடை இவை ஒவ்வொன்றும் ஐந்து வேலிகளென்பர்.

"அஞ்சணை வேலியாரூர்" "ஆதரித்திடங்கொண்டாரே" என்பது அப்பர் தேவாரம். (4-53-7) பின்னும் பல விசேடங்களைக் கொண்ட தலம். அவை ஒளி நெறியிற் காண்க.

(1) உலகில் ஆதியாய் மிக்கசீர் பெற்ற ஊர் திருஆரூர். இவ்வூரில் தியாகேசர் வீதிவிடங்கனென்னும் பெயருடன் நடனஞ் செய்கின்றார்.

(2) குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி இவை திருவிழாவின் ஒலியுடன் கலந்து விண் அளாவும் திருஆரூர்.

(3) சத்தியாய்ச், சிவமாய், முழுமுதலாய், வித்துமாய் ஆரூர் ஆதியாய், வீதிவிடங்கராய், நட்டம்புரிகின்றார் பெருமான்.

## 4. திரு ஆவடுதுறை

இத்தலம் மாயூரத்திற்கு அடுத்த நரசிங்கன் பேட்டை புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கில் $1\frac{1}{2}$ மைலில் உள்ளது. ஊரின் பெயர் சாந்தை, சாத்தனூர். கோயிலின் பெயர் ஆவடுதுறை. பசுவடிவுடன் உமாதேவியார் பூசித்த காரணத்தால் "ஆவடுதுறை" என்ற பெயர் வந்தது.

(1) ஆவடுதுறை காவிரிக்கு அருகில் உள்ளது.

(2) மெய்யடியார்கள் ஆயிரம் அந்தணர் பணிசெய்கின்ற கோயில் திரு ஆவடுதுறை.

(3) மதில் அணிந்த ஊர் சாந்தை.

(4) காவிரியின் தென்கரையில் சாந்தையூர் உளது.

(5) பொய்யிலாத வேதியர் வாழ்கின்ற ஊர் சாந்தை.

(6) பொற்கோயிலுள் அருள் நிறைந்து அமர்கின்றார் திரு ஆவடுதுறை ஆண்டவர்.

(7) மாமரங்களின் மணம் கமழும் பொழில் வாய்ந்தது சாந்தையூர்.

(8) மணி மாடமாளிகை வீதி சூழ்ந்த ஊர் சாந்தை.

(9) சாந்தையூருக்கு இன்பன் பெருமான்.

## 5. திரு இடைக்கழி

இத்தலம் அட்டவீரத்தலங்களுள் ஒன்றாகிய திருக்கடவூருக்கு 4 மைல் தூரத்தில் உள்ளது. அருணகிரிநாதரால் பாடப் பெற்ற பிரபலமான சுப்பிரமணிய தலம். இத்தலத்தில் முருக வேளின் திரு உருவம் திருத்தணிகையில் இருப்பது போல இருப்பதால் அருணகிரியார் திருஇடைக் கழியைப் பாடும்போதெல்லாம் திருத்தணிகையை உடன் சேர்த்துப் பாடுவர்.

(1) எவர்க்கும் மெய்யன்பராம், தெளிவும் திடமும் கொண்ட வைதிகர் வாழ்கின்ற ஊர் திரு இடைக்கழி.

(2) தலம் பொழில் விளங்கும் தலம் திருஇடைக்கழி.

(3) திசை எங்கும் கீர்த்தி பெற்ற தலம் திருஇடைக்கழி.

(4) கங்கையின் சிறுவன் கணபதியின் தம்பி ஆகிய *சுப்பிரமணிய மூர்த்தி இத்தலத்தில் திருக்குரா மரத்தின் நிழற்கீழ் வேலுடன் விளங்க வீற்றிருக்கின்றார்.

(5) மறையோர், வானவர், வையம் உய்ய......திரு இடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் வீற்றிருக்கின்றார் பெருமான்.

## 6. திருஇடை மருதூர்

இத்தலம் கும்பகோணத்திற்கு வடகிழக்கு 5 மைலில் உள்ளது. புகைவண்டி நிலயம். மூவர் தேவாரம் பெற்றது. இத்தலத்தைப் பற்றிய விவரங்கள் ஒளிநெறியிற் காணலாகும்.

(1) தமது மேனியில் அரவு ஆட ஆடுகின்ற பெருமான் வீற்றிருக்கும் தலம் திரு இடைமருதூர்.

(2) வீணை கீதத்துடன் கின்னரங் கலந்(து) ஒலிப்ப, மந்திர கீதமும், தீங்குழலும் எங்கும் ஒலிக்கும் இடம் திரு இடை மருதூர்.

(3) அரையிலோராடை விளங்க, அதன் அருகே மணியுமிழ் நாகம் மணி உமிழ்ந்(து) இமைப்பச் சிவபிரான் வீற்றிருக்கும் தலம் திரு இடைமருதூர்.

(4) தம் நெஞ்சம் மாதர்களின் கலவித் தொழிலில் ஈடுபடாதபடி காத்து இருளில் நடுநல் யாமத்தில் மழலை யாழ் ஒலிக்க வந்து தன் நெஞ்சிற் புகுந்த பெருமான் இடம் திரு இடை மருதூர் என்கின்றார் கருவூரார்.

(5) தமக்குத் தந்தையும் தாயுமாய்ப் பல்லூழி காலம் உடன் இருந்தும் தம்மை அணுகாமல் இருந்து இப்பொழுது தம்முடன் கலந்தவன் மருவும் இடம் திரு இடைமருதூர் என்கின்றார் கருவூரார்

(6) வீண் வழியிற் போகாது என்றும் மனம் உருகிப் பெருமானை நினைந்து புலம்புபவருடைய கண்மணி போன்ற பெருமான் மருவிடம் திருவிடை மருதூர்.

---

* **சுப்பிரமணியன்** என்னும் வடமொழிப் பெயர் தமிழ் நூல்களில் முதன்முதலாக இங்குத் தான் வந்துள்ளது போலும்.

(7) கருவூரார் பாடியுள்ள தீந்தமிழ் மாலையைப் பொழிலில் மருதயாழில் வாசிக்க எழுந்தருளும் பெருமான் இடம் திருஇடை மருதூர்.

(8) உலகெங்கும் நிறைந்த பெருமான் தேவியுடன் இருளில் நடுநல்யாமத்தில் தம் மனத்தில் அணுகி நுணுகி உள் கலந்து இருக்கின்றவர் இடம் திருஇடை மருதூர் என்கிறார் கருவூரார்.

## 7. கங்கை கொண்ட சோளேச்சரம்

திரிசிராப்பள்ளி அரியலூர் வழியில் செயங்கொண்ட சோழ புரத்திற்குக் கிழக்கே சுமார் 4 மைலில் இத்தலம் உள்ளது "கங்கை கொண்ட சோழபுரம்" என இவ்வூர் வழங்கும். இத்தலத்தில் உள்ள சிவாலயம் கங்கை கொண்ட சோளேச்சரம் என்பதாம். இத்தலத்தைப்பற்றிய பிற செய்திகளை ஒளிநெறியிற் காண்க.

(1) கங்கைகொண்ட சோளேச்சரத்தானே! என ஒவ்வொரு பாடலும் முடிவு பெறுகின்றது.

[தலவர்ணனை ஒன்றும் இல்லை. இத்தலத்துப் பெருமானுடைய திரு அருளைப்பற்றித்தான் பாடல்களில் விளக்கம் உள்ளது].

## 8. கயிலை [வைப்புத்தலம் 2]

கயிலை பொன்னெடுங்குன்று எனக் கூறப்பட்டுள்ளது. "பொன் னொடித்தான் மலை" சுந்தரர்—7-100-10.

## 9. திருக்களந்தை ஆதித்தேச்சரம்

இத்தலம் திருத்தருப்பூண்டிக்கு மேற்கே நல்ல வழியில் 9 மைலிலும், கொடி வழியில் 5 மைலிலும் உள்ள "திருக்களர்" என்ற தலத்திற்குத் தென் மேற்கில் சுமார் 2 மைலில் முள்ளி ஆற்றின் தென் கரையில் "களப்பாள்" [களந்தை] என்னும் ஊரிலுள்ள சிவாலயமே, "ஆதித்தேச்சரம்." இது "கூற்றுவ நாயனார்" தலம். இத்தலத்தைப் பற்றிய பிற விவரங்களை ஒளி நெறியிற் காண்க.

(1) அந்தணர் அழல் ஓம்பும் இடம் திருக்களந்தை ஆதித்தேச்சரம்.

(2 தேவியைப் பாகம் கொண்டவர் இடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(3) மாடங்களில் மறையவர் கடல் முழக்கம் போல மறை ஓதும் இடம் திருக்களந்தை ஆதித்தேச்சரம்.

(4) தம்மை ஆள விரும்பி, திரு அருள் புரிந்த பெருமானிடம் களந்தை ஆதித்தேச்சரம் என்கின்றார் கருவூரார்.

(5) தம்குடி முழுதாளும் பெருமானிடம் களந்தை ஆதித்தேச்சரம்.

(6) "அந்தண் நீர்க் களந்தை" "அலை புனற் களந்தை" "நீரணங்க சும்பு கழனி சூழ் களந்தை" எனக் "களந்தை" ஊர் விளக்கப்பட்டுள்ளது.

## 10. காழி [சீகாழி] [வைப்புத்தலம்]

(1) காழிச் சம்பந்தரை இறைவன் ஆட்கொண்டது கூறப்பட்டுள்ளது.

## 11. திருக் கீழ்க்கோட்டூர் *மணி அம்பலம்

கோட்டூர் :—இத்தலம் திருத்தருப்பூண்டி புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கில் 9 மைலிலும்; மன்னார்குடி புகைவண்டி நிலையத்துக்குத் தென் கிழக்கில் 10 மைலிலும் உள்ளது.

திருக்கோட்டூரில் மேற்கில் உள்ள திருக்கோயில் தேவாரம் பெற்றது; கிழக்கில் உள்ள திருக்கோயில் "திரு இசைப்பா" பெற்றது இதுதான் கீழ்க்கோட்டூர் மணி அம்பலம். ஐராவதத்தின் மணி விழுந்த இடம் ஆதலின் "மணி அம்பலம்" என்ப் பெயர் போந்தது.

(1) தெருவில் உயர்ந்த மாடங்களில் மாதர்களின் ஒலி கேட்கின்ற கீழ்க்கோட்டூர்.

* கீழ்க்கோட்டூர் பதிகம் தலைவனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

(2) கிளிகள் மாம்பொழிலிற் கொஞ்சுகின்ற ஒலியும், மாம் பொழிலில் வண்டுகள். செய்கின்ற ஒலியும் கேட்கப் படும் கீழ்க் கோட்டூர் மணி அம்பலம்.

(3) கின்னரம், முழவம், மழலையாழ் வீணை இவை ஒலி செய்யும் கீழ்க்கோட்டூர்.

(4) கெண்டையும் கயல் மீன்களும் நீர் வயலில் பாய் கின்ற ஒலி கேட்கும் மணிஅம்பலம்.

(5) குதித்துப் பாய்கின்ற கெண்டை மீன்கள் தாமரை யைக் கிழிக்கின்ற வயல்கள் உள்ள ஊர் கீழ்க்கோட்டூர்.

(6) தாழையின் நிழற்கண்டு குருகு என அஞ்சும் கெண்டை மீன்கள் உள்ள கீழ்க்கோட்டூர்.

(7) பன்றியின் உருவங்கொண்ட திருமாலும் அன்னத் தின் உருவங்கொண்ட பிரமனும், காணும் பொருட்டுச் செய்யும் ஆரவார ஒலி கேட்கும் கோட்டூர்.

## 12 திருச்சாட்டியக்குடி

இத்தலம் திருவாரூருக்கு அருகில்உள்ள கீழ் வேளூர் என்னும் தலத்திலிருந்து மேற்கே திருத்தருப் பூண்டி செல்லும் பெருவழியில் சுமார் 6 ஆவது மைலில் உள்ளது. இவ்வூர் "சாத்தியக்குடி" என வழங்கப்படுகிறது. இத் தலத்துக் கோயிலின் பெயர் "ஏழிருக்கை" இத்தலத்தைப் பற்றிய பிற குறிப்புக்களை ஒளிநெறியிற் காண்க

(1) ஏழ் இருக்கை இறைவனே! போற்றியே போற்றி.

(2) சாட்டியக்குடியில் இருப்பவருடைய இதயதாமரை யைக் கமலாசனமாகவும் தமது கோயில் மாளிகையாகவும் கொண்டுள்ளார் பெருமான்.

(3) சாட்டியக் குடியிலுள்ளார் இருகை கூப்பி நிற்கக் கண்டு பெருமான் தமது முகம் மலர்வார்.

(4) சாட்டியக்குடிப் பெருமானுக்கு இரண்டு முகம், திருவடி மூன்று, கரம் ஏழு [ஏனெனில் தம்மைப் பூசித்த அக்னி பகவானின் உருவத்தைத் தாம் மேற்கொண்டார் ஆதலின்] இது பற்றிய பிற விவரத்தை ஒளிநெறியிற் காண்க.

(5) சாட்டியக்குடி ஈசனுக்கு அந்தணர்கள் நெய் சொரிந்து வளர்க்கின்ற ஓமத்தீயே விளக்கு ஆகும்.

(6) சாட்டியக்குடியாருக்கு இன்பராம் இனிய தீங் கனியாய் விளங்குபவர் ஏழிருக்கை இருக்கும் ஈசர்.

(7) சாட்டியக்குடியார் ஈட்டிய (சம்பாதித்த) பொருளாய் விளங்குபவர் ஏழிருக்கை ஈசர்.

(8) நான்கு மறை நூல் சகலமுங் கற்ற சாட்டியக்குடியில் உள்ளாருடைய நாயகன் ஈசன்.

## 13. சிவபுரம் [வைப்புத்தலம் 4]

இத்தலம் கயிலாயம், அல்லது சிவபுரம் என்னும் தேவாரம் பெற்ற தலம். இது கும்பகோணத்திற்கு 3 மைல் தூரத்தில் உள்ளது.

சிவபுர நகருள் வீற்றிருக்கும் அங்கணர் பெருமான்.

## 14. செப்புறை [வைப்புத்தலம் 5]

சிவனடியார்க்கு அடியனுவான் செப்புறைச் சேந்தன்.

## 15. தஞ்சை இராசராசேச்சரம்

இத்தலம் தஞ்சாவூர்; சோழ நாட்டுத் தலைநகர். முதலாம் இராசராசசோழன் [கி. பி. 985-1004] கட்டிய சிவாலயமே "தஞ்சை இராசராசேச்சரம்" எனப் பெயர் பெறும். ஏனைய விவரங்கள் ஒளிநெறியிற் காண்க.

(1) பலவிதமான படைகள் (ஆயுதங்கள்) அமைக்கப் பெற்ற உயரிய மாடங்களும் இலைபோன்ற மதிலுறுப்புக்கள் பொருந்திய உள்மேடையோடு கூடிய மதில்களால் சூழப் பெற்றது தஞ்சை.

(2) கடல்போல் ஒலிக்கின்ற பெரிய தெருவில் அரச யானைகளின் கூட்டம் உலாவுகின்றதும் மலையைப் போல உள்ள, மதில்களால் சூழ்ந்ததுமான தஞ்சை.

(3) அகில் கமழும் மாளிகையில் மகளிர் யாழொலி ஒலிக்கும் தஞ்சை.

(4) கொங்கு மலர் போன்ற குடைகளை உடைய அரசர்களுடைய கிரீடங்கள் ஒன்றே போன்று பட்டுச் சிந்திய சிவந்த ஒளியை வீசும் [இரத்தின மணிக் குவியல்] உள்ள மாடங்களைக் கொண்ட மாளிகைகள் மதில்களால் சூழப்பட்ட தஞ்சை.

(5) தேவதாரு, மந்தாரம், மகிழ், சந்தனம் ஆகிய மரங்கள் நிறைந்த நந்தவனத்தின் இருள் சூழ்ந்த இடமும், மதிலும் உள்ள தஞ்சை.

(6) சுனையிலுள்ள செங்கழுநீர் மலர்கள் சுற்றுப்புறங்களிலும் ஒளி வீசும் மாளிகைகளிலும், மற்றைய எல்லாப் பொருள்களிலும் மிகுந்த வாசனையைச் செய்வதும், மதில்கள் சூழப்பெற்றதுமான தஞ்சை.

(7) முத்துக்களைச் சேர்த்துக் கட்டிய கட்டு மலையில் தோன்றும் ஒளியும், குளிர்ந்த நிலவின் ஒளியும் பெருகி வீதிகளில் இருள் முழுமையும் நீங்கி நிற்கும் மதில்கள் சூழ்ந்த தஞ்சை.

(8) பொய்யில்லாத மெய்யர்க்கு மிகவும் இனியர் தஞ்சை இராச ராசேச்சரத்தினர்.

(9) அலைகளையுடைய வட வாற்றின் நீர் செல்லும்படியான மதகில் வாழ்கின்ற முதலைகள் வாரி எறிகின்ற நீரையுடைய அகழியோடு கூடிய மதில்களால் சூழப்பட்ட தஞ்சை.

(10) மலையின் தோற்றத்தைப் போன்று உயர்ந்து காட்சி அளிக்கும் நாடக சாலையில் பெண்கள் இனிய நடனம் செய்கின்றதும், மதில்கள் சூழ்ந்ததுமான தஞ்சை.

## 16. திருப்பூவணம்

இத்தலம் மதுரைக்குக் கிழக்கே 12 மைல் தூரத்தில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது. புகைவண்டி நிலையம். மூவர் தேவாரம் பெற்றது. பிற விசேடங்களை ஒளிநெறியிற் காண்க.

(1) இறைவன் பலிக்கு எழுந்தருள அவரைக் கண்ட மாதர்களின் அவிழ்ந்த கூந்தலில் உள்ள வண்டுகள் "பொம்" என்று ஒலி செய்யும் கடைவீதி உள்ள திருப்பூவணம்.

(2) கடைவீதி உள்ள திருப்பூவணத்தில் கோயில் கொண்டுள்ளார் பெருமான்.

(3) வாளை மீன்கள் நீரை உண்டு கொண்டிருக்கத் தெளிந்த தேன்பாய்ந்து குளத்தில் ஒழுகும்படி செய்யும் அழகிய உயர்ந்த சோலைகளால் சூழப்பட்ட கடை வீதிகளை உடைய திருப்பூவணம்.

(4) இரவின் இருளைப் போக்குதற்கு நிலையாக வைத்துள்ள தீபங்கள் எண்ணில்லாத பலகணிகளின் பக்கத்திலே இருந்து விளங்குகின்றதும் பெரிய கடை வீதியினை உடையதுமான திருப்பூவணம்.

(5) புண்ணிய மகளிர் வாழ்கின்ற ஊர் திருப்பூவணம்.

(6) பொன் அன்ன மதில் சூழ்ந்த ஊர் திருப்பூவணம்.

(7) திருவிழாவின்போது சுவாமியின் [தேவாரப் பாடல்கள் பாடிக் கொண்டு செல்லும் அடியவர்களின்] பின்னே செல்வோர், பாட்டிணிடத்துக் கொண்ட பெருவிருப்பாகிய பக்தியினால் (மயங்கிக் கீழே) விழுந்தபொழுது அவிழ்ந்து தொங்கின முறுக்கோடு கூடிய சடையை (மீண்டும் எடுத்துக்) கட்டுகின்ற ஊர் ஆவணவீதிப் பூவணம்.

(8) வைகை ஆற்றங்கரைக்கு அருகில் உள்ள ஆவண வீதியைக் கொண்டுள்ள பூவணம்.

## 17 திருமுகத் தலை

இத்தலம் திருத்தருப்பூண்டிக்கு வட கிழக்கில் 4 மைல் தூரத்தில் உள்ள "பன்னதரு" என்னும் கிராமம். சுவாமி பெயர் "பன்னகா பரமேசுரர்", - தேவியார் "சுகுந்த குந்தளாம்பா" "சாந்தநாயகி" கோயில் சிறிது. "முகத்தலை நாதர்" என்ற லிங்கம் பிராகாரத்திலிருக்கிறது.

(1) முகத்தலை என்னும் பழைய ஊரில் மணிப்பூங்கோயிலுள் வீற்றிருக்கின்றார் பெருமான்.

(2) முகத்தலை மூதூரில் நின்ற காலமாக நீ வீற்றிருக்கின்ற கோயிலும் இப்போது என் நெஞ்சில் நிறைந்து நிற்கின்றாய்.

(3) இளவரால் மீன்கள் சுனையில் பாய்ந்து விளையாடு கின்ற ஊர் முகத்தலை.

(4) உலகம் முழுவதும் இறைஞ்சுகின்ற முகத்தலையில் அமர்ந்துள்ளாய்.

(5) மூதுரையாளர் வாழ்கின்ற ஊர் முகத்தலை.

(6) மேடையெல்லாம் செந்நெற் பசுங்கதிர் விளைந்து விளங்கும் ஊர் முகத்தலை.

## 18. திரைலோக்கிய சுந்தரம்

* "திரைலோக்கி" என்னும் இத்தலம் திருப்பனந்தாளுக்குத் தென்கிழக்கில் 5 மைல் தூரத்தில் உள்ளது. ஆடுதுறையிலிருந்து வடக்கே திருப்பனந்தாள் செல்லும் வழியில் 3 மைல் வந்து, அதன்பின் 3 மைல் கிழக்கே சென்றாலும் இத்தலத்தை அடையலாம். திரைலோக்கிக்குத் தெற்கில் 2 மைலில் (துயிலிக்) கோட்டூர் என்ற கிராமம் உள்ளது. கோட்டூர் "கோடை" என்று மருவியது. கோட்டூரும் (கோடையும்) திரைலோக்கியும், கருவூரார் காலத்தில் ஒன்றாக இருந்தது போலும்.

(1) சீரோங்கும் பொழிற் **கோடைத் †திரைலோக்கிய சுந்தரம்.**

(2) பெண்களின் பாடல் ஒலியும், பேச்சொலியும் ஒலிக்கும் திருவிழாச் சிறப்பினையுடைய ஊர் திரைலோக்கி.

(3) அணி கோடை, சீரணிந்த பொழிற் கோடை, செஞ்சாலி [செந்நெல்] வயற்கோடை, செழுமதில் சூழ்பொழிற் கோடை, திருந்து விழ(வு) அணிகோடை, பாதிரம் போது.

[பாதிரிப் பூ] சொரி கோடை என்றெலாம் கோடைநகர் விளக்கப்பட்டுள்ளது.

(4) கருவூர்த் தேவரால் காந்தாரப் பண்ணிற் பாடப் பெற்ற பாடல்களுடைய ஊர் திரைலோக்கி.

---

* இத்தலத்தைப்பற்றிய பிற விவரங்களை "ஒளிநெறி"யிற் காணலாம்.

† இத்தலத்து இறைவன் பெயர் "சுந்தரம்" சுந்தரேசுரர்.

## 19. பிடவூர் [வைப்புத்தலம் 6]

இவ்வூர் திருவிடைக்கழியின் அருகே வடக்கில் உள்ள "கடலாழி" ஆற்றின் வடகரையில் உள்ளது. "பிடையூர்" என வழங்குகிறது.

சுந்தரர் தேவார வைப்புத்தலம் பிடவூர். இது "திருப்பதட்டூர்" என வழங்கும். திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூருக்குக் கிழக்கில் 12 மைல் தூரம்.

இவ்விரண்டிடங்களிலும் "ஐயனார்" ஆலயம் உளது.

(1) வளம் நிறைந்த நல்ல (சிறு சிறு) குன்றுகளையும், (நன்றாக) வளர்ந்துள்ள சோலைகளையும் கொண்ட மகிழ்தற்குரிய திருப்பிடவூர்.

## 20. மகேந்திரம் [வைப்புத்தலம் 7]

இது பொதிய மலைக்குத் தெற்கே உள்ள மலை. பல ஊழிகளிலும் நீரில் அழுந்தி மூழ்காத மலை.

## 21. மயிலை [வைப்புத்தலம் 8]

இது திருமயிலாடுதுறை; மாயூரம்.

(1) நெல் ஆலை, கரும்பாலை உள்ள ஊர் மயிலை.

(2) மலை போன்ற மதில்கள் உள்ள ஊர் மயிலை.

## 22. திருவீழிமிழலை

இத்தலம் மாயூரத்திற்கு அடுத்த குற்றாலத்திற்கு 6 மைலில் உள்ளது. பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் ஒருமைல்.

திருமால் சக்கரம் பெறும் பொருட்டு ஆயிரம் பூக்கொண்டு சிவபிரானைப் பூசிக்க, ஒருநாள் ஒரு பூ குறையத் தனது கண்ணையே பறித்து மலராகப் பூசித்த தலம் ஆதலால், இறைவன் பெயர் "நேத்திரார்ப்பணேசுவரர் மாப்பிள்ளைச் சாமி" என வழங்கும் கல்யாண கோலமாக உள்ள மூர்த்தி உளர்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் விமானத்திற்கு "விண்ணிழி விமானம்" என்று பெயர். இவ்விமானம் திருமால் விண்ணுலகத்திலிருந்து கொண்டுவந்து இறக்கிய தாகும்.

(1) திக்கெல்லாம் புகழும் ஊர் திருவீழிமிழலை.

(2) உமை மணவாளர் விரும்பும் ஊர் மிழலை.

(3) *ஐந்நூற்(று) அந்தணர்கள் போற்றுகின்ற குணத் தலம் பெருமான் வீற்றிருந்த அழகிய ஊர் வீழி.

(4) கங்கை போன்ற அரிசில் ஆற்றங்கரையில் உள்ள பொழில்கள் தழுவிய கழனிகளும், நீண்ட மாளிகையும் சூழ்ந்துள்ள மாடங்கள் உள்ள அழகிய ஊர் திருவீழி.

(5) திருவீழி மிழலையில் விண்ணிழிகோயிலில் வீற்றிருக்கின்றார் "யோகநாயகப் பெருமான்"

(6) திருவீழி மிழலைப் பெருமானை நாம் கூறினால் வல்வினை நம்மைக் குறுகாது.

(7) திருவீழி மிழலையைச் சூழ்ந்துள்ள பொழிலில் போய் இருந்து இறைவனைப் போற்றுகின்றவருடைய திருவடியைப் போற்றுகின்றவர்களை இந்திரன் முதலியோர் போற்றுவார்கள்.

(8) திருவீழி மிழலையில் வீற்றிருக்கும் பெருமானுடைய திருவடி வெண்பளிங்கு போன்றது.

ஆகத் திருஇசைப்பாப் பதிகம் பெற்ற தலங்கள்— தில்லைஉட்பட பதினான்கு (14) வைப்புத்தலங்கள் எட்டு (8)

---

*தில்லை மூவாயிரம் அந்தணரை தீட்சிதர் என்பர்; திருவீழி மிழலை ஐந்நூறு அந்தணர் "வீழிப்பிராமணர்" எனப்படுவர்

## ங. அகப்பொருட் பகுதி

| பதிக எண் | ஆசிரியர் | தலம் |
|---|---|---|
| 3. | திருமாளிகைத்தேவர் | கோயில் |
| 6. | சேந்தனார் | திருஆவடு துறை |
| 7. | சேந்தனார் | திருஇடைக் கழி |
| 10. | கருவூர்த்தேவர் | திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம் |
| 12. | கருவூர்த் தேவர் | திரைலோக்கி சுந்தரம் |
| 16-6. | கருவூர்த் தேவர் | தஞ்சை இராசராசேச்சரம் |
| 23. | திருவாலியமுதனார் | கோயில். |
| 25. | திருவாலியமுதனார் | கோயில். |
| 26. | புருடோத்தம நம்பி | கோயில். |
| 27. | புருடோத்தம நம்பி | கோயில். |
| 28. | சேதிராயர் | கோயில். |

பதிக எண்: 3

கோயில்: உறவாகிய யோகம்

ஆசிரியர்: திருமாளிகைத் தேவர்

இத்திருப்பதிகம், தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் செய்கையையும், நிலையையும் [செவிலித்]தாய் கூறுவதாக அமைந்துள்ளது.

தலைவனை [தில்லைக் கூத்தனை] நினைந்து தலைவி என்ன, என்ன கூறினள் என்று தாய் கூறினது.

### பதிகம் 3. திருமாளிகைத்தேவர் கோயில்

3-1. குணக்குன்றே! தில்லை அம்பலக் கூத்தனே! "என் உறவாகிய யோகமும்" போகமும் உயிரொளியும், ஆனவனே!- என்னும்.

3-2. பன்றியின் பின் காட்டகத்து நடந்த வேடா -! என்னும்.

3.3. மகேந்திரமாமலைத் தேனே! தெய்வ வாய் மொழி யான திருவாளர் மூவாயிரவருடைய தெய்வக்கோனே! என்னும்

3-4. நெறி நின்றவர்கள் நினைக்கின்ற நீதியே! வேதாந்த நிலைக்குறியே ! என்னும்.

3-5. தென்றல், அனறில், திங்கள், கங்குல், கடல், நீங்குமுல், சேவின் மணி இவைபோல் வாடுகின்ற என்னை நீ நலிவதென்னே! மகேந்திர மலையில் கருடனுக்கு அருள் செய்த அரசே! என்னும்.

3-6. மகேந்திர மலைச்சாரலில் தேவி காண, பன்றிப் பின் நாயுடன் ஓடி அப்பன்றியை வளைத்தவனே! பிரமன், தக்கன், எச்சன், சூரியன் இவர்தம் தலை, பல், கண் இவை தமைப் பறித்தவனே ! என்னும்.

3-7. "நாத தத்துவத்தின் முடிவே" என்று துதிக்கின்ற அடியார்கட்குச் சிவலோக பதவியைக் கொடுப் பவனே ! என்னும்

3-8. மூவாயிரவர் பூவேந்தித் தொழுகின்ற மன்றினுட் பொலிகின்ற கோவே ! இங்கே வாராய் ! என்னும்

3 9. திருமால், பிரமன், இந்திரன் முதல் தேவர்க் கெல்லாம் குருவே ! என்னும்.

3-10. திருநீறு இடாத உருவை நான் தீண்டமாட்டேன் மகேந்திரப்பொன் மலையின் மலைமகளுக்கு அருளும் குருவே! என்னும்.

3-11. உன்னையன்றி மற்றொன் (று) உணரேன் ஐந்தெழுத்தைப் பிதற்றி வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்.

3-12. மூவாயிரவராகிய அந்தணர்களையும், என்னையும் திருவுளம் மகிழ்ந்து ஆட்கொள்ள வல்லவனே ! உன் அடியார் களின் பிழைகளைப் பொறுத்தருள்பவனே உமை பாகனே ! குணக்குன்றே என்னும்.

இவ்வாறெல்லாம் சொல்லி வெண்ணீற்றை உடல் முழுதும் பூசி, நீலகண்டப் பெருமானுடைய புகழைச் சொல்லிக் கொண்டு இவள் பெரிய தெருக்களில் எல்லாம் திரிந்து கொண்டு இருக்கின்றாள் (3-10). என்று தாய் தன் மகளைப் பற்றிக் கூறினாள் என்னும்.

## பதிகம் 6. சேந்தனார் திருஆவடுதுறை

இப்பதிகம் தலைவன் பால் அன்பு கொண்ட தலைவியின் துயரங் கண்டு தாய் இரங்கிக்கூறியது

*6-1.* ஐயா! திரு ஆவடுதுறை அமுதே? என்று என் பெண் உன்னை அழைத்தக்கால் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருப்பது அழகாமோ? (அழகாகாது.)

*6-2.* ஆவடுதுறை நம்பிகொண்டுள்ள நீதியை அறியாதவளாய் அவருடைய தோளைத் தழுவ நினைக்கின்றாள் [என்மகள்].

*6-3.* சடையில் உள்ள கொன்றையைப்பற்றித் தனது விருப்பத்தை எடுத்துப் பேசுவாள் தனது மனதுக்கு இன்ப வெள்ளம் என்று கூறுவாள்; சாந்தையூருக்கு இன்பம் தருபவர் ஆவடுதுறைப்பெருமான் எனக் கூறுவாள் [என் மகள்].

*6-4.* திரு ஆவடுதுறை இறைவனே! [என் மகள்] விஷயத்தில் மட்டும் உன் மனம் இரங்காமல் இருப்பது என்ன காரணம்?

*6-5.* திருநீற்றை அணிவதும், ஐந்தெழுத்தைச் செபிப்பதும் அல்லாமல் வேறொரு காரியமும் செய்யாதவளாய் இருக்கின்றாள். இதற்கு (நான்) என்ன செய்வேன்?

*6-6.* திரு ஆவடுதுறை இறைவனுடைய செய்கையை யார் அறியவல்லவர்? இந்தப் பெண்ணுக்குக் 'கதியருள்" என்று கூறுவாள்.

*6-7.* "கல் போன்ற என் மனத்தைக் கனிவித்த எம் கருணையா"! நீ என் மகள் கூறியதைக் கேட்டும (வாய்) பேசாமல் சும்மா இருப்பது அழகோ? (அழகாகாது.)

6-8. ஆவடுதுறையில் இன்பவெள்ளத்தில் ஆடி, காவிரித் தீர்த்தத்தையும், கோடிக்கணக்கான முனிவர்களையும் இறைவன் திருவுருவங்களையும், கண்டுகளிக்கப் பெற்றதினால் என் மகள் பெருமிதம் உற்றாள். இவளுக்கு அருள் புரிதல் உன் கடனாகும்.

6-9. மெய்யடியார்களுடைய கருத்தை முடித்திடுங் குன்றமே! என் மகளின் கலையையும், (மேகலை, ஆடை) வளைகளையும், கவர்ந்து கொண்டு, மனத்தையும் கொள்ளை கொள்ளுவது நியாய மாகுமா.

6-10. என் மகள் [தனது அடக்கமாம் எல்லை கடந்து லோகநாயகன் பால் சார்ந்தவளாய்] நமது செயலுக்கு ஒத்தவள் அல்லள் இது நன்றாய் இருக்கின்றதா?

6-11. திருஆவடுதுறை வேந்தனோடு விளையாடுவதற்கே முந்துவாள் [என் மகள்] அவள் இந்த உண்மை வழிநின்று விலகாமையை அறிந்தோம்.

## பதிகம் 7. சேந்தனார் திரு இடைக்கழி

ஆசிரியர் சேந்தனார் தலைவியினுடைய தாயின் மொழியாக இயற்றிய அகத்துறைப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம் முருகக்கடவுள் தலைவராக, அவர்பால் அன்பு கொண்ட தலைவியின் துயரம் கண்ட நற்றாய் இரங்கிக் கூறும் மொழிகளாக அமைந்ததாகும்.

7-1. காதல் மனத்தை எனக்குத் தந்து என் கைகளிலுள்ள வளையல்களைத் திருஇடைக் கழியிற் திருக்குரா நிழற்கீழ் நின்ற வேற்கை வேந்தனும் சேந்தன் கவர்ந்து கொண்டான் என்று என் மகள் கூறுகின்றாள்.

7-2. என் மகளுடைய இயற்கை அழகினையும் கவர்ந்து கொண்டான் வள்ளி தெய்வசேனைக்கு நாயகனும் இளங்காளை.

7-3. கோழிக் கொடியேந்திய அவன் சுப்பிரமணியன் காவற் சேனை போல எல்லோரையும் காப்பவன் ஆகிய அவன் என் மகளின் மேகலையைக் கவர்ந்து கொள்வானோ?

7-4. கூத்தப் பிரானுடை இளங்களிறும் அவன், என் மகளுக்கு இடர் விளைவிப்பது நன்று? நன்றாகாது.

7-5. என் மகள் படும் இடரைக் குறிக்கொளாது இருப்பது அழகோ? அழகாகாது.

7-6. குராநிழற் குமரன் என் சிறுமிக்கு அருள் செய்வானோ?

7-7. தூய மாணிக்கத் தொகுதியோ? அழகுக்கு அரசோ இது? என்றெல்லாம் என் மகள் எண்ணி மையல் கொண்டு ஐயுறுவாள்.

7-8. முருகவேளின் திருவடியைப் பெறவேண்டி என் மகள் மடல் ஏறத் தொடங்கினள்.

7-9. தனது அழகினைக் கண்டு மருண்டு மடல் ஏறத் தொடங்கினளே! என்று தன் திருமுடியிலுள்ள மாலையின் புறவிதழைக்கூட அருளுகின்றான் இல்லை. அக்குறத்தியின் கணவன்.

7-10. திரு இடைக்கழி முருகவேள் பிடவூர் பெண்ணும் என் மகளுக்கு அருள் செய்யாமல் போவானோ? போகான்.

7-11. தலைவியின் தாய் மொழியாகச் "செப்புறைச் சேந்தன்" முருகவேளைப் பாடிய பாடல்களைத் துதிப்போர் கேட்போர் துன்பம் நீங்கப் பெறுவர்.

## பதிகம் 10 கருவூர்த்தேவர் திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

இப்பதிகம் தலைவனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

10-1. கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தில் ஆடுகின்ற மைந்தர் என் மனத்திற் கலந்து ஒன்றுபட்டார்.

10-2. பிறை, உச்சிக் கொண்டை, சூலம் இதழ் நீலகண்டம் குழைகள், பவளவாய் நெற்றிப் பொட்டு இவைதமைக் காட்டிக் கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தில் நின்று ஆடுகின்ற மைந்தர் என் மனத்திற் கலந்து ஒன்று பட்டார்.

வண்டு விடுதூது.........

*10-3.* பெருமானுடைய சடைமேல் உள்ள மலரின் மகரந்தப் பொடியை ஊதுவதற்குப் போய் வரும் தும்பிகளே! [வண்டுகளே !] மணியம்பலத்தாரை, நீங்கள் போய்ப்பார்க்கும் போது என் மனத்தையும் உடன்கொண்டு போங்கள்.

அங்கமாலைப்பாட்டு.........

*10-4.* அவர் (பிரான்) பூசிய திருநீற்றை என் உடல் விரும்பும் அவரைப் பற்றிய நூல்களை என் செவி கேட்கும். அவர் பேரை என் வாய் மெல்ல உரைக்கும். அவர் வீற்றிருக்கும் விமானத்தை என் கண் பார்த்து [என் மூக்கு] பெருமூச்சு விடும். மணியம்பலத்துள் ஆடும் மைந்தரே! எனச் சொல்லும் என் மனம்.

*10-5.* தோழி ! திருமாலும், பிரமனும் காணமுடியாத மணியம்பலவனை நான் எங்ஙனம் காணுவேன் ! ஆயினும் அவர் மீது கொண்ட காதல் மயக்கம் நீங்காது நிற்கின்றது. யாம் காணவேண்டும் என மேற்கொண்ட செயல் என்னே ! எங்ஙனம் நிறைவேறும் ?

*10 6.* தோழி! கடலலை கலங்குவது போல நான் கலங்கித் தளர்கின்றேன் நீ துணையிருக்க இரவுப்பொழுது போகின்றது. பகல்பொழுது வந்துவிட்டால் (தலைவர்) அஞ்சாதே என்று சொல்லமாட்டார். "கீழ்க்கோட்டூர் மணியம்பலவர் என்று மாலைப்பொழுதில் மயங்குகின்றேன் யாம் என்ன செய்யக்கிடக்கின்றது.

[இது பொழுது கண்டு இரங்கல் என்னும் துறை"].

*10-7.* மணியம்பலவர்க்கு வாழ்வு (செல்வம்) போன்றுள்ளன எவையெனில் வில்வம், திருநீறு, சங்கம், சகடை, குழை சடை, விடை,

*10-8.* சிலம்பு, சதங்கை, தமருகம், திருவடி, திருநீறு, இன்னகை, மழலை கங்கை, கோங்(கு) இதழி (கொன்றை) இளம்பிறை, குழை, இளமான் (ஆகிய இவற்றை) கீழ்க் கோட்டூர் மன்னவன் என் மனத்துள் வைத்தனன்.

*10-9.* நினைப்பதற்கு (மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தரைத் தவிர) வேறு என்ன உள்ளது? யாரை நாம் துணையாகப் பெற்றுள்ளோம்? அவர் என் மனத்துள் புகுந்து என்னை விட்டு நீங்கார்.

*10-10.* மணியம்பலவருடைய திருவுருவையும் வெண்ணீற்றையும் மனத்தில் நினைக்கப்புகில் என் மனத்தையே காணேன்! நான் என்ன செய்வது? அவரே என் மனக்கருத்தை அறியவல்லார்.

*10-11.* வேதம் ஓதும் பித்தனாகிய நான் மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன்மீது புகழ்ந்த இம் மாலையைத் துதிக்கும் மக்களை இலக்குமி எதிர்கொண்டு அழைத்துச் சிறப்பிப்பாள்.

## பதிகம் 12. கருவூர்த்தேவர்
## திரை லோக்கிய சுந்தரம்
## தலைவி கூற்று 1, 2

*12-1.* கோடைத்திரைலோக்கிய சுந்தரனே! ஊரார் பழிப்பதைக் கவனியாது உன்பால் சரண் அடைந்தேன். அவ்வாறு நான் அடைந்தும் தாமரையில் ஒட்டாத நீர் போல நீ அடியேனிடத்தில் ஒட்டாமல் இருக்கின்றாய்.

*12-2.* ஐயா! நான் உன்னைக் கையாரத் தொழுது கண்ணாரக் கண்ணில் நீர் சுரந்தாலும் அருள் செய்ய மாட்டாயோ?

## 3-10 வரை தோழி தலைவனிடம் கூறும் கூற்று

*12-3.* சூரியன் முன் பளிங்கு மிக்க ஒளியை அடைவது போல, உன் முகத்தைக் கண்டபொழுது இவள் முகத்தில் முதிர்ந்த காதல் விளங்கித் தோன்றியது.

*12-4.* இவள் தன் மனத்தை உன்பால் தந்தும் அவளுடைய வளையலை அவளுக்குத் திருப்பிக் கொடுக்காது கோவணுட்டியாம் திரைலோக்கிய சுந்தரன். இவன் செய்ந்நன்றி இல்லாதவன்.

*12-5.* நீ வராவிட்டாலும் உன்னை நினைந்து ஏழை அவள் கண்ணீர் சொரிகின்றாள். ஐயோ! பாவம் என்று இரங்கி நீ அருள் செய்யாமல் இருக்கின்றாய்.

*12-6.* திரைலோக்கிய சுந்தரனே! உன் திருநாமத்தை நினைந்து, நினைந்து பயில்கின்றாள். உன்னுடைய பெருமையை நினைந்தே எப்போதும் அழுகின்றாள். ஒருவர் பெறத்தக்க பேறு அதுவே அல்லவா?

*12-7.* இவள் ஓலமிட்டு அழைத்தும் உன் உருவைக் காட்டமாட்டாய் அதனால், இவளுடைய கண்கள் உறங்குவது இல்லை. இவள் துன்பம் நீங்கும் வகையை நீ சொல்லுவாயாக.

*12-8.* உன் சடை மீதுள்ள பிறை தூவுகின்ற நெருப்பாலும், உன் கையிலுள்ள யாழ் நரம்பின் இசையாலும் இவளுடைய உயிரை நீ பிளந்துவிட்டாய்.

*12-9.* உன் பெருமையில் ஈடுபட்ட இப்பெண் உன்னை அப்பொழுதத் தன்மையினின்று நீக்கித் தனக்கே உரியவனாகச் செய்யும் பொருட்டு, இன்னமும் தேறுதலடையாமல் இருக்கின்றாள்.

*12-10.* இவ்விளம் பெண் ஆடை சரிந்து, இடை தளர்ந்து, கூந்தல் அவிழ்ந்து உள்ளாள். இந்நிலையைக் கண்டும் திரைலோக்கிய சுந்தரனே! நீ ஒருநாளும் இவள்மீது இரங்கினாயில்லை.

*12-11.* கருவூர்த்தேவரால் காந்தாரப் பண்ணில் பாடப் பெற்ற இத்தமிழ் மாலையைப் போற்றி இசையோடு ஓதுவார் இறைவனது அருள் பெறுவார்.

### பதிகம் 16. கருவூர்த்தேவர்
### தஞ்சை இராசராசேச்சரம்
### நற்றாய் இரங்கல் துறை

*16-6.* அடிகள் தம் அழகிய விழியும் வார் காதும் காட்டி, யான் பெற்ற குயிலினை மயல் செய்வ(து) அழகோ!

## பதிகம் 23 7 திருவாலியமுதனார்; கோயில்
## தலைவி கூற்று

*23-1.* தில்லையுள் நடம் புரிகின்ற வெண்ணிற வண்ணனை நினைக்குந்தொறும் என் மனம் தீயிற் பட்ட மெழுகுபோல் ஆகின்றது.

*23-2.* அந்தியும், மதியமும், கடல் ஒலியோடு நெஞ்சிற் பாய்தலும் நிறையழிந்து இருக்கின்ற நான் தில்லையுள் திருநடம் செய்யும் விதத்தினால் மன்மதன் மலர்க்கணை படுந்தொறும் வேதனைப்படுகின்றேன்.

*23-3.* உன் பாதங்கள் என்னுடைய முலைமேல் ஒற்ற வந்து அருள் செய்ய வேண்டுகின்றேன். நான் மிகவும் துன்ப மடைந்து வருந்துகின்றேன்.

*23-4.* கங்கையைச் சடையில் வைத்தாய். தேவிக்கு ஒரு பாகம் அளித்தாய். மருள் செய்(து) என்றனை வனமுலை பொன் பயப்பிப்பது வழக்காமோ?

*23-5.* தில்லையம்பலத்தானைப் பத்தியாற் சென்று கண்டிட என் மனம் பதைபதைப் பொழியாது.

*23-6.* தான் தேய்ந்து வெளுத்து, பாம்புக்கு அஞ்சி இருந்தபோதிலும் பெருமானுடைய ஆடும் பாதங்கள் காண ஆசையை உடைய என்மீது காய்ந்து நிலவு நெருப்பை வீசுகின்றது.

*23-7.* உடை புலித்தோல். அணிவது பாம்பு இப்படி யிருந்த போதிலும் என் நெஞ்சு தில்லை யம்பலத்தானை அன்றி வேறு யாரையும் நினைத்தலை நான் அறியேன்.

*23-8.* நாணம், நிறை, உறவு ஆகிய எல்லாவற்றையும் விட்டு உன்னையடைந்தேன் என்னை ஏன்றுகொள், மாநடம் மகிழ்வோனே!

*23-9.* தில்லையில் நடம் புரிகின்ற மைந்தனே! பால், நெய் முதலிய ஆன் ஐந்து ஆடும் படர் சடைப் பால் வண்ணனே! வந்து எனக்கு அருள் புரிவாய்!

23-10. ஈசனைக் காதலித்த இளையவள் மொழியாகத் திருவாலி பாடிப் பரவிய இப்பத்துப் பாடலை ஓதித் துதிக்க வல்லவர் பரமன் திருவடியைப் பணிபவர் ஆவார்.

## பதிகம் 25 திருவாலியமுதனார்

## 4. கோயில்

### தலைவியின் கூற்று

25-1. சிற்றம்பலத்து எம் இறையை நான் என்று காண்பேன்.

25-2. சிற்றம்பலத்தில் நடம்செய்பவருடைய மலர்ப் பாதங்களை நான் என்று காண்பேன்.

25-3. சிற்றம்பலத்தில் ஆடுகின்ற ஒருவனை உணர்தல் அரிது.

25-4. சிற்றம்பலத்துள் ஆடுகின்ற எம்பிரான் தான் என் இறையவன்.

25-5. சிற்றம்பலத்து இறைவனை நினைத்தேன்; இனிப் போக்குவனோ;

25-6. தில்லை மாநகர் கூத்தனை நினைப்பவர் மனத்தினுள்ளே இருந்த மணியை நினைத்தேன்; இனிப் போக்குவனோ!

25-7. தில்லையம்பலத்தில் ஆடுகின்ற எம்பிரானடி சேர்வன் கொலோ?

25-8. என்பால் நேசமுள்ள இறைவனுடைய தாமரைப் பாதங்களை நான் அன்பு பெருகத் தழுவி அவர் அணிந்துள்ள திருநீறு என் முலைகள்மீது படியும் பெரும் பேற்றைப் பெறுவேனோ? அன்னையரே! [அன்னையரே என்பது நற்றாயையும், செவிலித்தாயையும் குறிக்கும்.]

25-9. சிற்றம்பலத்து ஈசனை, எவ்வுயிர்க்கும் எம்மிறைவன் என்(று) ஏத்துவன்!

25-10. மயிலை மறைவல ஆலி சொன்ன சொல்லை மகிழ்ந்தேத்த வான் எளிதாகும்.

## பதிகம் 26 புருடோத்தமநம்பி கோயில்

26-1. கச்சணிந்த அழகிய முலைகள் மெலிந்து போகும்படி செண்பக மலர் மாலையும், மாலைக்காலமும் எம்மை மயக்குகின்றன. கூத்தப்பிரான் அருள் புரிய வரமாட்டார். வேறு யார் எனக்கு அருள் புரிந்து அஞ்சாதே! என்பவர் [ஒருவருமிலர்]. என்னுயிர்க்குக் காப்பாக உள்ளது எனது அன்பு ஒன்றேதான்.

26-2. என் மனம் மெல்லப் போய் சிவபிரானிடத்திலே சேர்கின்றது. வேறு ஆதரவு இல்லாமையால் ஏற்பட்ட சோர்வையும் உறுதியின் அழிவையும் என் உயிருக் குண்டான வருத்தத்தையும் யார் அறிவார்?

26-3. தேவர்கள் நெஞ்சமஞ்சி வலிய பழிகாரர்களாய் விடத்தை உண்ணச் செய்தார்கள். நான் உய்ய மாட்டேன் அந்தத்தேவர் கூட்டத்தை விலக்கி என் பசலை நீங்கும்படி எங்கள் வீதியூடே எழுந்தருள வேண்டுகின்றேன்.

26-4. கங்கை சூடிய சடையினனே! எங்கள் வீதியூடே எழுந்தருள்க! உன் குழையணி காதில் மாத்திரை முதலிய என் மனத்தைக் கொள்ளை கொள்கின்றன. அதனால் என் ஆருயிர் அழுந்துகின்றது. நான் என் செய்வேன்?

26-5. பெருமானது மலரடிமீதுள்ள என் ஆசை யினால் பெண்களின் முன்பு எனது பெண்மைக் குணங்களை நான் இழந்துவிட்டேன்.

26-6. பெருமானே! நீ சுடுகாட்டில் இருளில் திரு நடனத்தை ஆடிக் கொண்டிருந்தால் இவ்விடத்தில் உள்ள எங்களுடைய அரிய உயிரைக் காப்பது அரிதே ஆகும்.

26-7. தில்லைவாணனே! தேவர்கள் குறை நீங்கியவர்கள் ஆனார்கள். மாதர்களாகிய எங்களுக்குத்(தான்) இனி வாழ்வு அரிதாகும்.

26-8. சிற்றம்பலத்துச் செல்வனே! நீ, தாயினும் மிக நல்லை என உன்னை அடைந்தேன். என்னுடைய தனிமையை நீ நினைக்கின்றாயில்லை. உன் புலியதள் ஆடையும், எடுத்த பொற்பாதமுங் கண்(டு) என் சங்குவளைகளை இழந்தேன் ஐயோ! நீ இப்படிப் பராமுகமாய் இருந்தால் பெண்கள் வாழ்வது அரிதாகும்.

## தலைவி காதலால் இரங்கிக் கூறியது

26-9. ஈசனே! பிற பெண்களுக்கு முன்பாக சிற்றம் பலத்தினுள் போய். அங்கே உனக்குப் பல தொண்டுகளை நாடோறும் செய்து, உன் திருவருளைப் பெற்றால் இந்த நிலவுலகத்தில் இன்பத்தோடு வாழ்ந்திருக்கலாம்.

26-10. கூத்தனுடைய அருள் பெறும் பொருட்டு என் மனம் வருந்துகின்றது ஐயோ! ஆசையின் அளவை இவ்வளவென்று வரையறுத்துக் கூறுபவர் இவ்வுலகில் யார் உளர்? [ஒருவருமிலர்.]

26-11. வேதம் ஓதும் நம்பியின் பாடல்களைக் கொண்டு இறைவனைத் துதிக்க வல்லவர்கள் பார்வதி தேவியின் கணவராகிய சிவபெருமானை அடைந்து இன்புறுவர்.

## பதிகம் 27 புருடோத்தம நம்பி; கோயில்

27-1. திருச்சிற்றம்பலவர் "நான் உறவுடையேன்" என்று கூறாமல் நடம்புரிகின்றார். ஒரு குற்றமும் செய்யாத என் கைவளையல்களைக் கழலச் செய்வார். இச்செயல் எனக்குத் துன்பம் விளைவிக்கின்றது.

27-2. அரவும், மதியும், கொன்றையும் கண்டேன். கண்டதும் என் தோள்வளைகள் கழன்றன. அப்படி நான் காதலித்தும் அவர் ஆடி வரும்போது என்னைத் தன்னருகே நிற்கவும் ஒட்டார்.

27-3. தில்லைச் சிற்றம்பலவர் (மத்தளம்) முழங்க, நடம் ஆடி, என் அழகிய கைவளையல்களைக் கழலச் செய் கின்றார்.

27-4. பிச்சை ஏறக வந்த பெருமான் "ஏடி! போருக்கு வருவாய்!" என்று அழைப்பதுபோல் புருவத்தை நெரிக்கின்றார். அதனால் எனக்குத் தீரா நோய் செய்வாரை ஒக்கின்றார்.

27-5. சிற்றம்பலவர் என் கை வளையல்களைக் கவர்ந்து கொண்டார். என் தனங்களின்மீது மலர் அம்பினால் மன்மதன் ஆண்மையைச் செலுத்துகின்ற தன்மையைக் கண்டும் எனக்கு அவர் அருள் புரியாமல் இருக்கின்றார். இதனை நீங்களே பாருங்கள்.

27-6. "சிற்றம்பலவர் தேவர்களுக்கும் தேவராவார். அவரே எல்லார்க்கும் தாயும் தந்தையும் ஆவார்" என்று சொல்லுவார்கள். அவர் வாய் மொழியாகிய வேதாகம சாத்திரங்களைக் கேட்டு அறிந்து அதன்படி ஒழுகுபவர் வையகத்தார் ஆவார். [உலகில் பெரியோராவார்.]

27-7. அந்தோ! அந்தகனைக் கொன்றுகந்த முக்கண்ணர் என் இன வளைகள் கொள்வாரோ.

27-8. சிற்றம்பலவர் இதற்குமுன் என்னைக் கண்டறிந்தவர்போல இல்லை. இப்போது என்னைக் கண்டறியாதவர் போன்று நடிக்கின்றார்.

27-9. தில்லைச் சிற்றம்பலவர் ஆடும்போது என்னைப் பார்க்கின்றார் இல்லை. முது பகலில் என் வீட்டிற்கு வந்து "பத்தர் பலியிடுக" என்று எங்கும் பார்க்கின்றார்.

27-10. பெண்களே! சிற்றம்பலவர் நம்மைப் பார்க்காத காரணத்தினாலே நாமும் அவரைப் பார்க்கவில்லை என்று அவர் எண்ணியபடியால் நம் ஊருக்கே வந்து என் கை வளையல்களைக் கழலச் செய்து கொண்டு போவாரோ?

27-11. புருடோத்தம நம்பி பண்ணோடு பாடிய பாடல்களைக் கற்றுப் பாடியவர்கள் சிவலோகத்தில் இன்பத்துடன் வாழ்ந்திருப்பார்கள்.

## பதிகம் 28 சேதிராயர்: கோயில்

இப் பதிகம் "நற்றாய் கூற்றாக" அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

28-1. தில்லைப் பெருமானே! நெடுநாள் உமது அருகில் இருந்ததால் என் மகளுக்கு நீர்விடத்தை உண்டு மகிழ்ந்தீர் என்று காதல் மயக்கம் ஏற்பட்டுள்ளது.

28-2. தில்லையுளீர்! என் பெண் உம்மீது மயக்கம் கொண்டு நாணத்தை இழந்தனள். உம்மை அவள் கண்டால் துன்பம் நீங்கியவள் ஆவாள்.

28-3. "தில்லையாய்!" என்று என்னுடைய பெண் விம்மி அழுகின்றாள். ஆதலால் அவளுக்கு அருள் செய்வீராக!

28-4. தில்லைப் பெருமானே! விம்மி விம்மி அழுது உம்மையே நினைந்து "என்னை யாட்கொள்வாய்" என்று சொல்லித் துதிக்கின்றாள். ஒன்றுக்கும் பயன் படாதவளாய்ச் சோர்வுறுகின்றாள்.

28-5. தில்லைப் பெருமானே! உம்மீது ஆசைகொண்ட எனது பெண் சோர்வுற்றுக் கை கூப்பித் தொழுது, ஐயோ! நான் உய்யும்படி உனது கொன்றை மாலையைத் தந்தருளாய்! என்று கூறுகின்றாள்.

28-6. தான் வளர்க்கும் கிளியைப் பார்த்து என் பெண் "கிளியே!" நீ, "தனது தேகத்தில் தேவிக்கு ஒரு பாகம் கொடுத்தவர். கொன்றை மாலையை அணிந்த மார்பை உடையவர்" என்று கூறுவாயாகில் நான் பிழைப்பேன் என்று கூறுகின்றாள்.

28-7. பெருமானே! இளம் பெண் யானை போன்றவளான எனது பெண்ணை என்ன செய்து விட்டீர்? நீர் செய்த இந்த மயக்கம் எப்பொழுது நீங்கும்?

28-8. தில்லைப் பெருமானே! தரும வடிவினனே! அருச்சுனன் பொருட்டுப் பன்றியின் பின் சென்ற வேடனே! என்னை வருத்தாதே; என்று என் மகள் அரற்றுகின்றாள்.

28-9. சூரியனுடைய பற்களை உடைத்தீர்! ஓர் யானையைக் கொன்றீர்! காலனை மாள வைத்தீர்! என்று இப்பெண் சொல்லுகின்றாள், இப்போது உம்மிடங் காதல் கொண்டதன் காரணமாக இவள் ஒன்றுக்கும் உதவாமல் இருக்கின்றாள்.

28-10. சேதியர் கோன் தில்லைப் பெருமானை விரும்பிப் புகழ்ந்த பாடல்களைத் தூய நெறியில் உரைப்பவர்கள் பேரின்பத்தை அடைந்து வாழ்வார்கள்.

**பதிக எண்: 3**

**கோயில்:**—"உறவாகிய யோகம்"

**ஆசிரியர்:**—திருமாளிகைத் தேவர்.

இத்திருப்பதிகம் தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் செய்கையையும்; நிலையையும் [செவிலித்] தாய் கூறுவதாக அமைந்துள்ளது.

தலைவனை [தில்லைக் கூத்தனை] நினைந்து தலைவி என்ன, என்ன கூறினள் என்று தாய் கூறினது.

## தலைவனைக் குறிக்கும் சொற்கள்

### 7 எண்ணுள்ளவை முருகவேளாம் தலைவனைக் குறிக்கும்

### ஏனைய எண்களில் தலைவன் சிவபிரான் ஆவர்

அமரர் புராணன் 6-2
அமரர் கோமகன் 7-11
ஆவடுதண் துறைத் தருணேந்து சேகரன் 6-3
இளங்காளை 7-2
எவர்க்கும் மெய்யன்பர் 7-10
கங்கை தன் சிறுவன் 7-5
கணபதி பின்னிளங்காளை 7-5
கனகக் குன்றென வருங் கள்வன் 7-2
கார்நிறமால் திருமருகன் 7-6
கால காம புராந்தகன் 6-11
கிரிதனைக் கீண்ட ஆண்டகை 7-6
குமர வேள் 7-1

குறத்தி திறத்திலும் இறைவன் 7-9
கூத்தன் குல இளங்களிறு 7-4
கேடில் வேற் செல்வன் 7-6
கோழி வெல் கொடியோன் 7-3
சிவலோக நாயகச் செல்வம் 6-9
சுப்பிரமண்ணியன் 7-3
சுவாமி 7-11
சேந்தன் 7-1
தருணேந்து சேகரன் 6-4
திரு ஆவடுதுறை வேந்தன் 6-11
தேவின் நற் றலைவன் 7-3
தொகை மிகு நாமத்தவன் 7-8
நங்கை யானைக் குழகன் 7-2
நல்லழகன் 7-2
நவலோக நாயகன் 6-10
பரிந்த செஞ்சுடர் 7-7
பவளத்தின் குழவி 7-7
பன்னிரு நயனத்து, அறு முகத்து அமுது 7-9
புரகால காம புராந்தகன் 6-11
மணவாள நம்பி 6-3
மா மயிலூரும் சுப்பிரமண்ணியன் 7-3
முக்கண்ணுடைக் கோமளக் கொழுந்து 7-10
முருகவேள் 7-6
வள்ளி தன் மணவாளன் 7-1
வேந்தன் 6-11, 7-1

குறிப்பு :—பிற ஒளிநெறியிற் காண்க :

## தலைவியின் ஆடை, அணிகலன் :

1. ஆடை
சரிந்த துகில் 12-10
2. அணிகலன்
கைவளைகள் 27-5
கோல் வளைகள் 27-3
கோவா இன வளைகள் 27-7
தோள் வளைகள் 27-2

[பிற ஒளிநெறியிற் காண்க].

## தலைவி தன்னைக் குறிப்பது

அருவினையேன் 12-1, 26-2
நையாத மனத்தினன் 12-2
பாவி 26-2
வல்வினை யாட்டியேன் நான் 26-10

## தலைவியைக் குறிக்கும் சொற்கள்

அம்மெல் ஓதி 28-4
அரும் பேதை 12-8
இளவல்லி 6-10
ஏழை 12-5
குயில் 16-6
கொம்பிளம்பிடி 28-7
கோமளச் சாதி 28-7
சரிந்த துகில், தளர்ந்த இடை அவிழ்ந்த குழல்
இளங்கெதரிவை 12-10
திலக நுதலி 6-4
தையல் 6-6
பிறைகுலாம் நுதற் பெய்வளை 28-8
மையார் தடங்கண் மடந்தை 6-1
மொய்குழலாள் 12-6

[பிற ஒளிநெறியிற் காண்க].

## தலைவி அவயவவர்ணனை

**1. இடை**
கொடியேரிடை 25-1

**2. கண்**
குவளை மலர் 12-5
கோலமலர் நெடுங்கண் 25-1
மான் விழி 7-10

**3. குழல்**
மைஞ்ஞின்ற குழல் 12-4
வேரிநற் குழல் 28-3

**4. கொங்கை முலை**
வார் இளமென் கொங்கை 7-2
இளமுலை 26-9

**5. செவி**
செவி அவன் அறிவு நூல் கேட்கும் 10-4

**6. சொல்-மொழி**
அஞ்சொல் 7-7
தூமொழி 6-7

**7. நுதல்**
ஒண்ணுதல் 27-11
திலக நுதல் 6-4
பிறைகுலாம் நுதல் 28-8
வாணுதல் 28-1, 2

**8. மனம்**
கீழ்க் கோட்டூர் வள்ளலே! மணியம்பலத்துள் நின்றுடும் மைந்தனே! எனும் என் மனனே 10-4

**9. வாய்**
கொவ்வை வாய் 7-5, 25-1
கொழுந்திரள் வாய் 7-11
மெள்ளவே அவன் பெயர் விளம்பும் வாய் 10-4

## தலைவி வர்ணனை

குணமணிக் குருளை கொவ்வை வாய் மடந்தை 7-5
வாரணி வனமுலை 26.1

## தலைவியின் வேண்டுகோள்

கையாரத்தொழு தருவி கண்ணீரைச் சொரிந்தாலும் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே நீ அருள் செய்யமாட்டாயா 12-2

## நற்றாயைக் குறிக்கும் சொல்

அடியனேன் 7-5
கொழுந்திரள் வாயார் தாய் 7-11

## செவிலித்தாய் தலைவியைக் குறிக்கும் சொற்கள்

அரிவை, இளவல்லி, என்பொன், என் மொய்குழற் சிறுமி, திலகநுதலி, தையல், மையார் தடங்கண் மடந்தை, வினையேன் மடந்தை.

## காமத்தை வளர்ப்பன

1. அந்தி (மாலைக் காலம்); அலைகடல் - ஒலி மதியம் 23-2
2. பிறை, யாழிசை
   பிறை தூவும் நெருப்பாலும், நின்கையில் யாழ் நரம்பாலும் உயிர் ஈர்ந்தாய் 12-8

## மடல்

1. மடல்:—பனை மடலால் செய்த குதிரை
2. மடலேறுதல்:—இஃது அகப்பொருள் துறையில் ஒன்று. ஆடவர்க்கே உரியதாயினும் கடவுள் சம்பந்தமாய் பெண்களுக்கும் கொள்ளப்படும். "மடன் மாப் பெண்டிர் ஏறார்; ஏறுவர் கடவுளர் தலைவராய் வருங்காலே" [பன்னிரு பாட்டியல் சூத்திரம் 147]

## விரகதாபத்திற்படும் தலைவியை வாட்டுவன

அன்றில், கங்குல், கடல், குழல், சேவின் மணி, திங்கள், தென்றல் 15-5.

## ௬. பாடினோர்ப் பகுதி

### பாடினோர் வரலாறும் அவரவர் தம்மைப் பற்றி நூல் அகத்துள் கூறியவையும் திருஇசைப்பா பாடினவர் ஒன்பதின்மர் அவர் தம்முள்

### 1. திருமாளிகைத்தேவர்

[பதிக எண் 1-4 பதிகம் 4-ம் கோவிலுக்கே.

**வரலாறு**

இவர் சைவசமயத்தை நன்கு வளர்த்துப் போற்றினவர். பலவகைய சித்திகளைப் பெற்றவர்.

**உதாரணமாக**

(1) காவிரியில் நீராடிச் சிவ பூசைக்குத் திருமஞ்சனம் கொண்டுவரும்போது வழியில் ஒரு சவத்தினைச் சுடலைக்கு எடுத்துச் செல்வது கண்டு சவத்தீட்டினால் சிவ பூசைக்கு முட்டு நேரா வண்ணம் திருமஞ்சனக் குடத்தை ஆகாயத்தில் எறிந்து அங்கேயே நிற்கச் செய்து அச் சவத்தினைச் சுடலைவரை நடந்து செல்லுமாறு பணித்தார். பிறகு திருமஞ்சனக் குடத்தை எடுத்துக் கொண்டு சென்றார்.

(2) மதிலின் மேல் இருந்த நந்திகளை உயிர்ப்பித்து ஏவி, தன்னை எதிர்த்து வந்தபடைகளை முறியடிக்கச் செய்தார்.

(3) வெந்த பயற்றை முளைக்கச் செய்தார்.

பிற ஒளிநெறியிற் காணலாகும்.

இவர் தில்லைக் கூத்தப் பெருமானை வழிபட்டுப் பாடியனவாகத் திருஇசைப்பாப் பதிகங்கள் நான்கு உள்ளன. இவர் சிவனைப் போற்றாதவரையும், திருநீற்றைப் போற்றாதவரையும் வாயார வைகின்றார். இவரைப் பற்றிய வேறுபல விவரங்களை "திருப்பனந்தாள்" திருஇசைப்பாப் பதிப்பிற் [1964] காணலாகும்.

## இவர் தம்மைப் பற்றி நூலகத்திற் கூறியவையும் வேண்டுகோள்களும்

### 1. வேண்டுகோள்கள்

1-1. அம்பலம் அரங்காக தெய்வக் கூத்து உவந்து உன்னைத் தொண்டனேன் விளம்பும்படி நீ அருள் புரிவாயாக !

1-2. உன்னைப் பணியும்படிப் பணிப்பாயாக !

1-3. உன்னைக் கருதும் எண்ணத்தைத் தருவாயாக !

1-5. உன்னை நணுகும்படி அருள் புரிவாயாக !

1-6. உன்னை நுகரும்படி நுகர்விப்பாயாக !

1-7. உன்னைப் புணரும்படி புணர்விப்பாயாக !

1-9. உன்னைத் தொடரும்படி அருள் புரிவாயாக!

1-10. உன்னை விரும்பும் விருப்பத்தைத் தருவாயாக !

### 2. திருமாளிகைத்தேவரும் சிவனும்

### பதிகம் 1, 2, 4

1. பெருமானே! உன்னை என்னுடைய நாவினால் நவிலும்படி அற்பன் ஆகிய என்னுள்ளத்திற் கலந்த பொன்னம்பலத்தாடி நீ.

2. எனக்கு நேரிடும் இடர் கெடுத்து என்னை யாண்ட சோதியே !

3. என்சித்தத்துள் தித்திக்கும் தேனே !

4. சிறு தெய்வங்களை நினைக்காமல் உமது சேவடிக் கீழ் என் மனத்தைச் செலுத்தும்படி செய்வித்த மணியே!

5. என் பிறப்பறுத்த பேரொளியே !

6. அயனும் திருமாலும் உணரமுடியாத உன்னை மூர்க்கனாகிய நான் எனது புன்மொழிகளைக் கொண்டு துதித்துள்ளேன்.

7. உன்னை அல்லாமல் வேறு சிறுதெய்வங்களை நினைக்கும் பேய்மனம் கொண்டவர்களைப் பிரிந்த தவப்பெருந் தொண்டருக்கு நான் தொண்டனாயினேன்.

8. என்னுள்ளத்தை உருக்கி, தேன் ஊறச் செய்த அருட்பெருமான் தில்லைச் செல்வர்.

இவர் பார்தாதிகேசப் பதிகம் பாடியுள்ளார். [பதிக எண் 2] அப்பதிகத்தில் பெருமானுடைய சேவடியைத் தன் மனத்துள் வைத்தருள் வாய் என வேண்டுகின்றார். அவரது திருவடிக்கீழ் தன்னுயிர் உளது என்கின்றார்.

1. பெருமானுடைய கழைக்காலைந் தன் நெஞ்சு எப்போதும் நினைக்கின்றது.

2. பெருமானுடைய குறங்கில் [தொடையில்] தன்னுடைய மதி புதைந்துள்ளது.

3. பெருமானுடைய ஆடைக் கச்சு நூல் தனக்கு ஆதரவு

4. பெருமானுடைய திருவயிற்று உந்தி வளைப்பு தனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்கின்றார்.

5. பெருமானுடைய உதரந்தனிவடத்தில் [வயிற்றில் தொங்கும் மணி மாலையில்] தன் உணர்வு நிலைத்திருக்கின்றது.

6. பெருமானுடையப் பவளவாய்ச் சோதியுள் தன் அறிவு அடங்கிக் கிடக்கின்றது.

7. பெருமானுடைய செங்கமல மலர்முகத்தில் தன் கருத்து கலந்திருக்கின்றது

8. பெருமானுடைய சென்னியில் செஞ்சடையில் உள்ள நிலவும், புதுமத்தமும் தன் சிந்தையில் நிறைந்துள்ளன.

## திருமாளிகைத் தேவரும் பூதகணங்களும் [சிவ கணங்கள்]

சிற்றம்பலக் கூத்தனே! என்னுடைய புன்சொல்லின் பொருளை உன் திருவடிக் கீழுள்ள புராண பூதங்கள் [பழைய அடியார்கள்] பொறுத்தருள்வர்.

## பதிகம் 3

இப்பதிகம் அகப்பொருட் பதிகம். அகப்பொருட் பகுதியிற் காண்க.

## பதிகம் 4

இப்பதிகத்தில் சிவனடியார் அல்லாதவர்களையும் திருநீறு இடாதவர்களையும், நிரம்ப வைகின்றார் ஆசிரியர். அவர்களைக் கண்காணாது அவர்களுடன் தன் வாய் பேசாது எனக் கூறு கின்றார். அவர்களைப் பின்வருமாறு வைகின்றார்.

1. கோறை வாய்ப் பீறற் பிண்டப் பிணங்கள்.
2. துட்டர்.
3. தூர்த்த வார்த்தைத் தொழும்பர்.
4. பிழம்பு பேசும் பிட்டர்.
5. அரட்டர்.
6. அரட்டுப் பேசும் அழுக்கர்.
7. கழுக்களாய பிரட்டர்.
8. சிறுக்கர்.
9. செத்தாற் கொத்தைச் சிதம்பர்.
10. சீந்தை வைத்தைப் பிணுக்கர்.
11. வெண்ணீறணியும் நமர்களை நகுகா நாய்கள்.
12. அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதர்
13. பேதவாதப் பிசுக்கர்.
14. அம்பலத்து அமிர்தே! என்னும் சேடர் சேவடி கள் சூடத் திருஇலா உருவினோர்.
15. சாடர்.
16. சாட்கை மோடச் சழக்கர்.
17. பிழக்கப் பிட்கப் பேடர்.
18. இல்லைச் செல்வன் பால் செல்லாத அருக்கர்.
91. அல்லல் வாய் கள்ளர்.
20. அவியாப் பாவப் பெருக்கர்.
21. அம்பலவர் என்னும் சுருதியைக் கருத மாட்டா எக்கர்
22. குண்ட மிண்ட எத்தர்.
23. புத்தராதிப் பொக்கர்.
24. அம்பலவர்க் கல்லாக் கச்சர்.
25. கயவர்.
26. பசு நூல் கற்கும் பிச்சர்.
27. அம்பலத்து அரசின் மேல் ஆசையில்லாத் தெண்ணர்.
28. தெருளா உள்ளத்து இருளர்.

29. இட்டை முட்டைப் பெண்ணர்.

30. இறப்பொடு பிறப்பி னிற்கு இனியராய் மீண்டும், மீண்டும் பிறப்பர்.

## திருமாளிகைத் தேவர் தம்மைக் குறிக்கும் சொற்கள்
## பதிகம் : 1—4

அற்பன்
தமியேன்
தொண்டர் தொண்டனேன்
தொண்டனேன்
மூர்க்கனேன்

## பதிக எண் : 5, 6, 7, 29
## 2. சேந்தனர்

### 1. வரலாறு

இவர் பாடிய தலங்கள்

1. திருவீழி மிழலை—[பதிக எண்-5]
2. திரு ஆவடுதுறை—[பதிக எண்-6]
3. திரு இடைக்கழி—[பதிக எண்-7]
4. கோயில்-திருப்பல்லாண்டுப் பதிகம்-பதிக எண்-29]

"செப்புறைச் சேந்தன்" "சிவன் சீர் அடியார் அடிநாய் செப்புறை...சேந்தன்" என்று தம்மைக் குறித்துள்ளார். இவரும் "பட்டினத்து அடிகளிடம் கணக்கராக இருந்த" சேந்தனரும் ஒன்றோ வேறோ என்பது ஆராயும் நிலையி லுள்ளது.

இவர் திரு இடைக்கழி முருகவேளை அகப்பொருள் துறையில் பாடிய பதிகம் [பதிக எண்-7] இவருடைய முருக பக்தியை நன்கு விளக்கும். அகப்பொருட் பகுதியிற் காண்க. திரு இசைப்பா 29-பதிகங்களுள் ஒரே பதிகம் தான் முருக வேளைப் பற்றிக் கூறுவது.

திருப்பல்லாண்டு பதிகம் 29-7 ஆம் பாட்டில்,

"சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன்
சேவடி கீழ் ஆரும்பெருத
அறிவு பெற்றேன்"

எனக் கூறி மகிழ்கின்ருர். இத்தகைய மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் சுந்தரர்,

"மற்றுயான் பெற்றது யார்
பெறவல் லார் வள்ளலே"

எனக் கூறுவதை "வடதிரு முல்லைவாயிற்" பதிகத்திற் [69-6] காணலாகும்.

பிற ஒளிநெறியிற் காண்க

## 2. சேந்தனரும் சிவனும்

### பதிகம் : 5 [திருவீழி மிழலை]

1. திருவீழி மிழலையில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானைத் தவிர வேறு ஒரு தெய்வம் உண்டு என்று நான் அறிகிலேன். அவரைக் கண்டு என் உள்ளமும் கண்களும் குளிர்ந்தன. அவரைக் குறுக வினைகுறுகாது. அவர் பொன்னடித் திருநீறணிந்து அடிமை பூண்டேன். இனி அவரைப் போகவிடேன். பொய்த் தெய்வ நெறியில் நான் புகாவகைபுரிந்த சிந்தாமணி அவர். கனைப்போன்ற செல்வத்தை வேண்டி ஐம்புலன்களால் அழுந்தி நான் வேதனைப்படாவண்ணம் காத்து என்னை ஆண்ட புனிதன் அவர், மங்கை ஓர் பாகத்து அரு மருந்து அவர். அவரை நான் இனி மறவேன். எண்ணில் பல்கோடி குணத்தர் அவர். அவர் நம்மை ஆளுடையார் நான் அவரை நெஞ்சார அழைத்தால் அவர் வராதிருக்கமாட்டார். ஆனல் கற்பகம்போன்ற அவரை அடைதற்கு நான் எவ்விதத் தகுதியுடையேன்?

**பதிகம் 6 [திரு ஆவடுதுறை]**
**(அகப்பொருட் பதிகம்)**

பாலும், அமுதும், தேனுமாம் ஆனந்தத்தை என் ஆருயிர்ப் போகமாம் பெருமான் எனக்குத் தருவார்.

**பதிகம் 7—[திரு இடைக்கழி]**
அகப்பொருட் பதிகம்

[இப்பதிகம் முருகவேளுக்குரியது]

செப்புறைச் சேந்தன் நான் திரு இடைக்கழி சுவாமி தாய்மொழியாகக் கூறின தாய்மொழி ஆகும். பதிகத்தை ஏத்துவோர், கேட்போர் தெளிவுடைய மனத்தினர் ஆவர்.

## பதிகம்—29

**கோயில் திருப்பல்லாண்டு யாருக்கு பல்லாண்டு கூறுவது: என்ன வகையில், என்ன சொல்லிப் பல்லாண்டு கூறுவது**

என்பதைச் சேந்தனார் பின்வருமாறு உரைக்கின்றார்.

### 1. யாருக்குப் பல்லாண்டு

*29—1.* பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

*29—3.* என்னைத் தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

*29—4.* பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

*29—5.* வரம்பிலாப் பாக்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

29—6. ஒப்பு அமரர் பாவிக்கும் பாவகத்(து)
அப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

29—8. என் மனத் தகத்தே பாலும் அமுதமும்
ஒத்து நின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

29—9. நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

29—10. பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

29—11. எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 2. [என்ன வகையில் என்ன சொல்லிப் பல்லாண்டு கூறுவது]

29—2. பண்டும், இன்றும், என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

29—7. பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

29—12. பாரார் தொல்புகழ் பாடியும், ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

29—13. ஆருயிர் மேல் பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

### சேந்தனும், அடியார்களும்

மெய்யடியார்களே! விரைந்து வாருங்கள். [பெண்ணைக்] கொண்டும், [பெண்ணைக்] கொடுத்தும், குடி குடியாக ஈசனுக்குக் கூட்டமாய் ஆட் செய்யுங்கள். பண்டும், இன்றும், என்றும் உள்ள பொருள் பெருமான் என்றே அவருக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக;

## சேந்தனார் மக்களுக்குக் கூறுவன

செருக்கினால் மாறுபடப் பேசும் மனத்தினையுடையவர்கள் வாராதீர்கள் போங்கள். உண்மை அடியார்கள் விரைந்து வாருங்கள். [பெண்ணைக்] கொண்டும், கொடுத்தும் குடிகுடியாக ஈசனுக்கு ஆட் செய்யுங்கள். சில ஆண்டுகளில் இறந்துபோம் தேவர்களை வழிபடாதீர்கள். விடையேறும் பெருமானுக்கு, பல்லாண்டு என்கின்ற பதத்தைக் கடந்தவருக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துங்கள்.

## பல்லாண்டு பாடிய வரலாறு

சேந்தனாரின் அன்பின் திறத்தை உலகோர்க்குக் காட்ட விரும்பி மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் திருத் தேரைப் பூமியில் அழுந்துமாறு கூத்தப்பிரான் செய்தார். இப் பல்லாண்டு திருப்பதிகம் பாடித் திருத்தேர் தானே அசைந்து ஓடி நிலையினை அடையும்படி சேந்தனார் செய்தார்.

## 3. கருவூர்த்தேவர்

பதிக எண் : 8—17 [கோயில் உட்பட
பத்துத் தலங்கள்]

வரலாறு :—

இவர் கருவூரில் பிறந்தவர். அதனால் கருவூர்த் தேவர் எனப் பெயர் வந்தது. இவருடைய திரு உருவச்சிலை கருவூர் பசுபதீசுரர் ஆலயத்திலும், தஞ்சாவூர் பிரகதீசுரர் ஆலயத்திலும் உள்ளது. இவர் வேதம் பயின்ற அந்தணர். இவரைப் பற்றிக் கருவூர்த்தலபுராணமும், திருநெல்வேலித்தல புராணமும் கூறும். இவர் ஒடேந்திப் பலிக்குத் திரிந்தவர்.

## கருவூர்த்தேவரும் சிவனும்

பதிகம்—8 :—[கோயில்]

இவ்வரிய பிறவியைப் பெற்ற எனக்கு 'என்னுடன் பிறந்த ஐவரும் [ஐம்புலன்களும்] பகையாய் உள்ளார்கள். பின்னர் யார் துணை என்றால் "அஞ்சல்" என்னும் திருச்

சிற்றம்பலத்துப் பெருமான் தான் எனக்கு அருள் செய்பவர். தாயின் நேர் இரங்கும் தலைவன் என்றும், தமியனே துணைவன் என்றும் நாயேன் புலம்பினால் அவர் தான் எனக்கு அருள் புரிபவர். கண்ணீர் அரும்பக் கைகள் மொட்டிக்க என் களைகணே ஓலம் என்று ஓலமிட்டு உருகும் அன்பர் கூட்டத்தில் என்னையும் சேரும்படி செய்தவர். என் இடர் அகல என்னகம் புகுந்து என் அஞ்ஞானத்தைப் போக்கிப் பளிங்குபோலத் தோற்றத்தையுடைய, பெருமான் என் புந்தியில் புகுந்தார். தனது செஞ்சடையையும், பிறையை யும், கருணையையும் காட்டி எனக்கு அருள் புரியும் பரமர் அவர்.

## பதிகம்—9 :—[களந்தை ஆதித்தேச்சரம்]

என்னைப் பெற்றெடுத்த தாயினும் நல்லவர் முக்கட் பெருமான். பாவியேன் செய்யும் பிழைகளைப் பொறுத்தார். ஆனால் எனக்குள்ள பிணியைப் பொறுத்தருளாத பிச்சர் அவர். என் குடி முழுதாளும் குழகர் அவர். கடா அனைய என்னை ஆள விரும்பிப் பிறிதொரு பிறவியிற் பிறந்து நான் பொய்க்கு ஆள் ஆகாத வண்ணம் என்னைக் காத்து அருள் புரிய வல்லவர் பெருமான். கருவூரன் ஆகிய நான் வேதம் பயின்று அமுதம் ஊறிப் பாடிய தமிழ்மாலை பத்தும் வல்லவர் அஞ்ஞானத்தைத் தொலைத்த சிந்தையர் ஆவார்.

## பதிக எண் : 10 [கீழ்க்கோட்டூர் மணியம்பலம்]
## [அகப்பொருட் பதிகம்]

வேதம் பிதற்றும் பித்தனாகிய நான் மொழிந்த மாலை முத்திதரும் என்று உலகத்தவர் ஏத்துவரேல் அவர் தமை இலக்குமி முகம் மலர்ந்து எதிர்கொள்வாள்.

[ஆரணம் பிதற்றும் பித்தன் என்றபடியால் கருவூர்த் தேவர் அந்தணர் என்பது பெறப்படும்.]

**பதிக எண் : 11** [திருமுகத்தலை]

பெருமான் என்னுடைய தனிமை நீங்குதற் பொருட்டு என் அகத்திலும், முகத்தலைக் கோயிலிலும் அமர்ந்துள்ளார். அங்ஙனம் அமர்ந்து இனிய தீங் கனியாய், ஆனந்த வெள்ளமாய், என்னுள்ளத்தில் நிறைந்துள்ளார். நானோ கல்லினுங் கடிய உள்ளத்தை உடைய கள்வன். நெஞ்சு உருகக் கண்ணில் நீர் சொரிய, விளையாட்டுப் புத்தியை விடமாட்டேன். அப்படியிருந்தும் முகத்தலைப் "பன்னகா பரணரே" பாவியேனுடைய ஆவியுள் நீ புகுந்தது என்ன காரணம்? ஏழை நாயடியேன் அத்தகைய பெருமைக்கு எளிதில் உரியவனோ? மெய்ந்நூல் கற்றும் நீரில் உள்ள கெட்டிபோல ஈரம் படியாது உள்ளேன்.

செல்வம் வேண்டி ஐம்புலன்களோடு நான்படும் வேதனை யொழிய என்னுள்ளத்திற் புகுந்து என்னை ஆண்ட நாயகனே! நீ முகத்தலைத் தலத்தமர்ந்து அடியேனுக்கு இடை அறாத ஆனந்தத்தை உன் பவள வாயால் மொழிந்து தந்துள்ளாய் அடியேனுடைய உடலில் நீ புகுந்து நின்ற காரணத்தால் என் உடல் சிறந்த விமானமாயிற்று. செய்த பிழை பொறுத்தாண்ட பேரொளியே! உன்னை விட்டு எவ்வாறு பிரிவேன்! அடியேனுடைய பாசம் முழுவதும் நீங்க முகத்தலையில் அமர்ந்து எனக்குக் கரும்பும், பாலும், தேனும், அமுதும், கனியுமாய், இனியனாய் என்னை யாண்டனையே. மீண்டும் எனக்குத் தந்தையும், தாயும் ஆயினை. பாகு போன்ற சொல்லை உடைய கருவூரனது அமுது போன்ற இனிய தமிழ் மாலையை ஒழுக்கத்துடன் பாடும் அடியவர் யாவரும் சிவபதம் குறுகி நிற்பார்.

**பதிகம் எண் 12** :—[திரைலோக்கிய சுந்தரம்]

(இஃது அகப்பொருட் பதிகம்)

வேதம் என்னும் தேனைப் பருகி அருந்தமிழ் மாலையாகக் கருவூரர் பாடிய தமிழ் மாலையைக் *காந்தாரப் பண்ணில் போற்றிசைப்பவர் நிலைபெற்ற இன்பத்தைப் பெறுவர்.

---

*பண் காந்தாரம்—நவரோஸ் ராகம்.

## பதிகம் 13 :—[கங்கைகொண்ட சோளேச்சரம்]

அன்னமாய்ப் பறந்து அயன்தேட நின்ற நீ சிறிய என்னை யாள விரும்பி என் மனத்திற் புகுந்த எளிமையைப் பெருமானே! நான் என்றும் மறக்கமாட்டேன். உள்ளம் நெகிழ்ந்து ஓலமிட்டு, ஒரு நாள்கூட அலறமாட்டேன். ஒரு பணியும் செய்யமாட்டேன். அப்படியிருந்தும் இந்தப் பாவியே னுடைய ஆவியுள் புகுந்து என் கண்ணினின்றும், இக் கங்கைகொண்ட சோளேச்சரத்தான் அகலமாட்டார். இஃது என்ன ஆச்சரியம்.

நான் உண்ட ஊண் உனக்கு ஆகும்படி என் உள்ளத்திற் கலந்த பரஞ்சோதியே!

பெருமானே! நீ தாய்போன்ற அன்பினைக் காட்டி வெளிப்பட்டுத் தோன்றினால் நானும் அவ்வாறே உன்னோடு உருகிக் கலந்து ஒன்றாகி விடுவேன். சோளேச்சரத்தானே! நீ நுண்ணியையாய் என் கண்ணிலுள்ள மணியிற் கலந்தாய். ஒருநாள் உன் திருக்கரத்தை என் சென்னிமேல் வைத்து என்னை உய்யக் கொண்டருளினை.

கையில் ஓடேந்திப் பலிக்குத் திரியும் கருவூரன் சொன்ன இம் மாலையை ஓதினவர் சிவபிரானுடைய திரு அருட் கடலில் மூழ்கித் திளைத்தவர் ஆவர்.

## பதிகம் 14 :—[திருப்பூவணம்]

என்னை யாண்டு இனியது காட்டிப் பெரிதருள் புரிந்து ஆனந்தத்தைத் தரும் உன் பெருமையினும் பெரியது ஒன்று உண்டோ பெருமானே?

திருமால், பிரமன் முதலிய தேவர்கள் நெடுங்காலமாக உன்னைக் காண்பதற்குக் கவலையுற்று இருக்கப் பெருமானே! நீ என்னுடைய உள்ளத்திற் புகுந்த உனது எளிமையை நான் மறக்கேன்.

உன் கையில் உள்ள உடுக்கையில் ஓசை உண்டாகும் படியாக ஒருநாள் நீ வந்து எங்கள் கண் முன்பாக இருக்க,

மாட்டாயா? என் கண்ணிற் பொருந்திய கருமணியின் உள்ளே புகுந்து நுட்பமாய் இருந்தாலும், பெருமானே! நீ மிக நுண்ணிய அணுவின் தன்மையையும் கடந்து நின்ற உன் பெருந்தன்மையை நான் அறிவேன். ஐம்புலன்களுடைய சேட்டையைக் கடந்து உன் திருவடியை அடைந்தேன். நீ அருள் செய்தாலும் சரி. அருள் புரியாவிட்டாலும் சரி. எல்லாம் உன் விருப்பம்.

பரிசுத்தமான மனத்தையுடைய பெரியோர்கள் இறைவனே! அன்பு தா! என்று உன் திருவடிப் பேற்றை விரும்பிக் கவலை உற்று இருக்க, நீ என்னுடைய மனதில் குடிகொண்டிருக்க நான் என்ன தகுதியை உடையேன்? எனது அடிமைத்திறம் தான் என்ன தகுதி உடையது? நான் அறிகிலேன்.

வேதங்கள் கண்டறியாத இடத்தில் ஒளித்துக் கொண்டிருக்கும் நீ கல்லைப்போன்ற கடினமான மனத்தை யுடைய என் கண்ணில் அகப்பட்டுக் கிடக்கின்ற கருணையை விடப் பெரிய தன்மை ஒன்று உண்டோ? (இல்லை) என்றபடி.

திருப்பூவணத்திற் கோயில்கொண்டு ஆண்ட புனிதன் மீது செழுமறை தெரிந்த கருவூரன் உரைத்த தமிழ்ப் பாடல் பத்தும் வல்லவர்கள் சிவ சாரூப பதவியைப் பெறுவார்கள்.

## பதிகம் 15 :—[திருச்சாட்டியக் குடி]

என்னுடைய களைகணே! வேறு களைகண் இல்லாத என்னுடைய உள்ளத்திற் கோயில் கொண்டருளும் சைவனே! சாட்டியக் குடியார்க்கு இனிய தீங்கனியாய்ப் பெருமானே! நீ எழுந்தருளியிருக்கும் தன்மையினை அடியேனுக்குச் சொல்வாயாக! அடியேனுக்கு ஏழிருக்கை என்று சொல்லப்பட்ட கோயிலில் நீ எழுந்தருளி இருக்கும் தன்மையைச் சொல்வாயாக! சாட்டியக் குடி ஈசனே! போற்றி! என்னுடைய துயரத்தை நீக்கி அருள் புரிவாயாக.

சாட்டியக்குடிப் பெருமான்மீது கருவூரன் பாடிய பாடல்கள் பத்தும் சிந்தையில் பதித்த அன்பினை உடைய

மக்களுக்கு அல்லவா ஒளி வளர்ந்து பிரகாசிக்கின்ற சிவலோகம் சித்திக்கும்.

## பதிகம் 16 :—[தஞ்சை இராசராசேசரச்சம்]

பெருமானுடைய நெற்றியிற்கண் என் கண்ணினின்றகலாது. அவருடைய சிலம்பொலி என் நெஞ்சினின்று நீங்காது. அவருடைய திருவடி என் குடி முழுதும் ஆளப் புகுந்து அங்கேயே நிலைத்து நிற்கின்றது. ஆதலால் அவரைத் தவிர வேறு உறவினர் எனக்கு எதற்கு வேண்டும்?

பிறப்பு, இனிய தளிர், இறப்பு இலை உதிர்தல், என்று ஒன்றன் பின் ஒன்றாக நிகழும் என்றால், பெருமான் நம்மிடத்துப் போதல் தற்போது நிகழாவிடில் நாம் ஏன் மனம் இடிந்து வருந்துதல் வேண்டும்.

நெடுங்காலம் பணி செய்ய, பழந்தொண்டர்கள் இறைவனைக் காணும்பொருட்டு வருந்தி இருக்க, என்னுடைய நெஞ்சில் பெருமான் வந்து வீற்றிருக்கும் எளிமையை நான் மறக்க மாட்டேன்.

சடைப் பெருமான் எங்களுக்கு இனியர். அருமையான மருந்து கொண்டு நோய்தீரப் பெற்ற கருவூரர் சொன்ன பாடல்களின் பொருள் அமுதை உண்டு அனுபவித்தவர்கள் சிவபதம் ஆகிய கயிலையை அடைவர்.

## பதிகம் 17 :—[திரு இடைமருதூர்]

செம்பொன்னாலாகிய தோட்டினையும் சடை முடியையும், நீற்றுக் கோலத்தையும், நீல கண்டத்தையும், உடைய *பெருமான் எழுந்தருளியிருக்கும் தலம் திருவிடை மருதூர்.

---

* திருவிடை மருதூரில் எழுந்தருளிய பெருமான் ஸ்ரீ மகாலிங்கேசுரர், என்ற திருப்பெயரை உடையவர். அப்பெயருக்கு ஏற்பத் திருவிடை மருதூருக்குச் சுற்றிலும் உள்ள தலங்களை, 1. திருவலஞ் சுழியிலுள்ள விநாயகர் சந்நிதியும், 2. சுவாமி மலையில் உள்ள முருகன் சந்நிதியும் 3 சிதம்பரத்தில் நடேசர் சந்நிதியும், 4. திருஆலங்குடியில்(இரும்பூளையில்)தட்சிணாமூர்த்தி சந்நிதியும்,

தேவியுடன் இருளில் நடுகல் யாமத்தில் என்னுடைய மனத்தில் மிக நுட்பமாகச் சார்ந்து கலந்து நின்ற சிவன் வீற்றிருக்கும் தலம் திருவிடை மருதூர். அப் பெருமான் அடியேனுடைய உள்ளத்திற் கலந்து யான் செய்யும் பணிக்கு உகந்தருளுவர்.

பல ஊழி காலமாக நெருங்காமல் என் மனத்துள்ளே நுட்பமாய்க் கலந்து நின்ற பெருமான் வீற்றிருக்கும் தலம் திரு இடை மருதூர்.

பச்சை மட்கலம் மழைத்துளி பட்ட அளவில் ஈரம்பட்டுக் கரைந்துபோக; நெருப்பில் சுடப்பட்டபின் அம் மட்கலம் நீரில் கிடந்தாலும், கரைந்து போகாமல் கெடாதவாறுபோல, மாதர்களோடு கலவித் தொழிலிற் கிடந்த அறிவிலியாகிய என் மனம் இறைவன் திருவருளாகிய பெருந்தீயில் மூழ்கிய பின்னர்ச் சிற்றின்ப நுகர்ச்சியால் துன்பம் வந்து தாக்காத வாறு, இருளில் நடு யாமத்தில் யாழோசை ஒலிக்க என் மனத்தில் வந்து புகுந்த பெருமான் வீற்றிருக்கும் தலம் திருவிடை மருதூர்.

செந்தீயில் சுடப்பட்ட செங்கல்போல என்னை ஆக்கிய பெருமான் வீற்றிருக்கும் தலம் திருவிடை மருதூர்.

கலங்கின நீர் [தேற்றாங் கொட்டையால்] தெளிவு பெறுவதுபோல நன்மையைத் தரும் திருவருள் அடியேனது சிந்தையில் கூடியதால் என் உள்ளம் தெளிவு பெற்றுள்ளது.

கணக்கற்ற அறிவில்லா மக்கள் தூங்கும் இருளில் நடு யாமத்தில் என் கண்களில் இறைவனுடைய சுடர் ஒளி விளங்கும். அதுபோலக் கருவூரனாகிய என் அறிவில் இறைவன் ஒளி கலந்ததால் நான் பாடிய இனிய தமிழ் மாலையாகிய பதிகத்தை அடுத்துள்ள சோலையில் மருதயாழுடன் கலந்து

---

5. திருவாரூரில் உள்ள சோமாஸ் கந்தராம் தியாகேசர் சந்நிதியும், 6. சூரியனார் கோயிலில் சூரியன் சந்நிதியும், 7 திருவாவடு துறையில் நந்திதேவர் சந்நிதியும் 8. சேய்ஞலூரில் சண்டேசுரர் சந்நிதியும் 9 சீகாழியில் பைரவர் சந்நிதியும் தனித் தலங்களாக அமைந்துள்ளன" [திருப்பனந்தாள் பதிப்பு பக்கம் 220.]

பாடினால் அந்த இசைகேட்டு எழுந்தருளும் சிவன் வீற்றிருக்கும் தலம் திருவிடை மருதூர்.

## 2. கருவூரர் தம்மைக் குறிப்பது.

அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர்
அடியனேன்
அடியேன்
ஆதனேன்
* ஆரணம் பிதற்றும் பித்தனேன் ஆரணம் மொழிந்த பவளவாய் 9-10
ஆலையம் பாகின் அனைய சொற் கருவூர்
ஏழை நாயடியேன்
கருவூர் (கருவூர்த் தேவர்) 8-10, 9-10
கருவூர் ஆரணம் மொழிந்த பவளவாய்
கள்வனேன்
கன்னெகா உள்ளக் கள்வனேன்
தனியனேன்
நலமலி கலைபயில் கருவூர் 9-10
பாவியேன்
பித்தனேன்
புழுங்கு தீவினையேன்
பேய்களோம்
மைக்கடா அனைய என்னை வம்பனேன்

குறிப்பு :—பிற ஒளிநெறியிற் காண்க.

## 3. கருவூரர் தாம் பாடிய பாடல்களைக் குறிக்கும் சொற்கள்

அமுத மூறிய தமிழ்மாலை 9-10
அமுதுறழ் தீந்தமிழ்மாலை 11-10
ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த அமுத மூறிய தமிழ்மாலை 9-10
ஆலையம்பாகின் அனைய சொல் 11-10
கருவூர் அறைந்த சொல் மாலை 13-11
கருவூர்த் துறைவளர் தீந்தமிழ் மாலை 8-11
கருவூரன் கழறுசொல் மாலை 15-10
கருவூரன் தமிழ்மாலை 12-11

* இதனால் கருவூர்த் தேவர் வேதம் பயின்ற அந்தணர் என்பது பெறப்படும்.

கருவூரனேன் உரைத்த பாவணத் தமிழ்கள்
பத்து 14-10
சொல்மாலை 13-11; 15-10
தமிழ் மாலை 8-11; 11-10; 12-11
தீந்தமிழ் மாலை 8-11; 11-10
பாவணத் தமிழ்கள் 14-10
மணிநெடு மாலை 10-11

## 4. பூந்துருத்தி நம்பிகாட நம்பி
## பதிகம் எண் :—18–19
## 18 திருவாரூர்; 19 கோயில்

வரலாறு :—

தஞ்சாவூர்க்கும் திருவையாற்றுக்கும் இடையேயுள்ள சிவத்தலம் திருப்பூந்துருத்தி. பூந்துருத்தி நம்பிகாட நம்பி சிறந்த சிவபக்தர். கண்ணப்பர், கணம்புல்லர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், சேரமான்பெருமாள் முதலாயினேரைத் தம் பதிகத்துள் வைத்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவர் திருவாரூர், கோயில் என்ற இருதலங்களுக்கும் திருஇசைப்பா பதிகம் பாடியுள்ளார்.

தேவாரம் பாடிய மூவர் பாடாத சாளரபாணி என்ற ஒரு பண்ணில் கோயிற் பதிகம் பாடியுள்ளார். பிற விவரங்களைத் ''திருப்பனந்தாள்'' ''திரு இசைப்பாப்'' பதிப்பிற் காணலாகும்.

### 1. திருவாரூர்

திருவாரூருக்கு இரண்டே பாடல்கள் உள்ளன. இரண்டும் 18-1, 2 ஆரூர் ஆதியாய் வீதிவிடங்கராய் நடம் குலாவினரே, என முடிவு பெறுகின்றது.

''கைக்குவான்'' எனத் தொடங்கும் திருவாரூர் முதற் பதிகம் [18] பெருமானுடைய வளர்ந்த நடன அழகைத்

தெரிவிக்கின்றது. இரண்டாம் பதிகம் [19] கோயில் தில்லைப் பெருமானுடைய நடனத்தைப் பற்றிக் கூறுகின்றது.

### காடநம்பியும் சிவனும்

*18-2.* இப்பாடலில், பெருமானுடைய அழகைப் பாருங்கள் எனத் தேவர்களை அழைத்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

## 19. கோயில்

"கணம் புல்லர்;" "கண்ணப்பர்;" "நாவுக்கரசர்;" "சம்பந்தர்;" சேரமான், ஆரூரன், இவர்களைப் பற்றி ஆசிரியர், பாடல் 2-முதல் 5-வரை கூறியுள்ளார்.

6-ஆம் பாவில்,

"சிவலோகம் ஆவதுவுந்
தில்லைச் சிற்றம்பலமே"

எனச் சிற்றம்பலத்தைச் சிறப்பித்து உள்ளார்.

இறுதிப் பாடலில் பெருமானுடைய ஆடல் அதிசயத்தைக் கூறுகின்ற காடருடைய தமிழ் மாலையின் கருத்து அறிந்து இசையுடன் பாட வல்லவர்கள் மோட்ச நிலையை அடைவார்கள்.

## 5. கண்டராதித்தர் [கோயில்]
## பதிக எண்—20

**வரலாறு :—**

இவர் சிற்றம்பலத்திற்குப் பொன் ஓடு வேய்ந்து புதுப்பித்த "முதற் பராந்தக சோழன்" குமாரர். சோழ நாட்டை ஆண்டவர். சிறந்த சிவபக்தர். தேவாரத்தில் ஈடுபாடு உடையவர். இவரைச் "சிவஞான கண்டராதித்தர்" என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. கண்டராதித்தரின் மனைவியார் "செம்பியன் மாதேவியார்"—இந்த அம்மையார் சிவத் தொண்டிலும் சிவபக்தியிலும் சிறந்தவர்.*

---

* இவரைப் பற்றி, புலவர் ஏறு. மு. அருணசலம். ஏம். ஏ. அவர்கள் சிந்தாந்தம் [மே - 1970] ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை போற்றத்தக்கது.

கண்டராதித்தர் "திருஇசைப்பா" பதிகம் ஒன்றே பாடியுள்ளார். [பதிக எண் 20. கோயில்] அப் பதிகத்தில் 8-ஆம் பாடலில்,

"தம் முன்னோருடைய சிறப்பைக் கூறி இறுதிப் பாடலில்-தன்னைச் "சோழ வேந்தன் தஞ்சையர் கோன்" எனக் கூறி உள்ளார்.

அம்பலத்து அமுதை நான் என்றுகொல் எய்துவது ?; பெருமானுடைய கூத்தை நான் என்றுகொல் காண்பதுவே? எனப் பாடித் தமது ஆராமையைத் தெரிவித்துள்ளார். இறுதிப் பாடலில் தாம் பாடிய இப் பதிகத்தைப் பாட வல்லவர் பேரின்பம் எய்துவர் எனக் கூறியுள்ளார்.

குறிப்பு :—இப்பதிகம் சுந்தரர் தேவாரம் 83, 84 எண்ணுள்ள பாடல்களைத் தழுவியது போலும்.

## 6. வேணாட்டடிகள்

### பதிக எண்—21 [கோயில்]

வரலாறு :—

வேணாடு என்பது சேர நாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் நடுவானது. அடிகளின் இயற்பெயர் தெரியவில்லை. இவர் பிறந்த நாடுபற்றி இவருக்கு "வேணாட்டடிகள்" என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவரது பதிகத்தில் மிக நிரம்பப் பழமொழிகள் ஆளப்பட்டுள்ளன. பிற விவரங்களைத் "திருப்பனந்தாள்" பதிப்பிற் காணலாகும்.

கசப்பாயிருந்தாலும் இளம் வாழைக்காய் இளம் வேப்பிலை இவற்றை மக்கள் விரும்பிக் கறி செய்வதற்கு உபயோகப்படுத்துவார்கள். அதுபோல இழிவான செயல் பெரியோர் பொறுப்பர் ஆயினும் கூத்தப்பெருமானே ஆதரவற்ற எனது தொண்டை விரும்புவது இல்லை.

யாரும் தமது பானையைச் சாய்க்காமல் நீரை நிரப்பிக் கொள்வதுபோல உன் அடியவனுன எனது தொண்டினை ஏற்று என்னை உனது கருணையினால் நிரப்பவேண்டும்.

நீர் நிறைந்த குளத்தின் அருகே உள்ள செடிக்கு அக் குளத்து நீர் கசிந்து பாயாதோ? என்று சொல்லும் பழ மொழிக் கேற்பக் கருணைமிக்க நீ உன்னை அணுகி நிற்கும் என் இடத்து உன் கருணையை ஏன் காட்டவில்லை. கூத்தபிரானே! ஏன் என்னிடம் உரையாடவில்லை?

கூத்தபிரானே! நோய்க்கு இடையே நான் வருந்த, நீ அந்த நோயைத் தீர்க்காது இருப்பதால் "இத் தொண்டனைப் பேய் என்று கருதித் தம்பிரானே அருளாது இகழ் கின்றான்" என்று நாய் போன்ற என்னைப் பரிகசிக்கும்படி செய்துள்ளாய்.

கூத்தப் பெருமானே! மானிடர், வானவர் எல்லோர்க்குங் கண்ணவாய் ஆயினும் நான் உன்னை அண்ணவோ! என் றழைத்தாலும் நீ என்னை அடைந்தருளினாய் இல்லை.

கூத்தப் பெருமானே! நான் வாட்டமுற்று மனம் உருகி முத்தி பெறவேண்டிக் குற்றேவல் செய்கின்றேன். அக் குற்றேவல் பொய்யோடு கூடாமல் நீ உதவி செய்து உன்னை அடையும்படி அருள்புரிய மாட்டாயா?

கூத்தப் பெருமானே! உனது பெருமையை அறிந்து நான் உன்னைத் தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதா லும் நீ என்னை அடியானாக உனது திருவடியில் சேர்த்துக் கொள்ளும் நாள் எந்நாளோ? அறியேன்.

கூத்தப் பெருமானே! அடியனாகிய ஒருவன் உன்னை ஓயாமற் பாடிக் கூப்பிட்டுக் கொண்டிருக்கின்றான் என்று கருதி நீ எனக்கு அருள் செய்தல் நன்றாம். நான் சாகும் போதாயினும் உன்னைத் தரிசித்தலை நீ தடைசெய்ய முடியாது.

## 7. திருவாலியமுதனார்

### பதிக எண்—22-25 [கோயில்]

**வரலாறு :—**

இவர் மயிலொடுதுறையான மாயூரத்திலே அந்தணர் குடியில் வந்தவர். சீகாழிக்கு அருகில் உள்ளது ஆலிநாடு. அந் நாட்டிற்குத் தலைமை ஊர் திருவாலி. அங்குள்ள திருமாலுக்கு "அமுதனார்" என்று பெயர். இவருடைய பெற்றோர்கள் இவருக்கு "திருவாலியமுதனார்" எனப் பெயரிட்டார்கள். வைணவக் குடியில் தோன்றிய இவர் சைவ அடியவராய்த் தில்லைக் கூத்தரைத் தம் குலதெய்வமாகக் கொண்டார். அவரைச் சேர்வது என்றுகொலோ என ஏங்குவர். இவர் பாடிய நான்கு பதிகமும் கோயிலுக்கே. இவர் தம்மை,

"மயிலையர் மன்னன்" என்றும்

"மறைவல திருவாலி" என்றும் தாம் பாடிய பாட்டில் கூறியுள்ளதால் இவரூர் மாயூரம் என்பதும், இவர் அந்தணர் என்பதும் பெறப்படும். இவரைப் பற்றிய பிற விவரங்கள் "திருப்பனந்தாள்" பதிப்பில் காணலாம்.

### பதிக எண்: 22

### பாதாதிகேசம்

தில்லை அம்பலத்தானுடைய பாதம் என் சிந்தையுள் இடங்கொண்டது.

அவருடைய கழல், சிலம்பு, கிண்கிணி இவை என் சிந்தனையில் இடங்கொண்டன.

அவருடைய குறங்கு (தொடை) என் சிந்தையுள் இடங்கொண்டது.

அவருடைய கச்சு என்னை வாழ்வித்தது.

அவருடைய மேனியும், திரு வயிறும், உந்திவான் சுழியும் உதரபந்தனமும் என்னுள்ளத்துள் இடங்கொண்டன.

அவருடைய திருத்தோள்கள் நான்கும், மார்பினிற் பூணூலும், கண்டமும், வினையேனை மெலிவித்தன.

அவருடைய திருவாயின் (பற்களும்) புன்சிரிப்பும், காதும், காதின் மாத்திரையும், தோடும், அடியேனை ஆட்கொண்டன.

அவருடைய திருமுகமும், மூன்று கண்களும் என் நெஞ்சில் நிற்கின்றன.

அவருடைய பூ மாலையும், அகத்தி மொட்டும், ஊமத்தை மலரும், பிறைச் சந்திரனும் கொண்ட திருமுடி அல்லவா என் மனத்துள் நிலைத்து நிற்கின்றது.

தில்லைக் கூத்தரைத் திருவாலி சொன்ன இவை தமை விரும்ப வல்லவர் சிவனடி சேர்வர்.

## பதிக எண்: 23

*23-10.* திருவாலி பாடிப் பரவிய இப்பத்துப் பாடலை ஓதித் துதிக்க வல்லவர் பரமன் திருவடியைப் பணிபவர் ஆவார்.

## பதிக எண்: 24

*24-11.* திருவாலி சொன்ன தமிழ் மாலைப் பாடல்களைப் பாடப் பாவ நாசமாம்.

## பதிக எண்: 25

*25-10.* சிற்றம்பலத்தை இன் தமிழால் மறைவல்ல ஆலி சொல்லை மகிழ்ந்தேத்துக வானெளி தாகும்.

## 8. புருடோத்தம நம்பி

## பதிக எண்: 26—27 [கோயில்]

வரலாறு :—

இவர் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவ்விரண்டும் அகப்பொருட் பாடல்கள். கோயிலுக்கே இவர் தம்மை

"மாசிலா மறைபல ஓது நாவன் வண்புருடோத்தமன்" எனக் கூறுவதால் இவர் அந்தணர் என்பது பெறப்படும்.

*26-11.* வேதம் ஓதும் நம்பியின் பாடல்களைக் கொண்டு இறைவனைத் துதிக்க வல்லவர் சிவபெருமானை அடைந்து இன்புறுவர்.

## பதிக எண்: 27

*27-11.* புருடோத்தம நம்பி பண்ணோடு பாடிய பாடல்களைக் கற்றுப் பாடியவர் சிவலோகத்தில் இன்பத்துடன் வாழ்வர்.

## 9. சேதிராயர்: [கோயில்]

## பதிக எண்: 28

வரலாறு :—

இவர் சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர். இவர் சேதிராயதேவர் எனவும் படுவர்; சேதியர் ஒருவகை மரபினர். சேதிநாடு தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கிலுள்ள நடு நாட்டின் ஒரு சிறுபகுதி. சேதி நாடு மலையமா நாடு என்றும் வழங்கப்பெறும். கிளியூரைத் தலைநகராக்கிக் கொண்டு அரசாண்டவரே சேதிராயர். இவர் அடியார் பத்தி, சிவபத்தியிற் சிறந்தவர்.

*28-10.* சேதிபர்கோன் தில்லைக் கூத்தரை உரை செய்த பாடல்களைத் தூய்மையுடன் உரைப்பவர் மோட்ச வீட்டில் இன்பம் எய்தி இருப்பர்.

# ரு. இலக்கணப் பகுதி

## 1. அசைச்சொல்

**ஆல்**

*சொரிந்தனவால் 12-5*
*காடாயால் 21-8*

**ஓ**

*ஈசனேயோ - ஓ அசை 26-8, 9*
*வாழியரோ - ஓ அசை 16-9*

**கொல்; கொலோ**

*என்று கொல் எய்துவதே 20-1, 8*
*காண்பதும் என்று கொலோ 20-6, 7, 9*

**வாழி**

*வாழியம் போதத் தருகுபாய் விடையம் 61-4*
*வாழிய பணி அம்பலவன் 10-5*

## 2. அணி

### 1. உயர்வு நவிற்சியணி

*(1) மேகத்து அகடு தோய் மகுடக் கனக மாளிகை 2-2*

### 2. உருவக அணி

*(1) பிறவிப் பௌவம் 8-2*

### 3. உவமையணி

*(1) பவளமால் வரையைப் பனி படர்ந்தனையதோர் படரொளி தரு திருநீறும் 23-1*

### 4. எடுத்துக் காட்டுவமை அணி

*(1) துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே ஆளுகப் பார்கைச் சாலுஞ் சிறுகதலி இலைவேம் புங்கறி கொள்வார் 21-1*

## 5. நற்குறிப்பேற்றவணி

(1) மருங்கில் கொங்கை கொண்(டு) அனுங்குங் கொடி யிடை காணில் கொடியள் என்(று) அவிர்சடை முடிமேல் கங்கை கொண்டிருந்த கடவுளே! 13-10

## 6. புகழாப் புகழ்ச்சியணி

[பழிப்பதுபோல் புகழ்வது]

(1) மைஞ்ஞின்ற குழலாள் தன் மனந் தரவும் வளை தாராது இஞ்ஞின்ற கோவணவன் இவன் செய்ததியார் செய்தார்? மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு செய்ஞ்ஞன்றியிலன்; கோடைத் திலைலோக்கிய சுந்தரனே 12-4

## 7. மயக்க அணி

(1) கேதகை நிழலைக் குருகென மருவிக் கெண்டைகள் வெருவு சீழ்க் கோட்டூர் 10-9

## 8. முரணணி; முரண்தொடை.

(1) பிறப்பு இறப்பு 1-4
(2) பெருமை சிறுமை 1-4
(3) கரியரே இடந்தான் செய்யரே ஒருபால் 9-3

## 3. அன்மொழித்தொகை

(1) அஞ்சொல் - அழகிய சொல்லை உடைய பெண் 7-7

## 4. ஆகுபெயர்

1. அடையடுத்த ஆகுபெயர்
   (1) மடக்கொடி 28-6
2. இடவாகு பெயர்
   (1) வையம் - (உலகத்தார்) 22-8
3. உவமை ஆகுபெயர்
   (1) தேன் - [தேன் போன்றவனே!] 3-6

4. சினையாகு பெயர்

(1) கொம்பு - மரம் 21 3

5 நாமியாகு பெயர்

(1) கழல் - (பாதம்) 22-6

## 5. ஆறு "ஆ" என குறுகியது

(1) கருதுமா(று) கருதே1-3

(2) விரும்புமா(று) விரும்பே 1-10

(3) வருமா(று) கண்டேன் 27-2

## 6. இசையெச்சம்

(1) "கருவூர் அறைந்த சொல் மாலையால் ஆழிச் செங்கையோ(டு) உலகில் அரசு வீற்றிருந்து இனிப்பதுஞ் சிவனருட் கடலே 13-11

மாலையால் துதிசெய்பவர் என்பது சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும்.

(2) "கருவூரன் தமிழ் மாலை......போற்றிசைப்பார் காந்தாரம்" என்பதன் பின் "இறைவன் திரு அருள் பெறுவார்" என்பதைச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். 12-11

## 7. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(1) காமவேள் 27-5

[புனிதத்] தீர்த்த நீர் 8-8

## 8. உபசர்க்கம்

(1) கைவளைந்தாய் என்பதில் "கை" உபசர்க்கம் 3-6

## 9. உருபு மயக்கம்

(1) அரவினை அஞ்சி - அரவுக்கு அஞ்சி 2-ஆம் வேற்றுமை உருபு 4-ஆம் வேற்றுமைப் பொருளில் 23-6

(2) "எச்சனைந் தலையை" எச்சனது தலையை, 2-ஆம் வேற்றுமை உருபு 6-ஆம் வேற்றுமைப் பொருளில் 4-9

(3) அறிவினுக்கு அறிய அறிவினால் அறிய 4-ஆம் வேற்றுமை உருபு 3 ஆம் வேற்றுமைப் பொருளில் 13-9

(4) "காதல் வைத் தென்னை" "என்னை" என் மேல் அன்பு வைத்து 2-ஆம் வேற்றுமை உருபு 7-ஆம் வேற்றுமைப் பொருளில் 17-8

(5) கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து"-கைக்கு-கையில் 7-ஆம் வேற்றுமைப் பொருளில் 4-ஆம் வேற்றுமை உருபு 18-1

(6) "பொழிலைப் போய்" [பொழிலின் கண் போய்] 2-ஆம் வேற்றுமை உருபு 7-ஆம் வேற்றுமைப் பொருளில்

## 10. எதுகை நோக்கித் திரிதல்

(1) சியர் - சியர் என்பது சீர் என்பதன் திரிபு எதுகை நோக்கித் திரிந்தது 2-1

(2) "நெஞ்சிற் குற்ருய்"—குன்ருய் என்பது எதுகை நோக்கிக் "குற்ருய்" என ஆயிற்று 3-11

[குற்ருய் - குன்ருய் - குன்றுதவனே]

## 11. "என்" வினப் பொருளில்

(1) "என் செய்திட்டீர்" என் - என்ன ? என் : வினு 28-7

## 12. "ஏ" எதிர்மறை

(1) போக்கு வேனே 25-5

## 13. ஒருபொருட் பன்மொழி

(1) மீ மிசை 2-7
(2) சரிவளை 18-1

## 14. ஒருமை பன்மை மயக்கம்

(1) உதர பந்தனம்.........கொண்டன 22-6

## 15. ஓ [எதிர்மறைப் பொருளில்]

(1) ஓ - எதிர்மறை [போக விடுவனே 5-4
(2) பிரியுமா(று) உளதோ 11-7

(3) ஓ. [ஐயவினா]
(1) வளைகள் கொள்வரோ 27-1, 10
(2) சுடரோ; பரிதியோ; மின்னோ; குழவியோ; சிந்துரமோ; திரளோ; ஓகாரங்கள் ஆறும் ஐயம் 7-7

(4) ஓ [அசை]
(1) கான மரோ என்றதே 27-1

(5) ஓ - முறையீடு
(1) "மைந்தனே ஓ என்பர்" 26-9
(2) "சிவபெருமான் ஓ என்னும் 21-3

## 16. குற்றியலிகரம்

(1) குறுகு மாறியான் = குறுகுமாறு + யான் 21-8
(2) போழ்ந்தி யானை 22-4

## 17. போலி

(1) அரையன் [அரசன்] - இடைப் போலி 3-7
(2) பிச்சர் - பித்தர் என்பதன் போலி 4-9
(3) முன்றில் - [இல்முன்] இலக்கணப் போலி 2-9
(4) மைஞ்ஞின்ற; இஞ்ஞின்ற; செய்ஞ்ஞன்றி; மெய்ஞ்ஞன்றி என்பவற்றில் "ந"கரத்திற்கு "ஞ"கரம் இடைப் போலியாக வந்துள்ளது.
(5) மையல் - மயல் என்பதன் போலி 20-4

## 18. குறை [விகாரம்; போலி; மரூஉ முதலிய]

1. இடைக்குறை
(1) எ(ல்)லாம் 22-5
(2) சசி குலா(வு)ம் மவுலி 5-4
(3) சேல் உலா(வு)ம் வயல் 28-1

2. கடைக்குறை
(1) தீங்கோல் வளையார் 20-8
['கோலம்' என்பது 'கோல்' எனக் கடைக்குறை]

(2) அழகா(க) நடம்பயில் 22-6
(3) இனிதா(க) இருப்பாரே 27-11

3. கடைக்குறை ("த"-விட்டிருப்பன)

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(1) அடையா(த) தில்லை 24-10
(2) ஆரு(த) வண்ணம் 11-5
(3) உணரா(த) சூழல் 14-7
(4) ஒவா(த) தில்லை 27-4
(5) கருத மாட்டா(த) எக்கர் 4-8
(6) கூரு(த) வாய் 4-1
(7) பொய்யிலா(த) மெய்யர் 16-10

## 19. விகாரம்

(1) 'ஒட்டங் தந்த' என்பது 'ஒட்டந்த' என விகாரம் 23-2

(2) "நல்லந்தியை ஒண்ணுதல் வைத்தோனே" 23-4 "அந்தீ" என்பது அந்தி எனக் குறுக்கல் விகாரம்.

(3) பால் அளாநீர் - 'அளாவும் என்பது' 'அளாம்' விகாரம் 13-9

ஆக என்பது "ஆ" எனக் குறுக்கம்

(1) நெஞ்சினுள் இனிதா [இனிதா(க)] 1-7

அகரம்தோக்கது

(1) மிக்க + எச்சன் = மிக்கெச்சன் 2-11

தலைக்குறை

(1) கலை - மேகலை 6-9

## 20. மருவு

(1) "ஆடுவை எனினும்" என்பது - "ஆடவேயும்" என மருவி நின்றது 26-3

## 21. சாரியை

(1) மாலையம்பொழுது—அம் - சாரியை 10-6

## சாரியை குறைவு

(1) மனக்கு - மனத்துக்கு - "அத்து" - சாரியை குறைவு 6-3

## 22. துணைவினை

(1) செய்திட்டீர் - [செய்தீர்] இதில் (இடு) என்பது துணைவினை 28-7

## 23. பகுதிப்பொருள் விகுதி

1. 'அது' பகுதிப்பொருள் விகுதி
   (1) எரியதாடும் 23-10
   (2) கொழுந்தது 26-4
   (3) வெண்ணீறது ஆடும் 4.5

2. மை - பகுதிப்பொருள் விகுதி
   (1) பயலைமை 26-4

## 24. வழுவமைதி

"சிவபதங் குறுகி நின்றார்" என்பதில் "நின்றார்" என்று இறந்த காலத்திற் கூறியது. துணிவு பற்றிக் கால வழுவமைதி 11-10

## 25. விகுதிமேல் விகுதி

(1) போமின்கள் - கள் - விகுதிமேல் விகுதி 29-2
(2) வல்லார்கள் - கள் - விகுதிமேல் விகுதி 14-11

## 26. வியங்கோள் வினைமுற்று

(1) பலியிடுக 27-9

## 27. வியப்பிடைச்சொல்

(1) ஆவா 26-10

## 28. விளி

(1) காளாய் 3-3
(2) கொடியேர் இடையீர் - (அண்மை விளி மகடூஉ முன்னிலை) 25-1

## 29. வினைத்தொகை

(1) உகுமணி 2-9

## 30. வினையாலணையும் பெயர்

(1) தொண்டனேன் 2-11

(2) சித்தத்தினேன் 4-1

## 31. வினையெச்சம்

(1) கொட்டா - (கொட்டி) செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் 27-3

(2) பான் - விகுதி. எழில் காண்பான் ஒலிடவும் 12-7

(3) காண்பான் எம்பலித் திருக்க 14-2

## 32. வேற்றுமை

வேற்றுமைத்தொகை

தாய்மொழி 7-11

## 33. ஆறும் வேற்றுமை

அ - உனகழல் இணை 1-7

உன பணி பல 26-9

## 34. ஏழாம் வேற்றுமை

1. அகம்

(1) தன்னகம் மழலைச் சிலம்பு 10-8

2. இடை

(1) துறக்கத் திடை 28-10

(2) நுன்னிடை ஒடுங்க 13-9

3. இல்

தெருவில் கெழுவு கம்பலை 10-6

4. உள்

சிற்றம்பலத்துள் 25-3

5. ஊடு

வீதியூடு 26-3

6. கீழ்

(1) ஆலின் கீழ் 1-8

(2) திருவடி நிழற் கீழ் 5-6

7. தலை

செய்த் தலைக் கமலம் 23-5

8. திசை

மேல் திசை 22-7

9. பால்

(1) உன் பாலே விழுந் தொழிந்தேன் 12-1

(2) நின் பாலே 12-5

10. மிசை

புலித்தோல் மிசை 22-4

11. மேல்

(1) அமளி மேல் 24-3

(2) சடை மேல் திங்கள் 24-5

12. வாய்

(1) கங்குல் வாய்...... மாமொலி 16-4

(2) புனல் வாய் மலர் 22-7

# கூ. பிறபொருட் பகுதி

## 1. அக்கினி [1]

(தலைப்பு 103 பார்க்க.)

## 2. அடியார் [2]

[சிவபிராற் பகுதியில் சிவனடியார் என்னும் தலைப்பு பார்க்க.]

அடியார், அன்பினர், சேடர்.

## 3. அடியார் அல்லாதார் [3]

(சிவபிராற் பகுதியில் தலைப்பு 34 பார்க்க.)

## 4. அடுக்குச் சொற்கள் [4]

அம்மம்ம, ஆரார், இரந்திரந்து, என்று என்று, கண்டு கண்டு, குடி குடி, சென்று சென்று, திசை திசை, நோக்கி நோக்கி, மீண்டும் மீண்டும், வந்து வந்து, விம்மி, விம்மி,

பிற ஒளிநெறியிற் காண்க.

## 5. அண்டம் [5]

அண்டங்கள் அனைத்தும், அண்டங்கடந்த பொருள்.

அண்டமோர் அணுவாய்; அண்டவாணு; பிற ஒளி நெறியிற் காண்க.

## 6. அணு [6]

அணுவோர் அண்டமாய்.

## 7. அந்தம் [7]

அந்தமில் ஆனந்தம்.

## 8. அமுதம் [8]

(சிவன் தன்மை 161 (2) பார்க்க)

அகவுயிர்க்கு அமுது. அமுதம் ஊறிய தமிழ்மாலை. ஆரமுது; ஆரா அமுதம்; இன்னமுது.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 9. அயிராவணம் [9]

[சிவலோகத்து யானை.]

மதமும் மிடாபோன்ற வயிறும் கொண்ட யானையை யுடைய சிவபிரான்.

## 10. அரக்கர்: அசுரர் [10]

(1) **சிறப்பு :**—இராவணன்.

[சிவனும் இராவணனும் சிவபிராற் பகுதியில் தலைப்பு 74 பார்க்க]

(2) **கனகன் :**—(இரண்யாசுரன்)

(3) திரிபுராதிகள்:

மூகாசுரன் (பன்றியாய் வந்தவன்)

[விசயனும் சிவனும் தலைப்பு 143 பார்க்க.]

(2) **பொது**

(1) அசுரர், அவுணர், நிசிசரர்.

## 11. அரங்கு [11]

நடனம் ஆடும் மேடை

## 12. அரசர்—அரசு [12]

இமவான்; இலங்கையர்கோன்; களிற்று அரசு, குடை கெழு நிருபர்; கோழிவேந்தன்; சிலந்தியை அரசாள்க வென்று அருள் செய்த தேவ தேவீசன்; செங்கோற் சோழன்; செம்பியன்; தஞ்சையர்கோன்; தென்னன்; மலையான்; வெங்கோல் வேந்தன் தென்னன்.

## 13. அருள் [13]

["சிவபிராற் பகுதியில் சிவனும் அருளும்" என்னும் தலைப்பு 36 பார்க்க.]

## 14 அறம் [14]

* சட்டறம்.

---

* சட்டறம் – (ஷட் அறம்) அறுவகைப் புண்ணியச் செயல்கள். அவை ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன.

## 15. அறிவு [15]

அறிவுடையார்; அறிவு நூல்; ஆரும் பெறாத அறிவு;
பிற ஒளிநெறியிற் காண்க.

## 16. அன்பு [16]

அன்பு தா! என்று உன் சேவடி பார்த்திருந்து அலச;
ஆறாத பேரன்பு.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 17. ஆசை [17]

நெஞ்சம் அருள் பெற அலமரும் ஆதலால் ஆசையை அளவறுத்தவர் யார் இங்கு உள்ளார்? யாரும் இல்லை என்றபடி.

## 18. ஆடை [18]

கொடியின் ஆடை.

[சிவபிரான் "ஆடை" என்னும் தலைப்பு 19 பார்க்க.]

## 19. ஆவா [20]

ஆவா - ஐயோ (இரக்கக் குறிப்பு). "ஐயோ! தனது நெஞ்சை இழந்தனள்."

பிற ஒளிநெறியிற் காண்க.

## 20. ஆறு [21]

(1) சிறப்பு

(1) அரிசில் (2) கங்கை;

கங்கை, அரிசில் எனப்படும் ஆறுகளின் கரையில் இரண்டு பக்கத்திலும் பொழில்கள் உள.

சிவனுடைய சடையில் கங்கை உள்ளது.

(3) நிவாநதி:—இந்த ஆற்றில் சந்தனம், அகில், மயிற் பீலிகள் முதலியன அடித்துக் கொண்டுவரும். அந்நதியின் கரையில் தில்லை (சிதம்பரம்) உளது.

(4) பொன்னி:—(காவிரி) இந்த ஆற்றின் தென் கரையில் சாந்தையூர் (திரு ஆவடுதுறை) இருக்கின்றது.

(5) வடவாறு:—இந்த ஆற்று நீரில் செல்லும் மதகில் வாழ்கின்ற முதலைகள் வாரி எறிகின்ற நீரையுடைய அகழியோடு கூடிய மதில்கள் சூழ்ந்த தஞ்சை.

(6) வைகை:—மருது, அரசு, கோங்கு, அகில் ஆகிய மரங்களை அடித்துக்கொண்டு வருவது வைகை ஆறு. இவ்வாற்றங் கரையில் திருப்பூவணம் என்னும் தலம் உளது.

(2) பொது

[நீர்நிலை தலைப்பு 122 பார்க்க.]

## 21. ஆனந்தம் [22]

முடிவு இல்லாத பேரானந்தத்தைப் பெற்ற சேந்தன்.

## 22. இசைப்பண் [23]

(1) ஆரூர் நம்பி (சுந்தரர்) இசைபாட குழகன் ஆடுவார்.

(2) தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்.

(3) வாசமலர்களில் இருந்து வண்டுகள் பண்பஞ்சமத்தில் (ஆகிரி ராகத்தில்) இசை எழுப்பும்.

காந்தாரப் பண்ணில் கருவூரர் பாடிய தமிழ்மாலை.

மந்திர கீதம் இனிய குழலில் எங்கும் கேட்கப்படும் திருவிடைமருதூர்.

வீணையிடம் கீதம் கின்னரர் ஒலியுடன் கலந்து ஒலிக்கும் இடம் திருவிடைமருதூர்.

## 23. இந்திரன் [24]

(1) அமரர் தம் தலைவன்.

(2) அமரர்பதி.

(3) அழகிய சொர்க்க லோகத்தை ஆளும் இந்திரன்.

(4) பெருமானைக் காண தேவர் கூட்டத்தில் வந்தவர்கள் நாராயணன், பிரமன், அக்கினி, இந்திரன் முதலானோர்.

## 24. இந்திரசாலம் [25]

பொய்த் தெய்வங்கள் நெறியானது இந்திரசாலத்தை ஒக்கும்.

## 25. இரவு [26]

இரவு என்னை (தலைவி) பகைக்க, நான் வாழ்கின்றேன்; தோழி நீ துணை இருக்க இரவுப் பொழுதைக் கழிக்கின்றேன். இரவின் இருட்டை விலக்கக் கணக்கற்ற பலகணிகளின் பக்கத்தில் விளக்குகள் எரிந்தன.

## 26 இருள் [27]

இருளில் நடம் புரிவர் பெருமான்.

அஞ்ஞான இருளைத் துடைப்பர் பெருமான். பெருமானின் கழுத்து இருள நிறத்தது. பிறப்பு இருண்ட மாயமானது. நடு யாமத்தில கணக்கற்ற மக்கள் உறங்குவர். ஒளி வீசும் மணிகள் இருட்டை விலக்கும்.

பேய்க் கூட்டங்கள் நடு யாமத்தில் இருளில் எழுந்து ஆடும்.

## 27. இலக்குமி [28]

வேத மொழிகளைப் பிதற்றும் பித்தனாகிய நான் (கருவூரன்) பாடிய பாடல்கள் முத்தி தரும் என்று உலகோர் போற்றினால் இலக்குமி முகம் மலர்ந்து அவர்களை எதிர் கொள்வாள்.

சிவன் மருமகனாகிய மன்மதனுக்குத் தாய் இலக்குமி.

## 28. இறப்பு [29]

பிறப்பு - தளிர் இறப்பு - இலை உதிர்வு.

## 29. இனச்சொல் [30]

அல்லாய்ப் பகலாய், இரவு போம் பகல் வரும், நோய் பிணி, பாடியும் ஆடியும், பிறப்பு, இறப்பு, போம் வரும், இவை இனச் சொற்களாம்.

## 30. உடல் (மெய்) [31]

(1) ஏமனுடைய உடலவியக் கொன்றார் பெருமான்.

(2) தக்கன் வேள்வியை நாங்கள் செய்து முடிப்போம் என்று எண்ணி வந்த தேவர்கள் எழுந்து ஓடி அழிந்தவாறு

இருக்கின்றது. உடலின் பயன்; வினைக்கு ஈடானது உடல். தியானம் செய்யாத உடல் நீங்கும்படி செய்து என்னை ஆண்டார் பெருமான்.

## 31. உணர்வு [32]

(சிவன் தன்மை சிவபிராற் பகுதியில்)
தலைப்பு *161* (*16*) பார்க்க)

உணர்ச்சிகள் (இறை அறிவுடன்) கலந்து சிவமயமே ஆகிப் (பல நலங்களைச்) செய்வதாகிய ஐந்தெழுத்தை இடைவிடாமல் செபித்துப் பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன்.

(என்பர் திருமாளிகைத் தேவர்)

## 32. உயிர் (ஆவி - மூச்சு) [33]

[சிவபிராற் பகுதியில் தலைப்பு *16* (*17*) பார்க்க]

அக உயிர், ஆருயிர், ஆருயிர்க் காவலிங்கு அருமை, ஆருயிர் மேல் பந்தம பிரிய, ஆவிக்கு அமுதை, ஆவியின் பரம் என்றன் ஆதரவு, ஆவியின் வருத்தம் இதாரறிவார், உயிர்மேல் அருள் சொரிதரும் உமாபதி, உன்னடிக் கீழ தென்னுயிர், என்னுயிராண்டகோ, என்னுயிர் காவல் கொண்டிருந்த எந்தாய், சீருயிரே! எங்கள் தில்லை வாணா; பூம்புனல் பொதிந்து உயிர் அளிக்கும்

[பிற ஒளிநெறியிற் காண்க.]

## 33. உலகம் [34]

[பஞ்சபூதம் என்னும் தலைப்பில் மண் என்னும்
தலைப்பு *128-1* பார்க்க].

பரவை சூழ் அகலம், அருள் பெறின் அகலிடத் திருக் கலசம், அவனிச் சிவலோகம், இந்திர லோகம், அகலோகம், சிவலோகம் ஆவதுவுந் தில்லைச் சிற்றம்பலமே, நவலோக நாயகன், புவலோக நெறி, *(புவர்லோகம்), அமருலகம் (அமரர் உலகம்), உலகாய் அல்லையானை, உலகெலாம்

---

* இது மேலுலகம் ஏழிலும் முதலாவது.

படைத்த தனி முழுமுதல், களிவானுலகு, தொல், உலகு முழுதுலகு, மூவுலகு, வானுலகு, ஞாலம், பார், புவனி, புவி, பூதலம், மண், விசும்பு. விண், வையம் இவை உலகைக் குறிப்பன.

[பிற ஒளிநெறியிற் காண்க.]

## 34. உலோகம் [35]

வெள்ளி, பொன்

## 35. உவமை [36]

கனை அனைய செல்வம், ஆலையம் பாகின் அனைய சொல், உம்பர் நாடு இம்பர் விளங்கியாங்கு, என் மனம் தழல் மெழுகு ஒக்கின்றதே, கதிர்போல் ஒளிர், மாமணி, கரியும் நீருடுங் கனலு மொத்தொளிரும் கழுத்து, கருந்தட மலர் புரை கண்ட, கன்று பிரிகற்றுப் போல கதறு வித்தி, கார் புரையுங் கறைக் கண்டன், குமுதமே திருவாய், குவளையே களபம், செந்தழல் புரைமேனி, செந்தீப்பட்ட இட்டிகைபோல், செழுநீர்க் கிடையன்னார், துடியிடை, பங்கயம் புரைமுகம், பவளவாய், பால்நேர் பாடல், பாலளா நீர்போல் பாவம்........ பாலனைய புண்ணியம், பிறப்பு இன் தளிர் இறப்(பு) இலை உதிர்வு, பிறவிப் பௌவம்; மலை குடைந்தனைய நெடு நிலை மாடம், மறையவர் மறையோத்து அலைகடல் முழங்கும், வரை செய் மாமதில், வளர் பொன் மலையுள், வயிரம் போல்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 36. உவமை உருபு [37]

(1) அன்றே :—கமல நீர் பொருந்தாத் தன்மை யன்றே.

(2) அன்ன :—மதியம் பயில் கொழுந்தன்ன பல்லவம்.

(3) அனைய : —மைக்கடா அனைய என்னை.

(4) ஆங்கு :—பசுங்கலன் விசும்பின் இன் துளி பட நனைந்(து) உருகி அழலை யாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்கு.

(5) என :—செழுஞ் சுடர் விளக்கம் கலந்தெனக் கலந்துணர் கருவூர்.

(6) ஏய்ப்ப :—தூண்டு விளக்கேய்ப்ப.

(7) ஒத்து:—இந்தன விலங்கல் எரி புனந் தீப்பட்டு எரிவ தொத்து எழுநிலை மாடம் அந்தணர் அழலோம்பு....களந்தை.

(8) செய :—விலங்கல் செய் நாடக சாலை.

(9) நவில் :—கல் நவில் மனம்.

(10) புரை :—செந்தழல் புரை மேனி.

(11) புரைதரு :—கூத்தன் மணி புரைதரு திரண்ட வான் குறங்கு.

(12) புரையும் :—கார் புரையுங் கறைக்கண்டன்.

(13) போல் :—கோதைமார் குயில் போல் மிழற்றிய.

(14) போல :—கனகம் போல யாவையுமாய்.

(15) போலும் :—பொன்னார் குன்றம் ஒன்று வந்து நின்றது போலும்.

## 37. உறவு [38]

அப்பன், அன்னை, உடன் பிறந்தார், கணவன், சனகன், சுற்றம், தந்தை, தம்பி (இளங்காளை), தமர், தாய், தேவி, மனைவி, தோழன், நற்றாய், புதல்வன், மகள், மகன், மருகன், மருமகன், மாமன் இவை கூறப்பட்டுள.

## 38. ஊண் [39]

உண்ட ஊண் உனக்காம் வகை எனதுள்ளம் உள் கலந்(து) எழு பரஞ்சோதி.

## 39. ஊர் [40]

(1) சிறப்பு :—ஆரூர், (திரு) ஆவடுதுறை, (திரு) இடைக் கழி, கங்கைகொண்டசோளேச்சரம், கருவூர், (திருக்) களந்தையாதித்தேச்சரம், காழி (சீகாழி), கீழ்க்கோட்டூர் மணியம்பலம்; *கோழி (உறையூர்), (திருச்) சாட்டியக்குடி, தஞ்சை, (திரு) ஆரூர், (திரு) இடை மருதூர், (திரு) வீழி மிழலை, திரைலோக்கிய சுந்தரம், தில்லை (கோயில்), பிடவூர்,

* கோழியூர் எனப் பெயர் வந்த காரணம் வரலாறு பார்க்க

(திருப்) பூவணம், மயிலை (மாயூரம்), (திரு) முகத்தலை, * திருவாலி.

(2) **பொது** :—ஊரும் உலகும்.

## 40. எண்ணுந் தொகையும் [41]

ஒன்று, ஓர், இரண்டு, அடியிணை இரண்டு, நாட்டமிரண்டு.

**மூன்று** :— எயில்கள் மூன்று, புரமூன்று, †கழல்மூன்று, மூவுலகில்.

**நான்கு** :—நான்கு ஆரணம், மறைகள் நான்கு.

**ஐந்து** :—அஞ்சு வேள்வி, ஆனைஞ்சு, ஐந்தலை நாகம்.

**ஆறு** :—ஆறங்கம்.

**ஏழு** :—‡ஏழு கைத்தலம்,

**எட்டு** :— எண் திக்கு, அட்ட மூர்த்தி

**பத்து** :—தமிழ் மாலை இருநான்கு இரண்டு, தமிழ் மாலை ......பத்து, பாவணத் தமிழ்கள் பத்து.

**பன்னிரண்டு** :—பன்னிரு நயனத்து அறுமுகத்து அமுது.

**இருபது** :—இலங்கை வேந்தன் இருபது தோள்.

**ஐந்நூறு** :—ஐந்நூறு அந்தணர்கள் ஏத்துகின்ற திருவீழி மிழலை ஈசர்.

**ஆயிரம்** :—முக்கண்கள் ஆயிரம் சூரியர்களின் ஒளி உள்ளதும், திருமுகம், திருக்கரம், திருவடி ஆகியவை ஆயிரம் தாமரைபோல் உள்ளதுமாய் விளங்குவர் இறைவர்.

சாந்தை (திருவாவடுதுறை) மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர் (அந்தணர்) இருந்தனர்.

---

* சீகாழிக்குக் கிழக்கே அருகில் உள்ளது ஆலி நாடு. அதன் தலைமையூர் திருவாலி.

† அக்கினி தேவனுக்கு மூன்று கால்.

‡ இருமுகம், கால் மூன்று, ஏழுகை இது அக்கினிதேவன் திரு உருவாகும்.

பேர்கள் (சிவனது திருநாமங்கள்) ஆயிரம் நூறாயிரம் ஆக செபிக்கும் தன்மை உடையவர்கள்.

**மூவாயிரம்** :—வேள்வி செய்யும் உயர்நிலை உடையவர் மூவாயிரவர்.

முத்தீ வளர்க்கும் நான்மறையாளர் மூவாயிரவர்.

வேதம் ஓதும் மேம்பாடு உடையவர் மூவாயிரவர்.

**நூறாயிரம்** :— நூறாயிரம் சூரியரை ஒப்பார் தில்லைச் சொக்கர்.

**கோடி** :—கணக்கற்ற பல்கோடி திருவடி, முடிகள், தோள்கள், திரு உருவம், திருப்பெயர், கண், முகம், இயல்பு, குணம் இவைகளை உடையவர் பெருமான்.

நூறு நூறாயிரகோடி அண்டங்களிலுள்ள தேவர்களுக்குத் தலைவன் சிவபெருமான்.

**சில** :—மாறி மாறி வருகின்ற பிறவிகள் எடுக்கும் சிறு தெய்வங்களை அடையும் வழிகள்.

**பல்** :—பசு பாசம் நீக்கிய பல் முனிவர்.

**பலர்** :—பழ அடியார் பலர்.

## 41. எதிர்மொழிகள் [42]

அடி × முடி; அண்டம் × அணு; அருவாய் × உருவாய், அல்லாய் × பகலாய்; இரவு × பகல்; எளியர் × அரியர்; கொண்டும் × கொடுத்தும்; தொண்டர் × மிண்டர்; பண்டும் × இன்றும்; பந்தம் × பிரிவு; பாரும் × விசும்பும்; பாவம் × புண்ணியம்; பிறப்பு × இறப்பு; புகுந்தன × போந்தன; பெண் × ஆண்; பெருமை × சிறுமை; மண் × விண்; முன்பு × பின்பு. இவை போல்வன பிறவற்றை ஒளிநெறியிற் காண்க.

## 42. எதுகையில் வரும் சொற்கள் [43]

அணி, ஆண்ட, உமிழ், நாயகன், லோகம், வளர்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 43. ஐம்புலன் [44]

என்னுடன் பிறந்த ஐவரும் (ஐம்புலன்களும்) எனக்குப் பகையாயிருக்கின்றனர். இந்த ஐவரும் கள்ளர்.

### 44. ஒலியும்; ஒலிக்குறிப்பும் [45]

ஏத்தொலி, ஓத்தின் (வேதத்தின்), பேரொலி; கடலொலி, குழலொலி, கூத்தொலி, சிலம்பொலி, மடந்தையர் தம் முழங்கொலியும், வழங்கொலியும், யாழொலி, விழவொலி, இவை கூறப்பட்டுள்ளன.

ஒலிக்குறிப்பு :—வண்டுகள் "பொம்" மென்று முரலும், "தெத்தே," "தென்ன" என்று பாடும்.

### 45. ஒளி - கதிர் - சுடர் - சோதி : [46]

அணியுமிழ் சோதி, அம் கழற் சுடர், அலர் கதிர், அழலொளிவிளக்கு, இரவிக் கதிர், கதிர்வேல், உள்ளொளி விளக்கு, எங்கும் எஞ்ஞான்றும், ஒழிவற நிறைந்த ஒண்சுடரே! பேரொளி; ஒளிவளர் விளக்கு, செஞ்சோதி மண்டலம், தூய நற்சோதியுட் சோதி; பரமாய பரஞ்சுடர்; வான்சுடர்.

பிற ஒளிநெறியிற் காண்க.

### 46. ஒன்று [47]

உலப்பிலா ஒன்று, ஏத்தும் ஒன்று.

### 47. ஓர் [48]

ஓர் எருது; ஓர் கரும்பு.

### 48. கங்கை (ஆறு) [49]

ஆறணி சடை

### 49. கங்கை (தேவி) [50]

கங்கை நங்கை.

பிற ஒளிநெறியிற் காண்க.

### 50. கடல் [51]

அருட் கடல்; அலை கடல், ஆழியும் திரையும், உவரிமா கடல்; கருணைக் கடல்; குணக்கடல், *திரைவந்துலவும் தில்லை; பாசக் கடல், பாற்கடல், [பௌவம்-கடல்] வேலையார் விடம் [வேலை-கடல்]

பிற ஒளிநெறியிற் காண்க.

---

* இதனால் ஆசிரியர் திருவாலி யமுதனார் காலத்தில் 10ஆம் நூற்றாண்டில் கடல் தில்லைக்கு (சிதம்பரத்துக்கு) அருகில் இருந்தது என்பது தெரிகின்றது.

## 51. கணம் [52]

அமரர் கணம்; காடாடு பல்கணம்; சித்தர் கணம்; பூத கணம்; பேய்க் கணம்; வானவர் கணங்கள்.

## 52. கப்பல் [53]

*வங்கம் - சீர் வங்கம் வந்தணவுந் தில்லை.

## 53. கரும்பு [53A]

வாளை மீன் தாமரையைக் கரும்பினுடன் உண்ணும்.

## 54. கலாம் [54]

ஐம்புலன்கள் என்னொடு செய்யும் கலாம் வேதனை முழுதும் ஒழிய.

## 55. கலை [55]

கலைகள் தம் பொருள், பொருட் கலை.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 56. கற்பகம் [56]

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி, கற்பகக் கொழுந்து, கற்பகப் பொழில், இறைவன் கரவாத கற்பகன்.

## 57. கழு [57]

அக்கழு அனைய செல்வம்.

## 58. கனி [58]

[சிவபிராற் பகுதியில் சிவன் தன்மை
தலைப்பு 15 (25) பார்க்க.]

ஆனந்தக் கனி, இனிய தீங்கனி, கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி, செங்கனி, விழுங்கு தீங்கனி.

பிற ஒளிநெறியிற் காண்க.

---

* இதனால் தில்லை (சிதம்பரம்) கடற்கரைத் தலம் என்பது தெரிகின்றது. "கடல்" என்னும் தலைப்பின் * அடிக்குறிப்புப் பார்க்க.

## 59. காடு [59]

எரி தரு கரிகாடு, கழுதுறு கரிகாடு, காடாடு பல் கணஞ் சுடுகாடு, கான், மயானம்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 60. காமம் [60]

[விரக தாபத்தை வளர்ப்பன]

தென்றல், அன்றில் பறவை, சந்திரன், இரவு, கடல், குழல், மாட்டுக் கழுத்து மணி.

## 61. காமன் [61]

[சிவபிரான் பகுதியில் "அட்டவீரம் என்னும் தலைப்பு 2 (1) பார்க்க]

காமன் அழியும்படி கண்ணால் பார்த்தார் இறைவன். காமனுடைய தாய் திருமகள் காமனையும், புரத்தையும் அழித்தார் பெருமான். சிவபெருமானுடைய மருமகன் காமன்.

தில்லையில் அழகிய தாண்டவம் செய்யும் வகையைக் கண்டதால், காமன என் பக்கத்தில் ஓடிவந்து செலுத்தும் மலர் அம்புகள் என் மேல் தைக்குந் தோறும் நான் வேதனைப் பட்டேன்.

காமனுடைய அடாத செயலைத் தடுத்து அழித்தவர் பெருமான்.

## 62. காலம் [62]

அன்று, இன்று, என்று, ஊழி, ஒருகால், ஒரு நாள், காலம், சில்லாண்டு, பல்லாண்டு, போது, மாலை, பகல், யாமம், வேனல், [இளவேனிற் காலம்]

## 63. காலன் [63]

அந்தகன், காலன், கூற்றம்.

## 64. கிடங்கு [64]

பொழில் சூழ்ந்த அகழி.

## 65. குங்குமம் [65]

இளங் கொங்கையில் உள்ள குங்குமம் (எவ்வாறு வசீகரம் செய்யுமோ அவ்வாறு) திருநீறு அணிந்தவர்கள் மார்பு (அடியார்களை வசீகரம் செய்யும்).

## 66. குடை [66]

குடையைக் கொண்ட அரசர்.

## 67. குழாம் [67]

(1) கூட்டங் கூட்டமாய்ப் பெருகி.

(2) திருமணத்திற் சிவ குடும்பத்துக்குப் பெண்ணைக் கொடுத்தும, சிவ குடும்பத்தில் பெண்ணைக் கொண்டும், ஈசனுக்கு ஆளாகுங்கள.

(3) தேர் வீதியில் தேவருடைய கூட்டங்கள் எங்கும் நிறைந்து இருந்தனர்.

## 68. குறி [68]

குணங்குறி கடந்த குணத்தினர் பெருமான்.

வேதாந்த நிதிநிலைக்குறியினர் அவர். நெறியில் நிற்பவர் நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக்குறியினர் அவர்.

## 69. கூத்து [69]

கூத்தொலி, ஏத்தொலி, தெய்வக் கூத்து, தெருவில் கூத்தொலி.

## 70. கொடி [70]

வெல் கொடியான் ஆடை, கோழிக்கொடி, வெண்கொடி, வெல் கொடி இவைவக் கூறப்பட்டுளது.

## 71 கோயில் [71]

அருள் செய்வான் கோயில், இருட் பிழம்(பு) அற எறி கோயில், என் நெடுங் கோயில் நெஞ்சு, பரமர்தங் கோயில் திருவளர் திருச்சிற்றம்பலம் பூதலத்தார் வணங்கும் பொற் கோயில், வமபுலாங் கோயில் [வம்பு,-புதுமை தெய்வ மணம்] இவை கூறப்பட்டுள்ளன.

## 72. கோலம் [72]

கோல மலர், கோலமே.

## 73. சங்கு [73]

சங்கம் (சங்கு வளையல்) செய்ய கோடு (அழகிய) சங்குகள் கோடு-சங்கு.

## 74. சந்திரன் [74]

அம்புலி, இந்து, சசி, திங்கள், நிலா, பிறை, மதி, மதியம் இவை சந்திரனைக் குறிப்பன.

சந்திரனுடைய அடாத செயலைத் தடுத்து அழித்தனர் பெருமான்.

இளநிலா, கதிர் நிலா, தண்நிலாக்கோலச் செஞ்சடை உடையவர் பெருமான். அந்தியிற் பிறைசேர் அழகியர் பெருமான். இளம் பிறைச் செஞ்சடையர் பெருமான். துண்ட வெண் பிறையர் பெருமான். முளை வெண்மதி சூடியவர் பெருமான்.

தீண்டுகின்ற நீண்ட மாளிகை சூழ் நெடுநிலை மாடம். பிறை தவழ்கின்ற பொழில்.

தேய்ந்து, மெய்வெளுத்து அகம வளைநது தான் பாம்புக்கு அஞ்சுகின்ற போதிலும் காய்ந்து வந்து என்மீது எரியத் தாவுகின்றது இந்நிலா.

## 75. சமணர், புத்தர், தேரர் [75]

சிற்றம்பலக் கூத்தரை அறிவீனம் உள்ள சமணரும், தேரரும் நினைக்கமாட்டார்கள்

## 76. சமயம் [76]

ஆராய்ச்சி இல்லாத புறச்சமயத்தை அனுட்டிப்பவர்.

## 77. சாதி [77]

குறத்தி.

## 78. சித்தர் [78]

சித்தர் கூட்டம் நெருங்கிச் சேரும் தில்லை. (சிற்றம்பலம்)

## 79. சினம் [79]

மிக்க கோபம் உடைய பெரிய இடபம். (காய்சின மால் விடை)

## 80. சீர் [80]

ஒள்ளொளியின் நடுவே உருவாய்ப் பரந்தோங்கிய சீர், சீரணிமணி திகழ் மாடம், சீரான் மல்கு தில்லை, சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ் ஆரும் பெறாத அறிவு பெற்றேன்.

## 81. சுவை [81]

(1) இகழ்ச்சிச் சுவை :—(அருவருப்புச்சுவை)

இப்பெண் தனது மனத்தை இவனுக்குக் கொடுக்கவும் இவளுடைய வளையல்களை இவளுக்குக் கொடுக்காமல் இவ்விடத்தே நின்ற கோவணாண்டியும் கோட்டூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய அடிகளுமாகிய இவன் செய்த செயலை யாவர் இதற்கு முன் செய்தனர்?

[ஒருவரும் இல்லை] 12-4

(2) இரக்கச் சுவை:— திரைலோக்கிய சுந்தரனே

நீ வாராவிட்டாலும் இந்த ஏழைப் பெண் உன்னிடம் வந்து வீழ்ந்து கண்ணீர் சொரிகின்றாள். இது தெரிந்திருந்தும் நீ அவளுக்கு அருள் செய்கின்றாய் இல்லை. 12-5

திரைலோக்கிய சுந்தரனே! உருகாத மனத்தினை உடைய என்னை உருகுவிக்கும் பொருட்டு, ஐயா! நீ இத்தெருவின் வழியே உலாப் போந்த அன்று முதல் இன்று வரை கைகள் கொண்டு தொழுது, கண்களில் அருவி நீர் பாய்ந்தாலும் நீ அருள் செய்யமாட்டாயா? 12-2

(3) பெருமிதச் சுவை:—(1) திருப்பூவணத்துப் பெருமானே! வேதமும் அறியமுடியாத சூழலில் புக்கு ஒளித்த நீ இன்று கல்மனத்தை உடைய எனது கண்களிற் படும் இந்தக் கருணையை விடப் பெரியது உளதோ? (இல்லை என்றபடி.)

(2) பன்னெடுங் காலமாகப் பணி செய்த பழைய அடியார்கள் பலர் தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருமானே! உன் திரு அருளைப் பெற வருந்திக் காத்திருக்க நீ என் நெஞ்சக் கோயிலில் புகுந்து விற்றிருக்கும் எளிமையை நான் என்றும் மறக்கேன்.

## 82. சூரியன் [82]

அருக்கன், இரவி, கதிர், ஞாயிறு, பருதி, பகலோன். மண்டலம், இவை சூரியனைக் குறிப்பன.

சூரியனுக்குச் சமமாக ஒளி விளங்குகின்ற மாளிகைகள்,

அழகிய திருவடி ஒளி பொருந்திய அன்பர்கட்கு இள வேனிற் காலத்தில் உதித்த சூரியனைப்போல் வாழ்விக்கும் தன்மையை உடையவர் பெருமான்.

உலகத்திலுள்ள இருளைப் போக்குகின்ற சூரியனைப் போல உயிர்களின் அஞ்ஞான இருளைப் போக்கி அருள் புரிவார் பெருமான்.

ஒரு சூரியனுடைய பல்லைத் தகர்த்தார். பிறிதொரு சூரியனுடைய கண்ணைப் பறித்தார் பெருமான்.

## 83. சூழல் [83]

ஆரணம் உணராச் சூழல், கண்ணியல் மணியின் சூழல், தண்டலைச் சூழல், பொய்கையங் கழுநீர்ச் சூழல், இவை கூறப்பட்டுள்ளன.

## 84. செல்வம் [84]

செல்வம் கனைப் போன்றது.

## 85. சேவின் மணி [85]

விரக தாபம் உடைய தலைவிக்குப் [சேவின் மணி மாட்டின் கழுத்தின் மணி ஓசை] பகை செய்யும் தாபத்தை அதிகமாக்கும். மாடுகள் மேய்ந்தபின் வரும் வேளை மாலைக் காலம் ஆதலின்.

## 86. சைவம் [86]

சிவத்தின் தன்மையை விளக்கும் பெருமானுடைய சடைகள்.

## 87. சொல் (பதம்) மொழி

அமுத மொழி, ஆரா இன் சொல், ஆலயம் பாகின் அனைய சொல், தம்பானை சாய்ப்பற்றார் என்னும் *முது சொல்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 88. சொல் அழகு [88]

அணுகி நுணுகியுள் கலந்தோன் ஆவண வீதிப் பூவணங் கோயில் கொண்டாயே நின தொண்டர் முக மலர்ந்து இருகணீர் அரும்பக் கைகள் மொட்டிக்கும் என் கொலோ? கங்கை கொண்ட சோளேச்சரத்தானே! மடந்தையர் தம் முழங்கொலியும், வழங்கொலியும்.

## 89. ஞானம் [89]

[சிவபிராற் பகுதியில் 'சிவனும் ஞானமும்'' என்னும் தலைப்பு 52 பார்க்க]

## 90 தமிழ் [90]

அமுதம் ஊறிய தமிழ், அருந் தமிழ், இன்தமிழ், கரும்பனைய தீந்தமிழ், தமிழ்கள், தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம், தீந்தமிழ், தென்னன் தமிழ், பழுத்த செந்தமிழ், பாவணத் தமிழ், பாவார்ந்த தமிழ்

## 91. தமிழ் மாலை [91]

அமுதம் ஊறிய தமிழ் மாலை, அருந்தமிழ் மாலை, கருவூர் தம் கரும்பனைய தீந்தமிழ் மாலை, தீந்தமிழ் மாலை, பாவணத் தமிழ்மாலை.

## 92. தவம் [92]

பல் கோடி செடியுந் தவத்தோர் [பல கோடிக்கணக்கான குற்றம் பொருந்திய தவத்தோர்.]

---

* முதுசொல் - பழமொழி.

## 93. தனம் [93]

அமுதை எனது பேரன்பாகிய செல்வமாம் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோமாக.

## 94. தானியம் [94]

செஞ்சாலி (செந்நெல்), செந்நெற் கழனி, பழனங் குழைத்த செஞ்சாலி.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 95. திசை (திக்கு) [95]

எண் திக்கு, எண் திசை, திசைகள் எங்கும் பெயர் போன கீர்த்தியை உடைய தில்லை. தேவருடைய கூட்டம் திக்குகள் அனைத்தும் நிறைந்து இருந்தது.

## 96. திருநீறு [96]

[சிவபிராற் பகுதியில் 5 (9) பார்க்க.]

அணி நீறு, திருநீறு, வெண்ணீறு கூறப்பட்டுள்ளது.

உணர்ச்சிகள் (இறை அறிவுடன்) கலந்து, பல நலங்களைச் செய்வதாகிய திரு ஐந்தெழுத்தை இடைவிடாமல் செபித்து உடற் பிணியும், உயிர்ப் பிணியும் நீங்கும் பொருட்டு திரு வெண்ணீற்றை அணியும் பேற்றைப் பெற்றேன். திருநீறு இடாத உருவை நான் தீண்ட மாட்டேன். (என ஒரு தலைவி சொல்கின்றாள்) தீயன அழியும்படி வெண்ணீறு அணிதல் வேண்டும். பனி படர்ந்த தோற்றத்தைக் கொடுக்கும் ஒளிதரு திருநீறு. வெண்ணீறு அணியும் (பாக்கியத்தைப்) பெற்றேன.

நீறணிந்த பவளக் குன்றம்போல் இருப்பர் பரமன்.

## 97. திருமால் [97]

[சிவபிராற் பகுதியில் "சிவனும் திருமாலும்" என்னும் தலைப்பு 54, 53 பார்க்க.]

*குன்றேந்தி நாரணன், நாராயணன், நெடியான், பாம் பணையான், புயல்வணன், மால், கார்நிற மால், செங்கண் மால், திருநெடு மால், திருமால் இவை திருமாலைக் குறிப்பன.

நாரணன் பரவும் திருவடி உடையவர் பெருமான். †மேக வண்ணத்தை உடைய திருமாலைப் பொன்னெடுஞ் சிவிகை யாக ஊர்ந்தனர் பெருமான். [5-1]

இரணியன் மார்பை நரசிம்மமாய்க் கிழித்தார் திருமால்.

திருமாலால் தொடர்வு அரியவர் பெருமான். திருமால் காணு வண்ணம் பரஞ்சோதியாய் ஒளிபரப்பி நின்றார் பெருமான்.

திருமாலும் பிரமனும் திடுக்கிடும்படி தொடர்தற்கு அரிய அருஞ்சுடராய் நின்றவர் பெருமான். பெருமான் ஏறு தற்கு விடையாய் (இடபமாய்) இருக்கின்றார் திருமால். அதனால் "மால் விடையோன்" என்பர் சிவனை. திருமாலுக்குச் சக்கரம் அளித்தார் பெருமான், திரிபுரம் எரித்தபோது சிவன் கையில் (அம்பாய் இருந்தார் திருமால்)

## 98, 99, திருமாலும் பிரமனும் இந்திரனும் [98, 99]

இந்திரன், பிரமன், திருமால் இம்மூவரும் பூசலிட்டும், ஓலமிட்டும் இன்னும் புகல்வதற்கு அரிதாய்ச் சிவன் சந்நிதி யில் இரந்திரந்து அழைக்கின்றனர்.

## 99 A. தில்லைவாழ் அந்தணர் [99 A]

["சிவபிராற் பகுதியில் "சிவனும் தில்லைவாழ் அந்தணரும்" என்னும் தலைப்பு 56 பார்க்க.]

மூவாயிரவர் ஓதிய நான்மறை.

---

* கோகுலத்திலுள்ள ஆயர்கள் கண்ணபிரான் சொற்படி இந்திரனுக்குச் செய்யவேண்டிய, பூசையைச் செய்யாது நிறுத் தினர். அது கண்ட இந்திரன் பெருமழை பெய்வித்துக் கோகுலத்தை அழிக்க முயன்றான். உடனே கண்ணன் அம்மலை யைத் தூக்கிக் குடையாகப் பிடித்துக் கோகுலத்தைக் காத்தான்.

† மேக உருக்கொண்டு திருமால் சிவனைத் தாங்கியது ஒளி நெறியில் ஒப்புமைப் பகுதி விளக்கம் காண்க.

## 100. தெய்வம் [100]

சிந்தனை செய்வதற்கு அரிய தெய்வப்பதி தில்லைச் சிற்றம்பலம். பெருமான் தெய்வத் தான் தோன்றி நம்பி. திருவீழி மிழலை விண்ணிழி செழுங் கோயிலில் உள்ள சிவன் அல்லாத வேறு எதையும் அறிவுடையோர் அறியமாட்டார்.

## 101. தென்றல் [101]

தென்றல் என் மேல் பகையாக வந்து என்னை வருத்தி வாட்டுகின்றது (என்கின்ருள் ஒரு தலைவி).

## 102. தேர் [102]

தேர்விழாவில், தில்லையில் தேவர் கூட்டம் நிறைந் திருந்தது. தேர் பல குவிந்து நிறைந்தது தில்லை.

தேர் விழாவில் குழலொலி, தெருவில் கூத்தொலி, ஏத்தொலி, ஓத்தொலி இவை பேரொலியாய்ப் பரந்து கடலொலிபோலப் பெரும்பற்றப் புலியூரில் (தில்லையில்) முழங்கி விண்ணளவும் சென்றது.

சிவபிரான் புரத்தை எரித்தபோது அவர் ஏறிய தேர் "வைதிகத் தேர்" (வேதங்கள் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்)

## 103. தேவர் [103]

1. சிறப்பு :—

(1) அக்கினி :—அக்கினிக்கு இருமுகம், கழல் மூன்று, ஏழுகை [அக்கினிக்கு இரண்டுமுகம், நீண்ட ஏழு கரங்கள், நான்கு கொம்புகள், மூன்று பாதம். [அபிதான சிந்தாமணி]

(2) இந்திரன் :—[தலைப்பு 23 பார்க்க.]

(3) தக்கன் :—தக்கன் வேள்வியில் நாங்கள் செய்து முடிப்போம் என்று இருந்த தேவர்கள் எல்லாம் எப்படி ஓடி விட்டார்களோ அப்படி நமது தேகத்தின் பயன் இருக்கின்றது.

(4) தனதன் :—(குபேரன்).

சிவபிரானுக்கு வேண்டிய நல்ல தோழன் குபேரன். மலைமகள் அளித்த செல்வம் நிறைந்தவர் குபேரன்.

2. பொது :—

(1) அமரர் : அங்கையனார் மலர் மழை பொழிவர் அமரர்.

அச்சத்துடன் அம்பலவரைத் தொழுவார்கள். அவர்கள் துன்பப்படும்போது அவர்கள துன்பத்தைப் பெருமான் நீக்குவார். சில தேவர்கள் சில ஆண்டுகளில் அழிந்து போவர்.

திருமால், பிரமன், இந்திரன் ஆகிய தேவர்கள் எல்லோருக்கும் குருவாக விளங்குபவர் பெருமான்.

அமரர், இமயவர், உம்பர், தேவர், வானவர், வானோர், விண்ணவர் இவை தேவரைக் குறிப்பன.

இயக்கர், சித்தர், தானவர் (வித்தியாதரர்) இவர்கள் தேவர்களில் ஒரு வகுப்பினர்.

## 104. தேவாரம் [104]

அப்பர்-சம்பந்தர் அழகிய பாடல்களைப் பாட, பெருமான் இப்பாடல்களுக்கு உகந்து அவர்கட்குக் காசு அருளினார்.

## 105. தேன்; தேறல் [105]

[சிவபிரான் பகுதியில் சிவன் தன்மையில் "தேன்" என்னும் தலைப்பு 53 பார்க்க.]

தாயானவள் இனிய தேன் கலந்த இன்னமுதை உகந்து ஊட்டினாற்போல அருள் புரிவார் பரமன். புன்னைப் பொழிலில் தேனைச் சொரியும் வண்டுகள் பாடுகின்ற இனிமை பொருந்திய தேன் துளிகள் உள்ள பெரும்பற்றப் புலியூர்.

ஆரணத்தேன், தித்திக்குந்தேன், தெளிதரு தேன், தேனமர் பொழில், தேனார்பொழில், வழங்கு தேன் கூறப்பட்டுள்ளது. பிற ஒளி நெறியிற் காண்க.

## 106. தொகை [106]

["எண்ணும் தொகையும்" என்னும் தலைப்பு 41 பார்க்க.]

## 107. தொண்டு [107]

திருச்சிற்றம்பலத்திற்குப் போய் அங்குச் செய்ய வேண்டிய பணிகளை நாள்தோறும் செய்தால் பெருமானுடைய அருள்பெற்றால் பேரின்ப வீட்டில் இருக்கலாம்.

## 108. நகர லட்சணம் [108]

(1) கம்பலை :—தெருவில் மாதர்களின் ஆரவாரப்பேச்சும், விளையாட்டுகளும் மிக்கு உள்ள கோட்டூர் மணியம்பலம்.

(2) கின்னரம், முழவம், யாழ், வீணை, இவைகளின் ஓசை கேட்கும் கோட்டூர்.

(2) கூடம் :—பெரிய கூடங்கள் உள்ள மாளிகைகள்.

(3) உயர்ந்த கொடி ஆடைகள்.

(4) கோபுரம் உள்ள கோயில்கள்.

(5) சாலேகம்: —கணக்கற்ற சாலேகம் (சன்னல்கள்)

(6) சூளிகை :—சூளிகை உள்ள மாளிகைகள்.

(7) நாடக சாலைகள், (8) காவற் படைகள், (9) மதில் :—வீதிசூழ் சோதிமதில்கள் (10) மாடம் :—எழுநிலை மாடங்கள், பிறை தவழ் மாடங்கள், (11) மாட மாளிகைகள், (12) கடை வீதிகள், (13) கடலொலி போன்ற ஒலிசெய்கின்ற மாமறுகுகள் (வீதிகள்) இவை யாவும் நகரங்களுக்கு உள்ள அங்கங்களாய் விளங்கிப் பொலிந்தன.

(3) கோயில் :—இருட்டை ஒழிக்கின்ற புதுமை பொருந்திய கோயில் என விளக்கப் பட்டுள்ளது.

(4) நாடக சாலை :—இங்கு இளமயில் போன்ற பெண்கள் நடனம் பயின்றனர்.

(5) மாடங்கள் :—பெண்கள் மைந்தருடன் அழகிய படுக்கையில் விளையாடுவர். மலையைக் குடைந்தாற்போல எழுநிலை மாடங்கள், பிறைதவழ் மாடங்களாக விளங்கின.

(6) மாளிகை :—சூரியனுடைய ஒளியைக் கொண்டு மேகத்தைத் தொடுகின்ற மாளிகைகளும் பெண்கள் குயில் போலப்

பேசும் அழகிய மாளிகைகளும், செங்கழுநீர்ப் பூ மடல் பொய்கையிற் சூழ்ந்த மாளிகைகளும் விளங்கின. அத்தகைய மாளிகையின் நடுவில் 'பொன் மலை" ஒன்று விளங்கியது போல விளங்கிற்று தில்லை அம்பலம்.

(7) தெரு - வீதி - மறுகு :—

முத்துக்கள் சேர்த்துக் கட்டிய கட்டு மலையில் தோன்றும் ஒளியும், குளிர்ந்த நிலவின் ஒளியும், சிறப்புற்ற வீதிகளின் ஒளியும் நிறைந்துள்ள இருள் முழுமையும் நீக்கி நிற்கும் மதில்கள் சூழ்ந்த தஞ்சை.

வைகை ஆற்றில் அலைகள் மோதும் கரையின் அருகில் உள்ள கடை வீதிகளைக் கொண்டது திருப்பூவணம்.

பெரிய மறுகில் அரச யானைகளின் கூட்டம் நிறைந்து இருந்த தஞ்சை.

## 109. நகை [109]

["சிவபிரான் அணிகலன்" தலைப்பு 4 பார்க்க.]

கழல், கிண்கிணி, சதங்கை, சிலம்பு நூபுரம், பாடகம், மேகலை, வடம் [கண்டிகை - மாலை], வளை (சரி - கைவளை, சங்கம் - சங்குவளை) சூடகம் - (கைவளை) இவை கூறப் பட்டுள்ளன.

## 110. நட்சத்திரம் (நாள்) [110]

ஆதிரைநாள் கூறப்பட்டு உளது. அந்த நாளில் தில்லையில் பெருமானைத் தரிசிக்க நாராயணன், பிரமன் இந்திரன், தேவர் கூட்டங்கள் வந்து நிறைந்து நிற்கும். மக்கள் பாடி ஆடுவர்.

## 111, 112. நடனம்—நாடகம்— நாடகசாலை [111, 112]

தஞ்சையில் இளமயில் போன்ற பெண்கள் நாடக சாலையில் நடம் பயில்வர்.

## 113. நந்தி [114]

[சிவபிராற் பகுதியில் "சிவனும் நந்தியும்"
என்னும் தலைப்பு 59 பார்க்க.]

## 114. நாடு (தேசம்) [115]

**இலங்கை** :—இலங்கை வேந்தன், இலங்கையர் கோன்.
**ஈழம்** :—ஈழங்கொண்ட திறமை உடைய செங்கோற் சோழன்.

**உம்பர் நாடு** (தேவர் உலகம்)

**தென்னன் நாடு** :—செங்கோல் வேந்தன் தென்னன் நாடு.
**தேசம்** :—தேசமிகு புகழோர் தில்லை.

" வான நாடு.

## 115. நாணம் [116]

எனது நாணத்தை விட்டுப் பெருபபற்றப் புலியூரில் நடம் மகிழ்ந்து புரியும் பெருமானே! உனை அடைந்தேன், என்னை ஏன்று கொள் (என்கின்றாள் ஒரு தலைவி.)

## 116. நாமம் (பெயர்) [117]

தமது சோதி மணிமுடியில் இருந்த மாலையையும் (சண்டீசன்) என்னும் நாமத்தையும் (பெயரையும்) செய்த பாவத்துக்குத் (தந்தையின் காலை வெட்டியமைக்கு) பரிசாகத் தந்தனர் சிவபெருமான்.

## 117. நாயன்மார் [117A]

["சிவபிராற் பகுதியில் சிவனும் நாயன்மாரும்"
தலைப்பு 60 பார்க்க.]

## 118. நிலம் [118]

கருவூரர் பாடிய இனிய தமிழ் மாலைப் பதிகத்தைப் பெரியசோலைகளில் மருதயாழுடன் கலந்து பாட அதற்குப் வெளிப்பட்டுத் தோன்றும், சிவபிரான் எழுந்தருளும் தலம் திருவிடை மருதூர்.

## 119. நிறம் [119]

["சிவபிரான் பகுதியில்" தலைப்பு 18 (14) பார்க்க.]

செக்கர், பொன்னும் மின்னும் பொன்னிறம் கூறப் பட்டுள்ளது.

## 120. நிறை [120]

உயிரளிக்கும் வினைபடு நிறை, நிறையும்......பிறியவிட்டு, நிறை யழிந்(து) இருப்பேனே!

பிற ஒளிநெறியிற் காண்க.

## 121. நீதி [121]

இழிவான செயல்களைச் செய்தாலும் பெரியோர் (அடிமையை விரும்புகிறவர்) அதைப் பொறுத்துக் கொள்வார்.

## 122. நீர் நிலை [122]

["பஞ்சபூதம்" என்னும் தலைப்பில் மண் என்னும் தலைப்பு 128 பார்க்க.]

(1) அப்பு

(2) அருவி :—சுனை தாழ் அருவி, மணி நீர் அருவி, வருநீர் அருவி,

(3) கங்கை :— ஒழுகு நீர்க் கங்கை.

(4) கிடங்கு :—[தனித் தலைப்பு 64 பார்க்க.]
எற்று நீர்க் கிடங்கு.

(5) குளம் :—நிறை குளம்.

(6) தடம் :—தடம் பொற்றுமரை தாழ்ந்தெழுந்த தடம்.

(7) தீர்த்தம் :—புனைத்தீர்த்தம்.

(8) நீர் :—ஒழுகு நீர், செழு நீர், நீர்ப்பழனம், பாலளா நீர், விரியு நீர்.

(9) புனல் :—அரும் புனல், தடம் புனல், தண் புனல், தெளி புனல், புனல் சூழ் தடம், பூம் புனல், முழங்கு தீம் புனல்.

(10) பொய்கை :—சுனைப் பெருங்கலங்கற் பொய்கை, தேம்புனற் பொய்கை.

(11) மடு :—வாளை மிளிர் மடு.

(12) மடை :—கயல்கள் மடை பாய் தில்லை மடைகொள் வாளைகள் குதி கொளும் வயல்.

(13) மதகு :—மறிதிரை வடவாற்றிடு புனல் மதகில்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 123. நூல் [123]

அறிவு நூல், உணர்வு நூல், கேடிலா மெய்ந்நூல், பசு நூல், மறை நூல்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 124. நெய் [124]

இழுது நெய், பால் நெய் ஐந்துடன் ஆடிய படர் சடை.

## 125. நெறி [125]

(1) இந்திர சாலப் பொய்த் தெய்வ நெறி (நான்புகா வகை புரிந்த புராண சிந்தாமணி,)

(2) குன்றேந்தி அறியா நெறி.

(3) சில்லாண்டில் சிதையும் சிவ தேவர் சிறு நெறி.

(4) திறம்பிய பிறவிச் சில தெய்வ நெறி.

(5) நாவுக்கரசு செல்ல நெறி வகுத்த சேவகனே!

(6) நெறி நின்றவர்கள் நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக்குறி.

(7) நெறியே! பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தன், புராணச் சிந்தாமணி வைத்த மெய்த் தெய்வ நெறி. புவலோக நெறி படைத்த புண்ணியங்கள், மாலும் அயனும் அறியா நெறி, வீழிமிழலை விண்ணிழி செழுங்கோயில் அத் தெய்வ நெறியிற் சிவமலாது அவமும் அறிவரோ அறிவுடையோரே; இவை கூறப்பட்டுள்ளன.

## 126. நோய் - பிணி [126]

ஆரே இவை படுவார் தீரா நோய் செய்வாரை ஒக்கின்றார். நோயோடு பிணி நலிய, பிணி தீர வெண்ணீறிடப் பெற்றேன். இவை கூறப்பட்டுள்ளன.

## 127. பகல் [127]

(1) நெடும் பகல், (2) முது பகல், (3) பகற் பொழுது வந்தால் அஞ்சாதே என்று தலைவன் சொல்லுகின்றான் இல்லை (4) நடுப் பகலில் வந்து எனது வீட்டிற்குள் புகுந்து

"அன்பு உடையவர்களே!"
பிச்சை இடுவீர்களாக!

என்று கூறி எங்கும் பார்க்கின்றார் (என்கின்றாள் தலைவி.)

## 128. பஞ்சபூதம் [128]

(சிவபிரான் பகுதியில் "சிவனும் பஞ்சபூதமும்"
என்னும் தலைப்பு 61 பார்க்க.)

(1) **மண்** :—(உலகம் என்னும் தலைப்பு 33 பார்க்க.)

(2) **நீர்** :—அணி நீர், எறிநீர், கண் புனல், சலம்.

(3) **நெருப்பு** :—அழல், அடலழல், அழலொளி, ஆரழல், மண்டு அழல்.

**அனல்** :—அனல்.
**அனலம்** :— அனிலம்.
**எரி** :—ஒள் ளெரி.
**கனல்** :—கரியும் நீறுடுங் கனல்.
**தழல்** :—செந்தழல், பண்ணிய தழல்.
**தீ** :—(அம் + தீ) அந்தீ, தீ மெய்த் தொழிலார், முத்தீ.
**நெருப்பு** :—பிறை தூவும் நெருப்பு.

(4) **காற்று** :—அனிலம், தென்றல்.

(5) **ஆகாயம்** :—அம்பரம், விசும்பு.

## 129. படலம் [129]

அகிற் புகைப் படலம், உயர்கொடி யாடை மிடைப் படலம், ஓம தூமப் படலம்.

## 130. படை; ஆயுதம் [130]

(சிவபிரான் படை தலைப்பு 24 பார்க்க.)

(1) அம்பு :—கணை.
(2) சிலை :—(வில்)
(3) படை :—பலபடை.
(4) வாள்
(5) வேல் :—இலையார் வேல், கதிர் வேல், கூர்நுனை வேல், கேடில் வேல்.

## 131. பத்திநிலை : மெய்ப்பாடு [131]

(1) உணர்ந்து உளங் கசிதல். (2) நெக்கு நைந்து உளங் கரைந்து உருகுதல். (3) கையாரத் தொழுதல், (4) அருவி கண்ணீரச் சொரிதல், (5) முகமலர்ந்து, கண்ணீர் அரும்பக் கைகள் மொட்டித்தல்.

## 132. பதிக விசேடங்கள் [134]

### (1) பாதாதி கேசப் பதிகம்-2, 22

பாதாதி கேசத்தில் சேவடி, சிலம்பு அலம்பும் உன்னடி, கணைக்கால், தொடை, நிதம்பம், திருவயிற்று உந்தி, உதரத் தனிவடம், முறுவற் பவளவாய், குழைக் காது, முகம் செஞ்சடை எனப்படும் இவை இரண்டாம் பதிகத்தில் கூறப்பட்டுள.

இருபத்திரண்டாம் பதிகத்திற் பாதம், தொடை, திருமேனி, திருவயிறு, உந்திச் சுழி, கை, மார்பு, கண்டம், (கழுத்து), முறுவல் (பல்), காது, கண், சென்னி இவைகள் கூறப்பட்டுள.

(2) அகப்பொருட் பதிகம் :—3; 6; 7; 10; 16-6; 23; 25; 26; 27; 28. இந்த எண்ணுள்ள பதிகங்கள்.

(3) முதற் பதிகம் (ஒளிவளர் விளக்கே) விளி நிறைந்த பதிகம்.

## 133. பந்தம் [135]

உயிர்மேல் உள்ள பந்தம் போகும்படி திருவருள் புரிந்தார் இறைவன் சேந்தனருக்கு.

## 134. பரிசு [135A]

தந்தையின் காலை வெட்டிய பாதகத்துக்குச் சண்டேசுரருக்குப் பரிசு தந்தார் இறைவன்.

## 135. பழமொழிகள் [136]

இடுவது புல் ஒரெருதுக்(கு) ஒன்றினுக்கு வை (வைக்கோல்) இடுதல்.
கன்று பிரி கற்றுப் போல்.
தம்பானை சாய்ப் பற்றார்,
பொரசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்,

## 136. பளிங்கு [137]

அம் பளிங்கு, செம்பளிங்கு, தூத்திரள் பளிங்கு, தெளிவளர் பளிங்கு, பளிங்கு செபவடம்.
இவை கூறப்பட்டுள.

## 137. பனி [138]

பனி படர்ந்தாற் போல ஒளி தரும் திருநீறு.
பனிமதி

## 138. பாசம் [139]

கடுவினைப் பாசக் கடல், பசு பாசம், பந்த பாசம் இவை கூறப்பட்டுள.

## 139. பாடல் [140]

பால் நேர் பாடல்.

## 140. பாடலும் பாடல் விசேடமும் [141]
### 1 முதல் 4 வரை வரும் பாட்டு

*(1)* ஒருடம்பினராம் இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள் இறைவரே.

(2) முன்னம் மாலறியா ஒருவனும்! இருவா, முக்கணு, நாற்பெருந்தடந்தோள் கன்னலே.

2. ஆறு "ஆ" எனக் குறுகியது :—

பெரியவா, சரியுமா, தாழ்ந்தவா, கரியவா, காட்டுமா, அலர்ந்தவா!

3. சிவன் வர்ணனைச்சொற்றொடர்களைக் கொண்டு :—

மையல் மாதொரு கூறன், பால் விடை யேறி, மான்மறி யேந்திய தடங்கையன், கார்புரையுங் கறைக்கண்டன், கனல் மழுவான், ஐயன், ஆரழலாடுவான், இல்லை அம்பலத்தான்.

4. *சிவனுக்கு இவை என்ன என்ன என்று கூறும் பாடல்:—

சிவனுடைய ஆரம்—பாம்பு, பரிகலம் கபாலம்.
பட்ட வர்த்தனம் (பட்டத்து யானை) - எருது.
மஞ்சன சாலை - அன்பர் வார்ந்த கண்ணருவி.
அவர் மகிழ் பெருந்தேவி—மலைமகள்.
சாந்தம் - திருநீறு.
கீதம் - அருமறை.
முடி - சடைமுடி.
கோயில் மாளிகை - சாட்டியக் குடியார் எழில் இதயம்.

(2) †சிவனுக்கு இவை, இவைஎன்ன, என்ன என்பது :—

தொழுது பின்செல்வார்—அயன் முதற் கூட்டம்.
தொடர்வன - மறைகள் நான்கு.
உறைவிடம் - கழுது (பேய்) உறுகரிகாடு. (சுடுகாடு)

போர்வை - கரியுரி. ஊண் - திரிந்தூண். கோவணம் - நெருப்பை உமிழும் பாம்பு. செபவடம் - பளிங்கு. விளக்கு - சாட்டியக்குடியார் நெய் சொரிந்து ஏற்றும் ஒளி விளக்கு.

## பக்திப் பாடலில் ஆசை:

திருவிழாவின் போது சுவாமியின் பின் செல்வோர் பாடும் பாடலில் ஆசைகொண்டு பரவசப்பட்டுக் கீழே விழுந்து அவிழ்ந்த தலைமுடியைக் கட்டிக் கொள்வார்கள்.

---

* சிவபிரான் "வினவிடை" என்னும் தலைப்புப் பார்க்க.
† சிவபிரான் "வினவிடை" என்னும் தலைப்புப் பார்க்க.

(6) **பவளம் என்னும் சொல் மும்முறை வந்தது:—**

பவளமே மகுடம், பவளமே திருவாய், பவளமே திருவுடம்(பு)

(7) **போற்றி போற்றி எனவரும் பாடல் :—**

செங்கணா போற்றி; திசைமுகா போற்றி;
சிவபுர நகருள்வீற் றிருந்த அங்கணா போற்றி
அமரனே போற்றி அமரர்கள் தலைவனே போற்றி.

தங்கள் நான்மறை நூல் சகலமுங் கற்றோர், சாட்டியக் குடியிருந்தாலும், எங்கள் நாயகனே போற்றி! ஏழ் இருக்கை இறைவனே போற்றியே போற்றி! 15-8

(8) **மலர் - அரும்பு - மொட்டு :—**

நின் தொண்டர் முக **மலர்ந்(து)** இருகணீர் **அரும்பக்** கைகள் **மொட்டிக்கும்** என் கொலோ? கங்கை கொண்ட சோளேச் சரத்தானே!

(9) **விளி நிறைந்த பாடல்கள் :—**

11-9 அம்பரா! அனலா! எனத் துவங்கும் பாடல்.

12-3 வம்பனிந்த கனியே! என் மருந்தே! நல்வளர் முக்கட் செம்பளிங்கே! பொழிற் கோடைத்திரை லோக்கிய சுந்தரனே!

13-1 முன்னம் மாலறியா ஒருவனும் இருவா! முக்கணா! நாற்பெருந்தடந்தோள் கன்னலே! தேனே! அமுதமே! கங்கை கொண்ட சோளேச் சரத்தானே!

15-6 அனலமே! புனலே! எனத் துவங்கும் பாடல்.

15-7 செம்பொனே! பவளக் குன்றமே! எனத் துவங்கும் பாட்டு.

## 141. பாதகம் [142]

[பரிசு என்னுந் தலைப்பு 134 பார்க்க].

## 142. பார்வதி [143]

(1) செம்மைக் குணம் நிறைந்த பார்வதிக்குப் பாகம் அளித்தார் பெருமான். அம்புந்து கண்ணாள் அரிவை,

அன்ன நடை மடவாள் இமவான் மகள், உமை, உமை நங்கை, உமையவள், உமையாள், எழுது கோல் வளையாள், கயற் கண்ணாள், குவளை மாமலர்க் கண்ணி, செய்யாள், மங்கை, மலைமகள், மலையாள், மாது, மென்மொழி உமையாள், வனிதை, விமல மேகலை.

## (2) பார்வதி வர்ணனை

(1) இடை :—

கொடியிடை, துடியிடை, மின்னின் இடை.

(2) கண் :—

அம்புந்து கண்ணாள், கயற்கணாள், மானைப் புரையும் மடமென் நோக்கி, மென் நோக்கி.

(3) குழல் :—

பொற் குழல், வண்டார் குழல்.

(4) கொங்கை :—

வார்மலி முலையாள், கொங்கை கொண்டு அனுங்கும் கொடியிடை, வாரார்முலை.

(5) தோள் :—

வேயிருந்தோள்.

(6) நடை :—

அன்ன நடை.

(7) நிறம் :—

கரியமேனி இடந்தான்.

(8) நுதல் :

திலக நுதல் உமை நங்கை.

(9) மொழி :—

மருள்படு மழலை மென்மொழி.

(10) வளை :—

எழுது கோல் வளையாள்.

## 143. பால் [144]

[சிவன் தன்மையில் "பால்" என்னுந்
தலைப்பு 17—(60) பார்க்க.]

பால் நேர் பாடல், பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட, பாற்கடல்.

## 144. பாவம் [145]

நீர் கலந்த பாலைக் காய்ச்சினால் நீர் ஆவியாக மாறுவது போலப் பாவம் மறைந்து, பால் நிற்பதுபோல புண்ணியம் நிற்கும். அமுதவாலி சொன்ன தமிழ் மாலைப் பானேர் பாடல் பத்தும் பாடப் பாவ—நாசமே.

## 145. பிரமன் [147]

[சிவபிராற் பகுதியில் "சிவனும் திருமாலும் பிரமனும்"
என்னும் தலைப்பும் பிறபொருட் பகுதியில்
"திருமாலும் பிரமனும்" என்னுந் தலைப்பும் பார்க்க.]

அயன், கமலத்தவர், சுருதி வானவன், திசைமுகன், நான்முகன், பிரமன், மலரோன், இவை கூறப்பட்டுள.

பிரமன் தாமரையில் விற்றிருப்பவன். அதனால் "கள்ளவிழ் தாமரை மேல் அயன்." "கோகனத்து—அயன்," "தாட்டிருக் கமலத்தவர்," "தாமரை நான்முகன்" எனப் பட்டான்.

பிரமன் தலை(யை) விண்டு—உருளக் கோபித்தார் (உருத்திர) மூர்த்தி.

## 145. பிறப்பு—இறப்பு [148]

**(1) பிறப்பு :—**

இருள் மாயப் பிறப்பு. இவ்வரும் பிறப்பு, பிறப்பின் தளிர்.

**(2) பிறப்பு—இறப்பு :—**

பிறப்பின் தளிர் இறப்பு - இலை உதிர்வு. பிறப்பு தளிருக்கும், இறப்பு இலை உதிர்வுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.

## 147. புகழ் [149]

திருவீழிமிழலை என்னும் தலம் எண்டிக்கிலும் புகழ் பெற்றது.

## 148. புகை [150]

அகிலின் புகை, ஓமப் புகை கூறப்பட்டுள.

## 149. புண்ணியம் [151]

[“பாவம்” என்னுந் தலைப்பு 144 பார்க்க.]

## 150. புனம் [152]

எறிபுனம், தவரார் புனம் [பயன் தரும் புனம்] கூறப் பட்டுள.

## 151. பூதம் [153]

புராண பூதங்கள், [பழமையான பூதங்கள்; பழைய அடியார்.]

பூதம் படை சூழ எழுந்து அருளுவர் பெருமான்.

## 152. பேய் [154]

[சிவபிராற் பகுதியிற் “சிவனும் பேயும்” என்னுந் தலைப்பு 66 பார்க்க.]

பேய் மனம் இல்லாத தவப் பெருந் தொண்டர்களின் தொண்டர் நான். (எனத் திருமாளிகைத் தேவர் தம்மைக் குறிக்கின்றார்.)

## 153. பொய் [155]

சமணர், துட்டி இவர்களுடைய பொய்யை அறிந்தவர் பெருமான்.

## 154. பொருள் [156]

[“சிவபிராற் பகுதியில் சிவன் தன்மையில்” “பொருள்” என்னுந் தலைப்பு 17 (65) பார்க்க.]

பெருமானுடைய திருவடி மலர்களின் மேல், மேலான நுண்ணிய பொருள்களைக்—காட்டும் படியான வேத நூல்கள்.

## 155. பொழில் [157]
## (சோலை, தண்டலை)

கங்கைக்கு ஒப்பான—அரிசில் ஆற்றின் இரு கரைகளிலும் மணமுள்ள பொழில். கற்பகப் பொழில், சிறைவண்டார் பொழில், சீரோங்கும் பொழில், செழுந்தடம் பொழில், தென்றலார்—பொழில், தேனமர் பொழில், பிறை தவழ் பொழில், புன்னை—தேன் சொரியும் பொழில், பைம் பொழில், மணங்கமழும் பொழில், மாதி மணங்கமழும் பொழில். (மாதி—மாமரம்) மாம் பொழில், வண்டார்—பொழில், வேரிவார் பொழில்.

**(2) சோலை** :—காரார் சோலை,—பூம்பனைச் சோலை, வளரிளஞ் சோலை.

**(3) தண்டலை** :—தத்து நீர்ப் படுகர்த் தண்டலை பைம் பொழிற் படுகர்த் தண்டலை.

## 156. பொன், மணி, முத்து, பவளம், மாணிக்கம், வயிரம் [158]

**(1) பொன்** :—அம்பலம் செம்பொன் கோயில், ஆடகம் (பொன்.)

**கனகம்** :—கனக கற்பகம், கனகங் கதிர்,—கனகக் குன்றம், கனகத்திரள், கனக நற்றாண். கனக மணிமாடம், கனக மாளிகை, கனகமே திருவடி, வினைபடு—கனகம்.

**செம்பொன்** :—செம்பொற்கோயில், செம்பொற் சோதி, செம்பொன் அம்பலம், பசும்பொன், பொன் அம்பலம், பொன் நெடுஞ் சிவிகை, பொன்—மதில், பொன் மலை, பொன்னார்—குன்றம், பைம் பொன் மாளிகை, முலை பொன் பயப்பிப்பது.
**(2) மணி** :—அணி மணி முறுவல், ஏன மாமணிப் பூண், ஒளிர்—மாமணி, கண்மணி, குருமணி, சிந்தாமணி, சுடர்மணி, செம் மணி, சோதி மணி, திரள் மணி, நிகரிலா மணி, நீள் மணி, பாந்தள் பருமணி, புராண சிந்தாமணி, மணிதிகழ் மாடம், மணி மண்டபம், மணி மாடம், மணி வண்டு (மணி - நீலமணி), மாமணிப்பூண் மாறிலா மணி.

(3) **முத்து** :—(தாளம்) தரள வான் குன்று,—வான முத்து (வால்முத்து), வெண்ணிலா விரிதரு தரளக்—குடை.

(4) **பவளம்** :—கதிர் ஒண் பவளம், நீறணி—பவளக் குன்றம், பவளமால்—வரை, பவள மேனிப் பரமன்.

(5) **மாணிக்கம்** :—மாணிக்க மலை.

(6) **வயிரம்** :—முத்து வயிர மணி மாணிக்கம், வயிரமலை.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 157. போகம் [159]

ஆருயிர்ப் போகம், புவன போகம், போக நாயகனை.

## 158. போனகம் [160]

சண்டேசுரருக்குத் தாம் உண்ட (போனகம்) உணவைத் தந்து அருளுவர் பெருமான்.

## 159. மக்கள் [161]

எண்ணில் புன் மாக்கள், கடைசியர், கற்றவர், செம்மலோர், பல்கோடிச்—செடியுந் தவத்தோர், பரவை சூழ் அகலத்(து) எண்ணிலங்—கண்ணில் புன் மாக்கள், பல்லாயிரம் பேர் பதஞ்சலிகள், பூதலத்தோர்கள், பொருள்—சேர்ந்த சிந்தையவர், மண்ணோர், மதுரவாய் மொழியார், மற்றவர், மறைவல நாவலர், மனிதர், மெய்ஞ் ஞின்றதமர், வையகத்தோர்.

## 160. மண்டலம் [162]

சுடர் விடு மண்டலம், வெய்ய செஞ்சோதி மண்டலம்.

## 161. மரம், கொடி, செடி, இலை, தழை, தளிர் [163]

(1) **மரம்**

**அகில்:** அகிலின் புகை, காழகில் கமழும் மாளிகை.

**அரசு:** அரசு.

**ஆல்:** ஆல நிழல், கல்லால்.

**கமுகு:** இளங் கமுகு, வேரிளங் கமுகு.

**கரும்பு:** கரும்பு நற்சாறு, கரும்பனைய தீந்தமிழ் மாலை, மடுக்கமலம் கரும்பொடு மாந்து மேதிகள், வான் கரும்பின் அணி ஆலைகள்.

**கற்பகம்:** ஏர்கொள் கற்பகம், கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி.

**குங்குமம்:** மரவார் பொழில்; மர - மரவம் - குங்கும மரம்.

**குரா:** குரவம்......குவிந்த கரைகள்; திருக்குரா - நிழற் கீழ் நின்ற [சுப்பிரமண்ணியன்.]

**கோங்கு:** இருங் கோங்கு; கோங்கம் (குளிர் புன்னை); கோங்கிணர் அனைய குடை; கோங்கு.....குவிந்த கரைகள்.

**சண்பகம்:** [சரள மந்தார] சண்பகம்.

**சந்தனம் (சந்து)** சந்தனம்; சந்தும் அகிலும்.

**சரளம்** (தேவதாரு) (சரள் மந்தாரம்).

**சாதி:** (சாதிக்காய்): சாதிபலவுங் கொண்டு.

**தெங்கு:** நெடுந் தெங்கு.

**பலா:** நீள்பல (பலா மரம்)

**பாதிரம்:** (பாதிரி மரம்); பாதிரம் போது.

**புன்னை:** குளிர் புன்னை; புன்னை தேன் சொரியும்.

**மந்தாரம்:** (சரள்) மந்தாரம்.

**மரம்:** மரவார் பொழில் - மர : மரவம்.

**மருது:** மருது (அரசு).

**மா (மாமரம்):** தேமாம் பொழில்; மா (மாமரம்) மாதி மணங் கமழும் பொழில். மாதி (மாமரம்); மாந்தளிர் செந்தீயின் நேர் அரும்பும்.

**முருகு** (முருக்கம்): கிஞ்சுக மணிவாய் அரிவையர்; (கிஞ்சுகம் - முருக்கம்பூ).

வாயில் நேர் அரும்பு மணி முருக்கு.

**வகுளம்:** (சண்பகம்) வகுளம் (வகுளம்—மகிழமரம்.)

**வாழை:**

**கதலி:** கைச்சாலுஞ் சிறு கதலி..... கறி கொள்வார்; நிறைதவழ் வாழை.

**வேங்கை:** எழில் வேங்கை.

**வேம்பு:** கைச்சாலும்.......இலை வேம்பும் கறி கொள்வார்.

(2) இலை

இறப்பு இலை உதிர்வு; கைச்சாலும்.......இலை வேம்பு;

(3) கொடி:

கொடி: கொடி ஏரிடை; கிழற் கொடி; பல்லவம் வல்லி.
கொம்பு: பொரியதோ கீழ்க்கொம்பு கிறைகுளம்.
கொழுந்து: பணிபடு மதியம் பயில் கொழுந்து.

(4) செடி

கேதகை; கைதை (தாழை).

(5) தழை

தழை தவழ் மொழுப்பு.

(6) தளிர்

தளி ரொளி மணிப்பூம்பதம்; பணிபடு மதியம் பயில் கொழுந்தன்ன பல்லவம் வில்லி; பிறப்பின் தளிர்.

## 162. மருந்து [164]

["சிவபிரான் தன்மைட் பகுதியில்"
மருந்து என்னும் தலைப்பு 68 பார்க்க.]

அருமருந்து அருந்தி; பொருள் மருந்து உடையோர்.
(பொருள - பாடலின் பொருள்)

## 163 மலர் [165]

**அல்லி:** அல்லியம் பூம்பழனத்து ஆமூர்.

**அலர்:** பண்டலர் அயன்; பாசலர்; விண்டலர் மலர்வாய் வேரி.

**கமலம்:** "தாமரை" பார்க்க.

**கழுநீர்;** பொய்கையங் கழுநீர்ச் சூழல் மணஞ்செய்.........தஞ்சை.

**செங்கழுநீர்:** செங்நெற் கழனிச் செங்கழுநீர்ப் பழனம்.

**கிஞ்சுகம்:** "முருக்க மலர்" பார்க்க.

**குமுதம்:** குமுதமே திருவாய்.

**குரவம்:** குரவம் கோங்கம் குளிர் புன்னை.

**குவளை:** கருந்தட மலர் (கருங்குவளை), குவளை மாமலர்க் கண் நங்கை யானை: குவளையே களமும்; கோவாத மணி முத்தும் குவளை மலர் சொரிந்தனவால்.

**கைதை:** "தாழை" பார்க்க.

**கொன்றை:** இதழி (கொன்றை); கங்கை நீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றை; கடியார் கொன்றை; பைங்கொன்றை.

**கொத்து:** கொத்தார் சடைகள்.

**கோங்கம்;** கோங்கம்; கோங்கிணர் அனைய குடை; கோங்கு.

**செங்கழுநீர்:** "கழுநீர்" பார்க்க.

**செண்பகம்:** நறுமலர் வண்டு கிண்டு பஞ்சமம் செண்பக மாலை (பஞ்சமம் - அழகு)

பனிமலர்ச் சோலை சூழ் மொழிப்பில் செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்.

**செருந்தி:** பொழிலகங் குடைந்து வண்(டு) உறங்கச் செருந்தி நின்(று) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்

**தாமரை**

(1) **கமலம்:**—இதயமாங் கமலங் கமல வர்த்தனை...... ஈசனுக்கே;

(கமல வர்த்தனை—கமலாசனம்)

என்னிடைக் கமலம மூன்று:

**கமலம் மூன்று:**—அறுகதம்:

விசுத்தி; ஆக்ஞை ஆகிய மூன்று தாமரைகள்.

(1) **அறுகதம்:** இருதயத்தில் முக்கோண வடிவுடன் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம்.

(2) **விசுத்தி:** கண்டத்தில் அறுகோண வடிவுடன் பதினாறு இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம்.

(3) **ஆக்ஞை:** புருவ மத்தியில் வட்ட வடிவுடன் மூன்று இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம்.

செய்தலைக் கமலம் [செய்வயல், தலை இடம் (செய்தலை வயல் இடத்து); தாட்டிருக் கமலம்; நீரோங்கி வளர் கமலம்; பொன்னடிக் கமலம்; மடுக்கமலம்; வாளை......கமலம் கரும்பொடு மாந்துமே.

(2) **கோகனதம்:** கோகனதத்(து) அயன்.

(3) **தாமரை:** கள்ளவிழ் தாமரை; பொற்றாமரை.

(4) **பங்கயம்:** பங்கயம் புரைமுகம்; பாத பங்கயம்.

(5) **புண்டரீகம்:** கெண்டை புண்டரீகம் கிழிக்குந் தண்பணை செய்.

(புண்டரீகம் - தாமரை)

**தாழை:** கேதகை நிழலைக் குருகென மருவிக் கெண்டைகள் வெருவு கீழ்க்கோட்டூர்;

கைதை குவிந்த கரை.

**தொத்து:** தொத்து (பூங்கொத்து.)

**நீலம்** (நீலோற்பலம்): கடைசியர் களைதரு நீலஞ் செய் வரம் அரும்பும்.

**பாதிரம்** (பாதிரிப்பூ): பாதிரம் போது.

**புன்னை:** குளிர் புன்னை.

**பூ:** தூவி நீரொடு பூவை தொழுதேத்து கையினர்; பூ ஏந்தி; பூ மலர்

**மலர்:** அமரர் மலர் மழை பொழிய; கருந்தட மலர் (கருங்குவளை) குவளை மாமலர்; கோலமலர் நெடுங்கண்; செழுந்தட மலர்; தடம்புனல் வாய் மலர்; தடமலர்; திருவடி மலர்; துணைமலர்ச் சேவடி; நறுமலர்; பனிமலர்; பாதமென் மலரடி; பூ மலர்; மலர்க்கணை; மலர்ப் பாதங்கள்; மலர்வாய் வேரி; மலரடி; மன்மதன் மலர்க்கணை; மாமலர்; மாமலர்ப் பாதங்கள்; மென்மலரடி, வாசக மலர்கள்; வாரணி நறுமலர்.

**முருக்க மலர்:** கிஞ்சுக மணிவாய்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 164 மலை [166]

### (1) சிறப்பு

**இமயம்:**

**பொருப்பு:** பொருப்பன் மகள்.

**கயிலை:** அருட்டிருவரை; கயிலைமலை; திருவரை; பொன் மலை; பொன்னார் குன்றம்; வளர் பொன் மலை; வெள்ளிக் குன்றம்.

**கிரௌஞ்சம்:** சேய் அக்கிலதனைக் கீண்ட ஆண்டகை.

**மகேந்திரம்:** அழுந்தா மகேந்திரம்; ஆரூர் சிகர மகேந்திரம்; சுற்றாய் சோதி மகேந்திரம்; மகேந்திரச் சாரல்; மகேந்திர நாத; *மகேந்திர மலை; மழை சூழ் மகேந்திர மாமலை; மறியேறு சாரல் மகேந்திர மாமலை.

**மேரு:** கனகக் குன்று; கனகத் திரள் மேரு; பெரு வரைவில்; மேருவில்; வேந்தன் வளைத்தது மேரு வில்.

## மலை (2) பொது

கிரிதவழ் முகில்; குணக்குன்று; குன்றேந்தி; தடம் கல்: தரள வான் குன்று நெடுங்குன்று; பருவரை; பவளக் குன்றம்; பவளமால் வரை; மணிக்குன்று; மாணிக்க மலை; வயிரமலை; வரைசெய் மா மதில்; வரைபோல்......மண்டபம்; வரை வளம்; வான் குன்று.

**விலங்கல்:** இந்தன விலங்கல்; விலங்கல். செய் நாடக சாலை.

## 165. மறை, வேதம், அங்கம் [167]

["சிவனும் மறையும்" என்னும் தலைப்பு பார்க்க.]

ஆறங்கம் நான்மறையோர்:

ஆறங்கம் ஆவன: [சிட்சை, வியாகரணம், சுந்தசு, நிருத்தம், சோதிடம், கல்பம் என ஆறு. இவை வேதத்தின் அங்கங்கள்].

**ஆரணம்:** ஆரணத்தேன் பருகி; ஆரணம் பிதற்றும் பித்தனேன்; ஆரணம் பொழியும் பவள வாய் மணியே; †சொன்னவில் முறைநான்கு ஆரணம்.

நான்கு ஆரணம்.

**ஒத்து:** அகத்தியனுக்கு ஒத்து அன்றே.

**சுருதி:** சுருதி வானவன்; சொல்லாண்ட சுருதிப் பொருள்; மெய்ச்சுருதி; விதி வழியோர்.

---

* பொதிய மலைக்குத் தெற்கே உள்ளது என்பர்.

† சொற்களை உச்சரிக்கும் முறை.

**மறை:** அருமறை அறிந்து; அருமறை ஈதம்...... ஈசனுக்கே; ஆய்ந்த நான் மறை அந்தணர் எழில் மறை; சிட்டார் மறை தேவா மறை பயிலுந் தில்லை;

(தேவாம் - தேவு ஆம்)

—நாத்திரள் மறை.

**நான்மறை :—**

ஆறங்க—*நான்மறையோர்; பதிக நான்மறை; மறைகள்—நான்கு கொண்டு அந்தணர்—ஏத்த; மறை நான்கு; மூவாயிரவர்.......ஓதிய—நான்மறை; மறைகளும்—தேட அரியர்; மறை—நிறை சட்டறம்; மறையோர்ந்(து) ஓமகுண்டத்து நறு நெயால் மறையவர்—வளர்த்த தீத் திரள்; மறையவர்—மறையோத்(து) அலைகடல் முழங்கும்.

**வேதம் :**—வேதப் புரவி.

## 166. மறையோர்; அந்தணர் வைதிகர், [168]

அந்தணர் அழலோம்(பு)......களந்தை ஆதித்தேச் சரமே, இன்றமிழால் மறைவல—நாவலர்கள் மகிழ்ந்தேத்து—சிற்றம்பலம்; திடங்கொள் வைதிகர் வாழ் திருவிடைக் கழி; தெரிந்த வைதிகர் வாழ் திருவிடைக் கழி தெருண்ட வைதிகர் வாழ்—திருவிடைக் கழி; நெடுநிலை—மாடமருங்... கெலாம் மறையவர் முறையோத்(து) அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை அணிதிகழ் ஆதித்தேச்சரமே; பல் முனிவரோடு அந்தணர்—வணங்கும் அணியார் தில்லை—அம்பலவன்; பொய்யாத—வேதியர் சாந்தை மெய்ப்புகழாளர் ஆயிரம் பூசுரர்; மெய்ச் சுருதி விதி வழியோர்—தொழும் ஆதியமரர் புராணனும் அணியா வடுதுறை நம்பி.

## 167. மறையும் சிவனும் [169]

[சிவபிராற் பகுதியில் "சிவனும் மறையும்" என்னுந் தலைப்பு 68 பார்க்க.]

---

* இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

## 168. மனப்பாடம் செய்யத் தகுவன [170]

| பாடியவர் | தலம் | பதிக எண் | பாடலின் எண் | பாட்டின் முதற் குறிப்பு |
|---|---|---|---|---|
| திருமாளிகைத் தேவர் | கோயில் [சிதம்பரம்] | 1. | 1. | ஒளிவளர். |
| ,, | ,, | | 3. | தற்பரம். |
| ,, | ,, | | 7. | தனதனற். |
| ,, | ,, | 3. | 8. | சேவேந்து. |
| ,, | ,, | 4. | 9. | எச்சனே. |
| சேந்தனர் | திருவீழிமிழலை | 5. | 2. | கற்றவர் விழுங்கும். |
| ,, | ,, | | 9. | எண்ணில் பல் கோடி. |
| சேந்தனர் | திருவீழிமிழலை | 7. | 1. | மாலுலா. |
| ,, | ,, | | 3. | கோவினே. |
| ,, | ,, | | 7. | பரிந்த. |
| ,, | ,, | | 9. | தொடங்கினள். |
| கருவூர்த்தேவர் | கோவில் | 8. | 2. | இவ் அரும். |
| ,, | ,, | | 3. | தாயின் நேர். |
| ,, | ,, | | 4. | துந்துபி. |
| ,, | திருக்களந்தை ஆதித்தேச்சரம் | 9. | 5. | பவளமே |
| ,, | கீழ்க் கோட்டூர் | 10. | 4. | தெள்ளு நீறு. |
| ,, | திருமுகத்தலை | 11. | 1. | புவன நாயகனே. |
| ,, | ,, | | 3. | கன்னெகா. |
| ,, | ,, | | 5. | அக்கனு. |
| ,, | ,, | | 8. | என்னேயுன். |
| ,, | ,, | | 9. | அம்பரா. இனே. |
| ,, | திரைலோக்கிய சுந்தரம் | 12. | 2. | நையாத மனத் |
| ,, | கங்கைகொண்ட சோளேச்சரம் | 13. | 1. | அண்டமாய். |
| | | | 3. | அற்புதத் தெய்வம். |

| | | | | |
|---|---|---|---|---|
| கருவூர்த் தேவர் | கங்கைகொண்ட சோளேச்சரம் | | 4. | ஐயபொட்டிட்ட. |
| ,, | ,, | | 6. | அண்டமோரணு. |
| ,, | ,, | | 8. | தத்தையங்கனையார். |
| ,, | திருப்பூவணம் | 14. | 2. | பாம்பணை. |
| | | | 6. | செம்மணக் கிழவோ. |
| ,, | சாட்டியக்குடி | 15. | 2. | பாந்தள். |
| ,, | ,, | | 6. | அனலமே. |
| ,, | ,, | | 7. | செம்பொனே. |
| ,, | ,, | | 8. | தேசங்களு. |
| ,, | ,, | | 9. | சித்தனே. |
| ,, | தஞ்சை இராச ராசேச்சரம் | 16. | 2. | நெற்றியிற்கண். |
| ,, | | | 8. | பன்னெடுங் காலம். |
| ,, | ,, | | 10. | தனியர். |
| ,, | திருவிடை மருதூர் | 17. | 2. | இந்திர லோகம். |
| பூந்துருத்தி நம்பி காடநம்பி | திருவாரூர் | 18. | 2. | பத்தியாய். |
| ,, | கோயில் | 19. | 2. | கடியார். |
| ,, | ,, | | 3. | அல்லியம். |
| ,, | ,, | | 4. | எம்பந்த. |
| ,, | ,, | | 5. | களையா உடல். |
| கண்ட ராதித்தர் | கோயில் | 20. | 2. | ஒவாமுத்தீ. |
| ,, | ,, | | 3. | மூத்தீயாளர். |
| ,, | ,, | | 8. | வெங்கோல். |
| ,, | ,, | | 9. | கெடியான். |
| வேணாட் டடிகள் | கோயில் | 21. | 5. | நின்று நினைந்து. |
| ,, | ,, | | 7. | மண்ணோடு. |

| | | | | |
|---|---|---|---|---|
| திருவாலி அமுதனார் | கோயில் | 22. | 1. | மையல் மாது. |
| ,, | ,, | 23. | 3. | அலந்து. |
| ,, | ,, | | 6. | தேய்ந்து. |
| ,, | ,, | | 9. | வான நாடு. |
| ,, | ,, | 24. | 1. | அல்லாய். |
| ,, | ,, | | 2. | அன்ன நடை. |
| ,, | ,, | | 4. | சந்தும். |
| ,, | ,, | | 9. | மாலோடயனும். |
| ,, | ,, | | 10. | நெடிய சமணும். |
| ,, | கோயில் | 25. | 9. | நேசமுடையவர்கள |
| புருடோத்தம நம்பி | கோயில் | 26. | 3. | அம்பலத்து. |
| ,, | ,, | | 6. | இல்லையம்பலத். |
| ,, | ,, | | 9. | எங்கள். |
| ,, | ,, | 27. | 2. | அடிவருந். |
| ,, | ,, | | 7. | ஆவா இவர். |
| ,, | ,, | | 9. | முத்தர். |
| ,, | ,, | | 10. | நோக்காத. |
| சேதிராயர் | கோயில் | 28. | 4. | விம்மி. |
| ,, | ,, | | 8. | அறவனே. |
| ,, | ,, | | 9. | அனறருக்கன். |
| சேந்தனார் | கோயில் | 29. | 1. | மன்னுக. |
| ,, | ,, | | 2. | மிண்டு |
| ,, | ,, | | 4. | சொல்லாண்ட. |
| ,, | ,, | | 9. | பாலுக்கு. |
| ,, | ,, | | 10. | தாதைதயை. |
| ,, | ,, | | 11. | குழலொலி. |
| ,, | ,, | | 12. | ஆரார் வந்தார். |

குறிப்பு:—பிற ஒளிநெறியிற் காண்க.

169. மனப்பாடத்திற்குரிய அடிகளும், சொற்பொழிவின் போது உபயோகப் படுத்தக்கூடிய அடிகளும் [171]

3.9. திரு நீறிடா வுருத் தீண்டேன் என்னும்.

5-12. பாடலங் காரப் பரிசில் காசருளிப் பழுத்த செந்தமிழ், மலர்சூடி, நீடலங் காரத் தெம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து நின்றானே.

6-9. நின் மெய்யடியார் மனக் கருத்தை முடித்திடுங் குன்றமே

6-10. நன்றே இவள் நம்பா மல்லள் நவலோக - நாயகன் பாலளே.

8-2. இவ்வரும் பிறவிப் பௌவ நீர் நீந்தும் ஏழையேற்கு என்னுடன் பிறந்த ஐவரும் பகையே.

8-3. தாயின் நேரிரங்குந் தலைவனோ என்றும், தமியனேன் துணைவனோ என்றும். நாயினேன் இருந்து புலம்பினாலிரங்கி நலம்புரி பரமர்.

8-9. அன்னை தேன்கலந் தின்னமுதுகந் தளித்தாங் கருள்புரிபரமர்.

9-4. பழையராந் தொண்டர்க்(கு) எளியரே மிண்டர்க்(கு) அரியரே.

9-5. பவளமே மகுடம், பவளமே திருவாய், பவளமே திருவுடம்(பு)

9-8. மெய்யரே மெய்யர்க்(கு)..........பொய்யரே பொய்யர்க்கு.

10-10. அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர் அழகிய சடையும் வெண்ணீறும், சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணோன செய்வ(து) என்.

11-2. அடியேன் விழுங்கு தீங்கனியாய் இனிய ஆனந்த வெள்ளமாய் உள்ள மாயினையே.

11-3. பாவியேன் ஆவியுள் புகுந்த(து) என்ன காரணம்? நீ ஏழை நாயடியேற்கு எளிமையோ பெருமை யாவதுவே.

11-4. அடியேன் நெஞ்செலாம் நிறைந்து நின்றாயே.

11-5. அடியேன் பக்கல் ஆனந்தம் இடையறா வண்ணம் பண்ணினாய் பவளவாய் மொழிந்தே.

11-7. அகத்தமர்ந் தாயைப் பிரியுமா(று) உளதே? பேய்க ளோம் செய்த பிழை பொறுத்(து) ஆண்ட பேரொளியே.

11-8. அகத்தமர்ந்து எனக்கே கன்னலும், பாலும், தேனும், ஆரமுதும், கனியுமாய் இனிமையாயினையே.

11-9. அகத்தமர்(ந்து) எனக்கே எம்பிரானாகி ஆண்ட நீ மீண்டே எந்தையும் தாயுமாயினையே.

12-1. நீரோங்கி வளர் கமல நீர் பொருந்தாத் தன்மை யன்றே.

12-10. சரிந்த துகில் தளர்ந்த இடை அவிழ்ந்த குழல் இளந் தெரிவை இருந்த பரி(சு) ஒரு நாள் கண்(டு) இரங்காய் எம்பெருமானே!

13-1. பாவியேன் ஆவியுள் புகுந்(து) என் கண்ணினின்(று) அகலான் என கொலோ? கங்கைகொண்ட சோளேச் சரத்தானே.

13-2. கருதுவார் கருதும் உருவமாம் கங்கைகொண்ட சோளேச் சரத்தானே.

13-7 கிசோர் இருவரொடு ஒருவர் காதலிற் பட்ட கருணை யாய் கங்கை கொண்ட சோளேச்சரத்தானே.

13-9. பண்ணிய தழல் காய் பாலளா நீர் போல் பாவ முன் பறைந்து பாலனைய புண்ணியம் பின் சென்று.

13-10 கொங்கை கொண்டு அனுங்கும் கொடியிடை காணில் கொடியள் என்(று) அவிர்சடை முடிமேல் கங்கை கொண்டிருந்த கடவுளே! கங்கைகொண்ட சோளேச் சரத்தானே.

13-11. மங்கையோடிருந்தே யோகு செய்வானை.

14-2. பாம்பணைத் துயின்றோன் அயன் முதல் தேவர் பன்னெடுங் காலம் நிற்காண்பான் எம்பலித்திருக்க

என்னுளம் புகுந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்.

14-4. நுண்ணியை எனினும் நம்ப! நின் பெருமை நுண்ணிமை இறந்தமை அறிவன்.

15-5. மலையுடை அரையர் தம்பாவை தருமலிவளனுஞ் சிவபுரன் தோழன் தனபதி.

16-7. பிறப்பின் தளிர் இறப்பு இலை உதிர்(வு).

16-9. வஞ்சகர் நெஞ்சகத்(து) ஒளிப்பார்.

16-11. சரள மந்தார சண்பக வகுள சந்தன நந்தன வனத்தின் இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை.

17-9. கண்ணிற் கண்மணி அனையான் மருவிடம் திருவிடை மருதே.

19-1. எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில் இல்லை.

19-6. சிவலோகம் ஆவது வுந்தில்லைச் சிற்றம்பலமே.

20-5. செம்பொனின் அம்பலத்துள் ஒளிவான் சுடரே! உன்னை நாயேன் உறுவதும் என்று கொலோ?

21-1. துச்சான செய்திடினும் பொறுப் பானறே ஆளுகப்பார், கைச்சாலுஞ் சிறுகதலி இலை வேம்புங் கறி கொள்வார்.

21-6 இடுவது புல் ஒரெருதுக்கு, ஒன்றினுக்கு வையிடுதல் நடுவிதுவோ?

22-10. அகத்தி மொட்டொடு மத்தமும் பிறைகொள் சென்னி.

22-11. தூவி நீரொடு பூவவை தொழுதேத்து கையினர்.

23-5 வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலன் மலரவன் முடிதேடி எய்த்து வந்திழிந்(து) இன்னமும் துதிக்கின்றார்.

24-5 தீ மெய்ச் சடைமேல் திங்கள் சூடித் தேவன் ஆடுமே.

24-6. அரவம் ஆட அனல் கை ஏந்தி அழகன் ஆடுமே.

24-9. சிற்றம் பலந்தன்னுள் பாலாடு முடிச் சடைகள் தாழப் பரமன் ஆடுமே.

25-5. தில்லை மாநகர்ச் சிற்றம்பலம் நிறை யணியாம் இறையை நினைத்தேன் இனிப் போக்குவேனே.

26-10. அருள்பெற அலமரும் நெஞ்சம் ஆவா! ஆசையை அளவறுத்தார் இங்காரே?

26-11. வாசக மலர்கள் கொண்டேத்த வல்லார் மலைமகள் கணவனை அணைவர் தாமே.

27-4. ஆரே இவை படுவார்? ஐயங் கொள வந்து போரேடி என்று புருவம் இடுகின்றார்.

27-6. தாயிவரே எல்லார்க்குந் தந்தையுமாம் என்பாரால்.

27-8. என்னை வலிவாரார் என்ற இலங்கையர் கோன் மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்.

27-10. சேக் காதலித் தேறும், தில்லைச் சிற்றம்பலவர் ஊருக்கே வந்(து) என் வளைகள் கொள்வாரோ? ஒண்ணுதலீர்.

29-3. என்னைத் தன்பாற் படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

29-5. கரந்துங் கரவாத கற்பகனாகிக் கரையில் கற்பகக் கடல்

29-6. பாவிக்கும் பாவகத்(து) அப்புறத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

29-8. சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணார் இளங்கொங்கை யிற் செங்குங்குமம் போலும் பொடியணி மார்பிலங்கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப.

29-13. எந்தை எந்தாய் சுற்றம் முற்றும் எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று சிந்தை செய்யும் சிவனசீர் அடியார்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 170. மனம், நெஞ்சு, சிந்தை, சித்தம், உள்-உள்ளம் இதயம் [172]

**(1) இதயம் :**

சாட்டியக் குடியார் ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகை ..........ஈசனுக்கே.

**(2) உள் - உள்ளம் :—**

அளிவளர் உள்ளத்தானந்தக் கனியே.

இனிய ஆனந்த வெள்ளமாய் உள்ளமாயினையே.

உருக்கியென் னுள்ளத்துள்ளே ஊறலந் தேறல் உள் ஒளி விளங்கு......சோதி.

உள்ளங் குளிர என் கண் குளிர்ந்தனவே.

உளங் கசிந்து நெக்கு நைந்து உளங் கரைந்து உருகும் என் உள்ளந்தளவிலா உனைத் தந்த பொன் அம்பலத்தாடி.

எனது உள்ளம் உள் கலந்து எழுபரஞ் சோதி.

கன்னெகா உள்ளக் கள்வனேன்.

பிறைகொள் சென்னியன்றே பிரியா தென்னுள் நின்றனவே.

**(3) சித்தம் :—**

இணங்கிலா ஈசன் நேசத்(து) இருந்த சித்தத்தினேற்கு.

சித்தத்துள் தித்திக்கும தேனே.

**(4) சிந்தை :—**

அடியேன் சிந்தையுட் புகுந்த நம்பனே.

இருள் கிழிதெழுந்த சிந்தையரே.

சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்.

**(5) நெஞ்சு :—**

அஞ்சி நெஞ்சம் உம்பர்கள் வன்பழியாளர் முன்னே ஊட்டினர் நஞ்சை என்றேயும் உய்யேன்.

அடியேன் நெஞ்செலாம் நிறைந்து நின்றாயே.

அருள் பெற அலமரும் நெஞ்சம் ஆவா !

உன்கழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்
டனேன் நுகருமா நுகரே
என நெஞ்சம்.....தில்லை அம்பலத்துக்.....கோவினை
அன்றி மற்(று) ஆரையும் உள்ளுவது அறியேனே.
நெஞ்சிடர் அகல அகம் புகுந்து.
நெறி காட்ட மன்றே நெஞ்சமே நினைக்கின்றனனே.
மாதரார் கலவித் தொழிலை யாழ் நெஞ்சம்.

(6) மனம்

அம்பலத்துள் நின்றாடும் மைந்தனை அறியும் என்
மனமே.

எம் மனங் குடி கொண்டிருப்பதற் கியான் ஆர்?

என் மனம் புகுந்த எளிமையை என்றும் நான்
மறக்கேன்.

தவள வண்ணனை நினைதொறும் என் மனம் தழல்
மெழு(கு) ஒக்கின்றதே.

கற்போல் மனம் கனிவித்த.

செப மனக் கிழவோர்.

பேய் மனம் பிரிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன்.

மதிப்பவர் மனமணி விளக்கே!

மனத்தினுள்ளே யிருந்த மணி.

மாலுலா மனந் தந்து என் கையிற் சங்கம் வவ்வினான்
மலைமகள் மதலை.

மைஞ்ஞின்ற குழலாள் தன் மனந் தரவும் வளை
தாரா(து) இஞ்ஞின்ற கோவணவன்.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 171. மாதர் [173]

(1) அங்கனையார், அங்கோல் வளையார், அமுத
மொழியார், அளகமதி நுதலார், அன்னநடையார், ஆயிழை
யார், குருண்டவார் குழற் கோதைமார், கொம்பனார்

கோதைமார், சூடகக்கை நல்லார், செங்கயல் புரை கண்ணி மார்கள், சேயிழையார், தத்தையங் கனையார், நங்கையர் நல்லார், மகளிர், மாதரார், மடந்தையர், மின்னார், வண்தார் காரிகையார், வாசநன் மலரணி குழல் மடவார்.

பிற ஒளிநெறியிற் காண்க.

(2) மாளிகைமேல் பெண்கள் (இறைவனைத்) துதித்துப் பாடுவார்கள் நாள்தோறும் வணங்கித் துதிப்பார்கள்.

### (3) மாதர் விளி

அனைமீர்; ஒண்ணுதலீர்; நங்கையீர்.

### (4) மாதர் வர்ணனை

**உருவம் - சாயல்**

இளமயில், கிளி, மின் இவை ஒப்பிடப்பட்டுள.

**கண்**

வெருண்ட மான் விழி

**கம்பலை, ஆரவாரம், ஒலி**

பெண்களின் முழக்கொலியும்; வழங்கொலியும்.

**குழல்**

அவிழ் குழல், குருண்ட வார் குழல், மலரணி குழல், வார் குழல்.

**கொங்கை (முலை)**

இளமென் முலை, பணைமுலை, மென் முலை.

**நடை**

அன்ன நடை

**நுதல் (நெற்றி)**

நன்னுதல்; மதிநுதலார்.

**புருவம்**

மின்னெடும் புருவம்.

**மொழி**

அமுத மொழி.

**வாய் - வாய் இதழ்**

இஞ்சுக மணி வாய்; பவளவாய், மணிவாய்.

### மாதர் ஆபரணம்

("நகை" பார்க்க.)

ஆயிலைழ; சங்கம் (கைவளை) சிலம்பு; சூடகம்; கைவளை நூபுரம், பாடகம்; பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்க் தெொவிப்ப.

### மாதரும் நாடகமும்

இளமயில் அனைய பெண்கள் தஞ்சையில் நாடக சாலையில் நடம் பயின்றனர்.

## 172. மாலை [174]

அணி மாலை, அமுதம் ஊறிய தமிழ் மாலை, அருந்தமிழ் மாலை, கண்ணி, குவளை மாமலர்க் கண்ணி, கொன்றை மாலை, செண்பக மாலை, சொல் மாலை, தமிழ மாலை, தாமம், தார், தீந்தமிழ் மாலை, பஞ்சமம் செண்பக மாலை (பஞ்சமம் - அழகு) பாவார்ந்த தமிழ்மாலை, மணிமாலை, மலர்க்கண்ணி, முத்து வயிர மணி மாணிக்க மாலை, வயிர மணிமாலை, வழிமொழி மாலை, வான் கரும்பின் அணி மாலை.

பிற ஒளிநெறியிற் காண்க.

## 173. முத்தீ [175]

ஓவாமுத்தீ; பெருவளர் முத்தீ முத்தீ - அவை ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருக பத்தியம் என்பன.

## 174. முருகவேள் [176]

[சிவபிரான் பகுதியில் "சிவனும் முருகனும் என்னும் தலைப்பு" 72 பார்க்க.]

(1) முருகவேள் வர்ணனை

குறத்தித்திறத்திலும் இறைவன்.
மறத்தொழில் வார்த்தையும உடையன்.
எவர்க்கும் மெய்யன்பர்.
கங்கை தன் சிறுவன்.
கணபதி பின்னிளங் கிளை.

கனகக் குன்றென வருங்கள்வன்.
கார்நிற மால் திருமகன்.
கிரிதனைக் கீண்ட ஆண்டகை.
கூடத்தன் குல இளங் களிறு.
தொகை மிகு நாமத்தவன்.
நங்கை யானைக்கு ஆம் குழகன்
நல் அழகன்.
பன்னிரு நயனத்(து) அறுமுகத்(து) அமுது.
மால் திரு மருகன்.
விடலை.
வெஞ்சிலைக்கை மைந்தன்.
வேலுலாம் தடக்கை வேந்தன்.

(2) முருகவேள் திருநாமம்

அரன் மதலை; அறுமுகத்து அமுது, இளங்காளை; இளம் சேய்; கள்வன்; குமரவேள்; கேடில் வேற் செல்வன்; கோழி வெல் கொடியோன்; சுப்பிரமண்ணியன்; சுவாமி; சேந்தன்; தேவின் நற்றலைவன்; பொன்மலை வில்லிதன் புதல்வன்; மயிலூரும் சுப்பிரமண்ணியன்; மலைமகள் மதலை; முருகவேள்; முருகன்; வள்ளிதன் மணவாளன்; வேற் செல்வன்.

(3) கொடி

கோழி வெல் கொடியோன்.

(4) வாகனம்

யானை

கவளமா கரிமேல்........வருங் கள்வன்.

மயில்

தூவி நற்பீலி மாமயில் ஏறும் சுப்பிரமண்ணியன்

(5) சூரனை அட்டது

சூர் மார்பினைத் தடிந்தோன்.

(6) அறம் வளர இருப்பது

மறை நிறை சட்டறம் வளரத்.........திருவிடைக் கழியில்.........நின்ற......... இளங் களிறு.

[வேதங்களில் சொல்லப்பட்ட அறுவகைப் புண்ணியச் செயல் வளரும்படி திருவிடைக்கழியில் வீற்றிருக்கும் முருகவேள்].

(7) குரா நிழற்கீழ் வீற்றிருப்பது

திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற (முருகர்).

(8) பவனி வருதல்

கவளமா கரிமேல் கவரி சூழ் குடைக்கீழ் கனகக் குன்றென வருங் கள்வன்.

[சோற்றுத் திரளை உண்ணும் பெரிய யானையின்மீது சுற்றிலும் வெண்சாமரை வீசக் குடையின்கீழே பொன்மலே போல வருங் கள்வன்.]

## 175. முருகரும் சிவனும் [177]

சிவபிராற் பகுதியில் "சிவனும் முருகரும்" என்னும் தலைப்பு 71 பார்க்க]

## 176. முருகரும் தேவரும் [178]

அமரர் கோமகன்.
தேவின் நற்றலைவன்.
மேலுலாந் தேவர் குலமுழுதாளுங் குமரவேள்.

## 177. முருகரும் படையும் [179]

கேடில் வேல்; சிலை (வில்).

## 178 முருகரும் வள்ளியும் [180]

வள்ளிதன் மணவாளர் குறத்திறத்தின் இறைவன்.

## 179. முருகரும் தேவயானையும் [181]

குவளை மாமலர்க்கண் நங்கை யானைக்கும் அழகன் நல் அழகன்.

## 180. முனிவர், பெரியோர் [183]

### (1) சிறப்பு

**1) அகத்தியர்**

அகத்திய முனிவருக்கு மூலத்தை (பிரணவத்தை) அறியும்படி. சீ அறிவுறுத்தியதும் வேதநூல்.

**(2) எச்சன்**

எச்சன் தலை உருளும்படி (தக்கன் யாகத்தில்) கோபித்தார்.

**(3) தக்கன் :—**

தக்கன் யாகத்தில் அவன் தலை பெயர்ந்து வீழும்படி கோபித்தவர்.

**(4) தும்புரு :—**

(இவர் கந்தர்வர்களில் ஒருவர்)

அன்புடன் நாரதருடன் பாடுபவர்.

**(5) நாரதர்**

அன்புடன் மறைகளைத் தும்புருவுடன் பாடுபவர்.

[இவர் பிரம்மாவின் பிள்ளை; யாழ்
வாசிப்பதில் வல்லவர்]

**பதஞ்சலி :—**

பல்லாயிரம்பேர் பதஞ்சலிகள் பாரோர் முழுதும் வந்திறைஞ்சப் பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான்.

**மார்க்கண்டேயர் :—**

அந்தணர் மதலை கின அடி பணியக் கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக் குரை கழல் பணிகொள மலைந்த தென்றால் ஆரிணி ?

உலர்ந்த மார்க்கண்டிக்காக அக்காலனை செகவுதை கொண்ட மலர்ந்த பாதங்கள்.

## (2) போத

அருந்தவர்; இருடியர் கணம்; ஏதமில் முனிவர்; கந்தர்ப்பர் - கந்தருவர்; செம்மலோர்; செம்மனக்கிழவோர்; கிலஞ்சொல் சூதறிவாளர்; நான்மறை நூல் சகலமுங் கற்றோர்; பந்தபாச மெலா மறப் பசுபாசம் நீக்கிய பன் முனிவர்; மறை நாவலர்; முனி கோடி கோடி; முனிவர்;

*வையகத்தார் (பெரியோர்)

## 181. மூர்த்தி (கடவுள் திருஉருவம்) [184]

கோடி கோடியா மூர்த்தி.

## 182. மெய் [185]

[சிவபிரான் பகுதியில் "சிவனும் பொய்யும் மெய்யும்" என்னும் தலைப்பு 68 பார்க்க]

உண்மை வண்ணம்; மெய்த் தெய்வ நெறி; மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர்.

## 183. மேகம்; மழை; மின் [185]

மழை :—

அமரர் மலர் மழை பொழிய மங்குலும் மகேந்திர மலை. (மழை-மேகம்)

மழை தவழ மணியம்பலம்.

மழை தவழ் வளரிளங் கமுகம்.

மின் :—

திறம் பொன்னும், மின்னும் நிறைந்த சேவடி மின்னனவில் கனக மாளிகை; மின்னின் இடை.

மேகம் :—(அம்போதம், கார்; செல்; புயல், மங்குல், முகில்)

அம்போதம் :—வார்மியம் போதத்(து) அருநூபாய் விடை.

---

* வையகத்தார் - உலகினர்; பெரியோர்.

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே —27-6.

—தொல்காப்பியம்

கார் :—

கார் புரையுங் கறைக் கண்டன்.

காரார் சோலை.

செல் :—

செல்வாய் மதில்தில்லை.

புயல் :—

*புயல்வனற்(கு) அருளிப் பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த மேக நாயகன்.

மங்குல் :—

மங்குல் சூழ் பொழிலை.

மழை :—

மழைசூழ் மகேந்திர மாமலை.

முகில் :—

ஓமப் புகையும் அகிலின் புகையும் உயர்ந்து முகில் தோய.

கிரிதவழ் முகிலின் கீழ்தவழ் மாடம்.

முழவம் முகிலென முழங்க நடம்;

மேகம் கருவளர் மேகம்.

மேக நாயகன்.

## 184. யோகம் [187]

உறவாகிய யோகமும் போகமுமாய் உயிராளி!

மங்கையோடிருந்தே யோகு செய்வானை.

யோக நாயகனை.

யோக வெள்ளமே.

யோகினில் பொலிந்து.

---

* திருநாவுக்கரசர் சிவபிரானை மேகமாய்த் தாங்கினார். ஒளிநெறியில் ஒப்புமைப் பகுதி காண்க.

## 185. இராவணன் [188]

[சிவபிரான் பகுதியில் 'சிவனும் இராவணனும்''
தலைப்பு 74 பார்க்க]

அதிர்த்த அரக்கன் (அதிர்த்த-ஆரவாரித்த) இலங்கையர் கோனை; இலையார் கதிர் வேல் இலங்கை வேந்தன்; என்னை வலிவாரார் என்ற இலங்கையர் கோன்; மிக்க நெஞ்(சு) அரக்கன்.........மிகை செகுத்தோன்; வல் அரக்கன்.

## 186. வணங்கும் முறை [189]

சிரம் புணர்முடி வானவர் அடிமுறையா லிறைஞ்சு சிற்றம்பலக்கூத்தா!

[சிரசில் தரித்த கிரீடத்தை உடைய தேவர்கள் (நின) திருவடியை முறைப்படி வணங்குகின்ற சிற்சபையில் தாண்டவம் புரியும் பெருமானே]

## 187. வயல் (கழனி, செய், பணை, பழனம், வயல) [190]

**கழனி :—**

கனைத்திழியுங் கழனி, செந்நெல் விளை கழனி, சேலுலாங் கழனி, செந்நெற் கழனி, பொழில் தழுவிய கழனி.

**செய் :—**

செய்த்தலைக் கமலம் மலர்ந்து.
செய் (வரம்பு)

**பணை :—**

தண்பணை; சேண்பணை;
பூம்பணை

**பழனம் :—**

அல்லியம் பூம்பழனத்(து)—ஆமூர்.

கெண்டையுங் கயலும் உகளு நீர்ப்பழனம்; செங்கழு நீர்ப் பழனம்; தாட்டரும் பழனம் (தாள்தரும் பழனம்—முயற்சிக்குத்தக்க பலனைத் தரும்.)

வண்டு அறை (பொழில்) பழனம்.

வயல் :—

அணி நீர் வயல்.
செஞ்சாலி வயல்.
சேலாடும் வயல்.
சேலுகளும் வயல்.
சேலுலாம் வயல்.
வாளைகள் குதிகொளும் வயல்.
வயல்சூழ் தில்லை.

## 188. வரலாறு [191]

கோழி வேந்தன் 20-8

### (1) கோழி—கோழியூர் :—

திரிசிராப்பள்ளியை அடுத்த உறையூரில் பட்டத்து யானை தெருவில் போகும்பொழுது கோழி ஒன்று அந்த யானையின்மீது பாய்ந்து யானை மேலே செல்லாதவாறு செய்தது. கோழி யானையைக் கொத்தித்தடுத்த காரணத்தால் உறையூருக்குக் "கோழியூர்" என்ற பெயர் வந்தது.

### (2) சிலந்தி சோழன் ஆனது :—

சிலந்தியை அரசாள்க வென்(று) அருள் செய்த தேவ தேவீசனே! 23-3

திருவானைக் காவலில் நாவல் மரத்தடியில் எழுந்தருளிய சிவபிரானுக்கு ஒரு சிலந்தி தன் வாய்நூலால் பந்தலிட்டு, பூசித்து வந்தது. யானை ஒன்று, பூசிக்க வந்தபோது சிலந்தி இட்ட பந்தலைக் கலைத்துவிட்டுப் பூசித்தது. பந்தல் அழிந்து போனது கண்டு சிலந்தி கோபித்துப் பூசிக்க வந்த யானையின் துதிக்கையுள் நுழைந்து அதனைக் கஷ்டப்படுத்தியது. யானை நோய் தாளாமையால், சிலந்தி குடைந்த தன் மண்டையைத் தரையில் மோதிற்று. அதனால் சிலந்தி, யானை இரண்டும் இறந்துபட்டன. மறுபிறப்பில் சிலந்தி அரசவமிசத்திற் பிறந்து "கோச்செங்கட் சோழன்" என்னும் பெயருடன் அரசாண்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய "கோச்செங்கட் சோழ நாயனார்" வரலாற்றில் காணலாகும்.

"சிலந்தியும் ஆனைக்காவலில் திருநிழற் பந்தர் செய்து, உலந்தவண் இறந்தபோதே கோச்செங்கணனுமாகக் கலந்த நீர்க் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே"

[அப்பர் 4—49—4.]

சோலையில் இருந்த சிவலிங்கத்தை ஆனை பூசித்த காரணத்தால் அந்தச் சோலை இருந்த ஊருக்குத் "திரு ஆனைக்காவல்" என்ற பெயர் வந்தது.

**(3) தில்லையில் திருமால் வரங்கிடந்தது :—**

"அருளென்று ஒளிமால் முன்னே வரங்கிடக்க 20-5.

முப்புரங்களையும் செயித்தவனுடைய திருவடிகளைக் காணவேண்டித் திருமால் பூமியை இடந்து புகுந்து, அகங்கார முகத்தினால் அறியப் படாமையாலே, திருவம்பலத்திலே புகுந்து, "நீயே இரங்க வேண்டும், எந்தாய்" என்று வேண்டிக் கொள்ள அதற்குச் சிறிதிரங்கிப் பெருமான் ஒரு திருவடியைக் காட்டியருள மற்றத் திருவடியையுங் காட்டியருள வேண்டுமென்று மாயவன் தில்லை அம்பல முன்றில் புகுந்து வரங்கிடந்தான்.

"புரங் கடந்தான் அடிகாண்பான் புவி விண்டு புக்கறியா(து), இரங்கிடு எந்தாய் என்று இரப்பத் தன் ஈசனுக்கு என் இரண்டு, கரங்கள் தந்தான் ஒன்று காட்ட மற்றாங்கதுங் காட்டிடு என்று, வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றில் அம்மாயவனே !"

—திருக்கோவையார். 86.

**(4) திருமால் சக்கரம் பெற்றது :—**

"மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன் 29-9.

ஆயிரம் பூக்கொண்டு திருமால் சிவபிரானைச் சக்கரம் பெறவேண்டி வழிபட்டார். ஒருநாள் ஒரு பூக்குறையத் தம் கண்ணையே பறித்து மலராக இட்டுப் பூசித்தார். இதனால் சிவபிரான் மகிழ்ந்து சக்கரத்தையும் கண்ணையும் அருளினார்.

(5) கருடன் சிறகு அறுபட்டது :—

"கருடன்..........மிகை செகுத்தோன் 5- 10.

கருடனது இரண்டு சிறகுகளும் *அறுபட்டன.

"புள்ளரசைக் கொன்று உயிர்பின் கொடுத்தார் போலும்.

—அப்பர்-6-53-8.

"புள்ளரையன் உடல் தன்னைப் பொடி செய்தானை"—

—அப்பர்-6-26-3.

சிவபராக்கிரமம்

(6) இராவணனுக்கு வாளும் நாளும் ஈந்தது :—

இராவணன் திக்கு விசயம் செய்தபோது அவனது தேர் கயிலைக்கு நேராக வந்தபோது அசையாமல் நின்று விட்டது. இராவணன் மலையை எடுத்து எறிய வேண்டும் என்று தன் இருபது தோள்களாலும் தூக்கி எறிய முயன்றான். அதனை அறிந்த சிவபெருமான் தமது கால் விரல் ஒன்றின் நகத்தின் நுனியால் மெல்ல ஊன்றினர். இராவணன் மலையின்கீழ் அகப்பட்டு நசுங்கிக் கதறி அழுதான். பின்னர் அவன் சாமவேதம் பாடப் பெருமான் அவன்மீது இரங்கி அவனுக்கு வாட்படையும், வாழ்நாளும் அருளினர்.

(7) உபமன்யு முனிவருக்குச் சிவன் பாற்கடல் ஈந்தது :—

வியாக்கிரபாத முனிவரின் குழந்தையான "உபமன்யு முனிவர்" தாய் மாமனாகிய வசிட்டர் ஆசிரமத்துக் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்தார். பின்பு தந்தையின் ஆசிரமம் வந்தபோது அத்தகைய பால் வேண்டி அழுதார். தந்தை குழந்தையை நோக்கிச் 'சிவனை வேண்டுக' எனச்

---

* கலுழன் மன்னிருஞ் சிறையோ ரிரண்டையும் வன்றிறம் பெருவலியினன், லன்ன காலையில் வெய்ய வீரனறுத்து வீழ்த்தி யழன் றனன்.

—வாயுசங்கிதை.

சொல்லக் குழந்தை அங்ஙனமே வேண்டப் பெருமான் குழந்தையின் அன்பைக் கண்டு பாற்கடலையே வரவழைத்துக் குழந்தைக்கு உண்ணத் தந்தார்.

[ஒளிநெறியில் "ஒப்புமைப் பகுதியும்" பார்க்க.]

## 189. வலை [192]

என் கண் வலைப்படும் இக்கருணையிற் பெரிய தொன்றுளதே.

(என் - கருவூர்த் தேவர்).

## 190. வழி [193]

"பிதுமதி வழிநின்று" 2.6

(பிதுமதி - பெருமையினை உடைய அறிவு)

(பிது - பிதா)

[மநு தர்ம சாத்திரத்தின் வழி நின்று].

## 191. வழிபாடு (பூசை) [194]

(1) "தூவி நீரொடு பூவவை தொழுதேத்து கையினராகி மிக்கதோர் ஆவி உள் நிறுத்தி அமர்ந்தூறிய அன்பினராய்த் தேவர் தாந்தொழ."

(2) நின்று நினைந்து இருந்து கிடந்(து) எழுந்து தொழும்.

## 192. வாத்தியம் [195]

[சிவபிரான் பகுதியில் "சிவனும் வாத்தியமும்" தலைப்பு 76 பார்க்க.]

கின்னரம், குழல், சகடை, சங்கம், தமருகம், துடி, துந்துபி, பறை, முழவம், மொந்தை, யாழ், வீணை இவை கூறப்பட்டுள.

கின்னரம், முழவம், யாழ், வீணை இவை கீழ்க் கோட்டூரில் ஒலித்தன.

(2) இன்னரங் கலந்தொலிப்ப மந்திரகீதத் தீங்குழலோசை எங்கும் எழுந்தது திருவிடை மருதூரில்.

குழல் ஒலிமிக்க எழுந்தது திருவாரூரில்.

(3) குழல் ஒலி, யாழொலி முழங்க பரமன் நடம் புரிந்தனர். தேர் விழாவில் குழல் வாசிக்கப்பட்டது.

(4) சகடை (ஜயகண்டையின்) பேரொலியும், சங்கத்தின் முழக்கும் கீழ்க்கோட்டூரில் கேட்கப்படும்.

(5) தமருகம் (துடி) ஒலியும், யாழொலியும், வீணையொலியும் கேட்கப்படும் கீழ்க்கோட்டூர்.

(6) துடி, துந்துபி, குழல், யாழ், மொந்தை இவை ஒலிப்பப் பரமன் நடம் புரிவர்.

(7) பறை ஒலிக்கப் பன்றியின்முன் ஓடினர் பெருமான்.

(8) நந்தி கையால் முழவம் வாசிக்கப் பெருமான் நடம் புரிவர்.

(9) தஞ்சையில் மகளிர் தத்தம் மாளிகையில் இரவில் விரலினால் யாழொலி மீட்டி இனிய இசையை எழுப்பினர்.

(10) நரம்புகளை உடைய வீணை கொண்டு இசை எழுப்புவர்.

## 193. விசயனும், சிவனும் [196]

வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு காலில் செருப்புடனும் கையில் கத்தியுடனும், புலித்தோல் உடையுடனும் மகேந்திரமலை அருகே பன்றிப் பின் வேடனாக உமாதேவி காணச் சென்றனர் பெருமான்.

குறிப்பு:—அருச்சுனர் சிவனை நோக்கித் தவம் செய்தபோது "மூகாசுரன்" என்னும் அசுரன் ஒரு பன்றி வடிவாய் அவனைக் கொல்ல வந்தான். அப்போது சிவன் வேடனாக வடிவுகொண்டு வந்து மூகாசுரனைக் கொன்று அருச்சுனனைக் காத்தனர்.

## 194. விழா (திருவிழா) [197]

கோடைத் திரைலோக்கியம், திருவாரூர், தில்லை, திருப்பூவணம் என்னும் தலங்களில் நடைபெற்ற திருவிழா கூறப்பட்டுள்ளது.

(1) திருவாரூர் :—இத் தலத்தில் குழலொலி, யாழொலி, கூத்தொலி, ஏத்தொலி எங்கும் பெருகி நின்றன.

(2) தில்லை :—இத் தலத்தில் தேர்விழாவின்போது தெருவில் கூத்தொலி, ஏத்தொலி, வேதத்தின் பேரொலி எங்கும் கடலொலி போலப் பெருகி நிற்கும். அங்கு நடைபெறும் "திரு ஆதிரை" விழாவில் நாராயணர், பிரமன், அக்கினி, சூரியன், இந்திரன் இவர்கள் எல்லாரும் வந்து பெருமானைத் தரிசிப்பர். தில்லைத் தேர்விழா சிறப்பாகக் கூறப்பட்டு உள்ளது.

## 195. திருவிழாவும் அடியார்களும் [198]

* திருப்பூவணத்தில் திருவிழாவின்போது பாடுபவரின் பின் செல்வோர் பாடல் மீதுள்ள ஆசையால் தம் வசம் இழந்து கீழே விழுவர். அப்போது தலைமுடி அவிழும். அவிழ்ந்த முடியை எடுத்துக் கட்டிக் கொள்வர்.

## 196. விளக்கு [199]

அழலொளி விளக்கு.
இரவிருள் கிழிக்க நிலைவிளக்கு.
ஒளி வளர் விளக்கு.
சுடர் மணி விளக்கு.
தூண்டு விளக்கு.
இவை கூறப்பட்டுள.

## 197. வினை [200]

அருவினை.
கடுவினை.
தீவினை.
புழுங்கு தீவினை.
வல்வினை நோய்.
இவை கூறப்பட்டுள.

---

* திருவிழாவின்போது பாடிக் கொண்டே பின்னே செல்லும் வழக்கம் குறிக்கப்பட்டுள்ளது.

## 198. வெள்ளம் [203]

மது மதி வெள்ளம்.
யோக வெள்ளம்.
இவை கூறப்பட்டுள.

## 199. வேள்வி [204]

* அஞ்சு வேள்வி ஆறங்க நான்மறையோர்.

ஆகுதி வேட்டுயர்வர் மூவாயிரவர். ஆவே படுப்பார் அந்தணாளர். (கோமேத யாகம்).

ஒழிவிலா வேள்விப் (பெரியவர்) ஓமகுண்டத்து......... தீத்திரள் தீமெய்த் தொழிலார் மறையோர் ஓவாமுத்தீ அஞ்சு வேள்வி கிற்போம் எனத் தக்கன் வேள்வி புக்(கு) எழுந்தோடிக் கெட்ட அத்தேவர்கள்.

முடியா முத்தீ வேள்வி மூவாயிரவர்.

† முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர்.

## 200. வைதசொற்கள் [205]

ஆரட்டர்; அருக்கர், அவியாப் பாவப் பெருக்கர், அள்ளல் வாயகள்வர், இருளர், ஊத்தைப் பிணுக்கர், எக்கர், எத்தர், கச்சர், கயவர், கள்ளர், குண்ட மிண்ட எத்தர்,

---

* இது பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதுர் யாகம், பூதயாகம் என ஐந்து. வேதம் ஓதுதல் பிரம யாகம் என்றும், நித்தியாக்கினி வளர்த்தல் 'தேவயாகம்' என்றும், விருந்தோம்புதல் மானிட 'யாகம்' என்றும், பலியிடல் 'பூத யாகம்' என்றும் கூறப்படும். —திருவிசைப்பா-திருப்பனந் தாள் பதிப்பு-பக்கம்-254-1964.

† முத்தீ ;—காருகபத்யம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்ற மூன்று வைதிகாக்கினி.

கொத்தைச் சிதம்பர், கோதை வாய்ப் பீறற்பிண்டர், சழக்கர், சாடர், சிணுக்கர், சிதம்பர்; சீத்தை ஊத்தைப் பிணுக்கர், திட்டை முட்டைப் பெண்ணர், திருவிலா உருவினர். துட்டர், தூர்த்த வார்த்தைத் தொழும்பர்; தெண்ணர், நாய்கள், பிச்சர், பிசுக்கர், பிட்டர், பிண்டர், பிணுக்கர், பிரட்டர்; பீறற்பிண்டப் பிணங்கள், புத்தராதி பொக்கர், பேடர், பேய்கள், பொல்லாக் கயவர், மிண்ட எத்தர்.

பிற ஒளி நெறியிற் காண்க.

## 201. சிவராசிகள் [206]

### 1. ஊர்வன

(1) பாம்பு

1. அரவம் :—
அரவம் ஆட......
அழகன் ஆடுமே.
ஆடரவம் துவளுமே.

2. அரவு :—
அரவு நாண்.
ஆடரவாட.
ஆடி வருங் காரரவு.
காரரவு.
வரியர(வு) ஆட.

3. அரா :—
நச்சரா.

4. நாகம் :—
ஐந்தலைநாகம் (வாசுகி)
மணியுமிழ் நாகம்.

5. பாந்தள் :—
பாந்தள் பூணாரம்
பைய செம் பாந்தள்.

6. பாம்பு :—
கட்செவி......பாம்பு.

கணம் விரி குடுமிச் செம்மணிக்கவை நாக்கறை யணல் கட் செவிப் படுகுவைப் பணம் விரி துத்திப் பொறிகொள் வெள்ளெயிற்றுப் பாம்பணி பரமர்.

(கூட்டமாய் விரிந்த தலைகளில் உள்ள சிவந்த மாணிக்கங்களையும், பிளவுபட்ட நாக்குகளையும், விடம் பொருந்திய மேல் வாய்களையும், கண்களாகிய காதுகளையும், பிளந்த வாய் களையும், விரிந்த படத்தில் புள்ளிகளையும், வெண்மையான பற்களையும் கொண்டுள்ள பாம்பை அணிந்துள்ள பரமர்).

(2) சிலந்தி

ஓர்* சிலந்தியை அரசாள வைத்த பரமர்.

## 2. நீர்வாழ்வன

1. **மீன்வகை :—**

கயல், கெண்டை, சேல், வரால், வாளை இவை மீனைக் குறிப்பன.

**கயல் :**

கயற்கணாள் இமவான் மகள்.
கெண்டையுங் கயலும் உகளு நீர்ப்பழனம்.
சேலுங் கயலுந் திளைக்கும் கண்ணார்.
கேதகை நிழலைக் குருகென மருவிக் கெண்டைகள் வெருவு.
சேலாடும் வயல்.
தீம்புனல் பாய்ந்து இளவரால் உகளும் மடைகொள் வாளைகள் குதிகொளும் வயல்.

2. **முதலை :—**

முதலை எற்று நீர்க் கிடங்கு. (முதலை அகழியில் இருக்கும்)

3. **பறவை :—**

(1) **அன்றில் :—**

அன்றில்.........என்மேல் பகையாட வாடும் எனை.
இது தலைவனைப் பிரிந்த தலைவியின் கூற்று.
(அன்றில் என்னும் பறவை காமத்தை வளர்க்கும்)

(2) **அன்னம் :—**

அன்ன நடையார்.

(3) **கருடன் :—**

அந்தரப் புட்(கு) அரசுக்கு அரசே !

---

*கோச்செங்கட் சோழனைக் குறிக்கும். வரலாறு என்னும் தலைப்பு பார்க்க.

(ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பறவைகளுக்கு அரசாகிய கருடனுக்கு அருள் செய்த தலைவனே !)

கருடன்......மிகை செகுத்தோன்.

கருடனது சிறகை வெட்டிப் பின்பு உயிர் அளித்தார். பெருமான்.

''வரலாறு'' என்னும் தலைப்புப் பார்க்க.

(4) கழுகு :—

கழுக்களாய பிரட்டர்.

(5) கிளி-கிள்ளை-தத்தை :—

ஒண்மைபங்கிளி.

கிள்ளை பூம்பொதும்பிற் கொஞ்சி மாம்பொழிற்கே கெழுவு கம்பலை செய் கீழ்க்கோட்டூர். தத்தை—தத்தையங் கனையார்.

(6) குயில் :—

கோதைமார் குயில் போன் மிழற்றிய கோல மாளிகை.

(7) குருகு :— (நீர்ப்பறவை)

கேதகை நிழலைக் குருகென மயங்கும் கெண்டைகள் (தாழை நிழலைக் கண்டு குருகு என்று அஞ்சும் கெண்டை மீன்கள்).

(8) கோழி :—கோழி வெல் கொடியோன், (முருகவேள்)

(9) மயில் :—இளமயில்.

தூவி நற்பீலி மாமயிலூரும் சுப்பிர மண்ணியன்.

(10) வண்டு :—

(1) இளரொளி மணி வண்(டு) அறை பொழிற் பழனம். சடைமேல் புரிதரு மலரின் தாது நின்(று) ஊதப் போய் வரும் தும்பிகாள் ! .....மணியம்பலவனைக் கண்(டு) என் மனத்தையுங் கொண்டு போதுமினே (சடைமேல் பூக்களில் மகரந்தப்பொடிகள் விழும்படி ரீங்காரம் செய்யப் போய்வருகின்ற வண்டுகளே! கீழ்க்கோட்டூர் என்ற தலத்தில்

உள்ள தலைவனைக் கண்டு அவனிடம் என் மனத்தையும் பெற்றுக்கொள்ளும்படி செய்யுங்கள்).

(இது தலைவியின் கூற்று.)

சிறையணி வண்டு.
தென்னா ! என்று வண்டு பாடும் தென் தில்லை.
பொறிவரி வண்டினம் பாடும்.
பொழிலகங் குடைந்து வண்டு உறங்க.
மூவாயிரவர்......ஓதிய நான்மறையைத் தெத்தே யென்று வண்டு பாடும் தென் தில்லை.
வண்டார் குழல்.
வண்டார் கொன்றை.
வாரணி நறுமலர் வண்டு கிண்டு பஞ்சமம் செண்பகம்.
தேனமர் பொழில். (தேன்-வண்டு)

4. மக்கள் :—

"மக்கள்" என்னுந் தனித்தலைப்பு. 159 பார்க்க.

5. விலங்கு :—

(1) ஆடு :—மறியேறு சாரல் மகேந்திர மாமலை.

(மறியேறு-மலை ஆடுகள்)

(2) ஆன்-(பசு) :—

ஆன் அஞ்சு. தெறுக்கள் (பசுவின்
கன்று பிரிகற்றா. கூட்டம்)

(3) எருமை (மேதி)

மடுக்கமலம் கரும்பொடு மாந்து மேதிகள்.
(எருமைகள் தாமரைப் பூக்களைக் கரும்புடன் உண்ணும்).

கடா :—

மைக்கடா (எருமைக்கடா) அனைய என்னை.
(எருமைக்கடா போன்ற என்னை)
(என்னை-கருவூர்த்தேவரைக் குறிக்கும்)

(4) குதிரை :— (புரவி)

குதிரை மாவொடு தேர். வேதப் புரவித்தேர்.

(5) சிங்கம் :—

1. ஏறு :— 2. மடங்கல் :—

ஏறு சேவகனுமாம். தடம் கல்லுறையும் மடங்கல்.

மடங்கலாய்க் கனகன் மார்பு கீண்டானுக்கு அருள்புரி வள்ளலே! (இரணியன் மார்பைக் கிழித்த நரசிங்கத்துக்கு அருள் புரிந்தவனே)

(6) நாய் :—

கடிநாயுடன் கை வளைந்தாய் நாய் (அடியார் அடிநாய்)

(7) பன்றி :—

1. ஏனம் :—

ஏன மாமணிப் பூணணி மார்பனே.
கானே வரும் முரண் ஏனம்.

2. கேழல் :—

கேழலும் புள்ளுமாகி நின்றிருவர்.

கேழற் கடும்பின் நெடும் பகற்கண் நடந்த வேடா!

3. பன்றி :—

பன்றிப் பின் ஏகிய மறவனே!

4. வராகம் :—

வராக முன்னோடி விளியுளைப்ப நடப்பாய்.

(8) புலி :—

இரும்புலி.

உடையும் பாய் புலித்தோல்.

சூழ்ந்த பாய் புலித்தோல்.

பாயிரும் புலி.
புலித்தோல் ஆடை.
புலித்தோல் பியற்கிட்டு.
புலியதள் ஆடை.

(9) மா (விலங்கின் பொது) :—

மா ஏந்து சாரல் மேகந்திரம்.

(10) மான் - (மறி) :—

இளமான்.

ஏர்வக்கை மான் மறியன்.

கலையார் மறி.

மறியேறு சாரல் மகேந்திர மாமலை (மறியேறு-மான்கள்)

மானைப் புரையும் மடமென் நோக்கி.

மானமர் தடக்கை வள்ளல் தன் பிள்ளை.
வெருண்ட மான் விழியார்.

(11) யானை:

1. ஆனை:—வினையா மத மாறுவெள்ளானை.

2. கரி:—கருமால் கரி.
கவந்திகை கரி யுரி.
கவளமா கரிமேல்.... வருங்கள்வன்.

3. களிறு:—இளங்களிறு (இங்கு முருகரைக் குறிக்கும்)
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம்.
படுமலமும் மிடவயிறும் உடைய களிறு.

(இங்கு விநாயகரைக் குறிக்கும்).

(படு ஒழுகுகின்ற மதநீரையும் மதத்தையும்,
மிடா பானை போன்ற வயிற்றையும்
உடைய கணபதி)

4. பிடி:—கொம்பிளம்பிடி.

5. மா:—குதிரை மா வொடு தேர்.

6. யானை:—போழ்ந்தி யானை. (போழ்ந்தி - பிளந்து.)

(12) விடை:—

1. இடபம்:—இடபம் ஏறி.

2. எருது:—இடுவது புல் ஓரெருதுக்கு.
எருது வாகனனும்.

3. ஏறு:—ஏறணி கொடி.

4. காளை:—இளங்காளை.
(இங்குக் காளை முருகரைக் குறிக்கும்.)

5. சே (எருது):—

சேக் காதலித்து ஏறும்.
சேவின் மணி (எருதின் கழுத்தில் கட்டிய மணி)
சேவேந்து வெல் கொடியானே!

6. **பெற்றம்** :—வை அவாம் பெற்றம்.

(வை-வைக்கோல்)

(அவாம்-அவாவும்-விரும்பும்)

7. **விடை** :—[சிவபிராற் பகுதியில் "சிவன் **வாகனம்**" என்னும் தலைப்புப் பார்க்க]

அடல் விடைப் பாகா !
அம்போதத்து அருகு பாய் விடையம் வரிசை.

[அம்போதம்-மேகம்]

காய்சின மால் விடை.
கொல்லை விடை ஏறி.
மழவிடை மேல் வருவானை.
மால் விடை ஏறி.
விடைப் பாகன்.
விடையது ஊர்வது.
விடையானடி.

# அருஞ்சொற்பொருள் அகரவரிசை

[எண் : செய்யுள் எண்]


அக்கடா—வியப்புச்சொல் 9-7
அகடு-நடு இடம் 2-2
அகத்திபொட்டு-அகத்திமலர்—மொட்டு 22-10
அகம் - மனம் 17-7
அகலம் – உலகம் 8-11
மார்பு 2-7
அங்கு [சிவலோகம்] 27-11
அங்குலி—விரல்கள் 16-4
அச்சோ—அதிசயக்குறிப்புச் சொல் 16-1
அசித்தல் - பரிகசித்தல் 4-5
அசும்பு – கசிதல் 9-10
அஞ்சலி-கும்பிடுதல் 28-5
அட்டமூர்த்தி-மண்; நீர், தீ, காற்று; ஆகாயம்; சூரியன், சந்திரன்; உயிர் ஆகிய எட்டும் கொண்ட வடிவினர் 29-3
அடாவண்ணம் - சேராதவகை 9-7
அடி - மூலம்;பிரணவம் 21-6
அடு - ஆதரவு 9-7
அண்டம்—அண்டத்தி லுள்ள தேவர்கள் 29-10
அணங்கு—ஆடு 9-10
அணம்-மேல்வாய் 8-1
அணவும் சேரும் 25-8
அணிமணி முறுவல் - அழகிய முத்துப்பல் 2-8
அணுக்கர்-அணுகி இருக்கும் அடியார் 4-4
அத்தன் - தந்தை 24-7
அதள்-தோல் 26-8
அதித்த-அதிர்த்த; ஆரவாரித்த 24-8
அந்தகன்-எமன் 27-7
அந்தி - செவ்வானம் 17-6
அந்தோ - ஐயோ 28-5
அம்பலத்தாடிக்-கல்லா / அம்பலத்தாடிக்(கு+அல்லா } இருவழியாய் பிரிதல் 4-4
அம்பலம்—ஆகாயம் 15-6
அம்பலவர்க்கு+அல்லார் / அம்பலவர்க்கல்லார் } இருவழியாய் பிரிதல் 4-9
அம்புலி-அம்+புலி-அழகுபுல்கி இருப்பவன் [சந்திரன்] 20-4
அம்மல்ஓதி—அழகியவளப்பமாகிய கூந்தலை உடையவள் 28-4
அமர் மடங்கல்-போர் செய்யும் சிங்கம் 3-9
அமரித்தல்—பொருந்துதல் 8-8
அமளி—படுக்கை 24-3
அமிர்தம் – பால் 16-10
அயர்தல்-தளர்தல் 10-6
அயர்வு—சோர்வு 28-4
அரட்டர்—குறும்பு செய்பவர் 4-3
அரட்டு-குறும்பு 4-3
அரவிக்கும்-ஆரவாரத்திற்கு இடமாகும் 14-4
அருக்கர்—சுருங்கிய அறிவினர் 4-7
அருக்கன்-சூரியன் 28-9
அருமருந்து-திருவருளாகிய அரியமருந்து 16-11

அருமறைநகீதம்-சாமவேத கீதம் 15-2
அல்-இரவு 24-1
அலகு-பரப்பு 16-1
,, - துடைப்பம் 20-9
அலங்கல்-ஒளி செய்தல் 10-10
,, - மலர்மாலை 4-2
அலச - வருந்த 9-7
அலந்து - அலைந்து 2-6
அலம்ப - ஒலிக்க 10-1
அலமந்து - துன்புற்று 21-7
அலமருதல் - கலங்குதல் 10-6
அலறேன்; பண்ணி நின்று உருகேன் இம்மூன்றும் மனம், மொழிமெய் என்பனவற்றில் நிகழ்வன 13 2
அலைக்கும் - ஒலிக்கும் 16-2
அவம் – வீண் 5-5
அவனி - உலகம் 11-1
அவிய - ஒழிய 27-7
அழல் ஆழ்பு உருவம் - நெருப்பில் வைத்துச்சுட்டமட்கலம் 17-7
அழிவு அழரு - மிக்க அழகு 17-1
அளாம் - கலந்த 13-9
அளையா - அளைந்து; கலந்து 19-5
அள்ளல் - நரகம் 4-7
அறவன் - தரும வடிவினன்; அறம் உபதேசிப்பவன் 28-8
அறிவுடையாளரின் மிக்கார் இருவர் பதஞ்சலி; வியாக்கிரபாதர் 26-10
அறை-சொல்லுதல் 25-10
அறையும்-ஒலிக்கின்ற 27-1
அனலம்–தீ 15-6
அனிலம்-காற்று 15-6
ஆகுதிவேட்டு-சிவாக்கினியை வளர்த்து 20-2
ஆடகம்-பொன்-இது நால் வகைப் பொன்களுள் ஒன்று; சாதரூபம்; கிளிச்சிறை; ஆடகம், சாம்பூநதம் என்பன 19-8
ஆண் ஆடுகின்றவா - ஆண்மைத் தனத்தைச் செலுத்துகின்ற விதத்தை 27-5
ஆத்தனை-ஆத(ன்)னை.....பசுத்தன்மையை (தற்போதத்தை) 25-7
ஆதர்-அறிவில்லாதவர் 4-5
ஆதரவு-அன்பு 26-1, 2
ஆதனேன்-அறிவில்லாத நான் 17-7
ஆதிரைநாள்-மார்கழித் திருவாதிரை நட்சத்திரம் 29 11
"ஆதிரை நாளுகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே" [அப்பர்] 29-12
ஆம் – தண்ணீர் 6-6
ஆயஇன்பம்-மேலான இன்பம்; பேரின்பம் 28-10
ஆர் - ஒளி 12-1
ஆர்வம் - பேரன்பு 29-6
,, - அன்பு 25-8
ஆரணம் – காவல் 16-1
ஆரா அமுது - தெவிட்டாத அமுது 24-1
ஆலிக்கும் - களிக்கும் 29-9
ஆலை - கரும்பாலை 11-10
ஆவா - அந்தோ 26-10, 27-7
,, - ஐயோ 26-8
ஆள் – அடிமை 21-1
ஆளோ - ஆளாக - அடியவனாக 21-9
ஆன் அஞ்சு - பால், தயிர்; நெய்; கோஜலம்; பசுவின் சாணம் (பஞ்சகவ்வியம்) 20-4

இஞ்சி – மதில் 16-1
இட்டிகை - செங்கல் 17-8
இடிய – அழிய 28-7
இடுத்திரு - வைப்பு நிதி 9-8
இணங்கு - ஒப்பு 4-1
இந்தனம் - விறகு 9-2
இந்திரஜாலம் - இல்லாத ஒரு பொருளை இருப்பதாகக் காட்டுவதும்; கண்ட பொருளைக் காணாதவாறு செய்வதுமான ஒரு வித்தை; கண்கட்டு வித்தை 5-5
இமைத்தல்-ஒளி வீசுதல் 17-4
இயல் - பொருந்திய 14-4
இரவி - சூரியன் 19-9
இருட்பிழம்பு-இருட்கூட்டம்; இருள்மிகுதி 1-2
இருளர் – அஞ்ஞானிகள் 4-10
இலை – இலைபோன்ற ஒருவகை மதில் உறுப்பு 16-1
இலைவேம்பு - வேப்பங் கொழுந்து 21-1
இழுது – இளகிய 16-3
இற – நெரிய 20-7
இறந்தமை - கடந்தமை 14-4
இறுமாக்கும் - பெருமை பேசும் 6-8
இனம் – கூட்டம் 27-7
உக்க - சிந்திய 16-3
உகளுதல் - பாய்தல் 25-1
உகளும் - தாவும் 10-10
உண்டு - அனுபவித்து 2-6
உணர்வு நூல் – ஞான நூல் 11-2
உத்தரியம் - அங்கவத்திரம், மேலாடை 25-4
உதரபந்தனம் - அரைப்பட்டிகை 22-6
உதரம் – வயிறு 2-7
உதித்தபோழ்தில் இரவிக் கதிர் - உதயகாலத்து இளஞ் சூரியகிரணம் 24-8
உந்தி வளைப்பு – கொப்பூழ் உள்ள வளைந்த சுழி 2-6
உய - உய்ய – பிழைக்க 28-5
உயிர்ப்பு - சுவாசம் 25-6
உலப்பு - அழிவு 1-1
உழிஞை - மதில் 7-8
ஊறல் – சுரத்தல் 4-7
ஏக்கர் - இறுமாப்புடையவர் 4-8
எடுத்தபாதம் - தூக்கியபாதம்; குஞ்சித பாதம் 24-5
எண்ணுதல் - மதிக்கப்பெறுதல் 27-11
எத்தர் - வஞ்சகர் 4-8
எய்ப்பு - இளைப்பு; துன்பம் 28-2
எல் – ஒளி 9-7
எழிலைஆழும் செய்கை-அழகைத் தோற்கச் செய்யும் வேலைப்பாடு 17-7
என்கோ - என்று சொல்லும்படி 17-8
என்பித்தாய் - என்று சொல்லுமாறு செய்வித்தாய் 21-4
எண்ணாதே – என்று கூறாமல் 27-1
எனை - ஏனைய (மற்றைய பொருள்கள்) 16-7
ஏடி – அடியே 27-4
ஏம்பலித்திருக்க - வருந்தியிருக்க 16-8
ஏர்வு – அழகிய 25-8
ஏல்வுடை - எழுந்தருளியுள்ள 25-1
ஏழிருக்கை - சாட்டியக்குடியில் உள்ள கோயிலின் பெயர் 15

ஏறு - ஆண்சிங்கம் 13-5
ஐ - அழகு 17-1
ஐம்மதி - அழகிய சந்திரன் 27-2
ஐய - ஐ அழகு 13-4
ஐய - அழகான 22-8
ஐவர் - ஐம்புலன் 11-5
ஒட்டார்-இடங்கொடார் 27-2
ஒருப்பாடு - கருத்து 18-7
ஒளி - பற்று 5-3
ஒன்றி-ஐம்புலன்களும் ஒன்று பட்டு 21-5
ஒன்று - சிறிதும் 6-6
ஓத்து - வேதம் 21-6
ஓதி - கூந்தல் 28-4
ஓர்தல் - தெளிதல் 12-6
ஓலம்-அபயமளிக்க வேண்டும் என்ற குறிப்புமொழி 29-5
ஓவாது - ஓயாமல் 21-10
கங்கணம் - காப்பு 2-8
கங்குல் - இரவு 16-4
கச்சர்-வெறுக்கத் தக்கவர் 4-9
கட்செவி - கண்ணே காதாக உடையது (பாம்பு) 8-1
கடி - வாசனே 20-9
கடிஆர் - சிறப்பு மிக்க 19-2
கடிஇருள் - மிக்கஇருள் 15-4
கடுப்பு - கடுமை 3-7
கடைசியர் - மருதநிலத்துப் பெண்கள் 8-2
கண்டம் - துண்டு 1-3
கண்டன் - வீரன் 13-6
கண்டனர் - வீரர் 20-6
கண்ணிமார்கள் - கண்களை யுடைய மாதர்கள் 26-9
கணபதி பின்னிளங்காளை - முருகர் 7-5
கணம் - கூட்டம் 27-9
கணி - மதிக்கத்தக்க 2-8
கதி - புகலிடம் 15-4, 25-5
கதியில் - நடனத்தில் 15-4
கந்தர்ப்பர் - கந்தர்வர் 15-4
கம்பலே - ஆரவாரம் 10-1
கமல வர்த்தனே - கமலாசனம் 15-4
கரிகாடு - சுடுகாடு 15-3
கரு - பிறவி 2
கரும்தடாகம்-பெரிய தடாகம் 26-5
கருவூர்த்துறைவளர்-கருவிலே பரவிநின்று வளர்ந்த 8-11
கல் - கற்பாறை, மலே 3-9
கலங்கல் - நீர்பாயும் மதகு 16-7
கலாம் - கலகம் 11-5
கலே - மேகலே 9-5
கவண் - கல்லறி கயிறு 3-7
கவந்திகை - கவளமாகிய உணவு 15-3
கவை - பிளவு 8-1
கழுக்கள் - கழுகுகள் 4-3
கழுது - பேய் 15-3
கள் - தேன் 25-3
கள்வன் - மனத்தைக் கொள்ளேகொள்பவன் 7-2
களபம் - வெண்சாந்து; விபூதி 9-5
களி - களிப்பு, மகிழ்ச்சி 3-3, 20-5
கற்பகம் - தேவலோகமரம்; வேண்டுவார் வேண்டியதை அளிக்கும் மரம் 29-5
கறங்க - ஒலிக்க 3-7
கறை - விஷம் 8-1
கன்று + ஆ = கன்ரு, கன்றை உடைய பசு 21-5
கார்அரவு - கரிய பாம்பு 27-2
காழ் - வயிரம் 16-4
காளாய் - இளமைப்பருவம் வாய்ந்தவனே! 3-3

கிடங்கு - அகழி 2-5

கிடை - தக்கை நெட்டி 11-4

கித்தி - மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று 10-11

இஃது ஒற்றைக் காலால் தத்தி-கடந்து விளையாடல்

கிழை - ஒளி 10-7

குடிகுடி - தலைமுறை தலைமுறையாக; வாழையடி வாழையாக; பரம்பரை பரம்பரையாக 29 2

குடுமி - உச்சி 3-3, 8-1

குண்டர் - கீழோர் 4-8

குண்டை - எருது 10-7

குரவன் - ஆசாரியன் 3 9

குருண்ட - சுருண்ட 22-3

குருள் - சடை 16 6

குவளை மலர்க் கண்ணி - குவளை மலர் மாலை; குவளை மலர் போன்ற கண்ணை உடைய பார்வதி 23-1

குவால் - குவியல்; கூட்டம் 16-6

குவை - குவியல் 16-3

குழைத்த - செழித்த 8-2

குறங்கு - தொடை 22-3

குறுகலர் - பகைவர் 13-6

கூடம் - மண்டபம் 8-10

கெந்தித்தல் - குதித்தல் 10-10

கெழுமுதல் - பொருந்துதல் 11-4

கேழல் - பன்றி 10-3

கைச்சாலும்-கசந்தாலும் 21-1

கைதை - தாழை 24-6

கை வளர்ந்தாய் - வளர்ந்தாய்; வளர்ந்து கொண்டாய் 3-6

கொட்டா - முழங்கி 27-3

கொடுத்து-சிவனடியார் குடிக்குப்பெண்கொடுத்து; இறைவனிடம் பேரன்பு செலுத்தியும் 29-2

கொண்டு - சிவனடியார்குடியிலிருந்து பெண் கொண்டு; இறைவன் அருளைப்பெற்று 29-2

கொத்து - பூங்கொத்து 24-7

கொத்தை - பாவிகள் 4-4

கொவ்வை - கொவ்வைப்பழம் 25-1

கோ - தலைவன் 29-5

கோடு - சங்கு; வரி 22-8

கோதைமார் - பெண்கள் 22-3

கோமளம்-இளமையழகு 28-7

கோல்வளை - அழகிய வேலைப்பாடமைந்த வளையல் 9-8, 27-3

கோழி - உறையூர் 20 8

கோள் - கொலை 28-9

கோறை - துவாரம் 4-1

சகடை - சகண்டை - துந்துபி என்னும் ஒரு முரசு 10-7

சங்கம் - சங்கு வளையல் 26-8

சசிகண்டம் - பிறைச்சந்திரன் 1-3

சடைத்தெண்டு - சடைக்கன்றை 10-7

சடை மொழுப்பு - சடைமுடி 17-1

சதி - தாள வொத்து 15-4

சதியிலா நிற்கதி - தாளவொத்தோடு கூடிய திருநடனத்தில் 15-4

சந்து - சந்தனமரம் 24-4

சரளம்-தேவதாருமரம் 16-11

சழக்கர் - வம்பர் 4-6

சா - சாதல் 21-10

சாட்கை - கோட்சொல்; நிந்தனை 4-6
சாடர் - சாடை பேசுபவர்; அற்பர் 4-6
சாதி - சாதிக்காய்மரம் 24-4
சாந்தம் - சந்தனம் 15-2
சாய் - நிறம் 12-7
[சாய்க்காட்டாய்]
(இத்தொடரில் உன் நிறத்தைக் காட்டாய் என தலத்தில் உள்ளவனை) 12-7
ஆக இருபொருள்
சார்வு - ஆதரவு 21-1
சாலி - நெல் 8-2
சாலேகம் - சன்னல் 14-5
சிகண்டா - (உச்சியில்) வைத்துள்ளவரே 1-3
சிட்டன் - மேலானவன் 29-3
சிட்டார் - சிட்டர் - பெரியோர் 27-3
சிணுக்கர் - மூக்கால் அழுபவர் 4-4
சித்தன்-மதுரை எல்லாம் வல்ல சித்தர் 15-8
சிதம்பர்-இழி செயல் புரிவோர் 4-4
சிந்துரம் - செவ்வொளி 7-7
சீயரோமணி சிறந்த ஒளியுள்ள மணி 2-1
சியர் என்பது சீர் என்பதன் திரிபு எதுகை நோக்கித் திரிந்தது 2-1
சிலை கோலி - வில்லை வளைத்து 22-9
சிறுகதலி-இளம் வாழைக்காய் 21-1
சீத்தை - கீழ்மகன் 4-4
சீர்த்தி - கீர்த்தி 4-5
சுரவா - தேவதேவனே 3-9
சுரிகை - கத்தி 3-7
சுருதி - பேதம 4-8
சுருதிப்பொருள்-வேதசிவ ஆகமப்பொருள்; சைவசித்தாந்த நுண்பொருள் 29-4
சுழியம் - உச்சிக் கொண்டை 10-2
சுனை - நீரூற்று 16-7
சூடகம் - கைவளையல் 19-8
சூழல் - இடம் 8-10,15-8
சூழல் - பக்கம் 16-4
சூழல் - சுற்றுப்புறம் 16-7
சூளிகை - நிலாமுற்றம் 19-7
செஞ்சாலி - செந்நெல் 12-7
செண்டடித்து - பந்து போல் அடித்து 4-9
செத்தல் - சாதலின் கண் 4-4
செதுமதி - அற்ப அறிவு; அழிதற்குக் காரணமான அறிவு 2-6
செம்மலோர் - பெருமையுடைய பெரியோர்கள் 28-4
செய் - வயல் 8-2
செயலுற்றூர் மதில்-வேலைப்பாடுகள் நிறைந்துள்ள மதில்கள் 28-5
செல்ல - முத்தி அடைய 19-3
செல்வாய் மதில்
(1) வாய்-பொருந்திய 24-1
(2) செல் - மேகம்
செல்வு இல்-(மனப்) போக்கு இல்லாத 4-7
செழுந்தடம்-செழுமையான குளம் 26-4
செழுந்தடம் மலர்-செழித்த பெரிய (தாமரை)
செற்று - அடித்து 22-9
சே-இடபம் 3-5, 8,27-10;
சேடு - பெருமை 4-6
சேண் - நெடுந்தூரம்; வானம் 28-2

சேண் ஆர்-மிக உயர்ந்த 27-5
சேணுதல்-வானத்தின் உச்சி 28-2
சேமம் - காவல் 2-11
சேவகன் - வீரன் 19-9
சைவம் - சிவத் தன்மை 13-4
சொக்கர் - அழகர் 4-8
ஞாங்கர் - பக்கம் 16-1
தகைத்த - தடுத்தாட்கொண்ட 5-4
தஞ்சம் - ஆதரவு 26-2
தடம் - குளம் 26-4
தண்டலை - குளிர்ந்த சோலை 15-8
தத்துநீர் - குதித்து ஓடும் நீர் 15-9
தந்திரி - நரப்பு 17-2
தபனியம் - பொன் 12-7
தம்பானை சாய்ப்பன்னூர் - தமது பானையை சாய்க்காமல் நீரை பிடித்து நிரப்புவது 21-2
தமருகம் - உடுக்கை 15-4
தரங்கம் - அலை 13-4
தரவு (பயன்) - தருதல் 3-9
தரளம் - முத்து 8-11
தலை - தலையன்பு 13-7
தலைப்பட்டால் - தோன்றினால் 13-7
தவளம்-வெண்மை 11-1, 23-1
தழை - வில்வம் 10-6
தனதன் - குபேரன் 1-7
தனபதி - குபேரன் 15-5
தாணு - அசைவில்லாதவன் 15-7
தாள் - முயற்சி 15-10
தானவர் - வித்தியாதரர் 22-2
புக்கு - புகலிடம் 9-7
திசை திசையென - எவ்விடத்தும், திக்குகள் தோறும் 29-6
திட்டை முட்டைப் பெண்ணர் - வம்புச் சொற்கள் பேசும் பெண் தன்மை யுடையவர் 4-10
(திட்டை முட்டை-இவை வசை மொழிகள்)
திணர் - தாறுகள் 8-1
திணி - மிகுந்த 2-8
திணிமணி - நிறைந்த அழகு 2-8
திரு இலா - பாக்கியமில்லாத 4-6
திருக்கடைக் காவல் - திருக்கோயிலின் வாயில்படி 2-9
தில்லைக்கு - தில்லையில் உள்ள அடியார்க்கு 24-1
திவலை - துளி 10-1
திவள மாளிகை -
(1) வேலைப்பாடு அமைந்த மாளிகை 23-7
(2) விளக்கமுள்ள மாளிகை 7-2
திளை - அனுபவிக்கும் 24-8
நெருங்கிய 7-6
திறம் - தன்மை 12-6
திறம்பிய - மாறுபட்ட 1-8
திறல் - ஒளி 10-3
தீமெய்ச் சடை - செஞ் சடை 24-5
துகுக்கும் - கட்டுகின்ற 14-3
துச்சு - இழிவு 21-1
துணை - இரண்டு 10-5
துணை ஆர - ஆதரவாக 21-9
துறக்கம் - சுவர்க்கம் [இங்கு சிவலோகம்] 28-10
துனி - ஊடல் 17-3

துனியுமிழ் ஆடை - உரிக்கப்பட்ட யானையின் தோல் ஆடை 17-4
தூ - தூய்மை 24-11
தூங்கு இருள்-பேரிருள் 17-3
தூர்த்த - இழிந்த 4-2
தெண்ணர் - அறிவிலிகள் 4-10
தெய்வநெறி-சரியை; கிரியை; யோகம்; ஞானம் எனப்படும் இறைவனை அடைதற்குரிய வழிகள் 5-5
தெய்வ வாய் மொழி - வேதம் 3-3
தெருளா உள்ளர் - தெளிவடையாத மனம் 4-10
தென் - அழகு (தென் தில்லை) 19-3
தென்ன - அழகிய 8-9
தேமா - இனிய மாம்பழம் 8-1
தேரர் - புத்தர் 2-6
தேவுஆம் மறை - தெய்வத் தன்மை பொருந்திய வேதம் 27-7
தேறல் - தேன் 4-7
தொங்கல் - மலர் மாலை 7-9
தொத்து - பூங்கொத்து 19-1
தொழும்பர் - குற்றேவல் செய்பவர் 4-2
தொழும்பன் - தொண்டன் 21-4
நச்சாய் - விரும்புகின்றாய் இல்லை 21-1
நசை - விருப்பம் 26-5
நடுவு - நடுவு நிலைமை 21-6
நம்பானே - நம் பெருமானே! 21-1
நமர்-நம்மவர்; உறவினர் 27-1
நல் - அருள் 12-3
நல்லார் - பெண்கள் 19-8
நாட்டம் - கண் 22-9
நாடகம் - நடனம் 27-1
நாதாந்தம் - சிவபதம் 3-7
நாமம் - சண்டேசுரர் என்ற பெயர் 29-10
நாள்-வாழ் நாள்; ஆயுள் 20-7
நிட்டை-தியானம்; இறைவனை இடைவிடாது நினைத்தல் 29-3
நிதம்பம் - ஆடை 2-5
நிமலம் - பரிசுத்தம் 25-6
நிரந்த - நிறைந்துள்ள 24-7
நிரந்தரம்-எப்பொழுதும் 2-3
நிறை -நீர்ச்சால்; தண்ணீர்ப் பானை 11-6
,, - மனவுறுதி 26-2
நீடினாய் - நெடுங் காலமாக அமர்ந்துள்ளாய் 11-5
நீவி - சோர்வு 26-2
நுணுகி - நுட்பமாய் 17-3
நுதல் - நெற்றி; முகடு 28-2
நூறு நூறாயிரக் கோடி அண்டம் - எண்ணற்ற அண்டங்கள் 17-8
நெக - அமுருத 26-9
,, - உருக 11-6
நெகா - உருகாத 11-3
நெகிழ்ச்சி-மன உருக்கம் 26-2
நையாத - உருகாத 12-2
நொய்யவாறு என்ன - எளிமையாக 17-8
பக்கல் - இடத்தே 11-5
பகலோன் - சூரியன் 3-6
பசுநூல் - உலகச் செய்திகளை அறிவிக்கும் லௌகிக நூல் 4-9
பஞ்சமம் - அழகு; ஒரு பண் 26-1
பட்டவர்த்தனம் - பட்டம் தரித்த யானை 15-2
படலம் - கூட்டம் 2-1

படுதல் - வயல்கள் 15-8
,, - நீர் நிலைகள் 15-10
படுத்தல் - நீக்குதல் 25-7
பண்ணி - அலங்காரம் செய்து 13-2
பண்ணியத் தழல் - மூட்டிய நெருப்பு 13-9
பண்ணுதலைப் பத்தும் - பண்ணுதல் ஐ பண்ணுடன் கூடிய அழகிய பத்துப் பாட்டும் 27-11
பணி - தொண்டு 21-1
பணை - வயல்; பெரிய 10-10
பதணம்-மதிலினுள்ள மேடை 16-1
,, - மேடை 2-5
பதம் - பாதம் 10-1
பதிகம்-இசைப் பாட்டு 15-4
பந்தம் - (பிறவி) கட்டுண்ட நிலை 17-5
பயலை - பசலை 26-3
பயில் - வாழ்கின்ற 28-4
பயிலும் - ஒலிக்கும் 27-7
,, - வாழும் 27-9
பரம் - சார்பு 26-1, 2
பரிந்து - இரங்கி 7-6
பரிவு - அன்பு 15-4
பரிகலம்-உண்ணும் பாத்திரம் 15-2
(பிட்சா பாத்திரம்)
பல்லவம் - தளிர் 17-3
பல - பலா மரம் 24-4
பலி-பிச்சை 14 - 6
பழனம் - வயல் 10-1
பறைதல் - ஓடுதல் 13-9
பனி - குளிர்ச்சி 26-2
பனுவல் - ஞான நூல் 17-5
பா - பாட்டு 21-10
பாசலர் - பசிய இதழ்களை உடைய மலர்கள் 16-4
பாடு - அழி 11-4
பாதகம் - பெரும் பாவகச் செயல் 29-10
(சிவபூஜைக்கு இடையூறு செய்த தவறு)
பாதம் இடறி - கால் தடுக்கி 26-6
பாலாடு முடிச்சடைகள் தாழ பால் - பால்; பக்கங்களில் அசைந்தாடும் சடை 24-9
பாவித்து - அருள் புரிந்து 29-9
பாவகம் - எண்ணம் 29-6
பிச்சர் - பித்தர் 4-9
பிசுக்கர் - அற்பர் 4-5
பிட்கல் - பேசுதல் 4-6
பிட்டர் - பிரஷ்டர்; திருவருள் நெறிக்கு புறம்பானவர் 4-2
பிண்டம் - உடல் 4-1
பிணி - பிறவிப்பிணி 2-8
பிணுக்கர் - பிணக்கர்; மாறுபடுபவர் 4-4
பிணையல் - இருகைகளாலும் அபிநயம் காட்டுதல் 15-4
பிதுமதிவழி - பெருமையுடைய அறிவின்வழி; மறுநூலின் வழி நின்று 2-6
பிரிவு - விடுபெறும் நிலை 17-5
பிழக்கு - பொய் 4-6
பிழம்பு - கொடுமை; இடம்பப் பேச்சு 4-2
பீர் - பசலை நிறம் (காதல் மிகுதியால் தோன்றும் பொன் நிறம்) 7-2
பீலி - மயில்தோகை 24-4
பீறல் - கிழித்தல் 4-1
புகல் - விருப்பம் 2-5
புணர்ப்பு - செயல் 8-8
புணர்பொருள் - அடைய வேண்டிய மெய்ப்பொருள் 11-2

* புராணபூதங்கள் - பழைய சிவனடியார்கள் 2-11
புராணம் – பழைமை 2-11
புரி – விருப்பம் 10-3
புரிநூல் - முப்புரிநூல் 16-10
புரிபவர் - விரும்புபவர் 25-5
புரியும் – விரும்புகின்ற 23-10
புருவம் இடுதல் - புருவத்தை நெரித்தல் 27-4
புரைதரு – ஒத்த 22-3
புழுங்குதல் - துன்பமடைதல் 11-2
புளினர் – வேடர் 3-3
பூ – அழகு 2-11
பூ - செந்தாமரை 8-3
பூ எனப்படுவது பொரிவாழ் பூவே-நால்வர் நான்மணிமாலை.
பூ அம்பு - புட்ப பாணம்; அது தாமரை; மா; அசோகு, முல்லை; நீலம் என ஐந்து ஆகும் 27-5
பூசல் – பேரொலி 26-11
,, - சிறுசண்டை 29-5
பெண்மை – பெண்மைக்குணம். (அச்சம்; மடம்; நாணம்; பயிர்ப்பு) 26-5
பெருக்கர் - பெருகச் செய்பவர் 4-7
பெற்றம் - பெற்றம் ஏ(று) உடையார் – பெற்றம் பெற்று+அம்+ஏறு+ உடையார் – இடத்தில் அழகாகப் பெற்று ஏறினை உடைய பெருமான் 17-8
பேடர் - பேடியர்; ஆண்மை யற்றவர் 4-6
பேதவாதம் - நாத்திகவாதம் 4-5
பேய் – பேய்த்தன்மை 2-11
பேரா உலகு - மோட்ச வீடு 20.10
பைய - மெதுவாக 26-2
பொக்கர் – பொய்யர் 4-8
பொசிவனப்பு - அழிக்கும்படியான அழகு 16-9
பொது நீப்பான் – அன்பர்களுக்குப்பொதுவானஇறைவனை அப்பொதுத் தன்மையினின்று நீக்கித் தனக்கே உரியவனைச்செய்யும்பொருட்டு 12-9
பொற்குழல் - அழகிய (சடை); அழகிய கூந்தல் 23-1
பொற்கோயில் – சிவாலயத்தில் அபிடேகத் தீர்த்தத் தொட்டிக்கு அடுத்துள்ள தனிக்கோயில் 29-10
போர் ஏடி – போருக்கு வருவாயடி 27-4
போனகம் - நின்மாலியமான திருஅமுது 29-10
மஞ்சனசாலை - நீராடுமிடம் 15-2
மஞ்சு - அழகு; மேகம் 10-7
மடங்கல் - சிங்கம்
மடவார் மாலைப்பூசல் – மாதர்கள் மாலைக்காலத்தில் அந்திவானம், சந்திரன் முதலியவற்றை நோக்கி இரங்கி வாய் விட்டு ஒலிக்கும் பேரொலி 26-11
மடுப்ப - உண்ண 14-2
மண்டலம் - உலகம் 5-3
மண்டலம் - சூரியமண்டலம் 16-4
மணிக்குறங்(கு) - அழகிய தொடை 2-4

* பூத பரம்பரை பொழிய-பெரிய புராணம்; சம்பந்தர்—1.

மணிமாணிக்கம் - செம்மணி 17-1
மணிமுருக்(கு) — அழகிய முருக்கம்பூ 8-3
மணிவண்டு - கருவண்டு 10-1
மத்தம் — ஊமத்தம் பூ 10-11
மதகு - நீர் போகும் வழி 16-2
மதமாறு - மதம் ஆறு; மதம் மாறு (மாறுத) 19-5
மதிநிலவு - சந்திரனின் ஒளி 26-9
மதுமதி வெள்ளம் — தேன் போலும் இனிய அறிவுப் பெருக்கம் 2-6
மதுரவாய் மொழியார்—இனிய இசைப்பாடல்களைப் பாடுகின்றவர் 22-4
மயர்வு — மயக்கம்; அஞ்ஞானம் 2-1
மயல் — காதல் 28-5
மயிலை — மாயூரம் 25--10
மர — மரவம்-குங்குமமரம் 3-9
,, மராம் - கடம்பு 3-9
மரபின் - முறைமைப் படி 14-4
மருண்டு — காதலில் மயங்கி 7-9
,, — திகைத்து 22-3
மருந்து — அமிர்தம் 5-3, 2-3
மல்-வளப்பம் 28-4
மலங்குதல் — கலங்குதல் 17-9
மலர் - தாமரை 25-1
மலைந்தது — உதைத்தது 26-7
மவுலி - திருமுடி 5-4
மழலை — மெல்லிசை 24-5
,, - மெல்லிய மொழி 13-2
மழலை யாழ் சிலம்ப—மெல்லிய யாழோசை ஒலிக்க 17-7
மழவிடை - இளமை உள்ள விடை 29-11
மழவிடையாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடி பிறந்த பழ அடியார் - பெருமானுக்குத் தலைமுறை தலைமுறையாக அடிமை பூண்ட ஆடவரும் மகளிரும் மணம் புரிந்து கொண்ட குடும்பத்தில் பிறந்த பழைமையான அடியார் 29-11
மழை - மேகம் 3-9
மறத்தொழில் - கோபச்செயல் 7-9
மறவன் - வேடன் 28-8
மறுக்கம் - மயக்கம் 22-10
மறையோன் - கூத்தப்பிரான் தில்லை - அந்தணர்களுள் ஒருவராதலின் 25-2
மறைறவன் — மறைந்துள்ளவன் 25-5
மறவன் - வேடன் 28-8
மன்னவன் - தலைவன் 23-10
மன்னுக - நிலைபெற்றிருப்பதாக 29-1
மனன் — மனம் 17-3
மாடம் — உப்பரிகை 16-1; 27-5
,, - மேல் மாடி 19-7
மாண்பு - பெருமை 25-1
மாத்திரை — ஒருவகைக்காதணி 22-8, 26-4
மாதவர் - மாது + அவர் - தேவியை உடையவர் 17-8
மாதவன் - தேவியைப் பாகத்தில் வைத்தவன் 10-9
மாதிமை - அழகு 6-1
மால் — காதல் 10-5
,, காம மயக்கம் 28-1, 2
மாலைபத்து - பாடல்பத்து 19-10
மாற்றி - ஒழித்து 26-3

மான்மறி - மான் கன்று 22–1, 25-8
மிகு சீர் இயல்தில்லை – மிக்க சிறப்பினை உடைய தில்லை 28-3
மிட - மிடா-பானை 21-6
மிடைந்து - நெருங்கி 4–10
மிண்டுதல் – செருக்குக் கொள்ளுதல் 29–2
மீமிசை - மேற்புறம் 2-7
முகப்பு – முன்பாகம் 14–3
முகிழ்த்தல் - தோன்றுதல் 22–10
முடித்தாமம் – திருமுடியில் அணியும் இண்டைமாலை (கொன்றை மாலை; வில்வ மாலை) 29–10
முத்தர் - இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவர்; முத்தியைத் தருபவருமாம் சிவன் 27-8
முத்தன் - வீடு பேறு அளிப்பவன் 15-8
முதுசொல் - பழமொழி 21–2
முதுபகல்-நடுப்பகல்; பட்டப் பகல் 27–9
முரிதல் - தோன்றுதல் 11-7
முரிவர் – விலங்குவார் 9–3
முளையாமதி - முளை ஆம்மதி 19-5
முறுவல் - புன் சிரிப்பு 15-1; 17-6
முன்நகா - சிரித்தல் 11-3
முனிவர் - உலகப் பற்றை வெறுத்தவர் 24-7
முனைபடு-பகைகொண்டு வந்த 11–6
மூச்சறவு - மயக்கம் 28-7
மூத்தன் – யார்க்கும் முன்னே தோன்றியவன் 25–7
மூவா–மூப்பு அடையாத 27-7
மூவுரு – பிரமன்; திருமால்; உருத்திரன் என்ற மூவர் 25-7
மேற்றிசை - மேல் + திசை = இடம் 22-7
மை - கருமை 17–1
மைஅவாம் – கருமையை விரும்பும் (கருமையான) 17–8
மைக்கடா – கரிய எருமை 9–7
மைந்தன் – வலிமை உடையவன் 7–7
மையர் – கருநிறமுடையவர் 9-8
மொய் – கூட்டம் 13-4
,, – தழைத்த 12–6
மொழுப்பு - சோலை 14–4
மொழுப்பு – பரந்த இடம் 16-11
மொழுப்பு - செறிவு 8-1, 5
,, - திருமுடி 8-9
,, – சடைமுடி 10-2-7
மோடு - மூடத்தனம் 4-6
யாமம் – இரவு 17–3
வகுளம் - மகிழமரம் 16–11
வங்கம் – மரக்கலம் 25–8
வடம் - கண்டிகை மாலை 9-3
வடி - வடிதல்; வற்றுதல்
வண்ணங்கள்-பல தன்மைகள் 29-3
வந்தநாள் – எழுந்தருளிய நாள் 10–10
வம்பு - வாசனை 12–3
,, – புதுமை 8-10; 21–2
வயிறு – நடு 13-7
வரிவண்டு – வரி இசைப் பாட்டு, கோடுகள் 27-1
வலிவார் ஆர் – துன்புறுத்த வல்லார் யார்; என்

வலிமைக்கு ஒருவரும் நிகராக மாட்டார் 27-8
வழிமொழி மாலை - திருவருள் வழி நின்று மொழிந்த பாமாலை 13-2
வழிவழி ஆளாய் – தலைமுறை தலைமுறையாக அடிமை பூண்டவராய் 29-11
வனம் – அழகு 26-1, 27-5
[வா]சக மலர்கள் – சொற்களாகிய மலர்கள்; சொல் மலரால் தொடுக்கப்பட்ட மாலை ஆகிய பாட்டுக்கள் 26-11
வாசிகை – பூமாலை 22-10
வாதித்தீர் – வருந்தும்படி செய்தீர் 28-6
வாமம் – இடப்பாகம் 24-5
வாய் - கீழுதடு 25-1
வாய்தல் - முற்றம் 14-7
வாய்மடுத்து - உண்டு 18-2
வாயினை – வாய் மொழியினை 27-6
வார் - கச்சு 20-6, 26-1
வார்தல் – ஒழுகுதல் 5-3
,, – ஒழுகுதல்; (தேன்) 26-1
வால்முத்து – வெள்ளிய முத்து 18-1
வாளா – ஒரு தொண்டும் செய்யாமல் 21-9
வான் (எளிதே) - சிவலோகம் 25-10
,, – ஒளி 13-4
,, – பெரிய 25-10
வான்தெரு–பெரிய தெரு 16-6
வான்பளிங்கு - உயர்ந்த பளிங்கு 9-8
வான்முத்து – சிறப்பு வாய்ந்த முத்து 18-1
வான் உந்திச்சுழி-சிறப்புடைய கொப்பூழ் 22-5
வானுலகின் நங்கை–தேவ கங்கை 20-5
விகிர்தன் - வேறுபாடு உடையவன் 24-2
விசிறு – வீசுகின்ற 2-8
விடங்கன் - தானே உண்டானவன், அழகு உடையவன்; 29-45, 1-10
விண்டு அலர் - இதழ்கள் விரிந்து 5-3
விமானம் – ஊர்தி 11-6
விம்மி – பெருகி 29-11
விலங்கல் – மலை 16-8
விளி - விலங்குகளை ஓடச் செய்யும் கூப்பாடு 3-7
வினைபடு கனகம் – பலவிதமாகத் தொழிலுக்கு உபயோகப்படும் பொருள் 17-3
வினைபடும் உடல் - வினைக்கு இடமாகிய உடல் 11-6
வீங்கு - பெரிய 17-3
வீரை – கடல் 3-5
வீறுடி – ஈடுபட்டு 12-9
வீறு – மேன்மை 4-1
வெள்ளானை - அயிராவணம் (சிவலோகத்தியானை) 19-5
வேதகம் - மாறுபாடு 11-6
வேரி – தேன் 5-3
வேள்வி - ஓமகுண்டம்; யாகம் 20-1
வேறு - புதுமை 1-6
வை - வைக்கோல் 21-6
வை – வைக்கோல் 17-8
வைதிகத்தேர் - வேத சம்பந்தமான தேர் 1-10

கழக வெளியீடு : கசஅஉ

பதிப்பாளர் :
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,

தலைமை நிலையம் :
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :
திருநெல்வேலி-6.
மதுரை-1 கோயமுத்தூர்-1. கும்பகோணம்.

அப்பர் அச்சகம், சென்னை-1.